508

# சக்தி

மாத வெளியீடு

தாரண ௵ மாசி ௴

-/8

2528

**கதை**

சிவ தாண்டவம்
நாயாய்ப் பிறந்தாலும்
வியாபாரி பேச்சு

✲

**கட்டுரை**

வாழ்க்கையும் அரசியலும்
யுத்தம் ஏன்?
விலையாகாத புத்தகங்கள்
தமிழிலக்கியத்தின் தொன்மை

✲

**வரலாறு**

மார்ஷல் ஜுகாவ்

✲

**பாட்டு**

வெள்ளி

✲

**குறிப்பு**

மணியோசை
காலச் சுழல்
புத்தக உலகம்



9 - MAR 194



க்காப்பக நூலகம்
னை-600 008

பிளேட்டோ எழுதிய

# அரசியல்

வெ. சாமிநாத சர்மா தமிழாக்கியது

சக்தி வெளியீடு

180 பக்கம், படத்துடன்
விலை ரூபாய் ஆறு
(தபால் செலவு தனி)

விற்பனை உரிமை:
நவயுகப் பிரசுராலயம்
காரைக்குடி


2000 வருஷங்களுக்குமுன்
முன்னோர்கள் சந்தனத்தை குறைவற்ற தன்மைக்கு ஒப்பிட்டார்கள். இன்று நாம், ஒரு நல்ல பொருளை அந்த வாகத்தின் "ரோல்ஸ ராய்ஸ்" என்று சொல்லுகிறோம். அதேபோல முன்னோர்கள் ஒவ்வொரு உயர்ந்த பொருளையும் சந்தனத்திற்கு சமமாகச் சொல்லுவார்கள். ஸ்நானத்திற்கு அனுகுணமான வாசனைத் திரவியங்களின் சேர்க்கைக்கு சந்தனத்தைலம் இன்றியமையாததாக இருப்பதின் காரணம் அதன் சுகந்த மணமும் குளிர்ச்சியளிக்கும் குணமுமேயாம். அசோகனுண்ட காலத்தின் உண்மை என்றும் உண்மையே.
ஸ்ரீ
மைசூர்
சந்தன சோப்
சந்தனம் குறிப்பது குற்றமற்ற குணமே
மைசூர் கவர்ன்மெண்ட் தயாரிப்பு.
B-3-TM



## தென் இந்தியாவில் -

## தேநீர் அருந்தும் நேரம்

ஹைதராபாத்துக்குத் தெற்கேயும், கிழக்கேயும் உள்ள புராதன குடும்பங்களில் நீண்ட காலமாய் இருந்து வரும் பழக்க வழக்கங்கள் மாறுவது கிடையாது. உபயோகம் ஏதாவது உண்டு என்பதாய் இருந்தால்த் தான் புதிய வழக்கங்கள் அங்கே புகமுடியும். வர வர மோட்டார் வண்டிகளில் பிரயாணஞ் செய்வது சகஜமாய்ப் போய்விட்டது. ஜாதி பேதமில்லாமல் ஒன்றுய்ப் பிரயாணஞ் செய்யும் இந்த பஸ்ஸுகள் வந்ததிலிருந்து ஜாதி வேற்றுமைகள் அவ்வளவாகப் பாராட்டப்படுவதில்லை. பிராமணர்கள் பிராமணரல்லாதவர்களுக்கு விருந்து உபசாரஞ் செய்வது இப்போது வெகு சகஜம். சிற்றுண்டி எதுவும் இல்லாமல் தேநீர் மட்டும் உபசரிக்கும் வழக்கம் ஜாதிவேற்றுமையை ஒழித்துப் பல்வேறு மதத்தினருக்குள் பரஸ்பரம் அன்பைப் பெருக்கிவிட்டது.

பெரும்பாலான தென் இந்தியர்கள், சீனியும் பாலும் கலந்த தேநீரைப் பித்தளை டமரா டம்ளர்களில் ரஸிக்கிறுர்கள். குடிக்கும் முன், டமராவிலிருந்து டம்ளருக்கும், டம்ளரிலிருந்து டமராவுக்கும் ஆக ஊற்றித் தேநீரை ஆறவைத்துக் கொள்ளுகிறுர்கள்.

வடதேசத்தைப் போலவே, இங்கும் புத்தப் புதிய ப்ருக் பாண்ட் தேயிலையை ஜனங்கள் எல்லோரும் விரும்புகிறுர்கள்.

# ப்ருக் பாண்ட்

"இரு இலையும் ஒரு மொட்டும்"


விரைவில் வருகிறது.
T.R.மஹாலிங்கம்
குமாரி ருக்மணி
T.R.ராமச்சந்திரன்
K.மஹாதேவன்
பேபி கமலா
க்ருஷ்ணன்
மதுரம்
ப்ரகதி
ஸ்ரீ வள்ளீ
a S.C.F.L. LTD PRODUCTION
டைரக்ஷன்:-A.V.மெய்யப்பன் & A.T.கிருஷ்ணஸ்வாமி B.A.



குழந்தைகளின் பத்திரிகை

# பாப்பா

மாத வெளியீடு

சின்னச் சின்னக் கதை, பாட்டு,
சரித்திரம், விடுகதை, அழகிய
படங்களுடன் வெளி வருகிறது

| | |
|---|---|
| தனிப் பிரதி: | வருடச் சந்தா: |
| அணு நாலு | ரூ. மூன்று |

பாப்பா பத்திரிகாலயம்
ராயவரம்
புதுக்கோட்டை சமஸ்தானம்

தாரண
மலர் 11

# சக்தி

மாசி
இதழ் 5

அன்பும் அறிவும் அறமும் திருவும் அருளும் ஆற்றலும்
இன்ப வாழ்வும் விளங்கச் சக்தி எழுந்து பொலிகவே!

## மணியோசை

சில பிராணிகள் இருக்கின்றன. மழை வரு முன்பே, அவைகள் அதை அறிந்துவிடும். இதேமாதிரி, யுத்த முடிவு திட்டமாகவும் நிதர்சனமாகவும் தெரியுமுன்பே, மத்தியக் கிழக்கு நாட்டு மக்களுக்கு அது எப்படியோ தெரிந்து விடுமாம். ஜயிக்கப்போகிறகட்சியைத் தங்கள் கட்சியாக அவர்கள் தேர்ந்தெடுத்துக் கொண்டு விடுவார்களாம். அவர்கள் அனுபவ பூர்வமான மகா புத்திசாலிகளாம். இப்படிக் கூறுகிறார் 'ஒரே உலகம்' என்ற புத்தகத்தில் ஸ்ரீ வெண்டல் வில்கீ. ஏறக்குறைய, அதே இனத்தைச் சேர்ந்தவர்கள்தான் எகிப்திய மக்களும் துருக்கி மக்களும். அவர்கள் இப்போது ஐக்கிய தேசங்களோடு பகிரங்கமாய்ச் சேர்ந்து விட்டார்கள்; ஜெர்மனியோடு யுத்தம் தொடுக்கத் திர்மானித்து விட்டார்கள். 'யானை வரும் பின்னே - மணி ஓசை வரும் முன்னே!' என்பதுபோல, ஜெர்மனி தோற்கப் போகிறது என்பதற்கு, இந்த நிகழ்ச்சியை, ஒரு முன்குறியாகக் கொள்ளலாம்.

இது மாத்திர மல்ல. கொஞ்ச நாட்களுக்கு முன்னே, யால்டாவில் நடந்த 'திரிமூர்த்திகள்' - சர்ச்சில், ஸ்டாலின், ரூஸ்வெல்ட் - மந்திராலோசனை அறிக்கையும், இந்த முடிவையே சுட்டிக் காட்டுகிறது. அந்த மூன்று தலைவர்களின் தீர்மானங்கள், மகா துணிச்சலாயிருக்கின்றன; தன்னம்பிக்கை நிறைந்திருக்கின்றன; யுத்தத்தில் எதிரியின் போக்கையே மூர்க்கங் கொள்ளுமாறு செய்யக்கூடியவை. யுத்தத்தில் நாங்களே ஜயிக்கப் போகிறோம் என்று எவரும் சொல்லலாம். அது ஆச்சரிய மில்லை. ஆனால், ஜயித்த பிறகு எதிரி நாட்டை என்ன செய்யப் போகிறோம் என்று திட்டமாய்ச் சொல்வது அப்படி யல்ல. தங்களுக்கு இனிப் பயமில்லை, வெற்றி நிச்சயம் என்ற நிலைமை ஏற்படும்போது தான், எதிரி மக்களின் ரோஷத்தைக் கிளப்பக் கூடிய வார்த்தைகளைப் பகிரங்கமாய்ச் சொல்லத் தோன்றும். யால்டாவில் கூடிய திரிமூர்த்திகளின் அறிக்கையும் அப்படித் தான் இருக்கிறது.

ஜெர்மனியை இவர்கள் ஜயித்தால், என்ன செய்யப் போகிறார்களாம்? ருஷ்யா, பிரிட்டன், அமெரிக்கா மூன்று வல்லரசுகளும் கூறுபோட்டு, அதைக் கைப்பற்றுவார்களாம். பிரான்ஸுக்கும் வேண்டுமானால், ஒரு கூறு கொடுப்பார்களாம். ஆனால், போலந்தில், ருஷ்யா கைப்பற்றிய பகுதிக்கு ஈடாக ஜெர்மனியில் ஒரு பகுதியைப் பிய்த்து, போலந்துக்குக் கொடுப்பார்களாம். ஜெர்மன் மக்களை இவர்கள் அழிக்கமாட்டார்களாம். ஆனால், நாஜிகளை ஒழிப்பார்களாம். ஜெர்மன் அரசியல், கலாசாரம், பொருளாதாரம் ஆகிய துறைகளி லிருந்தெல்லாம், நாஜிகளை விரட்டுவார்களாம். நஷ்ட ஈடும் வாங்குவார்களாம். இவையெல்லாம் 'திரிமூர்த்தி'களின் சில முக்கியமான முடிவுகள். இவைகளின் நியாய அநியாயங்களையோ, உசித அனுசிதங்களையோ பற்றி, இங்கே நாம் ஆராயத் தேவையில்லை. ஆனால், இவை மிகவும் துணிச்சலானவை, ஜெர்மன் மக்களின் ஆத்திரத்தைக் கிளப்பக்கூடியவை என்று மட்டில் குறிப்பிட விரும்புகிறோம். யுத்தத்தில் தங்களுக்கே வெற்றி என்ற தைரியம், ஐக்கிய தேசங்களுக்கு ஏற்பட்டு விட்டது.

யுத்தம் முடியலாம்; ஐக்கிய தேசங்களுக்கே ஜயம் ஏற்படலாம்; அவைகளின் இஷ்டப்படியே ஜெர்மனியை அவை ஆட்டியும் வைக்கலாம். இதற்கெல்லாம் முன் குறியாக, யுத்த முடிவின் 'மணியோசை'யாக, மேலே கண்ட சம்பவங்களை மதிக்கலாம். ஆனால், யுத்த முடிவில் ஏற்படும் சமாதானம் எப்படிப்பட்டதா யிருக்கப் போகிறது? அது அடுத்த யுத்தத்தின் முன்குறியாக, 'மணியோசை'யாக, இல்லாமல் இருக்குமா? அதை மட்டில் ஆண்டவனே அறிவான்.

✲

## மும்மூர்த்திகள் சந்திப்பிலே

ரூஸ்வெல்ட், ஸ்டாலின், சர்ச்சில் மூவரும் சந்தித்தது பற்றி ஒரு தமாஷ் கதை சொல்லுகிறார்கள். அதாவது, மூவருக்கும் இடையிலே பின் வரும் சம்பாஷணை நடைபெற்றதாம்:

**ரூஸ்வெல்ட்:** நேற்றிரவு நான் ஒரு கனவு கண்டேன். யுத்தம் முடிந்து விட்டது. சர்வ தேசச் சங்கத்தின் தலைவனாக என்னை நியமித்து விட்டார்கள். இதுவே என் கனவு.

**சர்ச்சில்:** நானும் ஒரு கனவு கண்டேன். யுத்தம் முடிந்து விட்டது. சர்வ தேசச் சங்கத்தின் பிரதம மந்திரியாக என்னை நியமித்து விட்டார்கள். இது தான் என் கனவு.

**ஸ்டாலின்:** நான் நேற்றுக் கனவு காணவும் இல்லை. நான் எவரையும் எந்தப் பதவிக்கும் நியமித்ததாகவும் நினைவில்லை.

# காலச்சுழல்

**எகிப்துப் பிரதமர் கொலை:** ஜப்பானுடனும் ஜெர்மனியுடனும் யுத்தம் தொடுப்பது என்று எகிப்து டெபுடிகள் சபை தீர்மானித்தது. அந்தக் கூட்டத்திலிருந்து வெளியே வந்தார் எகிப்துப் பிரதம மந்திரி அஹமது மேஹர் பாஷா. அப்போது அவரை ஓர் இளைஞன் சுட்டுக்கொன்றுவிட்டான். நோக்கம் புரியவில்லை. எகிப்தின் அரசியல் போக்கு எப்போதுமே ஒரு தினுசாய், விசித்திரமாயிருக்கிறது. சமீபத்தில்தான் மேஹர் பாஷா அதிகாரத்துக்கு வந்தார். அது ஒரு விநோதம். சென்ற அக்டோபரில் நாஹாஸ் பாஷா மந்திரி சபையை, பரூக் மன்னருக்குப் பிடிக்கவில்லை. உடனே, அதை மன்னர் டிஸ்மிஸ் செய்தார். மேஹர் பாஷா ஒரு கூட்டு மந்திரி சபை அமைத்தார். போனமாதம் பொதுத் தேர்தலும் நடந்தது. மேஹருக்கே பேராதரவு கிடைத்தது. எகிப்தில் எக்காலத்திலுமே இப்படித் தான். அதிகாரத்தில் உள்ளவர்களுக்கே ஜயம். காரணம், ஓட்டர்கள் போலீஸ் அதிகாரத்துக்கு மிரள்வதுதான் என்கிறார்கள். நாஹாஸ் பல சீர்திருத்தங்கள் செய்து, ஜனங்களிடம் நல்ல செல்வாக்குப் பெற்றிருந்தும், மேஹருக்கே வெற்றிகிடைத்தது விநோதம் அல்லவா? அது எவ்வாறாயினும், மேஹர் இப்போது குத்திக்கொல்லப்பட்டது மிகமிகத் தவறாகும். அந்தக் கொலைகார வாலிபன் யார்? நாஹாஸின் வாபித் கட்சியின் ஆளா, அல்லது ஜெர்மன், ஜப்பான் உளவனா? பின்னால்தான் தெரியவேண்டும்.

* * *

**மன்னிப்பதே முறை:** சர்க்கார் உப்பளத்தில் நுழைந்து உப்பை அள்ள ஜனங்கள் முயன்றார்கள். போலீஸ் அஸிஸ்டண்ட் இன்ஸ்பெக்டர் ஒருவர் அவர்களைத் தடியால் அடித்துத் துரத்தினார். அப்போது மூவர் மூன்று திசைகளிலிருந்து அந்த இடத்துக்கு ஓடி வந்தார்கள். இன்ஸ்பெக்டர் கொல்லப்பட்டார். 1942-ஆம் வருஷம் ஆகஸ்ட் கலவர சமயத்தில் நடந்த இதுதான் குலசேகரப் பட்டணம் கலக வழக்கு. வழக்கில் பல எதிரிகளுக்குச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. காசிராஜன், ராஜகோபால் என்ற இருவர் மரண தண்டனையும் விதிக்கப்பட்டார்கள். சிறைத் தண்டனை பெற்றவர்களில் சிலர் இன்று வெளியில் கூட வந்து விட்டார்கள். ஆனால், மரண தண்டனை பெற்ற இருவர் மட்டில் இன்னும் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் இருவரும் பிரிவி கவுன்ஸிலுக்கு அப்பீல் செய்து கொண்டார்கள். அப்பீல் இப்போது தள்ளுபடி யாகிவிட்டது. எதிரிகள் மீது உள்ள சாட்சியம் மிக அற்பமாகும். செயலோ ஆத்திரம் கொண்ட கூட்டம் தலைகால் புரியாது உணர்ச்சியால் வெறி கொண்ட நேரத்தில் நடந்தது. இந்நிலையில், எதிரிகளுக்கு மரண தண்டனை விதிப்பது மகா பரிதாப மாகும். மரண தண்டனையே அநாகரிகம் என்ற கருத்து, உலகெங்கும் பரவி வருகிறது. தவிரவும், மரண தண்டனை விதித்துப் பல காலம் ஆகிவிட்டால், அதை நிறைவேற்றுவதில்லை என்ற சம்பிரதாயமும் பிரிட்டனில் இருந்து வருகிறது. இந்த எதிரிகளை மன்னிக்கவேண்டுமென்று தமிழ் நாட்டின் ஏராளமான மக்கள் கையெழுத்திட்ட மகஜர்களும் வைசிராயிடம் சென்றிருக்கின்றன. இந்தப் பல காரணங்களையும் நோக்கி, அவர்களுக்கு ராஜ மன்னிப்பு வழங்குவதே முறையாகும்.

* * *

**மாணவருக்குத் திட்டம்:** 'டீயும் சுருட்டும் குடிக்காதே' என்று மாணவருக்கு உபதேசம்

செய்வது சகஜம். 'சினிமாவும் பார்க்காதே!' என்ற உபதேசம் சற்று வேடிக்கைதான். இந்த உபதேசம் மாணவருக்கு அகர் வால் தயாரித்துள்ள 14-அம்ச வேலைத் திட்டத்தில் காணப்படுகிறது. அது மகாத்மா காந்தியின் அங்கீகாரத்தைப் பெற்ற திட்டமாம். 'சினிமாப் பார்க்காதே' என்ற உபதேசத்தை, இன்றைய தமிழ் சினிமாக்கள் சம்பந்தப்பட்டமட்டில் நாம் பூர்ணமாய் ஆதரிக்கலாம். அது எவ்வாறாயினும் சரி; திட்டத்தில் உள்ள மற்ற உபதேசங்கள் அனைத்தும், தர்ம சூத்திரங்கள் போல, மாணவர்கள் அனுஷ்டிக்கத் தக்கவையாகும். "இந்திய சுதந்தரத்துக்கு மாணவர்கள் உற்சாகமாய் உழைக்க வேண்டியதுதான். ஆனால், கட்சிப் பிரதி கட்சி அரசியல் விவகாரங்களிலிருந்து அவர்கள் ஒதுங்கி நிற்க வேண்டும்", "தாய்ப் பாஷைப் பற்று வேண்டும். கலாசாலை, கல்லூரிகளில் அதிலேயே பாடங்கள் அனைத்தையும் போதிக்க, கிளர்ச்சி புரியவேண்டும். தாய்ப் பாஷையறிந்தவருக்கு அதிலேயே எழுதவும் பேசவும் வேண்டும்; பிற மாகாணத்தவர்களுக்கு இந்துஸ்தானியில் எழுதவும் பேசவும் வேண்டும்" என்பவை, முக்கியமான, ஜீவன் போன்ற, இரண்டு உபதேசங்கள். மாணவர்கள் இவைகளை தங்கள் உயிருக்குயிராய்க் கடைப்பிடிப்பது அவசியமாகும்.

✲

## உலக யுத்த அணிவகுப்பு

பல நாடுகளும் அவ்வப்போது செய்திருக்கும் யுத்தப் பிரகடனங்களின் ரீதியாகப் பார்க்கும் போது, பின்வரும் விசித்திரங்களைக் காணலாம்:

ஐக்கிய தேசங்கள் 33 (எகிப்தும் துருக்கியும் நீங்கலாக); அச்சு நாடுகள் 9.

9-அச்சு நாடுகளோடும் ஐக்கிய தேசங்களில் எதுவும் போர் தொடுக்கவில்லை.

விச்சி பிரான்ஸுடன் போர் தொடுத்த ஒரே ஐக்கிய நாடு ஆஸ்திரேலியா தான்.

போரிடும் பிரஞ்சுக்காரருக்கு ஜெர்மனியும், ஜப்பானும் மாத்திரமே எதிரிகள்.

இந்தியாவும், நார்வேயும் ஜெர்மனி ஒன்றோடு மட்டுமே போர் தொடுத்திருக்கின்றன.

ஜப்பானுடன் போர் தொடுக்காத ஐக்கிய தேசங்கள் பிரஸில், இந்தியா, நார்வே, கிரீஸ், ருஷ்யா ஆகியவை மட்டிலுமே.

ஐக்கிய அமெரிக்காவுக்கு அல்பேனியா எதிரி; பின்லாந்து எதிரியல்ல. பிரிட்டனுக்குப் பின்லாந்து எதிரி; அல்பேனியா எதிரியல்ல. ஐக்கிய அமெரிக்காவும் சரி, பிரிட்டனும் சரி; 8 அச்சு நாடுகளுடன் போரிடுகின்றன. ஆயினும், இதன் எதிரிகளில் சேராத ஒரு நாடு அதன் எதிரியாகும்; அதன் எதிரிகளில் சேராத ஒரு நாடு இதன் எதிரியாகும்.



# சிவ தாண்டவம்

மஞ்சேரி
எஸ். ஈச்வரன்

*தென்னிந்தியாவில் கலைச் சிகரமான அந்தச் சிலையை, மேல்நாட்டிலே விற்றுப் பணம் சம்பாதிக்கச் செல்கிறுர் ஒரு வங்காளி. நடுக்கட்லில் கப்பலில் அதைக் காணும் ஆங்கிலேயர், முதலிலே பரிகசிக்கிறுர். ஆனுல், அவர் மனத்திலே அது என்ன உற்பாதத்தை எழுப்புகிறது!*

**இ**ஸ்பாஹான் கப்பல், சூயஸ் கால்வாயைக் கடந்து, மத்திய தரைக் கடலுக்குள் பிரவேசித்து விட்டது. அது பிரயாணத்தின் இரண்டாவது வாரம். ரஜா எடுத்துக் கொண்டு ஊருக்குச் சென்று கொண்டிருக்கும் பிரயாணிகளின் மனத்தில், இந்தியா, ஏதோ ஒரு மங்கலான பொம்மை போல் மலினமடைந்து விட்டது. அவர்கள் ஊர் போய்ச் சேர்ந்ததும், இரக்கமும் கேலியும் கலந்த வெறுப்போடு, விசித்திரமான குரலில் பேசத் தொடங்கி விடலாம். வாஸ்கோட காமா நடுக்கடலிலே ஆறு நாட்கள் கடும்புயலுடன் போராடி விட்டு, ‘மகா காட்டுமிராண்டித்தனமான’ இந்தப் பூமியைக் கண்டு பிடித்து, கள்ளிக் கோட்டை ஜாமரிஞேடு நேற்றுத்தான் சந்தித்துப் பேசியதைப் போல, சீமையிலே போய் இவர்கள் வம்பளக்கலாம்.

வளர்பிறைச் சந்திரனின் நிலவிலே நீலக்கடல் வெளிறிட்டது. நிழல்கள் விலகி ஒளிக்கதிர்கள் அரும்பி மலர்ந்தன. மத்தியதரைக் கடல் உருக்கிய வெள்ளி போல், தகதக என்று மெல்ல மெல்ல ஜொலிக்கத் தொடங்கியது. அதன் புராதன சரித்திரப் பெருமைகளை யெல்லாம் அடுக்கடுக்காய் ஞாபக மூட்டுவது போல் இருந்தது அந்தக் காட்சி. இஸ்பாஹான் ஏதோ ஒரு சின்னஞ் சிறு சொப்பன உலகம்போல, எல்லை யற்ற அகண்டமான அந்த ஜலத் திரளினூடே-பிறை நிலவால் கொந்தளித் தெழுந்த உணர்ச்சி வெள்ளம் போன்ற ஜலத்திரளினூடே - ஊர்ந்து சென்றது.

**க**ப்பலில் எல்லோரும் உணவு கொள்ளும் மேஜையின் முன்பு, கௌரீ சுந்தர தேவ் அவர்களும் பீட்டர் பாட்டர்ஸன் அவர்களும், ஏற்கெனவே ஒருவரை யொருவர் சந்தித்து அறிந்துகொண் டிருந்தார்கள். பிரயாணத்தின் ஆரம்ப நாட்களில், தங்கள் தட்டிலுள்ள சூப்பைக் குனிந்து குடிப்பது போலவோ, தேநீர்க் கோப்பையைச் சாய்த்துப் பருகுவது போலவோ பாவனை செய்தவண்ணம், ஒருவரை ஒருவர் கடைக் கண்ணால் அவர்கள் பார்த்துக் கொண்டதுண்டு. பத்திரமாய் எட்ட நின்றபடியே உறுமும் விலங்குகளைப்போல ஒவ்வொரு சமயம் கண்களால் மட்டும் அவர்கள் ஒருவரோடொருவர் சண்டை யிட்டுக்

கொண்டதும் உண்டு. வங்காளி நீண்ட ஷர்ட் அணிந்து நேர்த்தியான வேஷ்டி கட்டியிருப்பது அவரது அதி தீவிரத் தேசியத்தைக் காட்டுவதாக, பாட்டர்ஸன் நினைத்தார். அவருடைய பரிபூர்ணமான தன்னடக்கத்தைக் கண்டு, பாட்டர்ஸனுக்கு ஒரு புறம் கவர்ச்சியும் மறுபுறம் எரிச்சலும் வந்தன. தேவுக்கோ, இந்த ஆங்கிலேயரின் குறுகுறுப்பைக் கண்டு வேடிக்கையாயிருந்தது. இது அவருடைய ஜாதிக் குணம் என்றும், பல்லைக் கடித்துக் கொண்டு இதை அவர் மறைக்கிறார் என்றும், தேவ் நினைத்தார். உலகத்தையே சீர்திருத்தும் பொறுப்பு தங்கள் தலையிலே சுமந்திருப்பதாக வெள்ளைக்காரர் நினைப்ப துண்டு அல்லவா? அந்த நினைப்பு, பாட்டர்ஸனின் மனத்திலே பலமாய் அழுந்தியிருப்பதாக, தேவ் எண்ணினார்.

ஏதென்ஸ் துறைமுகத்தில், ஒருவரை யொருவர் முறைத்துப் பார்த்துக் கொண்டார்கள். செங்கடலில் பாதி வழியில் செல்லும் போது, பரஸ்பரம் புன்சிரிப்புக் காட்டினார்கள். ஒருபுறம் விக்டோரியா ரெஜினா கம்பீரமாய் நோக்க, மறுபுறம் பெர்டினண்ட் லெஸ்ஸெப்பீ ஏங்கி விழித்து நிற்க, ஜல வெள்ளம் சூழலும் சூயஸ் ஜல சந்தியை நெருங்கும் போது, "சௌக்கியமா, தேவ்?" "சௌக்கியமா, பாட்டர்ஸன்?" என்று ஒருவரை ஒருவர் குசலப் பிரச்னம் செய்துகொள்ளத் தொடங்கினார்கள். தங்கள் தங்கள் சங்கதியை ஒளிக்காமல் தைரியமாய்ச் சொல்லிக் கொள்ளவும் ஆரம்பித்தார்கள். இந்த வங்காளி, இந்தியாவின் புராதனச் சிற்பங்கள் முதலிய அபூர்வமான கலைப் பொருள்களை மேல் நாடுகளில் விற்பனை செய்யும் வியாபாரி என்று பாட்டர்ஸன் அறிந்து கொண்டார். "தம்மை மேல் நாட்டில் கீழ் நாட்டின் கலைத்தூதர் என்று ஜம்பமாய்ச் சொல்லிக் கொள்ளும் ஒரு சுதேசி இவர்" என்று, அவர் தமக்குத் தாமே கூறிக்கொண்டார். கௌரி சங்கர் தேவும், இந்த வேட்டை நாய் ஜன்மம் (இது அவருடைய ஸ்வாகதம்) பாட்டர்ஸன் அண்ட் பாட்டர்ஸன் கம்பெனியின் மானேஜிங் டைரக்டர் என்று அறிந்து கொண்டார். அது ஓர் ஆங்கிலக் கம்பெனி. அதன் தலைமைக் காரியாலயம் பம்பாயில் உள்ளது. அதற்கு இந்தியாவின் வடக்கே கிழக்கே, தெற்கே, மேற்கே நாலா திசைகளிலும் டஜன் கிளைகளுக்கு மேல் உண்டு. முற்றிலும் பிரிட்டனிலேயே உற்பத்தி செய்யப்பட்ட ஜவுளி தினுசுகளும் இதர சில்லறைப் பண்டங்களும் விற்பது அந்தக் கம்பெனி. இந்தியாவின் வடக்கே, கிழக்கே, தெற்கே, மேற்கே நாலா திசைகளிலும் பற்பல ஓட்டல்களையும் அது நடத்துகிறது. அருமையான உண்டிகளைத் தயாரித்து வழங்குவதில் பெயர்போனவை அந்த ஓட்டல்கள். இந்த எல்லை வரையில் பரஸ்பரம் சொல்லிக் கொண்டார்கள்; இதற்கு மேல் போகவில்லை. இருவருடைய சுய சரித்திரங்களும், அவரவர் தொழில் வர்ணனையோடு நின்று விட்டன.

## 2

முதல் வகுப்புப் பிரயாணிகளுக்குரிய ஊஞ்சல்–ஸோபாவில் அவர்கள் சாய்ந்துகொண்டிருந்தார்கள். கப்பலின் பாண்டுவாத்திய கோஷ்டியார் வாசிக்கும் 'ஜாஸ்' நடன கீதம் ஒன்று மேல் தளத்திலிருந்து கம்பீரமாய் வந்து காதில் பாய்கிறது. நடனம் நடந்து கொண்டிருக்கிறது. கண்ணியமான கனவான்களும் சீமாட்டிகளும் ஆடிக்கொண் டிருக்கிறார்கள். இனிப் பேற்றிய மதுவின் மயக்கம் நடன கதியை உந்த, அதன் இசை சுழன்று சுழன்று மங்கிக் கடலிலே சென்று கலந்து, முன்னிலும் வேகமாய் முடுகி யெழுந்து, பிரயாணச் சோர்விலே உறங்கிக் கிடந்த ஆசாபாசங்களை யெல்லாம் கிளறியும் அடக்கியும், அடக்கியும் கிளறியும், லீலை புரிந்து கொண்டிருந்தது.

"சரிதான்" என்று ஆரம்பித்தார் பாட்டர்ஸன். மிக்க விலையுயர்ந்த ஒரு சுருட்டைப் பரம திருப்தியோடு அவர் புகைத்துக்கொண் டிருந்தார். "சரிதான், மிஸ்டர் தேவ்! மீண்டும் உங்களை நான் கேட்கிறேன்: இந்த விஷயத்தில், நீங்கள் ஏன் நாணய

மாய்ப் பேசலாகாது?" என்று அவர் கேட்டார்.

"மிஸ்டர் பாட்டர்ஸன்! உங்கள் கருத்து என்ன என்றே எனக்குப் புரியவில்லை. எதிலே என்ன நாண யக் குறைவை நீங்கள் கண்டு விட்டீர் கள்?" என்று பதிலளித்தார் வங் காளி.

"என்னவோ கலை கலை என் கிறீர்களே; அந்தச் சங்கதியைத் தான் சொல்லுகிறேன்" என்றார் பாட்டர் ஸன்.

"அதில் என்ன தப்பு?"

"உங்கள் வியாபாரத்திலே ஏதோ கலை பண்ணுவதாகச் சொல்லுகிறீர் களே; அந்த அம்சம்தான் எனக்குப் புரிய வில்லை. நானும் ஒரு வியா பாரிதான். நீங்கள் செய்வது வெறும் வியாபாரம்; சுத்தமான வியாபாரம். அவ்வளவு தான். கற்றுக்குட்டிக ளிடமும் கலைப் பித்தர்களிடமும் உங் கள் விசித்திரச் சரக்குகளை விற்று, நீங்கள் கொள்ளைப் பணம் சம்பாதிக் கிறீர்கள் என்று நினைக்கிறேன். எங்கள் நாட்டு ஜனங்களில் ஏராள மான முட்டாள்கள் இருப்பது எனக் குத் தெரியும். இந்த மாதிரிக் குப்பை களுக்கு அவர்கள் எவ்வளவு பணம் வேண்டுமானாலும் கொடுப்பார்கள். இந்தியக் கலையைப் பற்றிப் பேசு வதே, அவர்களுக்கு ஒரு கௌரவ மாய், ஒரு பெருமையாய்ப் போய் விட்டது. மடையர்கள்!"

"குப்பையா!" என்று கர்ஜித் தார் தேவ்: "மிஸ்டர் பாட்டர்ஸன்! நீங்கள் கொஞ்சம் துடுக்காய்ப் பேசு கிறீர்கள். உங்கள் நாட்டவரை நீங் கள் எவ்வளவு வேண்டுமானாலும் திட்டலாம். அதற்கு உங்களுக்குப் பரிபூரண சுதந்தரம் உண்டு. அதற் காக, எங்கள் கலைகளையும் நாகரிகத் தையும் தூஷிக்க, உங்களுக்குச் சுதந் தரம் வந்து விடாது" என்றார்.

"நாகரிகமாம் நாகரிகம்!" என்று எரிச்சலோடு திருப்பித் திருப்பி ஜபித்தார் பாட்டர்ஸன்: "உங்கள் நாகரிகம் பற்றி நான் ஒன்றும் பழிக்கவில்லை, மிஸ்டர் தேவ்! உங் கள் நாட்டில் நான் போதிய காலம் இருந்திருக்கிறேன்; உங்கள் நாகரி கத்தைப் பற்றி எனக்குத் தெரியும். ஆனால், ஒன்றுதான் எனக்குப் புரியவில்லை; உங்கள் கலை தான் எனக்குப் புரியவில்லை. அது மகா மட்டம். இப்படி நான் சொல்லு வதற்கு என்னை மன்னியுங்கள்" என்றார்.

"உங்களுக்கு என்னவோ தப்பபிப்பிராயம் விழுந்திருக்கிறது. எங் கள் கலைகளுக்கு, எங்கள் நாகரிகப் பண்பே மூலாதாரமாகும். எங்கள் கலையை அறியாமல், எங்கள் நாகரி கத்தை அறிய முடியாது; நாகரிகத்தை அறியாமல், கலையை அறிய முடியாது. இந்தியாவில் உள்ள அனைத்திலும், சமய உணர்ச்சி ஆழமாய் ஊறி யிருக்கும்."

"ஆமாம், ஆமாம். எண்ணற்ற தெய்வங்களுக்கும் தேவிகளுக்கும் நடந்த காதல் லீலைகளைச் சொல்லு வது தானே உங்கள் சமயம்! நீங்கள் ஹிந்துக்கள் இருக்கிறீர்களே, உங்கள் புனித நம்பிக்கைகளை யெல்லாம் மாசுபடுத்துவதே முகம்மதியரின் சம யம்! நீங்கள் ஒரு விசித்திரமான ஜனங்கள்!"

"மிஸ்டர் பாட்டர்ஸன்! நீங்கள் எங்கெங்கோ அபாயமான திசை களில் பேச்சை இழுக்கிறீர்கள். எங் களிடம் நீங்கள் என்ன விசித்திரத் தைக் கண்டு விட்டீர்கள்? உங்கள் கண்களிலே தான் விசித்திரம் இருக்க வேண்டும். அதுதான் இந்தக் கோளா றுக்குக் காரணம்."

"உங்களுக்கு வருத்தம் உண்டா கும்படி பேசியதற்கு என்னை மன்னி யுங்கள், மிஸ்டர் தேவ்! எது எப்படி யானாலும் சரி; உங்கள் கலை சம்பந் தப்பட்ட மட்டில் எனக்கு நம்பிக்கை துளியும் வரவில்லை; அவ்விஷயத்தில் நான் அஞ்ஞானியாகவே இருக்க விரும்புகிறேன். அது கிடக்கட்டும்; ஒரு விஷயம் கேட்கிறேன், சொல் லுங்கள்: இப்போது உங்களிடம் என்ன புராதனக் கலைச் சரக்கு அல்லது சரக்குகள் இருக்கின்றன? அவை விற்பனைக்குத் தயார்தானா?..."

"தயார்தான். ஆனால், கையகலம் இருக்கிறதே உங்கள் தீவு; அதில்

உள்ள எவருக்கும் அதை விற்கப் போவதில்லை'' என்று குத்தலாய்க் கூறினர் தேவ்: "ஐரோப்பாக் கண்டத்திலே பல விஸ்தாரமான நாடுகள் எனக்கு இருக்கின்றன. அவைகளின் ஜனங்கள் சுத்தமான மனசு உடையவர்கள்; ரசனை உடையவர்கள். இங்கே எனக்கு ஓர் இங்கிலீஷ்காரரின் கதை ஞாபகம் வருகிறது. அவர் ஒரு பெரிய லார்டு. கலைப் பொருள்கள் சேகரிப்பதிலே மோகம் உடையவர். ஆனல், அவர் சேகரிப்பதெல்லாம் விசித்திரமா யிருக்கும். அந்தக் கதையைச் சொல்லட்டுமா? கேட்கிறீர்களா, மிஸ்டர் பாட்டர்ஸன்?'' என்ருர்.

"ஆஹா! தாராளமாய்க் கேட்கிறேன், மிஸ்டர் தேவ்! சொல்லுங்கள்.''

"உம்! இந்த லார்டு விலை உயர்ந்த ஒரு வைரக்கல் வைத்திருந்தார். விலையில் தான் உயர்வு; மதிப்பில் உயர்வு என்று சொல்ல மாட்டேன். இவர் கல் மாதிரியே இன்னொரு கல் உலகத்தில் எங்கேயோ இருப்பதாக, இவருக்கு எப்படியோ ஓர் எண்ணம் தோன்றி விட்டது. அந்த ஜோடிக் கல் எங்கேயோ இருப்பது தமது கல்லின் மதிப்புக்குக் குறைவு என்ற ஒரு யோசனை, அவர் மனத்தை உறுத்திக் கொண்டேயிருந்தது. அந்த ஜோடிக் கல்லைக் கண்டு பிடிப்பதற்காக, அவர் உலகமெங்கும் சுற்றினர். ஒரு முறை சுற்றினர்; இருமுறையும் சுற்றினர். கல் அகப்படவில்லை. கடைசியில், ஒரு நாள் மாலையில் லண்டன் தெருக்களிலே நடந்து கொண்டிருந்தார். அப்போது எங்கேயோ ஞாபகமாக ஒரு சிறு கடையின் முன்னே நின்ருர். ஓட்டையும் உடைசலுமான பல விநோத சாமான்கள் அதில் வைக்கப் பட்டிருந்தன. அந்தக் குப்பைகள்மீது தற்செயலாய் இவர் கண் சென்றது. அங்கே இவர் கண்டது என்ன என்று நினைக்கிறீர்கள்...?''

"நினைப்ப தென்ன இருக்கிறது? மந்திர ஜாலக் கதையில் நடப்பது போல், அந்த ஜோடிக் கல்லை அவர் கண்டிருப்பார். சரிதானே நான் சொல்வது?'' என்ருர் பாட்டர்ஸன்.

"ரொம்பச் சரி. அதன் விலை என்ன என்று லார்டு கேட்டார். அஞ்சு ஷில்லிங்கு என்ருன் கடைக்காரன். அஞ்சு ஷில்லிங்குதான என்று அவர் ஆச்சரியப்பட்டார். ஓர் அஞ்சு பவுன் நோட்டையே எடுத்து அவனிடம் வீசினர். கல்லை 'லபக்' என்று தூக்கிக் கொண்டார். காலடியிலே போட்டு, பூட்ஸால் நொறுக்கினர்; 'இனி ஈடு ஜோடியில்லாத ஒரே கல்தான் மிஞ்சியிருக்கிறது. அதற்கு இனி விலை மதிக்கவே முடியாது' என்று கோஷித்தார். கதை எப்படி, மிஸ்டர் பாட்டர்ஸன்?''

"அவ்வளவு ரசப்படவில்லை. எதிர்பாராத முடிவு முதலிய அம்சமெல்லாம் இருக்கத்தான் இருக்கிறது. இருந்தாலும், போதாது. ஆனல், கெட்டிக் காரத்தனமான கதைதான்'' என்ருர் பாட்டர்ஸன். மேலும் தொடர்ந்து, "அதிருக்கட்டும். ஒரு சந்தேகம்: உங்களிடம் ஒரு வேளை அவைகளின் ஜோடியான மூன்ருவது கல் இருக்குமோ? கோஹினூர் கீஹினூர் வைத்திருக்கிறீர்களோ?'' என்று கேட்டார்.

"இல்லை.''

"பின்னே எதற்காக இதைச் சொன்னீர்கள்?''

வங்காளியின் முகம் சுண்டியது. குறும்பும் அவநம்பிக்கையும் கேலியும் நிறைந்த இந்த ஆங்கிலேயருக்கு ஒரு பாடம் கற்பிக்க வேண்டுமென்று, அவர் விரும்பினர். தொண்டை அடைத்துக் கொண்டது போன்ற குரலில், "கொஞ்சம் என் அறைக்கு வாருங்கள்; வருகிறீர்களா?'' என்று அழைத்தார்.

## 3

பீட்டர் பாட்டர்ஸன், தம் சகோதரப் பிரயாணியின் அறையில் தாம் எதிர்பாராத பல பொருள்களைக் கண்டார். அவருக்குச் சிறிது ஆச்சர்யம் உண்டாகத் தான் உண்டாயிற்று. இல்லை யென்று சொல்வது, உண்மையை ஒளிப்பதாகும். வங்காளி மின்சார விளக்கை ஏற்றினர். உயரமாக அலமாரி போல் இருந்த ஒரு பெட்டியைத் திறந்தார். பின்பு, இன்னும் பிரகாசமான மற்றொரு

விளக்கை ஏற்றினர். மனோவசியம் செய்பவர் போல, ஆங்கிலேயரைக் கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டே, ஒரு கம்பளிப் பையை இழுத்தார். விக்ரகத்தை வெளியே எடுத்தார். விக்ரகம் சுமார் மூன்றடி உயரமிருந்தது; அதன் மேலே பாசி போல் பசுமை படர்ந்திருந்தது. பாட்டர்ஸன் அதைக் கண்டார். இதற்குத் தானு இத்தனை ஆடம்பரம் என்று அவர் நினைத்தார். இந்த வேட்டை நாய் ஜன்மம் இதனால் ஏதாவது மனம் மசிகிறதா என்று கவனித்தார் தேவ். அவருக்கு ஏமாற்றந்தான் உண்டாயிற்று. அவரது மனோவசிய சக்தியெல்லாம் பலிக்கவில்லை; வீணுயிற்று. அந்த ஜன்மம் கல்லுப் பிள்ளையார் போல், உதாசீனமாயிருந்தது.

"உம்!" என்றார் தேவ்.

"உம்!" என்றார் பாட்டர்ஸன்.

"நீங்கள் எதிர்பார்த்தபடி வைரக் கல் ஒன்றுமில்லையே?"

"எதிர்பார்த்தேனு! சேச்சே, அப்படி ஒன்றுமில்லையே. நான் எப்போதுமே திறந்த மனசு உடையவன்."

"ஏதேனும் பூதக்கண்ணாடி அல்லது தூர திருஷ்டிக் கண்ணாடி உங்களுக்குத் தேவையாயிருக்குமோ?" என்று கேட்டார் வங்காளி. தம் குரலில் தொனித்த கேலியை மறைக்க, அவர் முயலவில்லை.

"ஓ! அதெல்லாமில்லை. ஒரு மூன்றுவது ஆசாமி தான் வேண்டும். மிட்செல் அல்லது டெப்ரீ போன்ற ஏதாவது ஒரு காமிரா இங்கே இப்போது இல்லாமல் போய்விட்டதே என்றுதான் வருந்துகிறேன். இருந்தால், இதை ஒரு 'டாக்குமெண்ட் சினிமாப் படம்' எடுக்கலாமே" என்று சொல்லிக் கொண்டே, பாட்டர்ஸன் தமது விலையுயர்ந்த மற்றொரு சுருட்டை அநாயாசமாக எடுத்துக் கொளுத்தினர்.

தேவ் வலுக்கட்டாயமாய்ச் சிரிப்பை வரவழைத்துக் கொண்டு சிரித்தார்: "இது தாண்டவ நடராஜ விக்ரகம்!" என்றார்.

"ஓ! இந்தியாவில் உள்ள தட்டு முட்டுச் சாமான் கடைகளில் இந்த மாதிரி விக்ரகங்களைக் குவியல் குவியலாய் நான் கண்டிருக்கிறேன். சமீபத்தில் புது டில்லியில் கூட இந்த மாதிரி இரண்டு மூன்றைக் கண்டேன். ஆனல், அவைகள் மீது இந்தப் பச்சை வர்ணம் பூசியிருக்க வில்லை. அதோடு, உங்கள் சரக்குக் கொஞ்சம் உயரமாகவும் இருக்கிறது."

"பச்சை வர்ணமா?" என்று கூச்சலிட்டார் தேவ். ஆங்கிலேயரின் அறியாமையைக் கண்டு அவருக்கு அருவருப்பு உண்டாயிற்று: "எங்கள் விக்ரகச் சிற்பிகளின் பாஷையில் சொன்னல், இது சோழன் காலத்து வெண்கலச் சிலையாகும்" என்று கூறினர்.

"என்ன அது?"

"சோழன் காலத்துச் சிலை."

"சோழனு? அது யார்? நான் கேள்விப்பட்ட தில்லையே!"

"அதற்கு இந்திய சரித்திரம் தெரியவேண்டும். சோழர்கள், கிறிஸ்துவுக்குப் பின் பத்தாம் நூற்றுண்டில் தென்னிந்தியாவில் ஆண்ட ஒரு ராஜ வம்சம். சோழ சாம்ராஜ்யத்தின் புகழ் உச்ச நிலையில் இருந்த காலத்தின் ஞாபகச் சின்னமாய் விளங்குவது இதோ இருக்கிற இந்த விக்ரகம். அந்தக் காலம் கலையும் ஞானமும் ஒளி வீசிய காலம். அப்போது வாழ்ந்த ஒரு சிற்பி படைத்தது இந்த விக்ரகம். புனித நதியான காவேரி தீரத்திலே இது கண்டெடுக்கப்பட்டது. சிலை மீது தென்படும் பசுமை, காலத்தால் ஏற்பட்டது, மிஸ்டர் பாட்டர்ஸன்! இது செடிப் பச்சையோ, கடல்பச்சையோ, இலைப் பச்சையோ, பாசியோ அல்ல. இந்த விஷயங்களை அறிந்து கொள்வதற்கு, பூர்வ இந்திய சரித்திரத்தில் கொஞ்சம் ஞானம் வேண்டும், மிஸ்டர் பாட்டர்ஸன்!"

"விஷயம் ரொம்பக் கவர்ச்சிகரமாய்த் தான் இருக்கிறது, மிஸ்டர் தேவ்! ஆனல், இந்திய சரித்திரத்தைப் பற்றியெல்லாம் நான் ஏன் தொல்லை செய்து கொள்ளவேண்டும்?

இந்திய சரித்திரத்திலே எனக்கு ஒரே ஒரு சம்பவத்தைத் தான் தெரியும்: பெரிய சிப்பாய்க் கலகம் நடந்ததே, அது தான் தெரியும்.''

இந்த நையாண்டியைக் கேட்டு, கௌரி சுந்தர தேவ் அசடுதட்ட விழித்தார். ஆயினும், அதைச் சட்டை செய்யாதது போல வெளிக்குக் காட்டிக் கொண்டார்.

"தாண்டவ நடராஜன். சோழன் காலத்திய அபூர்வமான சிற்பம். உத்தம சோழ அரசனின் தாய் கீர்த்தி மிகுந்த செம்பியன் மாதேவி என்ற ராணி மகா பக்தியுடைவள். விக்ரகம் ஒரு வேளை அவள் வணங்கியதாக இருக்கலாம், மிஸ்டர் பாட்டர்ஸன். இந்த விக்ரகத்தின் அந்தரார்த்தத்தைக் கொஞ்சம் சொல்லுகிறேன், கேட்கிறீர்களா? நடராஜன், இந்துக்களின் திரிமூர்த்திகளில் ஒருவரான சிவபெருமான். இந்தச் சிலை, நர்த்தனமிடும் சிவன். சிருஷ்டி, திதி, சம்ஹாரம் மூன்றையும் புரியும் கடவுள். அகில அண்டங்களையும் அதன் அதன் ஸ்தானத்தில் நிலைபெறச் செய்வதற்காகவே-நட்சத்திரத்துக்கும் நட்சத்திரத்துக்குமிடையே துலாக்கோல் பிடிப்பதற்காகவே - அவர் நடனம் புரிகிறார்...''

"அண்டங்களை நிலைபெறச் செய்யும் நடனமா! மகா விசித்திரமாயிருக்கிறதே! அப்படியானால், விஞ்ஞானிகள் ஏதோ ஆகர்ஷண சக்தி என்று ஒன்று இருப்பதாகச் சொல்லுகிறார்களே; அது எதற்காக?''

"நீங்கள் மிகவும் சயின்ஸ் மோகம் பிடித்தவர்களா யிருக்கிறீர்கள். எங்கள் நாட்டில் இப்படி ஒருவன் பேசினால், தெய்வ நிந்தை செய்கிறவன் என்றே அவனைச் சொல்லுவோம். உங்களுக்குக் கொஞ்சம் கூட மனோ தர்மம் கிடையாதா?''

"ஆஹா! தாராளமாய் உண்டு. என் மனோ தர்மத்தில் நாட்டியம் என்றால், ஆங்கிலேயரின் ஜிக், ஹார்ன் பைப், மாரிஸ்-டான்ஸ், நவீன ஜாஸ் முதலியவை தான் ஞாபகம் வருகின்றன. இன்னும் கொஞ்சம் இழுத்தால், ஐரோப்பாக்கண்டத்து நாடுகளில் வழங்கும் போல்கா, மஸூர்க்கா, வால்ட்ஸ், காஸக், பண் டாங்கோ ஆகியவையும் கொஞ்சம் புரியும். உங்கள் சிவபிரானின் இந்த நாட்டியம், அந்த ரகங்களில் எதைச் சேர்ந்தது?''

"எதையும் சேராது.''

"அப்படியானால், அது எனக்குப் புரியாதையா!''

ஆங்கிலேயர் வேண்டு மென்றே கேலியாய், முரட்டுத் தனமாய்ப் பேசுகிறார் என்று, கௌரி சுந்தர தேவ் உணர்ந்து கொண்டார். இருந்தாலும் அவர் விடும் புகையைச் சட்டை செய்யாமல், அவருக்குத் தாண்டவ நர்த்தனத்தின் உட்பொருளை விளக்கி அவர் மனத்திலே ஒரு பயபக்தியை உண்டாக்க, தேவ் எண்ணினார். விக்ரகத்தையே சிறிது நேரம் உற்று நோக்கிக்கொண் டிருந்தார். அற்புதமான கோலம். வலது கால் முழங்காலிலே வளைந்து, அற்ப அசுரனை வதம் புரிந்து கொண்டிருந்தது; இடது கால் வலது காலுக்குக் குறுக்கே தூக்கி மடக்கி யிருந்தது. இடது கைகளில் ஒன்று அந்தக் காலின் பாய்ச்சலைத் தொடர்ந்து சென்றது. வலது கைகளிலே ஒன்று அபயக் குறிப்புக் காட்டி நின்றது. பாயும் மானையும் கொழுந்து விடும் தீயையும் தாங்கி நின்றன பிற கைகள். தேவ் அந்தச் சிலையையே கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தார். சிலை அப்படியே உயிர் பெற்றெழுந்து சம்ஹார நடனம் புரியாதா என்று கூட அவர் ஆசை கொண்டார். நம்பிக்கையற்ற இந்தமனிதரின் அகந்தையைக் கண்டு, தேவுக்கு அவ்வளவு கோபம் வந்தது.

அவர் மீண்டும் பேசுமுன்பாக, அவரது உள்ளக் கருத்தை அறிந்து கொண்டவர் போல, பாட்டர்ஸன் குறுக்கிட்டுக் கூறலானார்:

"மிஸ்டர் தேவ்! வீணே தொந்தரவு செய்து கொள்ளாதீர்கள். இந்திய சரித்திரத்தைப் பற்றி நீங்கள் போதித்த பாடம் ருசியாய்த் தான் இருக்கிறது. வந்தனம். ஐரோப்பாக் கண்டத்து நாடுகளில் உள்ள யாரிடமாவது உங்கள் சிலையை விற்றால், உங்களுக்கு நல்ல பணம் கிடைக்கும் என்றே நம்புகிறேன். அவர்கள் தான்





லைப்பாய்
பழக்கத்தையும்
அவன்
அறிந்திருக்கிறான்!

இப்பொழுது அவன் அதிக விஷயங்களைக் கற்றுக்கொள்கிறான். ஆனால் லைப்பாய் சோப்பைத் தினசரி உபயோகிக்கும் பழக்கம் தவிர, வாழ்க்கையில் அவனுக்கு வேறொன்றும் அதிக நன்மை செய்யப்போவதில்லை. பாதுகாப்பற்றவர்களை எல்லா இடங்களிலும் பிடிக்கிற அழுக்கு அபாயத்திலிருந்து தான் கற்பித்த புத்திமதிகள் அவனுக்குப் பாதுகாப்பளித்திருக்கிற தென்பதாக அவன் தாய் சந்தோஷமும், பெருமையும் அடையக்கூடும்.

லைப்பாய் ஒரு நல்ல சோப்பைக்
காட்டிலும் சிறந்தது.
அது ஒரு நல்ல பழக்கம்




L. 77-60 TM.

LEVER BROTHERS (INDIA) LIMITED




அதுதான் இந்திய ஆகாயப்படையின் பிராணம். இந்திய அதிசயத்தக்க உற்சாகம் தான் ஐ. ஏ. எப்பின் மேன்மைக்குக் காரணம் உலகின் எல்லைகள் மாறுதல் அடைந்து வரும் இந்த சரித்திரசம்பந்தமான நாளில் ஆகாயத்தில் பலம் பெற்று அதிகாரம் வகிப்பது தான் ஜெயிப்பவனுக்கும் ஜெயிக்கப்படுவனுக்கு முள்ள வித்தியாசத்தை ஏற்படுத்துகிறது. நேச நாட்டுகளுடன் ஐ. ஏ. எப். ஜப்பானியர்களுக்கு, நமது துணிச்சலான உற்சாகமும், பயிற்சியின் மேன்மையம் நமக்கு ஆகாயபலத்தை அளிக்கிறது என்பதை காண்பிக்கின்றனர்.

## உங்களுடைய பிற்கால வாழ்க்கையைப் பற்றி நினைப்பதற்கு இதுவே சமயம்!

- இந்திய ஆகாயப் படையில் அடையும் பயிற்சியும் அனுபவமும் அனேகருக்கு லாபகரமான சிவில் வாழ்க்கை நடத்த தேவையான யோக்யதாம்சங்களை கொடுக்கிறது என்பதற்கு சந்தேகமேயில்லை.
- யுத்தம் நடக்கும் வரை தங்கள் ஆதிக்கத்திலுள்ள அநேக வேலைகளை காலியாக வைத்திருப்பதாக சர்க்கார் வாக்களித்திருக்கின்றனர். இந்த வேலைகள் பிற்பாடு யுத்தசேவை செய்தவர்களைக் கொண்டு பூர்த்தி செய்யப்படும்.
- யுத்த சேவையிலிருந்தவர்களில் தேர்ந்தெடுத்தவர்களுக்கு குறிப்பிட்ட வியாபாரம் அல்லது தொழிலில் சர்க்கார் செலவில் பிரத்யேக பயிற்சி அளிப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள் தயாராகி வருகிறது.
- தற்சமயம் பல்கலைக்கழகத்திலிருக்கும் மாணவர்களுக்கு யுத்த சேவையால் யுத்தத்திற்குப் பிறகு மதிப்பு உள்ள சலுகைகளை அடைவார்கள். அதன் மூலம் அவர்கள் மேற்கொண்டும் படிக்கலாம். சரியான விவரங்களை பல்கலைக்கழக அதிகாரிகளிடமிருந்து பெறலாம்.

இந்த கூப்பனை கத்தரித்து அதை உங்களுக்கு சமீபத்திலுள்ள G. D. (பைலட்டுகள்) ரெக்ரூட்டிங் ஆபீசருக்கு அனுப்புங்கள். அவர் உங்களுக்கு விண்ணப்ப பாரமும் இந்திய ஆகாயப் படையில் பைலட் சேவைக்கான விவரங்களையும் நிபந்தனைகளையும் அனுப்புவார்.

பெயர் ____________________

விலாசம் ____________________

____________________

### ஐ. ஏ. எப்க்குத் தேவையானது

நல்ல திடசரீரமும், நல்ல பார்வை, காது கேட்குதல், 17½ முதல் 28 வயதுக்குள் இருக்கும் மனிதர்கள். அவர்கள் சுறுசுறுப்புள்ள யுத்த சேவையில் பறப்பதினால் ஏற்படும் பிரயாசத்தை தாங்கக் கூடியவர்களாய் இருக்கவேண்டும். நல்ல பொது அறிவுள்ள படிப்பும் ஆங்கிலம் நன்றாய் பேசவும் எழுதவும் தெரிந்திருக்க வேண்டும்.

உங்களது கூப்பனை

சமீபத்திலுள்ள G. D. R. Oக்கு அனுப்புங்கள்

I. A. F. G. D. (பைலட்) ரெக்ரூடிங் ஆபீஸர்,
புதுப்பேட்டை லைன்ஸ், மவுண்ட் ரோட், மதராஸ்
I. A. F. G. D. (பைலட்) ரெக்ரூட்டிங் ஆபீஸர்,
கூப்பான் ரோட், பெங்களூர்

AAA—1529—TM

ரசனை உடையவர்கள். உங்களுக்கு அதிர்ஷ்டம் உண்டாகக் கடவதாக!''

இவ்வாறு சொல்லி, பாட்டர்ஸன் போய் விட்டார்.

ஆங்கிலேயர் இப்படித் திடீரென்று போய் விடுவார் என்று கௌரி சுந்தர தேவ் நினைக்க வில்லை. ஒரு நிமிஷம் அப்படியே திகைத்து நின்றார். பின்பு, தமது ஆத்திரத்தை யெல்லாம் தணித்துக் கொண்டு. கம்பளி உறையைச் சிலைக்கு மேலே போர்த்திப் பெட்டியில் வைத்து மூடினார்.

## 4

புண்ணியம் வாய்ந்த சீமான்களும் சீமாட்டிகளும் இஸ்பாஹான் கப்பல் தளத்திலே இன்னும் நாட்டியம் ஆடிக் கொண்டே தான் இருந்தார்கள். பாண்டு வாத்திய கோஷமும் இன்னிசைகளைப் பொழிந்து கொண்டுதான் இருந்தது. பிடில்கள் ஓலமிட்டன; தாரைகள் மனிதக் குரலைப் பரிகசித்தன; தம்பட்டைகள் முழங்கின; ஜாலர்கள் ஜல் ஜல் என்று ஒலித்தன. ஆண்களும் பெண்களும் குதித்துக் குதித்து மிதந்து மிதந்து நர்த்தன மாடினார்கள். நீர் போல் தெளிந்து, கண்ணாடி போல் கிறு கிறுத்த பட்டும் ஜரிகையும் நுரை அலை போல் அலைந்தன; தோளோடு தோள் கோத்து, கழுத்தோடு கழுத்திணைந்து, சீமான்களும் சீமாட்டிகளும் நாட்டிய மாடினார்கள்; பாட்டர்ஸன் கப்பல் தளத்தின் கைப்பிடிக் கம்பிகளிலே சாய்ந்தவராய், நாட்டியத்தைக் கவனித்துக் கொண்டு நின்றவண்ணம், "ஆஹா! நடனம் என்றால் இந்த பாக்ஸ்-ட்ராட் அல்லவா! ஜாஸ் அல்லவா! இதை விட்டு என்னவோ சிவ தாண்டவமாமே? பூ! என்ன புரளி!'' என்று முணு முணுத்தார். சிறிது நேரம் தளத்திலே இங்குமங்கும் உலாத்தினார். பின்பு, இரவில் உறங்க, தமது அறைக்குள்ளே நுழைந்தார்.

பாட்டர்ஸன் தூங்கினார். பாட்டர்ஸன் விழித்துக் கொண்டார். எல்லாம் ஒரே அமளியா யிருந்தது. பயங்கர பூகம்பம் போல் ஓர் அதிர்ச்சி உண்டாயிற்று. அவர் விழித்த போது, வானத்துக்கும் பூமிக்குமாய்ப் பிரம் மாண்டமான ஓர் உருவம் ஓங்கி உயர்ந்து நிற்பதை அவர் கண்டார். அதன் கண்கள் தீ கக்கும் ஒளிப் பிழம்புகளா யிருந்தன. அதன் ஜடை முடிகள் இருண்டு கறுத்த மேகங்களாய் வானிலே சுழன்று வட்டமிட்டன. அவர் அடியோடு பிரமித்துத் திகைத்துப் போனார். இந்தப் பயங்கர தர்சனத்தால், அவர் உணர்ச்சிகளெல்லாம் வறண்டு போயின. ஜ்வாலை கக்கும் ஒரு வான அண்டத்தைப் போல, அந்த உருவத்தின் நெற்றி, நடுவே பிளந்து தீ உமிழ்ந்தது. நெருப்புக் கோளங்கள் நாற்புறமும் தாவிப் பாய்ந்தன. நாச பயங்கர ஆயுதங்களைத் தாங்கிய பல கரங்கள் எட்டுத் திசையிலும் நீண்டன. அவரைச் சூழ, கோர அக்னியொன்று உறுமி வளைத்தது. கோடிக் கணக்கான சுடுசரங்கள் மின்னி இடித்தன. யாவும் முடிவற்ற அளவிறந்த தீக் கொப்பரை போல், அதி பயங்கர ஹோமகுண்டம் போல், வெந்து குழம்பின. அந்த ஹோமகுண்டத்தில், பேய் போல் புகுந்த சண்ட மாருதம் சீறியடித்துச் சகல வஸ்துவையும் சுழற்றியது. கடலின் ஜலத்திரள் கொதித்துப் பொங்கி மலைகளுக்கு மேல் வீசியது. எங்கும் ஒரே பிரளயமாகி விட்டது. வெள்ளம், வெள்ளம், வெள்ளம்! உலகமெல்லாம் ஒரே வெள்ளக்காடாகி விட்டது. பின்பு, அந்த வெள்ளம் 'ஹோ!' என்று அலறிக்கொண்டு பின்வாங்கி அக்னியில் புகுந்து அடங்கியது. கோரமான அக்னி எங்கும் சூழ்ந்து வாயுவில் போய் அடங்கியது. வாயு ஆகாயத்தில் அடங்கியது. அடிவானமே தெரியாமல் எங்கும் ஒரே ஸ்மசான பூமியாகி விட்டது. எங்கு பார்த்தாலும் எரிந்து கருகிய பிரேதக் குவியலாயிற்று; கரியும் சாம்பலும் எங்கும் மலைபோல் குவிந்து மூடியிருந்தன. பாட்டர்ஸன் பயந்து நடுங்கினார். அந்தப் பயத்தினால், அவர் கண்கள் இமைப்பதையும் மறந்து விட்டன. பிரம்மாண்டமான ஒரு சொரூபம், கீழே குனிந்து, அந்தச் சாம்பலை எடுத்து, அரக்கச் சிரிப்புடன் மேனியிலே பூசிக்கொண்டு, மீண்டும்

ஓங்கி நிமிர்ந்ததை அவர் கண்டார். தீக்கிய அதன் நெற்றியிலே எவ்வித வடுவுமின்றி இப்போது தெளிவுற்றிருந்தது. அந்தச் சொரூபம் மீண்டும் நிமிர்ந்து பரவசமாய், அமானுஷ்ய லயத்துடன் நர்த்தனமாடத் தொடங்கியது. அதன் எண்ணற்ற கைகளில் ஒன்று பிடித்திருந்த சின்னஞ்சிறு உடுக்கு, வெறி பிடித்தது போல் ஒலி முழக்கியது. அதன் சிறுத்த இடையிலே கட்டியிருந்த குறுங் கயிற்றின் நுனியில் பிணைத்த கனத்த குண்டுகள் துள்ளிப் பாய்ந்து, முடுக்கிக் கட்டிய அதன் இருபுறத் தோலையும் பட பட வென்றடித்து, டுடுடும் டுடுடும் என்று கொப்பளிக்கும் ஓசை யெழுப்பியது. இந்த உடுக்கோசை சகிக்கமுடியாததாயிருந்தது; நரம்புகளை வெல வெலக்கச் செய்தது. குருடன் கைக் கோல் தட்டுவது போல, ஓயாமல் ஒலித்த இந்த ஓசை தான், மற்றெதனையும் விட மோசமாய், பாட்டர்ஸனை ரத்தம் உறைந்து விறைக்கச் செய்தது; அவருக்கு அநேகமாய்ப் பித்துப் பிடித்து விடும் போலிருந்தது. அந்தப் பிரம்மாண்ட சொரூபம் எதையோ ஒரு வஸ்துவைத் தன் காலின் கீழே போட்டு நசுக்குவதை, அவருடைய கண்கள் அவரையே அறியாமல் திடீரென்று கண்டன. அந்த வஸ்துவின் உடம்பு ஒரு புழுவைப் போல் இருந்தது; தலை ஓர் அசுரனைப் போல் இருந்தது; முகம், இம்மியும் பிசகாமல் இவரே சாயலாயிருந்தது. பாட்டர்ஸன் பித்தனைப் போல் அலறினார்; ஆனால், தம் குரல் தமக்கே கேட்காதது கண்டு திடுக்கிட்டார். அவர் நாவு, அவர் அண்ணத்திலே போய் ஒட்டிக் கொண்டது. இன்னும் விடாமலே அவர் அலறினார். அலறி அலறி வியர்த்து விறு விறுத்து மூர்ச்சையாய் விழுந்து விட்டார்.

அவருக்குப் பிரக்ஞை திரும்பி வந்தது. எத்தனை நேரம் கழித்து என்று அவருக்கே தெரியாது. தம்மைச் சுற்றிலும் ஒரு மகத்தான மாறுதல் நிகழ்ந்திருப்பதை, பாட்டர்ஸன் உணர்ந்தார்; பார்த்தார். அவர் தர்சனத்தில் கண்ட மகா புருஷனின் பக்கத்திலே, மோகனப் பெண்ணுருவ மொன்று தோன்றி யிருக்கக் கண்டார். ஈருருவங்களும் மென்மையான ஜதிகளோடு ஆனந்த நடனம் புரிந்துகொண் டிருக்கக் கண்டார். புருஷ சொரூபத்தின் முகத்திலே அருள் சொரியும் புன் சிரிப்பொன்று திகழ்ந்தது. எங்கும் சாந்தி நிறைந்திருந்தது. தெய்விக அருட்கடல் போன்ற ஒரு சாந்தி, ஒரு சோபை! வசந்தத்தின் வாசனை காற்றிலே மிதந்தது. புருஷ உருவத்தின் ஜடா முடிகளிலிருந்து பிறைச் சந்திரன் எட்டிப் பார்த்து, மெல்லிய பனித் துளிகளை உதிர்த்துச் சொரிவதை, பாட்டர்ஸன் கண்டார். அவை படிகம் போன்ற அருவிகளாய்ப் பெருகி, ஜடைகளின் வழியே வழிந்து விழுந்தன. அநேகவித வர்ணங்கள் தோன்றிக் கண்ணைப் பறித்தன. மீண்டும் எங்கும், புதுமை

### நீதிஸ்தல விநோதம்

"அன்று நீர் பிரதிவாதி வீட்டுக்குப் போனதுண்டா?" என்று கேட்டார் வாதி வக்கீல்.

"ஆம்; போனேன்" என்றார் சாட்சி.

"அவர் என்ன சொன்னார்?" என்றார் வக்கீல்.

இந்தக் கேள்வியை, பிரதிவாதியின் வக்கீல் ஆட்சேபித்து, அநேகவிதமான சட்டப் பாயிண்டுகளை எடுத்துச் சொன்னார். வாதி வக்கீலும் விடவில்லை. இது நியாயமான கேள்வியே என்று பலமாய் வாதித்தார். இந்த நிலையில், நீதிபதி கோர்ட்டை ஒத்திப் போட்டு விட்டு, திரும்பி வந்ததும் இந்த விஷயத்தில் முடிவு சொல்லுவதாகக் கூறிச் சென்றார்.

வெகு நேரம் கழித்து, கோர்ட் மீண்டும் கூடியது. கேள்வி நியாயமானதே என்று நீதிபதி முடிவு சொன்னார்.

வாதி வக்கில் கம்பீரமாக, "பிரதிவாதி என்ன சொன்னார்?" என்று மீண்டும் கேட்டார்.

"அவர் வீட்டில் இல்லை, ஸார்" என்று பதில் அளித்தார் சாட்சி.

யாய், குதூகலமாய் உயிர் தழைத்தது. எங்கோ அகாத தூரத்திலிருந்து வரும் மங்கலான, லளிதமான சொற்களைக் கொண்ட ஓர் இனிய கானத்துக் கிசைய, அந்த ஆணும் பெண்ணும், நடனமாடினார்கள். அந்தக் கானத்தின் பாஷை, பாட்டர்ஸனுக்குப் புரியவில்லை. என்றாலும், ஒரு சாந்தி-இதற்கு முன்னெப் பொழுதும் அவர் அனுபவித் திராத தொரு பரம சாந்தி-அவர் உள்ளத்திலே உண்டாயிற்று. ஆண் தெய்வத்தின் ஒரு கரம், தமக்கு வங்காளி காட்டிய விக்ரகத்தைப் போல அபயப்பிரதானமாய்த் தூக்கி, இவரை ஆசீர்வதிக்கக் கண்டார்; அந்த மோகனப் பெண்ணுருவம், திடீரென்று உருகி ஆணிலே மறைந்து விட்டது. எங்கோ அகாத தூரத்திலிருந்து வந்த தெளிவற்ற புரியாத அந்தக் கானம் மெல்ல மெல்ல மங்கி இவரை ஆழ்ந்த தூக்கத்திலே அமிழ்த்தி விட்டது.

## 5

**பா**ட்டர்ஸன் தூங்கினார். விழித்தார்.

விழித்தபோது, தமது கப்பல் அறையிலேதான் இருந்தார். இப்போது அவரிடம் ஒரு பிரமாதமான மாறுதல் ஏற்பட்டிருந்தது. அவர் துளியும் தயங்கவில்லை; துளியும் கலங்கவில்லை. படுக்கையி லிருந்து குதித்தார். வெளியே தளத்துக்கு வந்தார். பூர்ணச்சந்திரன் ஆனந்தமாய்ப் பிரகாசித்துக்கொண்டிருந்தது. வெள்ளியை உருக்கி வார்த்தது போன்ற மத்திய தரைக்கடலின் ஜலத்திரளைக் கிழித்துக்கொண்டு, **இஸ்பாஹான்** ஜிலு ஜிலு என்று சென்று கொண்டிருந்தது. சந்திரன் உச்சியி லிருப்பதனின்றும், நள்ளிரவு நேரம் என்று அவர் கண்டுகொண்டார்.

நேரே வங்காளியின் அறைக்கு, அவர் சென்றார். கதவைத் தட்டினார்.

வங்காளி எப்போதுமே அரைத் தூக்கம் தூங்குபவர். முதல் தட்டிலேயே அவர் விழித்துக்கொண்டார். "யார் அது?" என்று கேட்டார்.

"நான்தான், பாட்டர்ஸன்."

"பாட்டர்ஸனா! இந்நேரத்தில் இங்கே எங்கே வந்தீர்கள்?" என்று வினவினார் தேவ். அவர் குரல், சற்றுக் கரகரப்பாகவே இருந்தது. வெள்ளையரின் துடுக்கினால் அவருக் குண்டான ஆத்திரம் இன்னும் தணியவில்லை.

"கதவைத் திறவுங்கள்; மாட்டீர்களா?"

வங்காளி அறைக் கதவைத் திறந்தார்.

பாட்டர்ஸன் உள்ளே புகவில்லை. வாயிற்படியிலேயே தயங்கித் தயங்கி நின்றார். அவர் தலைமயிர் பறக்க, இரா உடுப்பு அணிந்து நிற்பதை, தேவ் கண்டார்.

"என்ன விஷயம், பாட்டர்ஸன்? உங்களைப் பார்க்கும்போது, ஏதோ அசௌக்கிய மடைந்தவரைப் போல் தோன்றுகிறதே!" என்று தேவ் கேட்டார்.

"இப்போ திருப்பதைவிட அதிக ஆரோக்கியமாய், குதூகலமாய், வேறெப்போதும் நான் இருந்ததில்லை, மிஸ்டர் தேவ்! அந்த உங்கள் வெண்கலச் சிலையை, எனக்குக் கொஞ்சம் காட்டுவீர்களா? சிரமம் கொடுப்பதற்கு மன்னியுங்கள்."

"என்ன அதிசயம்! அதை எதற்காக மறுபடியும் பார்க்க விரும்புகிறீர்கள்? அதைத் தான் மகா கேவலமாய் நீங்கள் பழித்துச் சென்றீர்களே!"

கௌரி சுந்தருக்குப் பெருமை பொங்கியது. ஆனால், பாட்டர்ஸனுக்கு அதைப்பற்றி யெல்லாம் லட்சியமில்லை. "அதை நான் ஒரு புதிய கண்ணோடு பார்க்க விரும்புகிறேன்" என்றார்.

"திடீரென்று இந்தக் கண் திறப்பு உங்களுக்கு எங்கிருந்து ஏற்பட்டது?"

"தமாஷெல்லாம் வேண்டாம். தமாஷ் செய்வதால் நீங்கள் தான் முட்டாளாவீர்கள். இம்மாதிரி நீங்கள் முரண்டு பிடிக்கக்கூடும் என்று தெரிந்தே, நான் வந்தேன்."

"ஓஹோ! இந்த விந்தையைக் கண்டுபிடித்து விட்டீர்களே; இதைச் சொல்லத்தான் இப்படி வந்து, பாதி ராத்திரியில் கதவைத் தட்டினீர்களோ?"

"பதறுதீர்கள், மிஸ்டர் தேவ்! உங்கள் சிலையைக் காட்டமுடியா தென்று நீங்கள் சொன்னாலும், இதை உங்களிடம் கூறவே வந்தேன்: நான் சிவ தாண்டவத்தை கண்டேன்."

"சிவ தாண்டவத்தைக் கண்டீர்களா! புத்தித் தெளிவோடுதான் இருக்கிறீர்களா?"

"பூர்ண புத்தித் தெளிவோடுதான் இருக்கிறேன். இந்திய நாகரிகத்தையும் கலையையும் பற்றி நீங்கள் என்ன ஜம்பமாய்ப் பேசினாலும் சரிதான்: நீங்கள் மகா அரஸிகன்; கேவலமான வியாபாரி. மேல்நாட்டவனின் அறியாமையையும்மௌட்டீகத்தையும் பயன் படுத்திக் கொண்டு பணம் சுரண்டப் பார்க்கிறீர்கள்?"

"எதற்காக இப்படித் தூஷிக்கிறீர்கள், மிஸ்டர் பாட்டர்ஸன்? நீங்கள் உங்களையே மறந்து பேசுகிறீர்கள்."

"நான் சொல்லவந்தது இதுதான்: அதைச் சொல்லிவிடுகிறேன். அந்த உங்கள் சிலை, அதற்குரிய நியாயமான ஸ்தானத்தில்இருக்கவேண்டுமென்றே சொல்ல வந்தேன்; உங்கள் புராதன பூமியில் வானளாவி நட்சத்திரங்களை முட்டி நிற்கும் ஆலயங்கள் இருக்கின்றனவே அவைதான், உங்கள் சிலைக்குரிய நியாயமான ஸ்தானம். ஆடம்பரம் மிகுந்த மேல் நாட்டான் ஒருவனது வெளிக் கூட மல்ல."

கௌரி சுந்தர தேவ் அப்படியே திகைத்து நின்றார்.

வானமே இடிந்து தம் தலையில் விழுந்ததுபோல் அவருக்குத் தோன்றியது.

பீட்டர் பாட்டர்ஸன் கம்பீரமாய் நடந்து அகன்றார்.

வானம் அவர் தலைக்கு மேலே வெகு பத்திரமாகவே நிலைத்து நின்றது.

## வீட்டு உபத்திரவம்

சென்னையில் தான் வீட்டு உபத்திரவம் என்று நினையாதீர்கள். பம்பாயில் இதைவிட மோசம் என்கிறார் சமீபத்தில் அங்கே போய் வந்த ஒரு நண்பர்.

அவருடைய சகோதரி பம்பாயில் ஒரு டாக்டர். மாதம் 1000 ரூபாய் சம்பாதிக்கிறாராம். 'அபாயம். உடனே வரவும்' என்று, நண்பருக்குச் சகோதரியிடமிருந்து ஒரு நாள் தந்தி வந்ததாம். அபாயம் வேறொன்றுமல்ல; குடியிருப்புக்குச் சனியன் பிடித்ததுதான்!

நண்பர் சொல்லுகிறார்: "சென்னையிலிருந்து ஒருவன் இன்று புறப்படலாம். நாளை நின்று காலையில் பம்பாய் போய்ச் சேரலாம். மாலைக்குள் நூறு ரூபாய்க்குக் குறையாத மாதச் சம்பளத்தில் வேலை கிடைத்து விடும். ஓர் ஓட்டலில் இறங்கலாம். மூன்று நாளைக்குச் சுகமாயிருக்கலாம். நான்காவது நாள அங்கிருந்து விரட்டி விடுவார்கள். தெருவில் கிற்பதா, ஊருக்கு ஓடி வருவதா என்ற பிரச்னை அப்போது உதயமாகி விடும்."

அமெரிக்க நகரங்களிலும் இதே கதிதான். டெக்ஸாஸ் நகரப் பத்திரிகை ஒன்றில் சமீபத்தில் பின்வரும் விளம்பரம் காணப்பட்டதாம்: "ஓர் ஆபீஸரின் குடும்பத்துக்கு வீடு அல்லது ஓர் அறை தேவை. ஐந்து டாலர் வாடகை கொடுக்கத் தயார். ஒரு புருஷன், மனைவி, மூன்று வயதுள்ள இரட்டைக் குழந்தைகள் இருக்கிறோம். வீட்டுக்காரர் வற்புறுத்தினால், குழந்தைகளைக் கடலில் அமுக்கி விடத் தயார். போன் நெ. 6634"

# மார்ஷல் ஜுகாவ்

ஜெயார்



இன்று உலகம் முழுவதன் கவனத்தையும் கவர்ந்திருக்கும் மனிதர்களில் ஒருவர் மார்ஷல் ஜுகாவ். ஐரோப்பிய யுத்தத்தின் தலைவிதியே அநேகமாய் அவரால்தான் நிர்ணயமாகப்போகிறதோ என்றுகூட இப்போது தோன்றுகிறது. ஜெர்மனியின் தலைநகரமான பெர்லினை நோக்கிப் பாய்ந்து முந்திச் செல்லும் ஸோவியத் படைகள், அவருடைய படைகள் தான்.

மார்ஷல் ஜுகாவ், ருஷ்ய தளபதிகளுக்குள்ளே மகா அழகானவர்; உரம் படைத்தவர். சுமார் 50 வயது. நடுத்தர உயரம். சதுரமான தாடை. பார்த்தாலே ஒரு பெரிய வீரன் என்று தோன்றும். அவருடைய கன்னக்குழிவுகளை அவரது அதிர்ஷ்டத்தின் சின்னங்கள் என்று கூறுகிறார்கள். 'பிராவ்டா' என்ற ஸோவியத் பத்திரிகை, "ஸோவியத் ராணுவ அதிகாரிகளுக்குள்ளேயே மிகச் சிறந்து பிரகாசிப்பவர் ஜுகாவ் தான். டாங்கிப் போரிலும், பாரசூட் சண்டையிலும் அவர் ஒரு நிபுணர்" என்று வர்ணிக்கிறது. 1940-ஆம் ௵ ருஷ்ய சேனையில் ஜெனரல்களை மீண்டும் நியமித்த போது, ஜெனரல் பதவிக்கு உயர்த்தப்பட்ட மூன்றே மூன்று அதிகாரிகளில் மார்ஷல் ஜுகாவும் ஒருவர்.

> பெர்லினுக்கு வடக்கே சுமார் நூறு மைல் தூரத்தில் உள்ள ஸ்டெட்டின் என்னுமிடத்தைச் சூழ்ந்திருப்பவர் மார்ஷல் ஜுகாவ். ருஷ்யாவின் இந்த யுத்தம் தொடங்கியதிலிருந்து, மாஸ்கோ, ஸ்டாலின் கிராட், லெனின் கிராட் ஆகிய நகரங்களைக் காப்பாற்றி, கீர்த்திமேல் கீர்த்திபெற்ற சேனாதிபதி அவர்.

மார்ஷல் ஜுகாவுக்கு ஒரு போதுமே நாஜிகளைப் பிடிக்காது. அவர்களிடம் அவருக்கு நம்பிக்கையே கிடையாது. 1939-ஆம் வருஷம் ஹிட்லரும் ஸ்டாலினும் ருஷ்ய - ஜெர்மன் அனாக்ரமிப்பு ஒப்பந்தம் செய்து கொண்ட போதே, "ஜாக்கிரதை! இந்த நாஜிகள் என்னவோ தந்திரம் செய்கிறார்கள்" என்று எச்சரித்தவர் மார்ஷல் ஜுகாவ். அவர் எச்சரித்து இரண்டு வருஷம் ஆகவில்லை. 1940-ஆம் ௵ ஹிட்லர் திடீரென்று வந்து ருஷ்யாவை மோசடியாய்த் தாக்கி விட்டார். ஹிட்லர் இப்படிச் செய்யப்போகிறார் என்று தெரிந்து தான் மார்ஷல் ஜுகாவை முன்கூட்டியே பெரிய பதவிக்கு, ருஷ்யர்கள் உயர்த்தினார்கள் என்று சொல்லுவோரும் உண்டு.

ருஷ்ய தளபதிகளில் பெரும்பாலோரும், குடியானவர் குலத்திலே பிறந்தவர்கள். மார்ஷல் ஜுகாவும் அப்படிப்பட்ட ஒருவர் தான். முதலில் ஜுகாவ் ஒரு தொழிற்சாலையில் தொழிலாளியாக வேலை பார்த்தார். 1915-ஆம் ௵, அதாவது ஜார் காலத்தில், ராணுவத்தில் ஒரு சாதாரணப் போர் வீரனாக அவர் சேர்த்துக் கொள்ளப் பட்டார். முந்திய மகா யுத்தத்தில் அவர் ஒன்றும் அப்படிப் பிரமாதமாகச் சண்டையிட்டு விடவில்லை. மூன்று

வருஷம் வெறும் போர் வீரனுகவே யிருந்தார். ஜாரின் ராணுவத்தில் நடந்த சிப்பாய்க் கலகத்தில் சேர்ந்தவர்களில் அவரும் ஒருவர் என்கிருர்கள். பொது உடைமைப் புரட்சி நிகழ்ந்த போது. செஞ் சேனையிலும் அவர் ஒரு சாதாரணப் போர்வீரனுகவே சேர்ந்து கொண்டார். பின்னுல், ஒரு குதிரைப் படையில் கார்ப் பொரல் பதவி பெற்ருர். புரட்சி முடியுமுன், ஓர் ஆபிஸர் ஆகிவிட்டார். 1932-ஆம் ஆண்டு வரையில், சாமான்யத் திறமையுள்ளவராகவே அவரை எண்ணி. குமாஸ்தா வேலைகளையே அவருக்கு இட்டு வந்தார்கள். பின்னுல் தான், ஷாப்போஷ்னிகாவ், வாரஷிலாவ் முதலியவர்களின் கீழ் ராணுவக் கல்வி பெற்று, படிப்படியாய் ஜூனியர் கமாண்டர், ரெஜிமெண்ட் கமாண்டர், பீரங்கிப் படைத் தலைவர், குதிரைப் படைத் தலைவர் முதலிய பதவிகளுக்கு ஏறினுர். புருன்ஸ் மிலிட்டரி அக்காடமியில் ஷாப்போஷ்னிகாவின் கீழே பயிற்சி பெற்ற போது, டாங்கி, பாரசூட் போர்களில், மற்ற மாணவர்களை விட மிகவும் திறமையோடு அவர் பிரகாசித்தார். அதிலிருந்தே அவருக்கு வர வரப் பெருமை கிடைத்தது.

1938-39 - ஆம் வருஷங்களில், மங்கோலிய எல்லைப் புறத்தில் ருஷ்ய-ஜப்பான் தகராறு நிகழ்ந்து ஒரு குட்டி யுத்தமே நடைபெற்றது. அந்தப் போரை நடத்த மார்ஷல் ஜுகாவ் அனுப்பப்பட்டார். 1939-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாசம் மஞ்சுகோ, மங்கோலியா எல்லைகளில் உள்ள கால்கினிகோல் என்னுமிடத்தில் ஜப்பானியரின் ஆருவது சேனையை, ஜுகாவின் படைகள் சூழ்ந்து கொண்டு அடியோடு முறியடித்தன. அங்கே தான் முதன் முதலாக நிஜமான ஒரு யுத்தத்தில் ஸோவியத்தின் டாங்கி முதலிய நவீனக் கருவிகள் ஈடுபட்டு வெற்றி கண்டன. ஜெர்மானியர் போலந்தில் 'பிளிட்ஸ்' (மின்னல் போர்) தொடுக்கு முன்பே, அந்தப் போர் முறையை இந்த மங்கோலிய எல்லைப் போர்க்களத்தில் கைக் கொண்டு நடத்தி விட்டார் மார்ஷல் ஜுகாவ். ஜுகாவின் இந்த நவீனப் போர் முறை, ருஷ்ய-பின்லாந்துப் போரிலும் பரிட்சிக்கப்பட்டு விட்டது.

இதன் பின்பே, மார்ஷல் ஜுகாவின திறமையை, ஸோவியத் தலைவர்கள் பாராட்டிப் பெருமைப் படுத்தினுர்கள். அவரை ராணுவத் தலைமைக் காரியாலயத் தலைவராகவும், தற்காப்பு இலாக்காவின் உதவிக் கமிஸாராகவும், 1941-ஆம் வருஷத்தில், ஸ்டாலின் நியமித்தார். செஞ் சேனையை நேர்த்தியான முறையில் கட்டுப்பாடும் வலிமையும் பெறுமாறு உருவாக்கியவர்கள் அவரும் மார்ஷல் டிமோஷென்கோவும் தான். 'ஒவ்வொரு மனிதனும் பத்து மனிதனுக்குச் சமமாய்ப் போரிட வேண்டும்' என்பதே மார்ஷல் ஜுகாவின் சூத்திரம். தம்முடைய வீரர்களுக்கு, தேகாப்பியாசம், குதிரை சவாரி, சிலம்பம் முதலிய பயிற்சிகளை, அவர் ஓயாது அளித்து வந்தார். போர் என்ருல், அவருக்குப் பரம உற்சாகம.

1941 - ஆம் ஆண்டு ஜூன் மீ ருஷ்யாமீது ஜெர்மனி படையெடுத்து, நாலே மாசத்தில் மாஸ்கோவை நெருங்கி விட்டது. மாஸ்கோவைத் தற்காக்கும் வேலையில், முக்கியமான மத்திய மண்டலத்தின் தலைமையி லிருந்து மார்ஷல் டிமோஷென்கோ அகற்றப்பட்டு, மார்ஷல் ஜுகாவிடம் அந்தப் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. ஜெர்மானியரை முறியடித்து விரட்டி ஓட்டி, மாஸ்கோவை மார்ஷல் ஜுகாவ் காப்பாற்றி விட்டார்.

"ஜெர்மானியர் இந்த மாஸ்கோ முற்றுகையில் ஏன் தோற்ருர்கள்?" என்று மார்ஷல் ஜுகாவை யாரோ கேட்டார்கள். அதற்கு

அவர் சொன்ன பதிலாவது: "இங்கே தான் ஜெர்மானியர் முதன் முதலாக உண்மையான சண்டையைக் கண்டார்கள். இதற்கு அவர்கள் தயார் செய்து கொண்டிருக்க வில்லை. சுலபமான வெற்றிகள் பெறுவதில் தான், இது வரையில் அவர்களுக்குப் பழக்கம். ஆகையால், சமயோசிதமாய் வளைந்து கொடுக்கும் தன்மையும்பிடிவாதமும் அவர்களுக்கு இல்லாமல் போய் விட்டன...... இப்போது நாம் துரத்துகிறோம்; அவர்கள் ஓடுகிறார்கள்."

மாஸ்கோவின் போருக்குப் பின்பு, வோல்கா, ஸ்டாலின்கிராட் பிரதேசங்களை நோக்கி ஜெர்மானியர் படையெடுத்து, 1942-ஆம் ஆடு செப்டம்பரில் ஸ்டாலின்கிராட் தெருக்களில் கூடப் புகுந்து விட்டார்கள். அப்போது, அந்தப் போர் முனையில் வாரனேஷ் மண்டலத்தின் தலைமையை ஜுகாவ் ஏற்றார்; ஸ்டாலின்கிராடுக்குப் பின்புறத்தில் பிரமாதமான சேனை திரட்டினார். ஸ்டாலின்கிராடை விட்டு ஜெர்மானியர் வெளியேற்றப் பட்டவுடனே, அவர்களை ஜுகாவ் மகா குரூரமாய்த் தாக்கித் துரத்தியடித்தார். இதைப் பாராட்டி, ஸ்டாலின் அவரைப் பிரதம உதவிக் கமிஸார் பதவிக்கு உயர்த்தினார்.

இதற்கப்புறம் லெனின்கிராட் போர் முனைக்கு, அவர் மாற்றப் பட்டார். அங்கும் அவர் போனவுடனே லெனின்கிராட் நகரின் அபாயம் நீங்கியது. இப்போது, ஜெர்மனியைத் தாக்கி யடிக்கும் பெரும் பெறுப்பில் முக்கியமான ஒரு பகுதியை அவர் மேற் கொண்டிருக்கிறார். இதுவரையில், அவர் புகழ் ஓங்கிக் கொண்டே தான் வருகிறது; அவர் எடுத்த முயற்சியிலெல்லாம் வெற்றியே கிடைத்து வருகிறது. ஒருநாள் அவர் ஜெர்மன் தலை நகரான பெர்லின் நகரத்தில் காலடி எடுத்து வைப்பாரானால், ஆச்சர்யப்படுவதற்கில்லை. ஐக்கிய தேசங்களின் ராணுவத் தலைவர்களிலேயே. முதன் முதலாக பெர்லினுக்குள் ஜய சிலராய்ப் பிரவேசிக்கும் பெருமை, அநேகமாய் அவருக்கே கிடைக்கலாம் என்று தான் இப்போது தோன்றுகிறது.

✲

## வேதாந்திகள் பேச்சு

இரண்டு சீன வேதாந்திகளின் ஒரு சம்பாஷணையை, மிஸ்டர் ஆர்த்தர் வேலீ என்பவர் குறிப்பிட்டிருக்கிறார்.

"ஜலத்திலே மீன்கள் எவ்வளவு ஆனந்தமா யிருக்கின்றன!" என்றாராம் ஒரு வேதாந்தி,

"அது உமக்கெப்படித் தெரியும்? நீர் மீன் அல்லவே!" என்றார் மற்றவர்.

"எனக்குத் தெரியாதென்று உமக்கெப்படித் தெரியும்? நீர் நான் அல்லவே!" என்றார் முதல் வேதாந்தி.

## சிறுவனின் பதில்

அர்மீனியாவின் சாலையில் ஒரு சிறுவன் சுருட்டுக் குடித்துக்கொண்டு அஞ்சடியில் உட்கார்ந்திருந்தான்.

இதைக் கண்டு திடுக்கிட்ட ஓர் அயல் நாட்டுப் பிரயாணி, "ஏன் அப்பா, நீ பள்ளிக்கூடத்துக்குப் போக வில்லை?" என்று கேட்டார்.

"நானா! பள்ளிக்கூடத்துக்கா! என்ன கேலியா செய்கிறீர்கள்? எனக்கு வயசு இரண்டு தானே ஆகிறது?" என்றானம் சிறுவன்.



# நாயாய்ப் பிறந்தாலும்

'சுரபி'

**நடுத் தெருவிலே நடந்த நாய்கள் நாடகத்தைத்தான் அப்படியே எழுதியிருக்கிறேன். யாராவது இதற்கு வேறு அர்த்தம் கற்பித்தால் அதற்கு நான் ஜவாப்தாரியல்ல.**

**நா**யாய்ப் பிறந்தாலும் 'துரை வீட்டு நாயாய்'ப் பிறக்க வேண்டும் என்று தோன்றிற்று வீரனுக்கு.

சைனா பஜாரிலே, பூக்கடைப் போலீஸ் ஸ்டேஷனுக்கருகில் இருந்த குப்பைத் தொட்டிக்குப் பக்கத்தில் படுத்துக் கொண்டிருந்தது வீரன். வங்காளப் பஞ்சத்திலே யமன் கூடச் சட்டை செய்யாமல் விட்டு விட்டுப் போன ஜீவன் தான் இங்கு ஓடி வந்து விட்டதோ என்று தோன்றிற்று. வீரனைப் பார்த்தால், வற்றல் போட்டெடுத்தது போல் ஈரப் பசையற்ற உடம்பு. உடலெல்லாம் சொறி சிரங்கு. கசாப்புக்காரனின் கத்தி வெட்டுப் பட்ட இடம், எலும்பா சதையா என்று சந்தேகப்படும்படி வெளுத்துக் கிடந்தது. காயத்திலும் சொறியிலும் ஈக்கள், பணக்காரன் வீட்டு விருந்தில் கூடும் மனிதகணங்கள்போல்,மொய்த்துக் கொண்டிருந்தன. "பைத்தியக்கார ஈக்கள், போயும் போயும் இந்த உடலைத் தேடிக்கொண்டு வந்திருக்கின்றனவே, பசைக்காக" என்ற ஏளனமோ, அல்லது, "போகட்டும், அந்த ஜன்மங்களாவது பசியாறட்டும்" என்ற பரிதாபமோ, பேசாமல் தன் சடலத்தை அவைகளிடம் ஒப்படைத்துவிட்டு நீட்டிக் கிடந்தது வீரன். அகப்பட்டது போதும் என்று ஒரேயடியாய் உறிஞ்சித் தள்ளும் ஈக்களின் உபத்திரவம் பொறுக்கமாட்டாமல் எப்போதாவது காதையும் வாலையும் அசைப்பதிலிருந்து தான், அந்த உடலில் உயிர் இருப்பதாகத் தெரிந்தது.

வீரன் தன் தலை விதியை நொந்து கொண்டிருந்த சமயத்தில், ஜோரான கார் ஒன்று அதை உராய்ந்தாற் போல் பக்கத்தில் வந்து நின்றது. காரை நிறுத்திவிட்டுத் துரையும் துரைசானியும் கடைக்குப் புறப்பட்டார்கள். "அம்மா, நானும் வறேன்" என்று, குழந்தை கொஞ்சிக் கெஞ்சுவது போல், கொஞ்சிக் கொஞ்சிக் குரைத்தது அதிலிருந்த குச்சு நாய். "பார்த்தையா? அப்படி யெல்லாம் தொந்தரவு பண்ணக்கூடாது. என் கண்ணோல்லியோ? சமத்தா இங்கேயே இரு. சீக்கிரம் ஓடி வந்தூடறேன்" என்று குழந்தைக்குத் தேறுதல் சொல்வதுபோல் சொல்லித் தட்டிக் கொடுத்து விட்டுப் போனாள் அந்தச் சீமாட்டி. டைகருக்கு ஒரு கூடை எலும்பு கிடைத்து விட்டது போலிருந்தது. சங்கிலியை ஒரு நெம்பு நெம்பிக் கொண்டு, பெருமிதத்தோடு தலையைச் சாய்த்து, ஒரு காதைத் தூக்கிக் கொண்டு வெளியே எட்டிப்பார்த்தது.

**கா**ர் ஓரத்தில் ஒரு விசித்திர ஜீவன் கிடந்தது தெரிந்தது. அது என்ன பிராணி யென்றே முதலில் டைகருக்குத் தெரியவில்லை. ஏதோ தேன் கூட்டுக்கு ஒரு புறம் ஒரு நாய்த் தலையையும் மற்றொரு புறம் ஒரு வாலையும் ஒட்டவைத்த மாதிரி இருந்தது. அந்தச் சமயத்தில் வீரன் கொஞ்சம் வாலை அசைக்கவே, ஈக்களெல்லாம் எழுந்து வட்டமிட்டுத் திரும்பவும் உட்கார்ந்தன. அந்த ஒரு நொடியில் அதுவும் ஒரு நாய் தான் என்று தெரிந்து கொண்டது டைகர். உடனே அதன்

**டைகர் துரை வீட்டு நாய்தான்; வீரன் ஈ மொய்க்கத் தெருவிலே திரியும் சொறியனதான். என்றாலும், என்ன? அருமையான உண்டி வகைகள், சுகங்களையெல்லாம் விட, மேலான வேறொரு 'பொருள்' இருக்கிறதே! அது வீரனிடம் அன்றோ காணப்படுகிறது!**



# வண்ணான் நாசம் செய்ததா!

—பதில் வாங்குவதற்கு என்ன சிலவாகுமென்று யோசியுங்கள்

துணிகளை அடித்துத் தோய்க்க வண்ணானை அனுமதிப்பது, தற்காலம் துணிகள் விற்கும் விலையில் பணத்தை இறைப்பது போலாகும். உடைகளை நாள் நீடித்து வரும்படி செய்வது உங்கள் பொறுப்பு. வண்ணான் துணிகளை அடித்து வெளுப்பதற்கு தேவையேயில்லை. ஸன்லைட் சோப்பினால் துணிகளைச் சுத்தமாக வெளுக்கலாம். சுயமாக வெளுக்கும் ஸன்லைட்டின் நுரையைப்பற்றி நீங்கள் அவசியம் கேட்டிருப்பீர்கள். பலமுள்ள வண்ணான், குண்டாந்தடி, அல்லது அவன் துவைக்கும் கற்பாறை இவைகளைக்காட்டிலும் துணிகளை வெளுக்கச்செய்யும் சக்தி ஸன்லைட் நுரையிடமிருக்கிறது. மேலும் துணிகளுக்கு ஒரு கெடுதலும் உண்டாவதில்லை. ஆகையால் இன்றே ஸன்லைட் சோப்பினால் துணிகளை துவைத்து, பணம் மீக்க ஆரம்பியுங்கள்.

## வேலையாளுக்கு ஸன்லைட் உபயோகித்து பணம் மீக்கும் வழியைக் கற்பியுங்கள்

1 துணிகளை ஜலத்தில் நனைத்து சோப் போடுவதற்கு தயாராக்குங்கள். 2 பிறகு சோப்பைத் தேயுங்கள். அழுக்கான இடங்களில் கொஞ்சம் தாராளமாகத் தேயுங்கள். 3 பிறகு சோப் துணிகளில் பரவுவதற்காக கசக்குங்கள். துணிகளை அடிக்கவேண்டாம். ஸன்லைட்டின் சுயமாக வெளுக்கும் நுரை அழுக்கை லேசாக எடுத்துவிடுகிறது. 4 ஜலத்தில் நன்றாய் அலசவேண்டும். ஏனென்றால் அழுக்கு இப்பொழுது இந்த நுரையில் தான் இருக்கிறது. ரொம்ப அழுக்குத் துணிக்கு இன்னொருதரம் சோப் போடவேண்டியிருக்கும்.






# ஸன்லைட் சோப் துணிகளைப் பாதுகாக்கிறது

S. 68-50 TM

LEVER BROTHERS (INDIA) LIMITED

# பாண்டியன் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி

லிமிடெட்

(இந்தியாவில் ஸ்தாபிதம் 1933)

தலைமை ஆபீஸ்-மதுரை.

கிளை ஆபீஸ்கள் :

பம்பாய் : லாயிட்ஸ் பாங்க் பில்டிங், ஹார்ன்பி ரோடு.
அகமதாபாத் : 1761, காந்தி ரோடு.
கல்கத்தா : 26, டல்ஹௌஸி ஸ்குயர்.
ராவல்பிண்டி : லாயிட்ஸ் பாங்க் காம்பவுண்ட், எட்வர்ட்ஸ் ரோடு.

தீ விபத்து சம்பந்தமான சகலவித இன்ஷ்யூரன்ஸ் திட்டங்கள்.

மொத்த ஆஸ்திகள் ரூ. 42,00,000-க்கு மேல்.

பிரதம ஏஜண்டுகள் :

ஏ. & எப். ஹார்வி—மதுரை, தூத்துக்குடி, அம்பாசமுத்திரம்.
K. M. S. லெக்ஷ்மணய்யர் & சன்ஸ்—மதுரை.
அழகப்பா கார்ப்பரேஷன்—கன்னனூர்.
ராஜபாளையம் கமர்ஷியல் பாங்கு லிமிடெட்—ராஜபாளையம்.
N. M. R. கிருஷ்ணமூர்த்தி—மதுரை.
V. V. C. R. முருகேச முதலியார்—ஈரோடு.




தமிழ் நாடு ஏஜெண்டுகள் :—
சீதாராம ஜெனரல் ஸ்டோர்ஸ் :: மேலக்கோபுர விதி - மதுரை

எண்ணம் எங்கெங்கோ ஓடிற்று. தான் நின்று கொண்டிருந்த காரின் அழகைச் சுற்றுமுற்றும் ஒரு தடவை பார்த்துக் கொண்டது. அடுத்தாற் போல் கீழே கிடந்த ஜீவனைப் பார்த்தது. "இப்படி ஒரு ஜன்மம் என்னத்துக்காக உயிரை வைத்துக் கொண்டிருக்கிறது, சனியன்! நாய் வர்க்கத்துக்கே கேவலம்!" என்று எண்ணிக் கொண்டு, அருவருப்புடன் மூஞ்சியை சுளித்து அசுக்கென்று ஒரு தும்மல் தும்மியது. தும்மிவிட்டு உள்ளே வந்துவிட்டது. ஆனால், உள்ளே சும்மா இருக்க அதனால் முடியவில்லை. ஏதாவது செய்யவேண்டு மென்று பதை பதைத்தது. கடைசியில் இப்படியும் அப்படியும் சங்கிலியை இழுத்துப் பறித்துவிட்டு, மீண்டும் வெளியே எட்டிப் பார்த்து வள் என்றது.

டைகரின் 'கர்ஜனை', வீரன் காதில் விழுந்ததாய்த் தெரியவில்லை. டைகருக்குத் திருப்தியேற்படவில்லை. தன் பலத்தையெல்லாம் திரட்டி வள்-வள்-வள்ளென்று, பக்கத்திலிருந்த கட்டடம் அதிரும்படி குரைக்கலாயிற்று. தொல்லை பொறுக்கமாட்டாமல் வீரன் தலையைத் தூக்கியது. தூக்கி, அசட்டையாய் அந்தப் பிரகிருதியை ஒரு பார்வை பார்த்துவிட்டு மீண்டும் படுத்துக் கொண்டது. இதைப் பார்த்ததும், டைகருக்கு ஆத்திரம் பொங்கிக் கொண்டு வந்தது. தன் அந்தஸ்தென்ன! அதன் ஈன நிலையென்ன! எவ்வளவு அசட்டை அந்தப் பிணத்துக்கு! என்ன அவமதிப்பு!



அருவருப்போடு ஒரு தும்மல் தும்மி விட்டு, "ஏ பிணமே" என்றது. அந்தப் பிணம் பதில் பேசுவதாய்க் காணோம். "உனக்கு அவ்வளவு அசட்டையா? நீ கிடக்கிற கேட்டுக்கு, என்னை ஏறெடுத்துப் பார்க்கக்கூட உனக்கு முடியவில்லையோ?" என்றது. உண்மையிலேயே ஏறெடுத்துப் பார்க்க முடியத்தான் இல்லை என்பதைச் சொல்லமாட்டாமல், மௌனமாய்க் கிடந்தது வீரன். டைகருக்குப் பின்னுங் கொஞ்சம் ராங்கி ஏற்பட்டது. "நான் யாரென்று உனக்குத் தெரியுமா? என் எஜமான் யாரென்று உனக்குத் தெரியுமா? அவர் சாட்சாத் ரஸ்ட் அண்ட் கம்பனி மானேஜராக்கும். சம்பளம் என்ன தெரியுமா? எத்தனையோ ஆயிரம். என்ன, கேட்டதா காதிலே? எங்கள் பங்களாவை நீ பார்த்தாயானால், உனக்குத் தலையே கிறுகிறுக்கும், தெரியுமா?" என்று அது அடுக்கிக் கொண்டே போயிற்று.

இதன் நடுவில் வீரனிடமிருந்து ஏதோ சத்தம் கேட்டது. ஊங்கொட்டிற்றோ அல்லது "போதும் நிறுத்து" என்றதோ தெரியவில்லை. "ஊம் என்ன? நான் சாப்பிடுகிற தட்டைப் பார்த்தால்,நீ இப்படிப்பேசமாட்டாய். என் ஒரு வேளைச் சாப்பாட்டில் நான் ஒதுக்கி வைத்துவிடுகிற கறியும் எலும்பும் உன்னைப் போல் ஒன்பது ஜீவன்களுக்குச் சாப்பாடாகும், தெரியுமா?" என்று தன் சுகபோகத்தை எடுத்துக் கூறியது டைகர். அந்தச் சாப்பாட்டு விஷயத்தைக் கேட்டபோது, வீரனால் பொறுக்க முடியவில்லை. ஒட்டிக் கிடந்த வயிற்றைப் பிடித்து மென்றுகொண்டிருந்த ஜாடராக்கினி, இந்தப் பேச்சைக் கேட்டதும் கொழுந்துவிட் டெரிந்ததோ என்னவோ; 'சாப்பாடு' என்ற வார்த்தையைக் கேட்டவுடனே, தூக்கமாட்டாத தலையைத் தூக்கி, பல்லெலாந் தெரியக் காட்டி, டைகரைப் பார்த்து, அழுகையும் ஆத்திரமுமாய் வள்ளென்று சீறி விழுந்தது.

டைகரின் குரைப்பு, பின்னுங் கொஞ்சம் அதிகமாகத்தான் ஆயிற்று. "அட பிச்சைக்கார

நாயே, நீ இருக்கிற அழகுக்குக் குரைப்பு ஒரு கேடா? எங்கள் பங்களாவிலே வந்து பார்த்தாயானல் தெரியும். எங்கள் ஐயாவைப் பார்க்க வருகிற பெரிய பெரிய துரைகளெல்லாம் நம்மகிட்டே உத்தரவு வாங்கிக் கொண்டுதான் உள்ளே போகவேணு மாக்கும். ஒரு வேளைச் சாப்பாட்டுக்கு வக்கில்லாத நீயும் நானும் ஒன்றென்று நினைத்துவிட்டாய்? சாப்பாடுதான் போகிறது. உனக்குச் சட்டை இருக்கா? குளிருக்குக் கம்பளிச் சட்டை இருக்கா என்று கேட்கிறேன். அது கிடக்கட்டும்; உனக்கு கார் இருக்கா? பிச்சு எப்படி இருக்கிற தென்றுதான் உனக்குத் தெரியுமா? ஈன ஜன்மமே, உனக்குச் சோப்புவாசனை தெரியுமா? உன் உடம்பிலே சீப்புப் பட்டதுண்டா? என்றைக்காவது நீ பென்போஸ் மிக்சர் சாப்பிட் டிருக்கிருயா? ஆஸ்பத்திரியைத் தான் எட்டிப் பார்த்திருக்கிருயா? உனக்காக ஒரு நிமிஷம் யாராவது கவலைப்படுவதுண்டா? உனக்கு யாராவது பிஸ்கிட்டும் பாலும் ஊட்டி யிருக்கிருர்களா எப்போதாவது? பிஸ்கிட்டு என்ருல் என்னவென்றுதான் தெரியுமா உனக்கு? எல்லாம் போகட்டும்; உன் கழுத்திலே இந்தமாதிரி பட்டை இருக்கிறதா? இந்தச் சங்கிலியின் விலை என்ன தெரியுமா?'' என்று தன் பிரதாபங்களை எடுத்து அடுக்கியது அந்தத் துரைசானியின் செல்வம்.

இன்னும் எவ்வளவோ அடுக்கியிருக்கும்; ஆனல் இந்தச் சமயத்தில் வீரனுக்குக் கொஞ்சம் சுரணை பிறந்ததுபோல் தோன்றவே, அது கொஞ்சம் நிறுத்திவிட்டு, அந்த விசித்திர சிருஷ்டியைக் கவனித்தது. வீரன் ஈக்களை உதறிவிட்டு, எழுந்து, இரண்டடி எடுத்துவைத்துத் திமிர் முறித்துவிட்டு, காதைக் குத்திட்டுக்கொண்டு, ''உம், அப்புறம்?'' என்று டைகரைக் கேட்டுக்கொண்டு நின்றது.

''அப்புறம் என்ன, அப்புறம்? நஞ்சுபோன தோல்பட்டைக்குக்கூட வழியில்லாதவனுக்குப் பேச்சென்ன வேண்டியிருக்கிறது? உன்னேடு சரிசமானமாய் நான் பேசக்கூடத் தகாது'' என்று ஒரு தும்மல் தும்மிவிட்டு, மூஞ்சியைத் திருப்பிக்கொண்டது டைகர்.

''மெய்யாகவா? இதெல்லாமா உனக்கு இருக்கிறது?'' என்று கேட்டது வீரன்.

''மெய்யாகவா என்ன? இல்லாவிட்டால் பொய் சொல்லிப் போயும் போயும் உன்கிட்டேதான் பெருமை தேடிக்கொள்ளணு மாக்கும்''

''இல்லே, இன்னும் என்னென்ன இருக்கு? கொஞ்சம் சொல்லேன்.''

''இன்னும் என்னென்னவோ இருக்கு. எனக்கே இப்போது ஞாபகமில்லே. அதையெல்லாம் உன்கிட்டே என்ன சொல்லுகிறது, கொஞ்சம்? சொல்லி என்ன ஆகவேணும்?''

''இல்லே, எல்லாம் இருக்கு, சரிதான்; **இது** இருக்கா என்று கேட்கிறேன்.''

இதைக் கேட்டவுடனே, திடுக்கிட்டதுபோல் டைகர் திரும்பவும் வெளியே பாய்ந்து கார்க் கதவின் மேல் காலை வைத்துக்கொண்டு, ''எது இருக்கா?'' என்று வெடுக்கென்று கேட்டது. எதிரியின் கைபிலிருந்த ஆயுதத்தைத் தட்டிப் பறித்துக்கொண்ட போர்வீரனைப் போல் அளவில்லாத இறுமாப்புடன், டைகரை ஏற இறங்கத் தலையைச் சாய்த்துச் சாய்த்துப் பார்த்தது வீரன். அப்புறம் அழுத்தந் திருத்தமாய் வந்தது பதில்.

''வெட்கங்கெட்ட நாயே, உனக்குச் சுதந்தரம் இருக்கா என்று கேட்கிறேன்.''

''என்னது?''

தன்னிடங்கூட இல்லாதது ஏதோ இருக்கிறுற் போலிருக்கிறதே என்ற எண்ணத்தில், வீரன் தன்னைக் கேவலமாய்ப் பேசியதைக்கூட மறந்துவிட்டு, ''என்னது அது?'' என்று ஆத்திரமாய்க் கேட்டது டைகர்.

''என்னதா? உனக்கெங்கே அது தெரியப்போகிறது? அந்தப் பெயரைத்தான் எங்கே கேட்டிருக்கப்

போகிறாய்? அதைக் கேட்டிருந்தால் உன் பட்டையையும் சங்கிலியையும் பற்றி இப்படி ஜம்பம் அடித்துக் கொள்வாயா?'' என்று சரமாரியாய்ப் பொழிந்தது வீரன்.

"ஏன்? என் பட்டைக்கும் சங்கிலிக்கும் என்ன குறையாய்ப் போய்விட்டது? இந்தப் பட்டையை நாலு நாளைக்கு முன்னேதான் மூன்று ரூபாய்க்கு...''

"போதும் நிறுத்து. மானங்கெட்ட நாயே, நான் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லு. உனக்குச் சுதந்தரம் இருக்கா என்று கேட்கிறேன்.''

"சொறி பிடித்த சோம்பேறி நாயே, அப்படி யென்றால் என்ன என்று தானே கேட்கிறேன், சொல்லு?''

"என்னவா? உதைக்கிற காலை நக்குகிற நாய்க்குச் சுதந்தரமென்றால் எங்கே தெரியப்போகிறது?''

"அது என்னது அது, 'சுதந்தரம்'? தின்பண்டமா? விளையாட்டுச் சாமானா? உடுப்புக் கிடுப்பா? அல்லது நகை நட்டா? என்னவென்றுதான் சொல்லேன், சொல்லுகிறேன்.''

"அடிமைக்கார நாயே, அதெல்லாம் இல்லை. இவ்வளவெல்லாம் ஜம்பமடித்துக் கொள்கிறாயே, நீ நினைத்தபோது நினைத்த இடத்துக்குப் போக உனக்கு உரிமையுண்டா என்றுதான் கேட்கிறேன். இந்தச் சங்கிலியையும் பட்டையையும் பற்றிப் பிரமாதமாய் ஆனந்தப்பட்டுக் கொள்ளுகிறாயே, இது இல்லாமல் நீ என்றைக்காவது சுயேச்சையாய்த் திரிந்திருக்கிறாயா என்றுதான் கேட்கிறேன். வேண்டியதைச் சாப்பிட உனக்கு உரிமையுண்டா? வேண்டாததை வைத்துவிடத்தான் உரிமையுண்டா? நோய் வந்தால் இரண்டு நாழி பேசாமல் படுத்துக்கிடக்கத்தான் உன்னை விடுகிறார்களா? என்னைப் பார். கிடைத்தால் ஓர் எலும்பைக் கடிப்பேன். கிடைக்காவிட்டால் சிவனே என்று படுத்துக்கிடப்பேன். என்னமோ 'சோப்பு, சீப்பு' என்று, ஜன்ம சாபல்யமே கிட்டிவிட்டது போல், பெருமைப் பட்டுக்கொள்கிறாயே, நான் நினைத்தால் ஒரு நாளெல்லாம் குளத்திலோ குட்டையிலோ கிடந்து நீஞ்சுவேன். அது உனக்குச் சாத்தியமா? மனம் வைத்தால் ஒரு நாளெல்லாம் படுத்துக் கனவு கண்டுகொண்டே தூங்குவேன். உனக்கு அந்தச் சௌகரியம் உண்டா? இதோ பார், இந்தச் சமயம் நான் நினைத்தால் என் மனம் போனபடி துள்ளியோடுவேன். இஷ்டப்படி என் வர்க்கத்தாரோடு கூடிக் குலாவுவேன். அது உன்னால் முடியுமா? உன்னுடைய காதல் லீலையைக் கூட அல்லவா உன் எஜமானும் எஜமானியும் பார்த்து நடத்திவைக்கிறார்கள்? இதையெல்லாம்தான் கேட்கிறேன். உண்ண உறங்க உனக்கு உரிமையுண்டா? ஓட ஆடச் சுதந்தரம் உண்டா? தன்னிச்சையாய்த் திரிந்து அலைய முடியுமா உன்னால் என்று தான் கேட்கிறேன்.''

## ஷாவின் குறும்பு

ஜார்ஜ் பெர்னார்ட் ஷா என்ற ஆங்கில ஆசிரியர் எப்போதுமே குறும்பு செய்யும் மனிதர்.

ஷாவின் 'காண்டிடா' என்ற நாடகத்தில் வெகு நாளைக்கப்புறம் கார்னீலியா ஓட்டிஸ் ஸ்கின்னர் என்ற நடிகை மீண்டும் நடித்தாள்.

"மிக நேர்த்தி. மகா உன்னதம்'' என்று, ஷா, அவளுக்கு ஒரு தந்தி சொன்னார்.

நடிகை மனமுருகி விட்டாள். 'இவ்வளவு புகழுக்குத் தகுதியில்லை' என்று பதில் தந்தி சொன்னாள்.

"நாடகத்தை அல்லவா குறிப்பிட்டேன்'' என்று ஷா பதில் சொன்னார்.

நடிகையும் விடவில்லை. "நானும் அதைத் தான் குறித்தேன்'' என்று அவள் பதில் கொடுத்தாள்.

டைகரின் வால் ஒடுங்கியது; காது தணிந்தது; தலை தொங்கியது. மெதுவாய்த் தலையை உள்ளே இழுத்துக்கொண்டு, எஜமானி உட்காரு

மிடத்திலிருந்து இறங்கி, அதற்குக் கீழே போய் ஒடுங்கிப் படுத்துக்கொண்டது. முன்னங்கால்களுக்குமேல் தலையைத் தொங்கப் போட்டுக்கொண்டு அது படுத்திருந்ததைப் பார்க்கப் பரிதாபமாயிருந்தது.

துரையும் துரைசானியும் திரும்பி வந்தார்கள். துரைசானியம்மாள் வரும்போதே, "டைகர், டைகர்" என்று கூப்பிட்டுக்கொண்டு வந்தாள். எப்போதும் காருக்குவெளியேஎட்டிப் பார்த்துக் கொஞ்சிக் குரைத்து வரவேற்கும் டைகரைக் காணமற் போகவே, அவளுக்குத்திடுக்கென்றது. உள்ளே புகுந்து பார்த்துத் தேடினாள். சீட்டுக்கடியில் பதுங்கிக் கிடந்த செல்வத்தை எடுத்து மடிமேல் வைத்துக் கொண்டு தடவிக்கொடுத்தாள். அதன் கண்ணில் ஊறியிருந்த நீரைப் பார்த்த போது, அவள் கண்ணில் நீர் கசிய ஆரம்பித்தது. "நம்ம டைகருக்கு எவ்வளவு புத்தி பார்த்தீர்களா? விட்டுவிட்டுப் போனேம் என்பதற்காக இப்படிக் கோபித்துக்கொண்டிருக்கிறது கழுதை!" என்று தன் புருஷனைக் கூப்பிட்டுச் சொன்னாள். துரை அதைக் கேட்டுத் திருப்தியோடு திரும்பிப் பார்த்துச் சிரித்தார்.

கார் புறப்பட்டது. டைகர் வெளியே தலையை நீட்டி, ஈக்களுக்கு இரையாகிக்கொண்டிருந்த வீரனை எட்டிப் பார்த்தது. துரைசானியம்மாள் ஆர்வம் பொங்க, குழந்தையைத் தூக்குவதுபோல் தூக்கிக்கொண்டு, "சீ நாயே, என்னத்துக்காக இப்படி மூஞ்சியைச் சோரப் போட்டுக்கொண்டிருக்கிறாய்?" என்று கொஞ்சிக் கேட்டாள்.

"நாயாய்ப் பிறந்தாலும் சுதந்தர வீரனாய்ப் பிறக்கவேண்டும்" என்றது டைகர். டைகரோடு கொஞ்சிக் குலாவிப் பேசும் துரைசானிக்கு, அந்த டைகரின் பாஷை புரிந்ததோ என்னவோ!

✲

## சாதுர்யப் பிரசங்கம்

நியூ இங்கிலாந்து நகரில், யுத்தநிதிக் கமிட்டி ஒன்று அமைத்தார்கள். அதன் ஆதரவில் வெற்றி விழா நாள் ஒன்று கொண்டாடினார்கள். விழாவுக்கு, மிஸ்டர் ஸ்மித் என்பவர் தலைமை வகித்தார். அவரைப் பற்றி, கமிட்டியின் காரியதரிசியான பெண்மணி சில வார்த்தைகள் சொல்லும்படி கேட்டுக் கொண்டார்கள்.

அவள் சொன்னதாவது: "சீமாட்டிகளே! கனவான்களே! சீனவில் ஒரு புராதன வழக்கம் இருந்து வருகிறது. சீனப் பெற்றோர், தங்கள் குழந்தைகள் எந்த உறுப்பின் மூலம் பிரசித்தியடையும் என்று நம்புகிறார்களோ அந்த உறுப்பை, முத்தமிடுவது வழக்கம். தங்கள் குழந்தை வேதாந்தியாக வேண்டுமென்று விரும்பினால்; நெற்றியை முத்தமிடுவார்கள். பிரசங்கியாக வேண்டுமென்றால், வாயை முத்தமிடுவார்கள். பாடகனாக வேண்டுமென்றால், தொண்டையை முத்தமிடுவார்கள். மிஸ்டர் ஸ்மித் அவர்களின் பெற்றோர் அவருடைய எந்த அங்கத்தை முத்தமிட்டார்களோ, நான் அறியேன்."

காரியதரிசி இவ்வாறு சொல்லிச் சிறிது நின்றாள். எல்லாரும் ஆவலாய் அவள் வாயைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அவள், "ஆனால், மிஸ்டர் ஸ்மித் நமது கூட்டத்துக்கு அற்புதமான தலைவர் என்பதை மட்டில் நான் அறிவேன்" என்று முடித்தாள்.

## புகழுரைகளின் மந்திர சக்தி

எப்போதுமே, புகழுரைகள் இன்பம் தான் அளிக்கும். புகழ்வோருக்கும் இன்பம்; புகழப்படுவோருக்கும் இன்பம்.

சானிஸ் பால்லக் என்ற ஆங்கில ஆசிரியர், ஒரு சீன நண்பரை ஏதோ புகழ்ந்துரைத்தாராம்.

அந்தச் சீனர் சொன்ன பதில் இதுதான்: "மலர்களைப் பிறருக்கு வழங்கும் கைகளிலேயும், அந்த மலர்கள் கொஞ்சம் வாசனையை விட்டுத்தான் செல்லும்."



லெனின்: நவீன ருஷ்யாவின் நிர்மாணிகர். வ்ளாடிமீர் இலியச் உலியானவ் என்பதுதான் அவரது இயற்கைப் பெயர். அது அவருக்குப் பிடிக்கவில்லை. லெனின் என்ற எளிய பெயரை வைத்துக்கொண்டார். 54 வயது வரை வாழ்ந்தார். அதில் பெரும்பகுதி அஞ்ஞாத வாசம்தான். புரட்சி செய்து, கம்யூனிஸ முறையில் ஸோவியத் ருஷ்யாவை அமைத்தார். அதிலே ஓர் ஆச்சர்யம் உண்டு. பிரஞ்சுப் புரட்சியின் கோரங்கள் இல்லாமல், புத்திசாலித்தனமான முறையில் பலன் கண்டார்.

# 175 ஜாதி — 150 பாஷை

ஸோவியத் ருஷ்யாவில் 19,30,00,000 ஜனங்கள் இருக்கிறார்கள். அவர்களில் 15,00,00,000 பேர் ருஷ்ய சுதேச மக்களான ஸ்லாவ் என்னும் ஜாதியார். அந்த ஸ்லாவ்கள் ஒரே ஜாதியாரல்ல: 175 விதமான ஜாதிகள் உடையவர்; 150 விதமான பாஷைகள் பேசுபவர்; பத்துப் பன்ரண்டு வித மதங்களை அனுஷ்டிப்பவர். சுய ஆட்சியுள்ள 16 குடியரசுகளாக அவர்களின் ராஜ்யம் வகுக்கப்பட்டிருக்கிறது. அது அதற்குத் தனியான அரசியல் அமைப்பு. நீதி ஸ்தலங்கள், மந்திரி சபைகள் எல்லாம் உண்டு. விருப்பமானபோது பிரியும் உரிமையும் உண்டு. அது அதற்கு இஷ்டமான மதம் அனுஷ்டிக்கலாம். ஒவ்வொரு ஜாதியாரும் தங்கள் புராதனமான சுதேசி பாஷையைப் பேசலாம்; எழுதலாம். பல நூற்றாண்டுகளாய் எழுத்துக்கூட இல்லாமல் வாய்ப்பேச்சாகவே இருந்து வந்த சுமார் 40 பாஷைகளுக்கு எழுத்து அளிக்கப்பட்டிருக்கிறது. என்றாலும், மகா ருஷ்ய பாஷை சகல பள்ளிக்கூடங்களிலும் இரண்டாவது பாஷையாகச் சொல்லிக் கொடுக்கப்படுகிறது. இத்தனை ஜாதியார்களுக்குள்ளும் ஒரே கலாசாரத்தையும் தேசிய ஒருமையையும் வளர்க்க, ஸோவியத் கட்சியார் உழைத்து வருகிறார்கள். முக்கியமான பதினெட்டு ஜாதியார்களின் புகைப் படங்களை மட்டில் மாதிரிக்காகக் கீழே காணலாம்.



1. [illegible]:
15,00,000



2. மகா ருஷியர்:
10,00,00,000



3. உக்ரேனியர்:
3,80,00,000



4. [illegible]
43,000



5. காஜக்கு:
30,00,000



6. யாகுட்:
3,00,000



7. துருக்கியர்:
8,00,000



8. ஆஸ்டியாக்:
25,000



9. கிர்கியர்:
8,85,000





10. புரியாத்:
5,00,000



11. வெள்ளை ருஷ்யர்:
1,00,00,000



12. ஜார்ஜியர்:
2,20,00,000



13. உஸ்பெக்:
50,00,000



14. கால்மிக்:
1,35,000



15. பெலுட்ஜிஸ்டேனியர்:
1,000



16. டாட்ஜிக்:
12,00,000



17. யூதர்:
50,00,000



18. சாம்:
1,700



ஸ்டாலின் : தற்கால சரித்திரத்தின் அதிசய புருஷன். கிரெம்ளின் அரண்மனையில் தமது காரியாலயத்தில் அமர்ந்திருக்கிறார். கார்ல் மார்க்ஸ் படத்தின் கீழே, எப்போதும் தனிமையில் உட்கார்ந்து வேலை செய்வதே அவர் வழக்கம். ஸோவியத் ருஷ்யாவின் ஈடுஜோடியில்லாத தலைவராக விளங்குகிறார். உலகமே இன்று அவரைப் புகழ்கிறது.

# வாழ்க்கையும் அரசியலும்

வெ. சாமிநாத சர்மா

பிரதி யொரு மனிதனும் இரண்டு பட்ட அந்தஸ்துடையவனா யிருக்கிறான். ஒன்று தனி மனிதன்; மற்றொன்று சமுதாய மனிதன். தாய்க்கு மகனாகவோ, பிள்ளைகளுக்குத் தகப்பனாகவோ, குடும்பத்திற்கு எஜமானனாகவோ ஒருவன் இருக்கிறான். இப்படி யிருந்து கொண்டு இவன் செய்ய வேண்டிய கடமைகள் உண்டு. இங்ஙனமே, பலபேர் அடங்கிய ஒரு சமுதாயத்தின் ஒரு சிறு அம்சத்தினன் என்ற முறையில், பிரஜை என்ற ஹோதாவில் வரி செலுத்துவது அரசாங்கத்தை நடத்துவிக்கிற பிரதிநிதிகளைத் தெரிந்தெடுப்பது, தன்னுடைய ராஜ்யத்திற்கு ஆபத்துண்டாகுமென்று தெரிந்தால் அந்த ஆபத்தினின்று அதனைக் காப்பது முதலிய பல கடமைகளும் இவனுக்கு உண்டு. இந்த இரண்டு விதக் கடமைகளையும் ஒன்றை மற்றொன்று பாதிக்காமல் இவன் செய்து கொண்டு போகிற போது தான், இவனுடைய வாழ்க்கை வளர்ச்சி யடைகிறது; முழுவாழ்க்கையாகிறது. இப்படி முழு வாழ்க்கையை நடத்துகிறவன் தான் முழு மனிதன்.

சில நாடுகளில், இன்னின்ன குற்றங்கள் செய்தவர்களுக்குப் பிரஜா உரிமை கிடையாது என்று சொல்லி விடுகிறார்களல்லவா, அதனுடைய தாத்பரியம் என்ன? முழு மனிதனாயிருக்கப் பட்டவனை அரை மனிதனாக்கி விடுகிறார்களென்பது தான்.

ஒரு நாட்டினர் உண்பதும் உடுப்பதும், ஆடுவதும் பாடுவதும், பேசுவதும் எழுதுவதுமெல்லாம் அரசியலால் ஆட்டிவைக்கப்படுகின்றன இக்காலத்தில். எனவே, அரசியல் உணர்ச்சியற்றவர்கள் உன்னதக் கதையும் பாட்டும் கலையும் கவிதையும் பண்ணி விடுகிறோம் என்பது வெறும் மயக்கமே யாகும். இந்தக் கட்டுரையால் அது விளங்கும்.

அந்த அரை மனிதனை, மனிதனாகவே இல்லாமற் செய்து விடுவது முண்டு. அதாவது தாய்க்கு மகனாகவோ, பிள்ளைகளுக்குத் தகப்பனாகவோ, குடும்பத்திற்கு எஜமானனாகவோ இருந்து சில கடமைகளைச் செய்துகொண்டிருக்கக் கூடிய உரிமையும் அவனுக்கு இல்லாமற் செய்து விடுவதுண்டு, சிறைவாசம், மரண தண்டனை முதலியவைகளின் மூலமாக. இந்த அரை மனிதனுடைய உரிமைகளை, மேற்படி சிறைவாசம் அனுபவிப்பதற்கோ, அல்லது மரண தண்டனை அடைவதற்கோ லாயக்கான குற்றங்களைச் செய்திருந்தாலொழிய வேறுகாரணங்களுக்காக எந்த அரசாங்கமும் பறித்து விட முடியாது. இந்த உரிமைகள், அதாவது தனி மனிதனுடைய உரிமைகள், பிரதியொரு மனிதனுடனும் கூடப் பிறந்தவை. இவைகளைப் பாதுகாத்துக் கொள்வதற்கும், இவைகளைக் கொண்டு சமுதாய மனிதனுடைய உரிமைகளை அடைந்து அனுபவிப்பதற்குந்தான் அரசியல் கிளர்ச்சிகள், அரசியல் போராட்டங்கள் முதலியன நடைபெறுகின்றன. அரை மனிதனாகப் பிறந்த மனிதன், முழு மனிதனாக வளர்ந்து வாழ வேண்டுமென்பதுதான், அரசியலின் நோக்கம். ஆகையால், வாழ்க்கையினின்று அரசியலைப் பிரிக்க முடியுமா? அல்லது அரசியலினின்று வாழ்க்கையைப் பிரிக்க முடியுமா?

தனிமனிதனுடைய வாழ்க்கையானது ஒழுங்காக நடைபெறுவதற்குவான சாஸ்திரப் பயிற்சி முதல் மனோதத்துவ சாஸ்திரப் பயிற்சி வரையில் பலவிதப் பயிற்சிகள் எப்படி அவசியமாயிருக்கின்றனவோ அப்படியே சமுதாய மனிதனுடைய வாழ்வு சிறப்புற நடைபெறுவதற்கு அரசியல் சாஸ்திரப்பயிற்சியும் அவசியமாயிருக்கிறது. மற்ற சாஸ்திரங்களைப் பயிலுவதோடு

அவைகளின் முடிவைக் கண்டு விட லாம். ஆனல், அரசியல் சாஸ்திரத் தைப் பயின்று அனுஷ்டானத்தில் கொண்டு வந்தால்தான், அதன் முடி வைக் காணமுடியும். மற்ற சாஸ் திரங்கள் என்னறைக்கும், எல்லா நாடு களுக்கும் பொதுவான சில உண்மை களை வெளியிடுகின்றன. அரசியல் சாஸ்திரமோ, காலத்திற்குத் தகுந்த, நாட்டிற்கு ஏற்ற, உண்மைகளை வெளி யிட்டு வளர்ச்சியடைந்து கொண்டே வருகிறது. இந்த உண்மைகள் வெளி யாகிற காலத்தில் தான், சில நாடு களில் புரட்சிகள் உண்டாகின்றன; சில நாடுகளில் அரசியல் அமைப்பு மாறுகிறது. இப்படிப் புரட்சிகளும் மாற்றங்களும் உண்டான போதிலும், அரசியல் சாஸ்திரத்திற்கு எவ்வித ஊறும் உண்டாவதில்லை; அதன் வளர்ச்சியும் குன்றுவதில்லை.

மனிதன் எப்பொழுது தனித் தனி யாக இருந்து வாழ்வதினின்று விலகி, நான்கு பேருடன் பழகத் தொடங் கினனே, சமுதாயமாக வாழ ஆரம் பித்து விட்டானே, அப்பொழுதே அவ னுடைய அரசியல் வாழ்க்கையும் ஆரம்பித்து விட்டது. இந்த அரசியல் வாழ்க்கையை எந்த அளவுக்கு அவன் ஒழுங்காக நடத்திக் கொண்டு வரு கிருனே அந்த அளவுக்கு அவனுடைய சொந்த வாழ்க்கையும் ஒழுங்காக நடைபெறும். மனிதன், ஏன் சமுதாய மாகச் சேர்ந்து வாழ விரும்புகிருன்? தன்னுடைய நன்மைக்காகத்தான், அவனுடைய சுயநலந்தான், பரநலத் தை நாடத் தூண்டுகிறது. ஆகவே, பிரதியொரு மனிதனும், தன் சொந்த வாழ்க்கை ஒழுங்காக நடைபெறு வதற்கு, அரசியல் வாழ்க்கையிலே ஈடுபட வேண்டியது அவசியமா யிருக்கிறது.

அரசு எப்படி யிருக்கிறதோ அப் படித்தான் குடிகளும் இருக்கிருர் கள். குடிகள் எந்த அரசுக்கு, அதா வது எந்த ஆட்சி முறைக்குத் தகுதி யுடையவர்களா யிருக்கிருர்களோ அந்த ஆட்சி முறை தான் அவர் களுக்குக் கிடைக்கிறது; அதன் கீழ்த் தான் வாழ்கிருர்கள். இதனின்று, தனி மனிதனையும் சமுதாய மனிதனை யும், அதாவது ஒருவனுடைய சொந்த வாழ்க்கையையும் அரசியல் வாழ்க் கையையும் வேறு வேருகப் பிரிக்க முடியா தென் றேற்படுகிறது. அரசு ஒழுங்காக இயங்க வேண்டுமானல், அந்த அரசின் பிரஜை பாடுபடவேண் டும்; அப்படியே பிரஜை ஒழுக்கமாக வாழவேண்டுமானல், அந்தப் பிரஜை யின் அரசு பாடுபடவேண்டும். இப் படிப் பரஸ்பர ஒத்துழைப்பின் பேரில் தான், சமுதாய வாழ்க்கை நடை பெறவேண்டும்.

சமுதாய வாழ்க்கை எப்பொழுது சீர்குலைந்து போகிறதென்று கேட் டால், மேற்படி அரசும் பிரஜையும் பரஸ்பரம் ஒத்துழைக்காமற் போகிற போது தான். அரசு, பிரஜையின் நன்மையை நாடாமல் ஆள்கிறபோ தும், அப்படியே பிரஜை, அரசின் க்ஷேமத்தை உத்தேசித்து அதற்கு ஆட்படாமல் ஏதோ ஒரு வித வலுக் கட்டாயத்திற் காக ஆட்படுகிற போதும் அரசுக்கும் பிரஜைக்கும் மத் தியில் பெரிய பிளவு உண்டாகிறது. அதிலும், ஆள்வோர் வேற்று நிலத் தினராகவும் வேற்று நலத்தினராக வும் இருந்து, ஆளப்படுவோர் வேற்று நாட்டவராகவும் வேற்று நாட்ட முடையவராகவும் இருந்து விட்டால், கேட்க வேண்டியதே யில்லை. இந்தப் பிளவு இன்னும் அதிகமாக விரிவதற் குத் தான் சந்தர்ப்பங்கள் இருக்கின் றனவே தவிர, குறைவதற்கும் ஒன்று சேருவதற்கும் சந்தர்ப்பங்கள் அபூர்வ மாகப் போய் விடுகின்றன. இந்தப் பிளவு இல்லாமற் செய்து கொள் வதற்கு ஆள்வோருக்கும் ஆளப்படு வோருக்கும் அரசியல் சாஸ்திர அறிவு அவசியம் தேவையா யிருக்கிறது, ஆள்வோர் ஆளும் உரிமை யொன் றிலேயே குறியாயிராம லிருப்பதற் கும், ஆளப்படுவோர் ஆளப்படுவ தற்குச் சம்மதிப்பது தான் தங்கள் கடமை யென்றிராம லிருப்பதற்கும், அரசியல் சாஸ்திர அறிவு இரு சாரா ருக்கும் அவசியமா யிருக்கிறது. ஆள் வோருக்குக் கடமையையும், ஆளப் படுவோருக்கு உரிமையையும் முறையே வலியுறுத்திக் காட்டுவது அரசியல் சாஸ்திரம்.

ஜனங்களையும், ஜனங்களுடைய சொத்துக்களையும் காப்பாற்றுவதே அரசாங்கத்தின் நோக்கம். ஜனங்களைக் காப்பாற்றுவது என்று சொன்னால், ஜனங்களுடைய உயிரைக் காப்பாற்றுவது என்பது மட்டுமல்ல, ஜனங்களுடைய சுதந்திரத்தையும் - அதாவது தனி மனிதனுடைய வாழ்க்கையையும் - காப்பாற்றுவது என்பது தான் அர்த்தம். அப்படியே ஜனங்களுடைய சொத்துக்களைக் காப்பாற்றுவது என்று சொன்னால், அந்தச் சொத்துக்கள் சம்பந்தமான சகலவித உரிமைகளையும் காப்பாற்றுவது என்பது தான் அர்த்தம். அதாவது ஜனங்களுடைய உரிமைகளுக்குப் பாதுகாப்பாளனாக இருப்பது அரசாங்கம். இந்தப் பாதுகாப்புப் பொறுப்பை அரசாங்கம் ஏற்றுக் கொண்டு விடுமானால், ஜனங்கள் தங்கள் நலனை நாடுவதன் மூலம் அரசாங்க நலனை நாடுகிற கடமையையும் எவ்விதக் குறைபாடுமின்றிச் செய்து கொண்டு போதல் சாத்தியம். அப்படி அரசாங்கம் தன் பொறுப்பை உணர்ந்து நடந்து கொள்ளாமல் போனால், அதற்கு அதன் பொறுப்பை உணர்த்துவது ஜனங்களின் கடமையாகும். இங்ஙனம் உணர்த்தி அதனை ஒழுங்குக்குக் கொண்டு வராமல் போனால், அது ஜனங்களுக்குத் தான் நஷ்டம். இந்த நஷ்டம் வராமலிருப்பதற்கு, ஜனங்களுக்கு அரசியல் சாஸ்திர அறிவு அவசியமில்லையா?

அரசியல் சாஸ்திரத்திற்கு மூன்று கிளைகளுண்டு. முதலாவது சரித்திரம்; இரண்டாவது பொருளாதாரம்; மூன்றாவது பலவித ராஜ்ய அமைப்புகளைப் பற்றியும், பலவிதச் சட்டதிட்டங்களைப்பற்றியும் விஸ்தரித்துச்சொல்லுகிற சாஸ்திரம். இந்த மூன்றும் ஒன்றையொன்று தொட்டுக்கொண்டு ஒரு சங்கிலிபோல் இருக்கிறது. இந்தச் சங்கிலித்தொடருக்குத்தான் அரசியல் சாஸ்திரம் என்று சொல்லவேண்டும். ஆனால், சிலர், முன்னவையாகிய சரித்திரத்தையும் பொருளாதார சாஸ்திரத்தையும் தனித்தனியாகப் பிரித்துவிட்டு, அரசியல் அமைப்புகளைப் பற்றிக் கூறுகின்ற விஷயங்களை மட்டும் தனியாகப் பிரித்து அரசியல் சாஸ்திரமாகக் கூறுகின்றனர். இப்படிக் கூறுவோர் பொதுவாக ஆளும் நிலையிலிருப்பவர்களே. இப்படிக் கூறிக் கொண்டிருப்பதுதான் இவர்களுக்கு அனுகூலம். ஆனால், ஆளப்படும் நிலையிலேயே இருக்கவேண்டுமென்று சொல்லப்படுவோருக்கு இது ஏற்குமா?

இவர்கள், அதாவது ஆளப்படுவோர், தாங்கள் ஏன் இந்த ஆளப்படும் நிலைக்கு வந்துவிட்டோம் என்ற காரணத்தைத் தெரிந்துகொள்வதற்குச் சரித்திர ஞானம் அவசியம். இப்பொழுது எந்த நிலைமையிலிருக்கிறோம் என்பதைத் தெரிந்துகொள்வதற்குப் பொருளாதார சாஸ்திரம் தேவை. நமது நாகரிக பரம்பரைக்கும் கலாசாரப் பண்புகளுக்கும் ஏற்றாற்போல் எந்த விதமான அரசியல் அமைப்பை ஏற்படுத்திக் கொள்ள வேண்டுமென்பதற்கு அரசியல் அமைப்புகளைப் பற்றிய சாஸ்திர அறிவு இன்றியமையாதது. எனவே, இந்த மூன்றைப்பற்றிய அறிவும் சமுதாய மனிதனுக்குத் தேவையாயிருக்கிறது. இவற்றில் ஒன்றைவிட்டு மற்றொன்றை நாடுவது சிறப்பாகாது. "சரித்திரத்தின் விளைவு அரசியல் சாஸ்திரம்; அரசியல் சாஸ்திரத்தின் மூல வேர் சரித்திரம்" என்று ஒரு மேனாட்டு அறிஞன் கூறியது இங்கு சிந்திக்கத் தக்கது.

ஒரு நாட்டார் உண்பது, உடுப்பது, ஆடுவது, பாடுவது, பேசுவது, எழுதுவது எல்லாம், அவர்கள் எந்த அரசியலின் கீழ் வாழ்கிறார்களோ அந்த அரசியலைப் பொறுத்தே இருக்கிறது. உதாரணமாக, சென்ற இருபத்தைந்து வருஷங்களுக்கு முன் ருஷ்யர்கள் வாழ்ந்த வாழ்க்கைக்கும் இப்பொழுது அவர்கள் வாழ்கிற வாழ்க்கைக்கும் எவ்வளவோ வித்தியாசம் இருக்கிறது. இந்த வித்தியாசத்திற்குக் காரணம் என்ன? அவர்களுடைய அரசியலில் ஏற்பட்ட மாற்றந்தான். இதே பிரகாரம் சீனர்களுடைய வாழ்க்கையைப் பற்றியும் கூறலாம். எனவே, நம்மை ஆளும் அரசானது, எந்தத் தரத்தில் இருக்கிறதோ அந்தத் தரத்தில்தான் நமது

அன்றாட வாழ்க்கையும் இருக்கும். நமது அன்றாட வாழ்க்கையின் தரம் உயரவேண்டுமானால், நம்மை ஆளும் அரசின் தரமும் உயரவேண்டும். அது உயரவேண்டும் என்பதற்காக நாம் பாடுபடவேண்டும்.

இங்கே நாம் ஒரு விஷயத்தை ஞாபகத்தில் வைத்துக்கொள்வது நல்லது. அதாவது அரசு என்று சொன்னால், அது சுய அரசைத்தான் குறிக்குமே தவிர அந்நிய அரசைக் குறிக்காது. பாஷை, மதம், நாகரிகம் முதலிய பலவற்றிலும் வேற்றுமைப்பட்ட ஓர் இனத்தாரை மற்றோர் இனத்தார் ஆள்கின்றாரென்று சொன்னால், அதை ஆதிக்கஞ் செலுத்துகிறாரென்றுதான் சொல்ல வேண்டுமே தவிர ஆளவேண்டிய லக்ஷணத்தோடு கூட ஆள்கின்றாரென்று சொல்லக் கூடாது. ஏனென்றால், ஒரு நாட்டாரை மற்றொரு நாட்டார் ஆள்வதற்கு உரிமையே கிடையாது. நாகரிகத்திலோ மற்றத் துறைகளிலோ ஒரு நாட்டார் அல்லது ஒரு ஜாதியார் முன்னேற்ற மடைந்திருக்கலாம். அப்படி முன்னேறியிருப்பது, அவர்களுக்குக் கிடைத்த சந்தர்ப்பங்களைப் பொறுத்ததேயாகும். அதற்காக அவர்களுக்கு மற்றவர்களை ஆளும் உரிமை வந்துவிட்டதா என்ன? ஆள்கின்ற உரிமையே இல்லாதபோது அவர்கள் ஆள்கின்றாரென்று சொன்னால், அது உரிமைக்கு மீறின செயலேயாகும்.

சரி; அந்நியர் ஆளாமல் சுய நாட்டினரே ஆள்கின்றனர் என்று வைத்துக்கொள்வோம். அந்த ஆட்சியை இந்தத் தகுதிப்படுத்திக் கொள்கிற அரசு என்று சொல்லலாமா? அப்படியும் சொல்லிவிட முடியாது. ஆள்கின்றவர் யாரென்பதும் முக்கியம்; எந்த நோக்கத்தோடு ஆள்கின்றாரென்பதும் முக்கியம். ஒரு நாட்டைச்சேர்ந்த சிலர் தங்களுடைய பணப் பலத்தினாலும் படைப் பலத்தினாலும் அதிகாரத்தைக் கைப்பற்றிக்கொண்டு தங்களிஷ்டப்படி தங்கள் நன்மைக்காக அந்த நாட்டின் பெரும்பாலான குடிஜனங்களை ஆள்வார்களானால், அதற்கு அரசு என்ற பெயர் பொருந்தாது. ஆள்கின்றவரும் ஆளப்படுகின்றவரும் ஒரே நாடு, ஒரே மதம், ஒரே பாஷை முதலியன உடையவராயிருந்தபோதிலும், யாருடைய நன்மைக்காக ஆட்சி நடைபெறுகிறதென்பதுதான் முக்கியம். அதிகமான ஜனங்களுக்கு அதிகமான நன்மையைச் செய்யக்கூடியது எதுவோ அதற்குத்தான் அரசு என்று பெயர். எனவே, அரசு என்றால், சுய அரசாகவும் இருக்கவேண்டும்; பெரும்பாலோருடைய நன்மையை முன்னிட்டதாகவும் இருக்கவேண்டும்.

சுய அரசினால் ஆளப்படாதவர்கள், பெரும்பாலோருடைய நன்மையை முன்னிட்டு நடைபெறாத ஆட்சிக்குட்பட்டிருப்பவர்கள், தங்கள் நிலையை உணர்ந்து, அரசு என்பதற்குரிய லட்சணங்களோடு கூடிய அரசினால் ஆளப்படுவதற்குத் தங்களைத் தகுதிப்படுத்திக் கொள்ளவேண்டும். இந்தத் தகுதிப்படுத்திக்கொள்கிற தன்மையிலேதான் இவர்களுடைய இலக்கியம், கலை முதலிய பலவும் இருக்கவேண்டும். ஏன், இவர்களுடைய வாழ்க்கை முழுவதுமே, இந்தத் தன்மையிலேதான் அமைய வேண்டும்.

✲

### நல்லோர் சேர்க்கை

ஒரு யானையை நன்றாகக் குளிப்பாட்டி, அதனிஷ்டப்படி போகும்படி விட்டுவிட்டால், அது வெகு சீக்கிரத்தில் தன்னை அழுக்காக்கிக் கொள்வது நிச்சயம்; ஆனால், குளிப்பாட்டிய பிறகு, அதன் தொழுவத்திலேயே அதைக் கட்டிவைத்தால் அது அழுக்காக்கிக் கொள்ளாது. அதே போல, ஸாது ஸங்கத்தால் ஒருதரம் தூயனான நீ உலகத்தாரோடு தாராளமாகப் பழகினால் உன் தூய்மையை இழப்பது நிச்சயம். ஆனால், ஈசுவரனிடம் உன் மனதை நிறுத்துவாயானால், ஆத்ம விஷயமாக உனக்கு ஒருபோதும் அசுத்தமுண்டாகாது.

— ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர்

உங்கள் முக அழகை தெள்ளென வெளிப்படுத்துவது உங்கள் நீண்டு கறுத்த கேசத்தின் வனப்பே. இதற்கு இன்றியமையாதது

# ஜாப்கோ
# ஹேர் குரோயர்




சிறந்த மூலிகைகளைக் கொண்டு தயாரிக்கப்படும் இத்தைலம், கேசம் உதிர்வதை உடனே தடுக்கிறது. இள நரையைப் போக்கி கேசத்தை நீண்டு வளரச் செய்கிறது

எங்களால் தயாரிக்கப்படும் மற்ற பொருள்கள்:
பவுண்டிங்க் . பிரில்லியன்டைன் . ஸ்னோ
லைம்கிளிஸ் . வாசனை கலந்த காஸ்டர்
ஆயில் முதலியன

ஜயபாரதம் கம்பெனி
:: பெங்களூர் ::




# பெண்களுக்கு சுயநலமற்றதும் கௌரவப்படுத்தக் கூடியதுமான சுயேச்சை வாழ்க்கை

ஒரு பெண் சோம்பேறியாய் வீட்டோடு இருப்பதை சமூகம் விரும்பவில்லை. தற்கால புத்திசாலி பெண்ணான உனக்கு இந்திய ஆக்ஸிலியரி நர்ஸிங் ஸர்விஸில், மனதை ஆகர்ஷிக்கக் கூடியதும் சுவாரஸ்யமானதும் உபயோகமுள்ளதுமான வேலைகள் இருக்கின்றன. "கருணையின் தேவ தூதர்கள்" அடையாளமான வெண்மை நிற குல்லாயும் ஏப்ரனையும்விட எந்த உடுப்பும் அதிக கௌரவத்தை அனுபவிக்கவில்லை.

ஏ. என். எஸ்ஸில் பெறும் முதல்தரமான பயிற்சி யுத்தத்திற்குப் பிறகு உங்களுக்கு சிவில் நர்ஸிங்கில் வெற்றிகரமான வாழ்க்கையை அளிக்க சுலபமாக இருக்கும். உங்களுக்கு வேறு யோசனைகள் இருந்தால், நீங்கள் பயிற்சி அடைந்த வைத்திய அறிவு உங்கள் குடும்ப வாழ்க்கை அல்லது தேசத்தின் சமூக சேவைக்கு மதிப்பு சொல்லக்கூடாததாக இருக்கும். இந்த சந்தர்ப்பத்தை இழக்காதீர்கள்.

தற்சமயம் ஏ. என். எஸ். சம்பளங்கள் அதிகமாக உயர்த்தப்பட்டிருக்கிறது. உதாரணமாக பொது சேவையின் புது சம்பளங்கள். இலவச இடவசதி, சாப்பாடு, வேலையாட்களுடன் கூட மாதம் ரூ. 135 முதல் 175 வரை, அல்லது மாதம் ரூபாய் 203 முதல் 243 வரை. வேலைக்கு பிரிட்டிஷ் பிரஜை அல்லது இந்திய சமஸ்தான பிரஜையாவும் 17 முதல் 45 வயதுக்குள் இருக்கும் எந்த பெண்ணும் சேரலாம். முன் அனுபவம் தேவையில்லை. ஆனால் நர்ஸிங் அனுபவம் உள்ளவர்கள் வேலையில் உயர்ந்த கிரேடில் சேரலாம். நர்ஸுகள் நன்கு பாதுகாக்கப்பட்டு வருகிறார்கள். சாதாரணமாக, அவர்களாகவே மேல் நாட்டுக்குப்போவதாகசொன்னாலொழிய, எல்லோருக்கும் இந்தியாவிலேயே வேலைகள் கொடுக்கப்படுகின்றன.

# ஏ.என்.எஸ்

## பெண்ணிற்கு மிகவும் கம்பீரமான வேலை

**பூரா விவரங்களுக்கு**

—:::—

நீங்கள் வசிக்கும் பிரதேசத்தில் உள்ள செயின்ட் ஜான், ஆம்புலன்ஸ் லேடி சூபரின்டென்ட் அல்லது டைரக்டர் ஜெனரல் இந்திய மெடிகல் சர்விஸ், நியூ டில்லிக்கு இன்றே எழுதுங்கள்.

AAA. 1197. A. TM.

# வியாபாரி பேச்சு



நாரா

[ஐக்கிய தேச முதலாளிகள், யுத்தத்துக்கு முன்னே எதிரிகளுக்கு ஆயுதங்களை ஏராளமாய் விற்றதே இந்த யுத்தக் கொடுமைக்குக் காரணம். இன்றல்ல; வியாபாரிகள் என்றுமே இப்படித்தான். 1694-ஆம் ஞூ ஜான் கிரௌன் என்பவர் எழுதிய 'ரெகுலஸ்' என்ற நாடகத்தின் ஒரு காட்சியை நண்பர் இங்கே மொழி பெயர்த்துத் தந்திருக்கிறார். இது இன்றைக்கும் பொருந்தும்.]

**வியாபாரி:** நம்முடைய சரக்குகள் என்ன வாயின?

**உளவாளி:** நாம் விற்ற கத்திகளால் ஒன்றும் புண்ணிய மில்லை. கொஞ்ச காலமாகச் சண்டைகளே நடக்க வில்லை யல்லவா? அதனால், கத்திகளுக்கு இப்போது கிராக்கி இல்லை. தூரத்தி லிருந்தபடியே நகரத்தைத் தாக்க வேண்டி யிருந்தபடியால், வில்லுக்கும் அம்புக்கும் கிராக்கி ஏற்பட்டுவிட்டது. கைவசமிருந்த அம்புகளெல்லாம் செலவாகி விட்டன. அம்புகளுக்கு நாம் என்ன அகாத விலை கேட்டாலும் விழுந்தடித்துக்கொண்டு வந்து தந்து வாங்கிக் கொண்டார்கள்.

**வியாபாரி:** சபாஷ்! அதுதான் சரி.

**உள்வாளி:** நாமிருவரும் வடிக்கட்டிய அயோக்கியர்கள். நம் நாட்டு மக்களையே கொன்று தீர்ப்பதற்கு, எதிரிக்கு நாமே போர்க் கருவிகளை விற்றுவருகிறோம்.

**வியாபாரி:** அதனாலென்ன? எதிரியை நாம் சும்மாவா விட்டுவிடுகிறோம்? என்ன அடாத விலைபோட்டு அவனிடம் வாங்குகிறோம்? இதனால் எதிரிக்கு எவ்வளவு மகத்தான நஷ்டம்? அவன் ரத்தத்தை அல்லவா உறிஞ்சி விடுகிறோம்?...அது கிடக்கட்டும். எதிரியின் படை என்ன நிலைமையில் இருந்தது?

**உளவாளி:** முதல் தரம்!

**வியாபாரி:** பேஷ்! நிரம்பச் சந்தோஷம்! இனி முற்றுகை பலப்பட்டுவிடும். அகவிலையும் கண்டிப்பாய்



ஒன்றுக்குப் பத்து நூருய் ஏறியே தீரும். கடவுள் கிருபையால் எங்கும் பஞ்சம் வந்தது நல்லதாய்ப் போயிற்று. தானியங்களுக்கு ஒரே அடி பிடி சண்டை; இதில் நல்ல லாபம் தட்டி விடலாம். என்னிடம் ஏராளமான தானியம் கைவச மிருக்கிறது. ஆனல், இப்போது விற்றுவிடப் படாது. பொறுத்துப் பார்க்கவேண்டும். பஞ்சத்தின் கொடுமையைச் சரியாய்ப் பயன்படுத்திக் கொண்டால், கொள்ளை லாபம் அடித்துவிடலாம்.

**உள்வாளி:** அப்பப்பா! நீயும் ஒரு மனிதன் தானு? உன் நெஞ்சிலே ஈரமில்லையா? பஞ்சத்தால், மக்கள் மடிந்து குவிகிருர்கள். உன்னைத் தவிர வேறு யார் தானியம் விற்கிருர்கள்? உனது பேராசைக்கு ஓர் எல்லையே கிடையாதா? மனச்சாட்சி என்று ஒன்று இருப்பதே, உனக்குத் தெரியாதோ?

**வியாபாரி:** உலக அனுபவம் முதிர முதிர, இந்த மனச்சாட்சிப் பூச்சாண்டிக்கு எவனும் இடங்கொடுக்க மாட்டான். சின்ன வயதிலேதான் பெரும்பாலோருக்கு இதிலே பற்று இருக்கும்-அம்மை புகட்டுவது மாதிரி. இந்த நோயிலிருந்து ஒருதரம் விடுபட்டால், அப்புறம் இது வருவதேயில்லை. ஒரே தடவையில் எல்லாம் சரிப்பட்டுப் போய் விடும்.

**உள்வாளி:** கடவுளிடத்திலே தான் உனக்குப் பக்தியில்லை; பயமுமில்லை. நாட்டு நலத்தையாவது நீ சற்றுக் கவனிக்கப்படாதா?

**வியாபாரி:** நாடாவது, நகரமாவது! மண்ணுங்கட்டி! யார்தான் நாட்டைக் காட்டிக்கொடுத்து மோசஞ் செய்யவில்லை? எந்தப் பயல்தான் நாணயமாய்ப் பிழைத்து விட்டான்? சொல், பார்ப்போம்! இத்தனை பயல்களிலே, நான் மட்டும் ஏன் தன்னந் தனியே யோக்கியனுய் இருக்க வேண்டும்?

**உள்வாளி:** அப்படியா சங்கதி? மெத்தச் சரி. ஆனல், ஒன்றுமட்டும் உனக்கு நினைவிருக்கட்டும். நான் நினைத்தால், எந்த நிமிஷத்திலேயும் உன் கழுத்துக்குக் கத்தி கொண்டுவர முடியும். நீ வியாபாரம் செய்யும் போது என்னையும் சேர்த்துக் கொள். இல்லை... உன் பாடு அதோ கதிதான்—ஞாபக மிருக்கட்டும், என்ன?

## அதிலும் ஒரு சூட்சுமம்

கிராமபோன் முதலிய பல அபூர்வ விந்தைகளைக் கண்டு பிடித்த தாமஸ் எடிஸன் என்ற பிரபல விஞ்ஞானியைச் சில நண்பர்கள் பார்க்க வந்தார்கள். தாம் கண்டு பிடித்த பல ஆச்சர்ய இயந்திரங்களை அவர்களுக்கு ஒவ்வொன்ருகக் காட்டி, "மனிதனுடைய வேலைச் சிரமத்தைக் குறைத்து, சகாயம் செய்யக்கூடியவை இத்தனையும்" என்று சொன்னர்.

வந்தவர்கள் இந்த அனைத்தையும் கண்டு ஆச்சர்யப்பட்டார்கள். ஆனல், அவர்களுக்கெல்லாம் ஒரே ஒரு விஷயம் மாத்திரம் புரியவில்லை. அதைப் பற்றி அவர்களில் ஒருவர் கேட்டார்: "இதெல்லாம் சரி, மிஸ்டர் எடிஸன்! உங்கள் வாயிற்படியிலே ஒரு சுழல் கதவு வைத்திருக்கிறீர்களே, அது மட்டில் ஏன் மிக மோசமாக இருக்கிறது? அதைச் சுற்றி விட்டு உள்ளே வருவதற்குள் பிராணன் போய் விடுகிறதே! அது ஏன் இவ்வளவு கடுமையா யிருக்கிறது?"

எடிஸன் சொன்ன பதிலாவது: "ஓ! அதுவா? அது ஒரு யந்திரக் கதவு. அது ஒரு தரம் சுற்றினல், அதில் பிணைந்துள்ள விசை, எட்டு காலன் கண்ணீரை, என் வீட்டு மாடியில் உள்ள டாங்கியில் இறைத்து விடுகிறது."



# வெள்ளி

'துறைவன்'

விண் மேகச் சரிகையிலே
வெள்ளியடா வெள்ளி!
வீங்கி யெழுந் தண்புனலில்
வெள்ளியடா வெள்ளி!

கண் குளிரத் தவழ்ந்து வரும்
கண்மணி என்செல்வம்
கற்கண்டுப் பல்லழகில்
கலப்பிலதோர் வெள்ளி!

முல்லை எழிற் கொடி முகையின்
முறுவலிலே வெள்ளி!
மூட்டோடு வான் பிளக்கும்
மின்னலிலே வெள்ளி!

வில்வளைத்து முகில் சிதைய
விடுக்கு மழை, கோடி
வெண்சரமாய் விந்தையுமாய்
வீழ்சரங்கள் வெள்ளி!

தகடு விரிந்தெழும் அலையில்
தவழ்ந்துருகும் வெள்ளி!
தண்ணிலவின் வெண் வதனம்
தள தளக்கும் வெள்ளி!

முகடுயர நிமிர்ந்த மலை
முடியினிலே வெள்ளி!
முழை யுலவித் தழை குலவும்
முத்தருவி வெள்ளி!

ஆனபொருள் அனைத்தினிலும்
அளக்ககிலாச் செல்வம்
ஆக்கி வைத்தான்; நோக்குகிலார்
'அதுவல்ல' என்பார்.

கூனவிளம் பிறைக் கடலில்
குமிழ்க்கு மொரு வெள்ளி
கொள்ளையிடக் கருதுகிலார்,
கொல்லுலையில் வெந்தார்.

மானமழி துப்பாக்கி
மாயை பல ஆக்கி
மக்கள் உயிர் மாய்ப்பர்; குண்டு
மாரி யெனப் பொழிவர்.

போனவுயிர் கோடி; அமர்ப்
புயல் முடியும் போதில்,
பொருளெனிலோ அற்ப வெள்ளி
போதை தரும் கள்ளி.

வான மெலாம் வெள்ளி; இருள்
வதன மெலாம் வெள்ளி
வடித்து வைத்த ஈசனருள்
வாழ்த்தி யுளம் தெளியில்,

'மான மொன்றே செல்வம்; அதை
மறந்தும் உயிர் வாழோம்.
வேதம் இது!' என்பருள்ளம்
வெள்ளி யடா வெள்ளி!





# விலையாகாத புத்தகங்கள்

மு. அருணாசலம்

சமீபத்தில் ஒருநாள் என் வேலைக்காரன் ஒருவன் கடைக்குப் போய் ஏதோ சாமான் வாங்கிக்கொண்டு வந்திருந்தான். சாமான் கொஞ்சம் ஈரமா யிருந்தபடியால், அது வீட்டில் ஒரு புறம் தாழ்வாரத்தில் உலர்த்தி வைக்கப்பட்டிருந்தது. என் அறையிலிருந்து நான் ஏதோ எழுதிக்கொண்டிருந்த சமயம். தலையைத் தூக்கி ஜன்னல் வழியாகப் பார்த்தேன். சாமான், கடைக்காரன் கட்டிக் கொடுத்த காகிதத்தில் விரித்து வைத்தபடியே காய்ந்து கொண்டிருந்தது.

அது என்ன காகிதம் என்பதைப் பார்க்க வேண்டுமென்ற ஆவல் எப்படியோ எனக்கு உண்டாயிற்று. எழுந்து வெளியே போய்ப் பார்த்தேன். அது ஒரு பெரிய வெள்ளைத் தாள்; 'பெதர் வெய்ட் பேப்பர்' என்று சொல்லுகிறார்களே, அப்படிப்பட்ட காகிதம். அதில் நல்ல 12 பாயிண்ட் பைகா, எழுத்தில், 'திக்லெட்' இடை வெளி விட்டு, '20 எம்' அளவில் புத்தகம்போல அழகாக அச்சிடப்பட்டிருந்தது. தமிழானபடியால், ஆவலோடு படித்தேன்.

சாமான் அவ்வளவையும் வேறு ஒரு தாம்பாளம் கொண்டுவரச் செய்து அதில் கொட்டிவிட்டு, காகிதம் முழுவதையும் எடுத்தேன். அதில் 32 பக்கம் இருந்தது. ஒரு நாவலின் இடையிலுள்ள 'பாரம்'. மடித்திருந்ததே யொழிய ஓரம் கிழிக்கவுமில்லை, தைக்கவுமில்லை, வெட்டவுமில்லை. பக்கத்தின் தலைப்பில் நடுவே பக்கம் 49 முதல் 64 வரை போட்டிருந்தது; புத்தகப் பெயர் போடவில்லை. முழுவதையும் படித்தேன். அது ஒரு துப்பறியும் நாவலென்பது தெரிந்தது; "மாணிக்கம் பிள்ளை மறைந்த மாயம்" அல்லது "கோட்டூரில் நடந்த கொலை" என்பது அதன் பெயரா யிருக்கலாம்.

**இன்று ஆயிரம் ஆயிரமாய் விற்கும் புத்தகங்கள் நாளைக்கு அழியலாம்; விற்காமல் செள்ளரிப்பவை, நாளையோ மறுநாளோ சிரஞ்சீவி யாகிவிடலாம். இந்த விநோதம் பல காலமாக உலகெங்கும் நிகழ்ந்து வருகிறது. காரணம் என்ன?**

காகிதத்தை எடுத்துக்கொண்டு உள்ளே வந்து உட்கார்ந்து, சாவகாசமாக அதைப் படித்து முடித்தபோது, பெயர் தெரியாத அந்த நாவலை எழுதிய பெயர் தெரியாத அதன் ஆசிரியர்மீது எனக்கு அளவில்லாத இரக்கம் ஏற்பட்டது. எவ்வளவு நாள் உண்ணாமல் உறங்காமல் இருந்து இதை எழுதினாரோ! எத்தனை தஸ்தா காகிதம், எத்தனை புட்டி மை, எத்தனை பேனா செலவாயிற்றோ! எத்தனை சேர் காப்பி அல்லது எத்தனை பட்டை பொடி செலவாயிற்றோ! தம் நண்பர்களிடமோ மனைவியிடமோ எத்தனை பகுதிகளைப் படித்துக் காட்டிக் காட்டி மகிழ்ந்தாரோ! புத்தக வெளியீட்டாளரிடம் எத்தனை முறை அதைச் சுமந்து சுமந்து சென்றாரோ! என்ன என்ன கஷ்டங்களைச் சகித்துக்கொண்டு அச்சாபீஸுக்கு அலைந்து புரூப் திருத்தினாரோ! ஆனாலும், புத்தகமாக வெளியிடும் காலத்தில், இப்படிப்பட்ட கஷ்டங்களையெல்லாம் மறந்து அவர் மனம் எவ்வளவு உற்சாகம் அடைந்திருக்கும்! ஆனால், இந்த உற்சாகம் எவ்வளவு நாளைக்கு? புத்தகம் விற்றால் தானே இந்த மகிழ்ச்சி வெளியீட்டாளருக்கு உண்டாகும்? அப்போது தானே ஆசிரியர் மகிழ்ச்சியும் நிலைநிற்க முடியும்?

பாவம், முடிவு என்னவாயிற்று? புத்தகம் விலையாகவில்லை. பைண்டான பாதி கடையிலேயே கட்டிக் கிடந்திருக்கிறது! மற்றப் பாதியும் அச்சாபீஸிலேயே பைண்டாகாமல்

கட்டிக் கிடந்திருக்கிறது. ஏனென்று கேட்பாரில்லை. இந்த யுத்தம் காரணமாக, காகிதம் கிடைக்காமற் போனவுடனே, எவ்விதக் காகிதமும் விலையேறிவிட்டது. அச்சாபீஸ்காரர், கட்டிக் கிடந்த புத்தகத்தின் பாரங்களை, வீசைக்கணக்காக நிறுத்து, சாமான் மடித்துக் கொடுப்பதற்காகக் கடைக்காரனிடம் போட்டு விட்டார்; இதன் மூலம் அவர் தமக்கு வரவேண்டிய அச்சுக் கூலியை ஈடு செய்து கொண்டார்.

ஆனால், புத்தகம் அச்சிட்ட காகிதத்தின் கிரயம் என்ன ஆகிறது? ஆசிரியர் கஷ்டப்பட்டு எழுதியதற்குள்ள கூலி என்ன ஆகிறது? கையிலிருந்த பணத்தையும் போட்டுக் காகிதம் வாங்கி விட்டு, அச்சுக்கூலி கொடுக்கவும் இயலாமலிருந்த ஆசிரியர் எப்படிக் காலட்சேபம் செய்வார்? புத்தகம் விற்கவில்லை என்பதனால், மனமுடைந்திருந்திருப்பார்; சந்தேகமில்லை. கையில் காசில்லாமையினால், சாப்பாட்டுக்கு வகையின்றி, உயிர் துறந்திருப்பாரோ?

சாமான் சுற்றிய காகிதத்தையும் அதன் நிலையையும் கண்ட போது, என் மனம் இப்படி யெல்லாம் எண்ணிற்று. நான் கண்டும் கேட்டுமிராத அந்த ஆசிரியரை எண்ணி ஒரு சொட்டுக் கண்ணீரும் விட்டேன்.

ஏராளமாய் அச்சிட்டு ஏராளமாய் விலை போகும் புத்தகங்களைப் பற்றித்தான் உலகம் பேசுகிறதேயொழிய, விலையே ஆகாத புத்தகத்தையோ அதன் ஆசிரியரையோ பற்றிப் பேசுகிறதா? வெற்றியைப் போல வெற்றி தருவது வேறொன்றுமில்லை என்று ஓர் ஆங்கிலப் பழமொழி சொல்லுகிறது. அப்படியானால், தோல்வி என்ன ஆகிறது?

வால்டேர் என்ற பிரெஞ்சு ஆசிரியரைக் குறித்த செய்தி யொன்று எல்லோருக்கும் தெரியும். அவர் புத்தக மொன்று வெளியாயிற்று. விற்பனை எப்படி யிருக்கிறது என்றறியவேண்டி, அவர் பாரீஸ் நகரத்திலிருந்த தம் நூல் வெளியீட்டாளருக்குக் கடித மெழுதினர். "?" ஆகிய கேள்விக் குறியொன்று தான் அக்கடிதத்தி லிருந்த விஷயம். மறு தபாலில், ஆச்சரியகரமான விற்பனை என்பதைக் குறிக்க "!" என்ற ஆச்சரியக்குறி மட்டும் எழுதிய கடிதம் வெளியீட்டாளரிடமிருந்து அவருக்கு வந்ததாம். அவருடைய புத்தகமே விற்பனையாகவில்லை என்று வைத்துக் கொள்வோம்; அப்போது உலகம் இப்படிப்பட்ட கடிதப் போக்குவரத்தைப் பற்றிப் பேசுமா?

சமீப காலத்திலே, வெண்டெல் வில்கி என்ற அமெரிக்கர், 'ஒரே உலகம்' என்ற புத்தகம் எழுதினர். அவருடைய பெயர் பிரபலமா யிருந்தது காரணமாகவும் ஏராளமாக விளம்பரம் செய்யப் பெற்றிருந்தமை காரணமாகவும், அது வெளி வந்த அன்றே லட்சக்கணக்கில் விற்பனையாயிற்றும்.

இப்படி யெல்லாம் வெற்றிகரமான விற்பனையுடைய புத்தகங்களைப் பற்றித்தான் பொதுவாக உலகம் பேசும். ஏன் அவை அப்படி ஏராளமாக விற்பனையாகின்றன? ஒருவரும் சொல்ல முடியாது. உயர்ந்த தகுதி வாய்ந்த புத்தகங்கள் மட்டுமே அப்படி விற்பனையாகின்றன என்பது மில்லை. பெரிய நாவல்கள், சிறிய கதைகள், பிரயாண நூல்கள்-முதலிய பலவகைப் புத்தகங்கள் இப்படி விற்பனை யாகின்றன. சாமானியமான துப்பறியும் கதைகளும் இப்படி விற்பனையான துண்டு. விற்பனைக்கும் நூலின் தகுதிக்கும் அதிகச் சம்பந்தத்தைக் காணோம். பெருவாரியாக விற்பனையான புத்தகங்கள் யாவும் சிறந்தன என்று கொள்ளமுடியாது. அப்படியே, விற்பனையாகாதவை சிறந்தன அல்ல என்றும் அர்த்தமாகாது.

விலையாகாத புத்தகங்களைக் குறித்து உலகம் பேசாத போதிலும், அவற்றைக் குறித்துப் பேசுவதில் சுவை இருக்கிறது. கடைகளில் சாமான் மடிக்க இவை உதவும் என்பதைத் தொடக்கத்தில் பார்த்தோம். இந்த உபயோகம், இப்போதைய யுத்தத்தின் காரணமாகத் தான் ஏற்பட்டதென்று யாரும் எண்ண வேண்

டாம். பண்டைய கிரேக்க நாட்டி விருந்த அனக்ஸாந்திரி டஸ் என்ற புலவர், ஆதென்ஸ் நகரத்துப் புலவர் சங்கத்தில் தம் நூல் அரங்கேறுது போய் விட்டால், தாம் மனம்நொந்து நூலின் கையெழுத்துப் பிரதியைக் கடைக்காரனிடம் கொடுத்து, 'பொட்டலம் கட்ட வைத்துக்கொள்' என்று சொல்லிப் போய் விடுவாராம்!

பிரான்ஸ் தேசத்திலிருந்த காதரினே என்ற புலவரொருவர், சரித்திர சம்பந்தமான எண்ணற்ற நூல்கள் எழுதுவதில் பிரியமுள்ளவர். ஆனால், அவர் புத்தகங்களை யாரும் வாங்கமாட்டார்கள். எனவே, அவர், தம் புத்தங்களைத் தாமே அச்சிட்டு, போகுமிட மெல்லாம் கையோடு கொண்டு போவார். பழம் புத்தகக் கடைக்குப் போய், அங்குள்ள புத்தகங்களைப் புரட்டிப் பார்க்கிற பாவனையாக, தம் கையிலுள்ளவற்றைப் புத்தகங்களிடையே செருகி விட்டு வந்து விடுவார். இப்படியாக அவருடைய புத்தகங்க ளெல்லாம் வெகு விரைவிலே தீர்ந்து போய், இரண்டாம் பதிப்பு, மூன்றும் பதிப்பு என்று அச்சிடவேண்டி யிருக்குமாம்!

கோலரிட்ஜ் என்பவர் ஒரு சிறந்த ஆங்கிலப் புலவர். வொர்ட்ஸ்வொர்த் என்பவர் அவரிலும் பார்க்கப் புகழ்வாய்ந்த புலவர். இருவரும் சேர்ந்து எளிய பாடல் தொகுதியொன்றை வெளியிட்டார்கள். விலையே போகாம லிருந்த அந்தப் புத்தகம் எப்படியோ திடீரென்று விற்பனையாகிவிட்டது. அதைப்பற்றி விசாரித்தபோது, புத்தகக் கடைக்காரர் பின்வருமாறு சொன்னார்:

"இந்தப் புத்தகங்கள் அத்தனையையும் மாலுமிகளே வாங்கினார்கள். அவர்கள் கோலரிட்ஜ் எழுதிய 'புராதன மாலுமி' என்ற பாடலைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறார்கள். இந்தக் கவிதைத் தொகுதியைத் திறந்தவுடன், இதில் அந்தப் பாடல் இருந்தது. அதைப் பார்த்தவுடன், இந்நூல் முழுவதும் மாலுமிகளுக் கேற்ற பாடல்களே உள்ளன என்றெண்ணி அவர்கள் வாங்கிச் சென்றார்கள். இது காரணமாகத்தான் உங்கள் புத்தகம் விற்பனையாயிற்று" என்றார்.

கதை எப்படி? இவர்கள் வெளியிட்ட உயர்ந்த கவிதைப் பண்பு பொருந்திய, பாவ பூரணமான பாடல் தொகுதி எங்கே! அதை மாலுமிகள் கப்பற் பாட்டு என்றெண்ணி ஏமாந்து போய் வாங்கி விட்டார்கள் என்று சொல்வது எப்படியிருக்கிறது!

இந்தக் கோலரிட்ஜின் நண்பர் ஒரு பாதிரியார். அவர் புத்தகம்போட்ட கதையும் வேடிக்கையானது.

'கடைத்தேறுவதைக் குறித்த புதிய கோட்பாடு' என்று அவர் ஒரு பெரிய புத்தகம், இரண்டு பாகங்களாக எழுதினார். இதை வெளியீட்டாளர் யாரும் வெளியிட இசையாததால், தம் செலவிலேயே வெளியிட்டார். புத்தகத்தின் போக்கைக் கண்டித்துப் பத்திரிகை மதிப்புரைகள் வெளிவந்தன. பார்த்த பாதிரியார், "இருக்கட்டும், அடுத்த பதிப்பு வெளிவரும் போது இந்த மதிப்புரைக்காரர்களுக்குப் புத்தி வரும்" என்று தமக்குள் சொல்லிக் கொண்டார். இரண்டு மூன்று வருஷங்களாயின. புத்தகத்தை விற்கும்படி கொடுத்திருந்த கடைக்காரனிடமிருந்து அவருக்குப் பணமே வரவில்லை. ஒரு நாள் கடைக்குப் போனார். கணக்கைப் பார்க்கவேண்டு மென்று கேட்டார். சரியென்று கடைக்காரன் கணக்கை எடுத்துப் போட்டான். படித்தார்.

"புத்தகத்துக்குக் காகிதவிலை இத்தனை பவுன்; சரி, அதிகமில்லை. அச்சுக்கூலி இத்தனை பவுன்; கொஞ்சந்தான், பாதகமில்லை. அட்டை, தையல் கூலி இவ்வளவு; விளம்பரம், மதிப்புரை தபால் செலவு... சரி, இருக்கட்டும். இவ்வளவும் வேண்டியதுதான். அடுத்தது என்ன?" என்று பார்த்தார்.

"ஸெல்லரிட்ஜ் — மூன்று பவுன்" என்று கணக்கில் எழுதி யிருந்தது. கடைக்காரனை அழைத்து, இவ்விவரமென்ன என்று விசாரித்தார்.

அவன் சொன்னான்: "ஆமாம், இது தான் ஸெல்லரிட்ஜ்."

"என்ன இது தான், ரொம்பவும் குறைவாயிருக்கிறதே!" என்று, இன்னதென்று விளங்காமலே அவர் கேட்டார்: "இவ்வளவு பெரிய புத்தகம் – இரண்டு பாகங் கொண்டது- ஆயிரம் பிரதி விற்றது. இவ்வளவு தானா? மூன்று பவுன் தானா?" என்றார்.

"ஐயா, நான் சொன்னதை நீங்கள் தப்பாக எண்ணிக் கொண்டீர்கள். ஒரு புத்தகம் கூட விற்கவில்லை. விற்காதபடியால். புத்தகத்தைக் கடையிலிருந்து அப்புறப்படுத்திக் காகிதக் கிடங்கில் கொண்டு போய் வைத்து விட்டோம். அதற்குரிய வாடகைதான் இந்த மூன்று பவுன்" என்றான்.

என்ன செய்வார் பாதிரியார்! பதில் பேசாமல் புத்தகங்களைத் தம் வீட்டுப் பரணில் கொண்டு போய் அடுக்கி விட்டார். தம்மைப் பார்க்க வந்த நண்பர்களிடம் இரண்டு பாகத்தையும் கொடுத்து, நகைச் சுவையோடு இந்தக் கதையையும் சொல்வி அனுப்புவாராம்!

இப்படியாக உள்ள கதைகளுக்கு அளவே யில்லை. தாமஸ் ஹார்டி என்பவர் சமீபத்தில் காலஞ்சென்ற ஆங்கில நாவலாசிரியர்; இணையில்லாத புகழ் பெற்றவர். அப்படிப்பட்ட இவருடைய நாவல்கள் கூட முதலில் கேட்பாரற்றுக் கிடந்தன. 'நீல விழியிணைகள்', 'பசுமரத்தின் நிழலில்', 'முடிவான பரிகாரம்' என்ற நாவல்கள் ஐந்நூறு பிரதிகளே அச்சிடப் பெற்றன. (பிற்காலத்தில் இவருடைய நாவல்களெல்லாம் பதினாயிரக் கணக்கில் தான் அச்சிடப் பெற்றன என்பதை நினைவு கூர வேண்டும்.) அச்சிட்ட வெளியீட்டாளர், ஒவ்வொரு புத்தகத்திலும் இருபது பிரதிக்கு மேல் விற்பனை செய்யமுடியவில்லை. பிறகு, அவர் மீதி இருந்த தத்தனையையும் அப்படியே மடிக்காத காகிதமாகவே பொட்டலம் மடிக்க விற்று விட்டார். காகிதத்தை வாங்கிக் கொண்டு போனவன் கெட்டிக்காரன். புத்தகத்தைச் சாணித்தாள் அட்டை போட்டுத் தைத்து, ஒன்று ஒன்றேகால் ஷில்லிங் வீதம் விற்று விட்டானாம்!

உலகத்திலேயே மிகச் சிறந்த நாவலாசிரியர் என்று புகழ் பெற்ற ஹார்டி புத்தகங்களின் நிலையே ஒரு காலத்தில் இப்படி இருந்ததென்றால், மற்றவர்களைப் பற்றிச் சொல்வதற்கு என்ன இருக்கிறது?

✲

## சோதிடர் யுக்தி

இதாலியில் பதினோராம் லூயி என்ற மன்னர் ஆண்டுவந்த காலத்தில், காலியோட்டி என்ற ஒரு சோதிடர் இருந்தார். அவரை அரசர் ஒரு கேள்வி கேட்டார்: "இன்ன தினத்தன்று நீர் மரணம் அடைவீர் என்று உம்மால் நிச்சயமாய்ச் சொல்லமுடியுமா?" சோதிடர் சொன்னார்: "அது சரியாய்த் தெரியாது. ஆனால், ஒன்று நிச்சயமாய்த் தெரியும். தாங்கள் இறக்கத் திட்டமாய் இருபத்தி நாலுமணி நேரம் இருக்கும் போது நான் மரணம் அடைவேன்." அதுமுதல் சோதிடரின் ஆரோக்கியத்தை, வெகு கவலையோடு மன்னர் பாதுகாத்து வரலானார்!

## தெய்வ தரிசன அடையாளம்

தனக்குள் தானே பூர்ணானந்தத்தை அனுபவிப்பது ஈசுவர தரிசனத்தின் அடையாளங்களில் ஒன்றாகும். சமுத்திரத்தின் மேற்பரப்பில் அலைகள் சுருண்டோடுகின்றன. ஆனால், அதன் கீழுள்ள அகாதமான நீர்த்தொகுதியோ அசைவற்றிருக்கிறது. —ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர்.

## சினிமா நட்சத்திரங்களைப் போல, நீங்களும் உங்கள் சருமத்தைக் காப்பாற்றுங்கள்!




என்னுடைய சருமமே எனக்கு முதல் கவலை என்கிறார் ரமோலா. அவர் தவறாமல் லக்ஸ் டாய்லட் சோப்பை உபயோகித்து தன் சருமத்தை அதிக சுத்தமாகவும், மிருதுவாகவும் வைத்துக்கொள்ளுகிறார். என் சரும அழகைக் காப்பாற்றிக் கொள்ள லகுவான முறை இது தான் என்று கூறுகிறார். மேலும் இந்த சுத்த நறுமணமுள்ள சோப்பின் நுரை ஸ்திரீகளின் சருமத்தை சுத்தமாகவும், மிருதுவாகவும், மாசில்லாமலும் வைத்துக்கொள்கிறதென்று அவர் உறுதியாக நம்புகிறார்.




# லக்ஸ் டாய்லட் சோப்

LTS. 120-50-40 TM

LEVER BROTHERS (INDIA) LIMITED

# கொஹிமா, காபா
## பிரதேசங்கள்மேல் நமது வெடி விமானங்கள்

"...இன்று நமது ஆகாய விமானங்கள் விரோதி நாட்டின்மீது பறந்து ஆயிரக்கணக்கான பவுண்டு இடையுள்ள குண்டுகளைப்போட்டு விரோதியின் இடங்களையும், கோட்டைகளையும் துருப்புக்களையும் தகர்த்தன...."

இது உருவகமானதோர் அறிக்கை. இதனுள்தான் நமது இந்திய விமானிகளின் வீரச் செயல்களும் மற்ற வேலைகளின் சரித்திரமும் அடங்கியுள்ளன. நாம் அவர்களிடம் வைத்திருந்த நம்பிக்கையை அவர்கள் ருசுப்படுத்திவிட்டனர். ஆகாயத்திலும், பூமியிலும் உலகிலேயே மோசமான சீதோஷ்ண ஸ்திதியிலும், பயங்கரமான நாடுகளிலும் அவர்கள் காண்பித்த வீரம், தீரம், பொறுமை இவைகளை நேரில் கண்டவர்களிடமும், அவர்கள் வேலைகளை அறிந்தவர்களிடமும் அவர்கள் புகழ்ச்சியைப் பெற்றனர்

இன்று அரக்கானிலும், பர்மாவிலும் விரோதிகள் கைப்பற்றிக்கொண்டிருக்கும் நாடுகளின் மீது, இந்திய ஆகாய படையின் சண்டை விமானங்களும், பருந்துப்பாய்ச்சல் வெடிகுண்டு விமானங்களும் ரோந்து விமானங்களும் முழு பலத்துடன் வேலை செய்கின்றன



இந்திய விமானங்கள் கொஹிமா மீதும் காபா மீதும் ஆதிக்கம் வகித்து வந்தன. இன்று அவைகள் பர்மாமீது பறக்கின்றன. ஹரிக்கேன் விமானங்களும், வல்டி வெஞ்ஜென்ஸ் விமானங்களும் ஜப்பானியர்களுக்கு சாவையும் நாசத்தையும் பொழிகின்றன. இந்திய விமானிகளைப்பற்றி இந்தியா பெருமையடைகிறது.

ஜப்பானியர்களைத் தோற்கடிக்க நம்மால் முடியும்,

**தோற்கடித்து வருகிறோமென்பதை**
**இவர்கள் மெய்ப்பிக்கிறார்கள்**

தேசிய போர்முனையின் பிரசுரம்.

AAA 1308-ATI

# யுத்தம் ஏன்

வெ. அ. தியாகராஜன்

**ரா**மாயணத்தில் ஓர் அருமையான சித்திரம் இருக்கிறது. வாலியும் சுக்ரீவனும் சண்டை போடுகிறார்கள். ராமன் தனது வில்லை நாணேற்றாமல், அவர்களையே பார்த்துக் கொண்டு நிற்கிறான். 'இவர்கள் இருவரும் ஒருவரைப்போல் ஒருவர் இருக்கிறார்களே! இதில் யார் இன்னார் என்று தெரியவில்லையே!' என்று ராமன் வியப்படைகிறான். ஒவ்வொரு மகா யுத்தத்தைக் காண்போரும், இதேபோல் தான் வியப்படைகிறார்கள்.

ஐரோப்பிய நாகரிகம் உலகத்தையே கவர்ந்து விட்டது என்று சொல்கிறோமல்லவா? ஆனால், ஐரோப்பிய நாகரிகத்தில் அமைதியாய் இருந்த காலம் நாற்பது வருஷங்களேயாகும். ஏன் இப்படி அடிக்கடி சண்டை நேரவேண்டும்? ஏன் உலகமே ஒரு பெரிய குருக்ஷேத்திரம் ஆகிவிடவேண்டும்? சஞ்சயனைப்போல் சாட்சியாய் நின்று, இந்த உலக கீதையின் தத்துவத்தைச் சற்றுக் கவனிப்போம். 'ஒவ்வொரு புதிய புத்தகமும் வந்தவுடனே, நான் ஒரு பழைய புத்தகத்தைப் படிக்கிறேன்' என்றான் ஓர் ஆங்கில அறிஞன். இப்போது யுத்தத்தைப் பற்றிப் பல புதிய புத்தகங்கள் வந்து கொண்டிருக்கின்றன. நாம் யுத்த விஷயங்களைச் சரித்திரம் என்ற முறையில் கவனிக்காமல், அவைகளின் அடிப்படையாயுள்ள தத்துவத்தைத் தேட விரும்பினால், பகவத் கீதைக்கே திரும்புவோம்.

**யு**த்தம் என்பது அரசியல் வாழ்க்கையில் ஒரு விதமான வியாதி. இயற்கையில் எப்படிப் பூகம்பங்கள் ஏற்படுகின்றனவோ, அப்படியே மனித சமூகத்திலும் யுத்தங்கள் ஏற்படுகின்றன. பூகம்பம் ஏற்படுவதன் காரணம் நமக்குத் தெரியும். பூமிக்கு அடியில் ஏதாவது கோளாறு இருந்தால், பூமியின்மேலே இருக்கும் பாரத்தைச் சுமக்க முடியாமல் நிலத்துக்கடியில் பிளந்துவிடுகிறது; இதுவே பூகம்பம். இதுபோலவே மனித சமூகமும் பொதுநலம் என்னும் பாறை மீது கட்டப்பட்டிருக்கிறதென்று சொல்லலாம். ஆகவே, சுயநலம் அதிகமானால், பொதுநலம் குறைந்து சமூகமே பூகம்பம் வந்த பூமகள்போல நிலைகுலைந் தாடுகிறது. இதையறியாத சிலர், எப்படிப் பெண்களுக்குப் பிரசவம் என்பது சகஜமோ, அது போலவே மனிதர்களுக்கு யுத்தம் என்பதும் சகஜமேயாகும் என்று சொல்லிவிடுகிறார்கள். ஒருவன் வியாதியால் அடிக்கடி பீடிக்கப்படுவானானால் வியாதியே அவனது சுபாவம் என்று சொல்லிவிட முடியுமா? ஆரோக்கியம் தானே மனிதனுடைய சுபாவம்? அவன் வைத்தியன் சொன்னதைச் சரியாய் அனுசரிக்கவில்லை என்றுதான் ஏற்படுகிறதேயொழிய, வியாதியாயிருப்பது மனித சுபாவம் என்று ஏற்படவில்லை. இது போலவேதான் யுத்தங்களிலும், பழைய யுத்தத்தின் பாடத்தை மனிதர்கள் சரியாய்க் கற்றுக் கொள்ளாததனாலேயே, புதிய யுத்தம் செய்கிறார்கள் என்று ஆகிறது. எவ்விதம் ஒரு மலைக்கப்பால் இன்னொரு மலை காண்கிறதோ, அவ்விதமே ஒரு யுத்தத்துக் கப்புறம் மறு யுத்தம் தலையெடுக்கும்போல் தோன்றுகிறதேயொழிய, 'ஈட்டிகளைக் கலப்பைகளாக அடிக்கும் காலம் வந்தது' என்று சொல்வது கஷ்டமாகிறது.

**யு**த்தத்தின் தத்துவத்தைக் கவனிப்பதற்கு முன்னால், கீதையில் ஏன் அருச்சுனன் கிருஷ்ணனையும், கிருஷ்ணன் அருச்சுனனையும் பல விதமான பெயர்களால் அழைக்கிறார்கள் என்று பார்ப்போம். அருச்சுனன் கிருஷ்

*தர்மப் பிரபுக்களுக்கும் அதர்மப் பாவிகளுக்கும் விவகாரம் வந்தால்தான் யுத்தங்கள் கிளம்புகின்றனவா? அதெல்லாம் வெறும் புரளி, தர்ம நியாயம் பற்றியமட்டில் இரு தரப்புகளும் அநேக சமயங்களில் ஒரே படியில் தான் இருக்கின்றன. அப்படியானால், யுத்தங்களுக்கு வேறு என்ன காரணம்?*

ணனை, 'அச்சுதா! ரிஷீகேசா! கேசவா! புருஷோத்தமா! கேசியைக் கொன்றவனே!' என்றெல்லாம் அழைக்கிறன். கிருஷ்ணன் அருச்சுனனைக் 'கௌந்தேயா! தூக்கத்தை வென்றவனே! சத்துருக்களை விரட்டியடிப்பவனே! தனஞ்ஜயா!' என்றெல்லாம் அழைக்கிறர். இவ்விரண்டிலுமிருந்து தெரியவருவது என்னவென்றல், இருவரும் சத்துருவை விரட்டியடிக்க விரும்புகிறர்களென்பதே யாகும். ஒவ்வொரு யுத்தத்திலும் சண்டை போடுகிறவர்கள் தாங்கள் செய்வது தர்ம யுத்தம் என்று சொல்வதும் தங்களுக்கே ஜயம் கிடைக்க வேண்டுமென்று விரும்புவதும் வழக்கம். இரண்டு நண்பர்கள் பிரகலாத நாடகம் பார்க்கப் போனர்களாம். அவர்கள் ஒருவருக்கொருவர் விரோதிகள். அதனல் இருவரும் தன் தன் விரோதியே இரண்யகசிபு என்று நினைத்தார்களாம். இதுதான் உலக நாடகம்.

இத்தாலியர்கள் எதியோப்பியாவைப் பிடிக்க விரும்புகிறர்கள். 'நீங்கள் அநாகரிகமானவர்கள். உங்களை நாகரிகப்படுத்துவது எங்கள் கடமை' என்று பிரசங்கம் புரிய ஆரம்பிக்கிறர்கள். இதில் யார் சரி, யார் தப்பு? பிற்போக்காய் இருக்க எவருக்கும் உரிமையில்லை. 'முன்னுக்குப் போ. அல்லது வெளியே போ' என்று மனித சமூகமே ஒவ்வொருவரையும் உந்துகிறது. அதற்காக, பலவீனமாய் இருப்பவர்களுடன் வல்லரசுகள் சண்டை தொடுப்பது நியாயமா? உடல்வலிமையே தருமம் ஆகிவிடுமா? அல்லது நமக்கு இஷ்டமானதெல்லாம் தருமம் என்று நமக்கு வேண்டிய விதியை நாமே வகுத்துக்கொண்டு விட்டால், அது இயற்கையின் விதியாகி விடுமா?

இன்னேர் உதாரணம்: **பால் ப்ரண்ட்டன்** என்பவர் '**இமயமலையில் ஒரு சன்னியாசி**' என்று எழுதிய ஒரு புத்தகத்தில், "திபேத்தில் அதிகமாகத் தங்கம் இருக்கிறது. ஆனல், திபேத்தியர் மிகவும் ஏழைகளாய் இருக்கிறர்கள். ஆகையால், திபேத்தை இங்கிலாந்து ஜயித்தால் அங்கிருக்கும் தங்கத்தைப் புது மாதிரியாய்த் தோண்டி எடுக்கலாம். அதனல் திபேத்தியரும் பணக்காரர்கள் ஆகலாம்" என்கிறர். இந்த நியாயம், பஞ்சதந்திரத்தில் வரும் ஒரு பூனை, சன்னியாசி வேஷம் போட்டுக் கொண்ட கதை போல் தான் இருக்கிறது. **ஸபாக்ளீஸ்** என்னும் கிரேக்கக் கவி 'ஆண்டிகோனி' என்னும் நாடகத்தில் நன்மைக்கும் தீமைக்கும் உள்ள வித்தியாசத்தையும் ஒற்றுமையையும் எடுத்துக்காட்டுகிறன். இதை ஆராய்ச்சி செய்த **ஹெகல்** என்னும் ஜெர்மானிய அறிஞன், "ஒவ்வொருவருக்கும் சில உரிமைகள் உண்டு. ஆனல், அவர்கள் தங்கள் உரிமைகளின் எல்லையை மீறிப் பிறர்உரிமைகளையும் தங்களுடையதாக ஆக்கிக்கொள்ள விரும்பினல், நியாயம் அநியாயமாக மாறிவிடுகிறது" என்று சொல்கிறர். இதனல்தான் ரங்கபூமியிலும் ரணபூமியிலும் சண்டை ஏற்படுகிறது. இதன் பயன் என்ன? ஷேக்ஸ்பியரின் 'ஹாம்லெட்' என்னும் நாடகத்தில் என்ன நடக்கிறது? ஹாம்லெட்டும் லெயர்டிஸூம் சண்டை போடுகிறர்கள். லெயர்டிஸ் ஹாம்லெட்டைக் கொன்றுவிட வேண்டும் என்று, விஷம் தோய்ந்த கத்தியோடு சண்டை போடுகிறன். ஹாம்லெட்டைக் குத்தியும் விடுகிறன். ஆனல், மேலும் சண்டை போடும்போது, இருவரும் கத்தியை மாற்றிக்கொண்டு விடுகிறர்கள். இருவருமே மடிகிறர்கள்! இருவருக்குமே அழிவுதான் மிச்சம். **புட்டப்பா** என்னும் ஒரு கன்னடக் கவி சொல்வதுபோல், "ஒவ்வொரு யுத்தமும் ஒரு ஸ்மசான குருக்ஷேத்திரம்: ஒருபுறம் கௌரவரின் சாம்பல் குவியல்; மறுபுறம் பாண்டவரின் சாம்பல் குவியல். இரு குவியலின்மேலும் இரு பாதங்களையும் வைத்துச் சிவதாண்டவம்". இதிலிருந்து என்ன தெரிகிறது? யுத்தம் என்பதுபற்றி இந்த முடிவுதான் ஏற்படுகிறது; மனித சமூகம் தனது பாடத்தைச் சரியாய்க் கற்றுக் கொள்ளாததனல் ஏற்படும் ஒரு ரண வைத்தியம்தான் யுத்தம்; சிறு பிள்ளைகள் பள்ளிக்கூடம் போவதுபோல் ஒவ்

வொரு காலத்திலும் யுத்தம் நடந்து கொண்டே யிருக்கவேண்டிய அவசிய மில்லை.

உலக வல்லரசுகள் உலகத்தைப் பங்கிட்டுக் கொண்டது மல்லாமல், ஆகாயத்தையும் பங்கிட்டுக் கொண்டு விட்டன. சூரியன் ஒருவன் கொடியில்; சந்திரன் மற்றொருவன் கொடியில்; நட்சத்திரங்கள் இன்னொருவன் கொடியில். மற்றவருக்கு இருப்பது என்ன? பொதுவாகப் பார்க்கும்போது, இதைமட்டும் நாம் சொல்லலாம்: அதர்மம் என்பது சமூகத்தில் தோன்றும் ஒரு விஷம்; யுத்தம் என்பது அதிலே தோன்றும் மற்றொரு விஷம். 'விஷத்துக்கு விஷமே மருந்து.' ஆகவே, சாது சுந்தர் சிங் என்பவர் தமது புத்தகத்தில் "ஏசு நாதர் அன்பைப் போதித்தார்; கிருஷ்ணன் போதித்தது யுத்தத்தை. அன்பு, யுத்தத்தைவிட மேலானது. அதனால், ஏசு நாதர் கிருஷ்ணனைவிட மேலானவர்" என்று சொல்வதை நாம் ஒப்புக்கொள்ளமுடியாது. இந்தப் போதனைகள் யாருக்கு என்று கவனிக்க வேண்டும்.

சண்டையிலிருந்து ஓடப் பார்ப்பவனுக்கு, 'உன் உரிமைகளுக்காகச் சண்டை போடு' என்று போதிப்பதே தருமம். உலகமெல்லாம் ஜயித்த வல்லரசுகளுக்கு, 'உலகமெல்லாம் ஜயித்தவன் தன் ஆன்மாவை இழந்துவிட்டால் என்ன பயன்?' என்று ஏசு சொன்னார். ரஸ்கின் என்னும் ஆங்கில அறிஞன் 'வீரன் என்பவன் பிறரைக் கொல்பவன் அல்ல. தன் தேசத்துக்காக இறப்பவன்' என்று சொல்வதை நாம் ஒப்புக்கொள்ளலாம். அதாவது, தன் தேசமும், தர்மமும் ஒன்றாய் இருக்கும்வரை, அதை ஒப்புக்கொள்ளலாம். நன்மைக்கும் தீமைக்கும் பொதுவாகச் சில சக்திகள் உண்டு. இவைகளைக் கொண்டு நன்மையை வளர்ப்பதேதர்மயுத்தமாகும். அதனால்தான், விவேகானந்தரும் 'தீமை செய்பவரை வெறுக்காதே; தீமையை வெறு' என்றார்.

ஒரு சாம்ராஜ்யம் விசுவராஜ்யம் ஆக வேண்டுமானால், யஜுர் வேதத்தில் சொல்லியிருப்பதுபோல், தீமையை ஒழிக்க வேண்டுமே யொழிய, பிறருடைய அரசாங்கத்தை ஒழிக்கக் கூடாது. வளர்ச்சி இருக்கும் இடத்திலெல்லாம் அழிவு என்பதும் உண்டு. பேகன் சொன்னதுபோல், ஓர் அரசாங்கத்தில் முதலில் வீரத்தனமும், நடுவில் கல்வியும், கடைசியில் வியாபாரமும் வளர்கின்றன. ஆனால், ஒவ்வொன்றிலும் சில பிசகுகள் ஏற்படலாம். வீரத்தனத்தை முரட்டுத்தனமாகவும், கல்வியைப் பிறர் பலவீனங்களை அறிந்து அவைகளைப் பயன்படுத்திக்கொள்ள உதவும் சாதனமாகவும், வியாபாரத்தை 'வாங்குவது பாதி விலைக்கு; விற்பது இரட்டை விலைக்கு' என்ற கொள்கையுடன் தப்புத் தராசு பிடிக்கும் வித்தையாகவும் ஒரு தேசம் பிரயோகிக்குமானால், அப்போதே அதன் க்ஷீணதசை வந்துவிட்டதென்று சொல்லலாம். பொதுவாக, பழைய காலத்து யுத்தங்கள் அரசர்களால் நிகழ்த்தப்பட்டன; அவர்களுடைய தற்புகழ்ச்சிக்காக நிகழ்த்தப்பட்டன. இந்தக் காலத்தில் அரசாங்கங்கள் குடியரசுகளாகிவிட்டபடியால், வியாபாரத்துக்காகச் சண்டைகள் நடத்துகின்றன. இயந்திரங்களின் மூலம் தொழில் பண்டங்களைச் சீக்கிரமாய்ச் செய்துவிடலாம். ஆனால், அதற்கு மூலமான இயற்கைப் பொருள்கள் வேண்டும். அவை நிதானமாய்த்தான் உற்பத்தியாகும். அவைகளைச் சேகரிப்பதற்கு, அரசாங்கம் இருந்தால்தான் சேகரிக்கமுடியும்; விற்கவும் முடியும். அதனால்தான் உலகமே ஒரு குருக்ஷேத்திரம் ஆகியிருக்கிறது.

✲

**விக்ரக ஆராதனை:** விளையாட்டுப் பழமும் விளையாட்டு யானையும் வாஸ்தவமான பழத்தையும் யானையையும் நினைப்பூட்டுவதைப் போல, ஆராதிக்கப்படும் விக்ரகங்கள், நித்தியனும் அரூபியுமான ஈசுவரனை நினைப்பூட்டுகின்றன.

—ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர்.

# தமிழ் இலக்கியத்தின் தொன்மை

ராவ்சாஹெப் எஸ். வையாபுரிப்பிள்ளை

**ப**ல தேசங்களிலும் முதன் முதல் தோன்றிய இலக்கியம் சமுதாயக் கவிதையாயிருந்தது. இதனை நாகரிக ஏணியில் ஏறி மேற்செல்லாது தாழ்ந்த படியிலிருக்கும் மக்கட் பிரிவினரிடையே காணும் கவிதையின் தன்மையினால் நாம் அறிகிறோம். நாகரிகம் சிறந்து விளங்கிய பின்பும் சமுதாயக் கவிதையின் மரபிலே, தோன்றிய கவிதைகளுள்ளன. தோழியர்கள் கூடி நெற்குற்றுதல் பூக்கொய்தல் முதலிய விளையாட்டுக்களில் ஒன்று சேர்ந்து களித்தும், வினை விடுத்தும், பாடுகிற பாட்டுக்கள் இவ்வினத்தைச் சேர்ந்தனவே. இவற்றிற்கு உதாரணங்கள் கலித்தொகை சிலப்பதிகாரம் முதலிய நூல்களிலே காணப்படுகின்றன.

பாடுகப் வா வாழி தோழி வயக்களிற்றுக்
கோடுலக்கை யாகநற் சேம்பின் இலைசுளகா
ஆடுகழை நெல்லை அறையுரலுட் பெய்திருவாம்
பாடுகம் வா வாழி தோழி—

* * *

இலங்கும் அருவித்து இலங்கும் அருவித்தே
வானின் இலங்கும் அருவித்தே தானுற்ற
சூள்பேணான் பொய்த்தான் மலை

* * *

இளமழை ஆடும் இளமழை ஆடும்
இளமழை வைகலும் ஆடும் என் முன்கை
வளை நெகிழ வாராதோன் குன்று

* * *

மணிபோலத் தோன்றும் மணிபோலத் தோன்றும்
மண்ணா மணிபோலத் தோன்றும் என் மேனியைத்
துன்னான் துறந்தான் மலை. (கலித். 41)

இக்கலிப்பாட்டு நாகரிக முதிர்வில் தோன்றியதென்பது செஞ்சொற்களால் இழைத்து ஒப்பனைசெய்த அதன் செயற்கையழகே நமக்குப் புலப்படுத்துகிறது.

ஆதியிலக்கியத்தின் தன்மையை இதுபோன்ற செய்யுட்கள் பெற்றுள்ளமையால், இவைகளே தமிழின் ஆதியிலக்கியங்களெனக் கொண்டு, இவற்றின் காலத்துத்தான் தமிழிலக்கியம் முதன் முதல் தோன்றியது எனக்கொள்ளுதல் கூடாது. தமிழிலக்கியத்தின் தொன்மை வேறு சான்றுகளால் துணியப்படுதல் வேண்டும்.

முதலாவது கர்ணபரம்பரை வரலாறுகளை நோக்குவோம். இவைகள் இறையனார் அகப்பொருளுரையிலே (பவா. பதிப்பு 5-7) விரிவாகக் கூறப்பட்டுள்ளன. தலைச்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் என மூன்று சங்கங்கள் பாண்டியர்களால் நிறுவப்பட்டன. இவற்றுள் தலைச்சங்கத்தில்* திரிபுரமெரித்த

* சுமார் 50 ஆண்டுகட்கு முன்னர் 'செங்கோன்றரைச் செலவு' என்ற சிறு நூலொன்று உரையுடன் மதுரையில் அச்சிடப்பட்டு வெளிவந்தது. இது 'தாப் புலிப்பா' என்ற யாப்பினால் (!) இயன்றதாம். தலைச்சங்கத்துத் தோன்றிய நூலாம்! இக்கட்டுக்கதையின் பொய்மை எளிதில் அறியத்தக்கதே.

விரிசடைக்கடவுள், குன்றமெறிந்த முருகவேள், நிதியின் கிழவன் (குபேரன்) என்ற தெய்வங்களும் தமிழாராய்ந்தன! இத்தெய்வங்களுள்பட 4449 பேர்கள் இச்சங்கத்தில் இருந்தனராம்! இச்சங்கம் இருந்தகாலம் 4440 ஆண்டுகளாம்! இருந்த இடமாகிய மதுரை கடல்வாய்ப் பட்டு அழிந்துவிட்டதாம். இடைச் சங்கத்தில் தெய்வங்களைக் காணவில்லை; அவர்களுக்குப் பதிலாக அகத்தியனார் என்ற ரிஷி இருந்தனர். இங்ஙனம் மகத்துவத்திற் சிறிதளவு குறைப் பட்டதுபோலவே, இச்சங்கத்திலிருந்தவர்களது எண்ணுங் குறைந்துவிட்டது. 3700 பேர்கள் தாம் இதில் தமிழாராய்ந்தனர். சங்கம் இருந்தகாலமும் 3700 ஆண்டுகள் தாம். இச்சங்கமிருந்த கபாடபுரமும் கடல் கொள்ளப்பட்டு அழி வெய்தியது. கடைச்சங்கத்தில் தெய்வங்களுமில்லை, ரிஷிகளுமில்லை. எனவே, இக்கடைச்சங்கம்தான் முற்றும் மக்களால் இயன்றது. இதற்கேற்ப, பிற சிறப்புகளும் சிறிது சிறிது குறைவுபட்டுள்ளன. இதில் 449 புலவர்கள் பாடினார்கள்; இக்சங்கம் தமிழாராய்ந்தகாலம் 1850 ஆண்டுகள்! இம்முச்சங்கங் களுள் தலைச்சங்க வரலாற்றினை மட்டும் அடியார்க்கு நல்லார் வேனிற்காதை (1-2) உரையில் கொடுத்துள்ளார்.

இவ்வரலாறுகளை வாசித்து நோக்கிய அளவில், தலையிடைச் சங்கங்கள் முழுக் கற்பனையென்பது புலனாகும். எனவே, இவற்றை ஆராய்ந்து உண்மை காண முயல்வது பயனற்ற செய்கை. தமிழின் தொன்மையையும் அதன் தெய்வத் தன்மையையும் வற்புறுத்துதற்கு எழுதிவைத்த கற்பிதக் கதையென்றே இவை கொள்ளத்தக்கன. கடைச்சங்கத்தைப்பற்றிய வரலாறு அங்ஙனமன்று. இதிற் கூறிய புலவர்களிற் பெரும்பாலாரது செய்யுட்கள் இப்போதும் உள்ளன. இதில் ஆராய்ந்தனவாகக் கூறும் நூல்களிற் பெரும் பாலனவும் இப்போதும் அகப்படுகின்றன. ஆனால் இவ்வரலாற்றினும் கற்பனைக் கலப்புள்ளதென்று கருத இடமுண்டு. ஐங்குறுநூறு தொகுப் பித்தவன் யானைக்கட்சேய்மாந்தரஞ் சேரலிரும்பொறை. இவனும் இவனது சமகாலத்தவனான தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனும் பகைவரென்பது மூன்று புறப்பாட்டுக்களாலும் (17, 20, 22) அவற்றின் பிற்குறிப்புக்களாலும் விளங்குகிறது. இந்நிலையில் ஐங்குறுநூறு மதுரையிற் கூடியதாகக் கூறும் கடைச்சங்கத்தில் ஆராயப்பட்டிராது என்பது திண்ணம். இவ்வாறே சேர அரசர்களைப்பற்றியே முழுதும் அமைந்த பதிற்றுப்பத்தும் மதுரையில் ஆராயப்பட்டதெனல் பொருந்துவதன்றாம். மேலும் எட்டுத் தொகையைச் சார்ந்த நூல்களுள், தொகுப்பு வரலாறுகள் கிடைப்பன வற்றுள் ஒன்றிலேனும் மதுரையிற் கடைச்சங்கம் அதனை ஆராய்ந்ததாகக் காணப்படாமை ஊன்றிக் கவனிக்கத்தக்கது. தொகை நூற் புலவர்களுள்ளும் ஒருவரேனும் சங்கமொன்று இருந்ததாகப்போலும் கூறினாரல்லர். புறநானூற்று முகவுரையில் 'இந்நூற்செய்யுட்களாற் பாடப்பட்டவர்கள் ஒரு காலத்தாரல்லர்... ஓரிடத்தாருமல்லர், பாடியவர்களும் இவ்வாறே' என டாக்டர் சாமிநாதையரவர்கள் எழுதியிருக்கிறார்கள். இது மிகவும் உண்மை யென்பது தொகைநூற் பயிற்சியுடையார் யாவரும் அறிவர். ஆனால், இச் சங்க வரலாற்றில் சில உண்மைகள் உள்ளன. இதன்கண் 'நானூற்று நாற் பத்தொன்பதின்மர் பாடினார் என்ப'. இந்த எண், தொகை நூற் செய்யுட் களைப்பாடிய புலவர்களின் எண்ணோடு பெரும்பாலும் ஒத்துள்ளது. கங்குல் வெள்ளத்தார், கல்பொரு சிறுநுரையார் முதலிய தொடராற் பெற்ற சுமார் 30 பெயர்களை நீக்குதல் வேண்டும். ஆசிரியர் பெயர் காணாத செய்யுட்களில், சிலவற்றை இயற்றியவர் பெயர்கள் முற்காலத்து விளங்கி யிருக்கலாம்; இதனால் ஒரு சில பெயர்களைக் கூட்டுதல் வேண்டும். இங்ஙனம் கணக்கிட்டு நோக்கினால், இறையனாரகப் பொருளுரையிற் கூறும் எண் ஒத்து வருதல் காணலாம். ஆனால் இப்புலவர்கள் வாழ்ந்தகாலம் 1850 ஆண்டுகள் என்பது முதலியன கற்பிதங்களென்றே கொள்ளத்தக்கன; இவர்களது காலம் சுமார் ஒரு நூற்றாண்டின் எல்லையேயாமென்பது எளிதிற் காட்டுதல் கூடும். இப்

புலவர்களின் எண்ணேயன்றி, வேறு சில உண்மைகளையும் அடிப்படையாகக் கொண்டு இவ்வரலாறு புனையப்பட்டுள்ளது. பாண்டியர்கள் தங்கள் தமிழ் மொழியின் மீது பேரன்பு கொண்டிருந்தனர். இதுபற்றியே 'தமிழ்நர் பெருமான்' (முத்தொள்ளாயிரம்) 'தமிழ் நாடன்' (திவாகரம்) முதலிய சிறப்புப் பெயர்கள் இவர்களுக்கு வழங்கப்பட்டன. இவர்கள் தலைநகராகிய மதுரையும் தமிழ் நிலைத்திருக்கும் இடமாகக் கருதப்பட்டது.

மண்மாறு கொண்ட மாலை வெண்குடைக்
கண்ணார் கண்ணிக் கடுந்தேர்ச் செழியன்
தமிழ்நிலை பெற்ற தாங்கரு மரபின்
மகிழ்நனை மறுகின் மதுரை

என்பது சிறுபாணாற்றுப்படை (64-67).

வரைய சாந்தமும் திரைய முத்தமும்
இமிழ் குரல் முரச மூன்றுடனாளும்
தமிழ்கெழு கூடற் றண்கோல் வேந்தே

என்பது புறநானூறு (58). பௌத்த சங்கமும் ஜைன சங்கமும் அங்கங்கே தோன்றித் தத்தம் சமயநூல்களை ஆராய்ந்து வருவது பெருவழக்கமாயிருந்தது. இச்சங்கவுணர்ச்சியும் முற்கூறிய உண்மைகளோடு கூடித் தமிழ்ச் சங்கமொன்று மதுரையில் நிறுவப்பட்டது என்ற பரம்பரை வரலாற்றுக்குக் காரணமாய் முடிந்தது. எட்டுத்தொகை நூல்களும் தொகுக்கப்பட்ட காலத்திற்குப்பின், அதாவது கி. பி. 4-ம் நூற்றாண்டிற்குப்பின், இவ்வரலாறு தோன்றியிருக்கவேண்டும். இது நாளடைவிற் பெருகி வளர்ந்தது. கி. பி. 10-ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் சின்னமனூர்ச் சாசனத்தில்

பொருவருஞ்சீர் அகத்தியனைப் புரோஹிதனாகப் பெற்றது

*　　*　　*

செம்மணிப்பூணொடுதோன்றித் தென்றமிழின் கரைகண்டும்

*　　*　　*

வளமதுரை நகர்கண்டும் மற்றதற்கு மதிள்வகுத்தும்
உளமிக்க மதியதனால் ஒண்டமிழும் வடமொழியும்
பழுதறத் தானாராய்ந்து பண்டிதரின் மேந்தோன்றியும்

*　　*　　*

தலையாலங் கானத்திற் றன்னொக்கு மிருவேந்தரைக்
கொலைவாளிற் றலைதுமித்துக் குறைத்தலையின் கூத்தொழித்தும்
மஹாபாரதந் தமிழ்ப் படுத்தும் மதுராபுரிச் சங்கம் வைத்தும்

(S. I. I. III பக் 454)

என்று காணப்படுகிறது.

பாண்டியர்களது வமிச வரலாறு கூறும் இவ்விடத்தே, தலையிடைச் சங்கங்கள் அவர்கள் நிறுவிய கதையாவது கடல்கொண்ட தென் மதுரையாவது கபாடபுரமாவது குறிக்கப்படவில்லை. இது நன்கு மனங்கொள்ளுதற்குரியது. ஒருவேளை, பாண்டியனொருவனால் நிறுவப்பட்ட ஓரவைக்களத்தின் ஞாபகத்தை அடிப்படையாகக்கொண்டு முச்சங்க வரலாறுகளனைத்தும் தோன்றியிருத்தலும் கூடும். 'நிலந்தரு திருவிற் பாண்டியனவையத்து'த் தொல்காப்பியம் அரங்கேற்றப்பட்டதாக அதன் பாயிரம் கூறும். இதுவே அடிப்படையாக அமைந்திருக்கலாம். எங்ஙனமாயினும் இச்சங்க வரலாறுகள் தமிழிலக்கியம் மிக்க தொன்மை வாய்ந்தது என நம் முன்னோர் கருதிவந்தனர் என்பதற்குத் தக்க சான்றுகளாம்.

இறையனாரகப் பொருளுரை இப்போதுள்ள வடிவில் கி. பி. 10-ம் நூற்றாண்டினதாதல் வேண்டுமெனக் கூறுகின்றனர். பழமொழி முதலிய நூற்

செய்யுட்களை உரை நடையில் (பவா. பக் 60) அமைத்து எடுத்தாளுதலினல் இக்காலவரையறை பொருந்துவதேயாம். தமிழிலக்கியத்தின் தொன்மையை வலியுறுத்துதற்கு அகப்பொருளுரை வரலாற்றுக்கு முற்பட்ட சான்றுகள் உளவோ என நோக்குவோம்.

புறநானூற்றின் 2-ம் பாட்டு முரஞ்சியூர் முடிநாகராயர் என்ற ஒரு புலவரால் பெருஞ்சோற்று உதியன் சேரலாதன் என்ற ஒரு சேர-அரசன் மீது பாடப்பெற்றது. இச்சேரன் மகாபாரதப் போர் நிகழ்ந்து துரியோதனதியர் பட்டபொழுது பெருஞ்சோறளித்தான் என இப்பாட்டுக் கூறுகிறது:

*அலங்குளைப் புரவி ஐவரொடு சினை இ*
*நிலந்தலைக் கொண்ட பொலம்பூந் தும்பை*
*ஈரைம்பதின்மரும் பொருதுகளத் தொழியப்*
*பெருஞ் சோற்று மிகுபதம் வரையாது கொடுத்தோய்*

என்ற அடிகளால் இது விளங்கும். இதுபற்றி மாமூலனர் (அகம் 233) சில வரலாறுகளைப் புதியனவாகச் சேர்த்துள்ளாரெனத் தோன்றுகிறது. அவர் கூறுவது வருமாறு:

*'மறப்படைக் குதிரை மாறு மைந்தின்*
*துறக்க மெய்திய தொய்யா நல்லிசை*
*முதியர்ப் பேணிய உதியஞ் சேரல்*
*பெருஞ்சோறு கொடுத்த ஞான்றை இரும்பல்*
*கூளிச் சுற்றங் குழீஇயிருந் தாங்குக்*
*குறியவும் நெடியவுங் குன்று தலைமணந்த*
*சுரம்'*

இங்கே முதியர் என்றது பாரதப்போரில் இருதிறத்தாரையுங் குறிக்கலாம். இவர்களுக்கு உதியன் பெருஞ்சோறு கொடுத்தபொழுது சிறியவும் பெரியவுமாகிய பேயினங்களும் (உண்ணுதற்கு?) அங்கங்கே கூட்டமிட்டிருந்தனவாம். காட்டுவழியிலே கிடந்த சிறியவும் பெரியவுமாய்க் கிடந்த குன்றுகள் இப்பேய்களைப் போன்றிருந்தனவாம்.

சிலப்பதிகாரத்திலும் (29, ஊசல்வரி) பெருஞ்சோறளித்த வரலாறு வந்துள்ளது.

*ஓரைவர் ஈரைம்பதின்மர் உடன்றெழுந்த*
*போரிற் பெருஞ்சோறு போற்றது தானளித்த*
*சேரன் பொறையன் மலையன் திறம்பாடிக்*
*கார்செய் குழலாட ஆடாமோ ஊசல்*
*கடம்பெறிந்த வாபாடி ஆடாமோ ஊசல்*

என வந்துள்ளது. பாரதப்போரில் படைகளுக்கு உணவளித்த சேரனை விளித்துப் புறநானூற்றுச் செய்யுள் பாடப்பட்டிருத்தலினல், அச்செய்யுளை இயற்றிய புலவரும் அதற்குக் காரணமாகிய சேரனும் பாரதகாலத்தவர் எனக் கொள்வர். இதற்கேற்ப, முரஞ்சியூர் முடி நாகராயர் தலைச் சங்கப்புலவர்களுள் ஒருவராகவும் அகப் பொருளுரையிற் குறிக்கப்பட்டுள்ளனர். எனவே புறநானூற்றில் வந்துள்ள இவரது செய்யுள் மகாபாரத காலத்ததாகும்; தமிழிலக்கியத்தின் தொன்மை இதனல் நன்கு தெளியப்படுமென்பர்.

உதியஞ்சேரலது காலத்தை ஒருவாறுக அறுதியிடக்கூடும். இவன் பதிற்றுப்பத்தில் 5-வது பத்திற்கு உரியவனை செங்குட்டுவனுக்குப் பாட்டனதல் வேண்டும். செங்குட்டுவனும் இலங்கையரசனை முதலாங் கஜபாகுவும் ஓரே காலத்தினர். எனவே செங்குட்டுவன் காலம் கி. பி. 170-225 என்று கொள்ளலாம். உதியன் சேரலின் காலம் சுமார் கி. பி. 100 என்று கொள்ளுதல் வேண்டும். இக்காலத்திற்கும் பாரதயுத்தம் நிகழ்ந்ததாகக் கணிக்கப்படுங் காலத்திற்கும் எத்தனையோ நூற்றுண்டுகள் இடைப்பட்டனவாதல்

வேண்டும். ஆதலால் பாரதப் படைகளுக்கு இவன் சோறளித்திருத்தல் இயலாது. மேலும் தென்னாட்டிலிருந்த அரசனொருவன் பாரதயுத்தம் நிகழ்ந்த குருக்ஷேத்திரத்திற்கு உணவுப் பொருள்களை யெல்லாம் எடுத்துச் சென்று அங்கே போரக் கூடியிருந்த படைகளுக்கெல்லாம் உணவளித்தான் எனல் சரித்திர முறையில் ஒப்புக்கொள்ளக்கூடிய தன்று. அன்றியும் சேரர்கள் இவ்வாறு உணவளித்தார்கள் என்ற செய்தி வியாச பாரதத்தில் கூறப்படவில்லை. அங்குச் சேரர்களைக் குறித்துக் காணப்படுவதெல்லாம், கர்ணனது திக்கு விஜயத்தில் இவனால் தோல்வியுற்றுத் துரியோதனனுக்குத் திறையிட்டார்களென்பதும் பின்பு யுதிஷ்டிரரது படையோடு சேர்ந்து பொருதார்களென்பதுமேயாம். எல்லாவற்றிற்கு மேலாக, சேரனது இவ்வள்ளன்மை, பாரத யுத்தம் வியாச பாரதத்திற் கூறியுள்ளபடியும் பல வேறிடங்களில் பலவாறாக வழங்கும் கதைக் கூறுகளின்படியும் ஒவ்வோரம்சத்திலும் உண்மைச் சரித்திர நிகழ்ச்சியேயாம் என்ற அடிப்படையின்மேல் அமைந்துள்ளது. இந்த இவ்வடிப்படைக் கொள்கை நமது சமயத்தோடும் நம்பிக்கையோடும் பின்னிக்கிடக்கின்றது. காலஞ் செல்லச் செல்ல வளர்ந்து இடந்தோறும் கதைக்கூறுகள் புதிய புதியவாகப் புகுந்து பெருகி நமது கவித்வவுணர்ச்சிக்கும் சமயவுணர்ச்சிக்கும் லட்சிய வுணர்ச்சிக்கும் ஆதாரமாயுள்ளது மஹாபாரதம் என்னும் இப் பேரிதிகாசம். இந்த அளவில் நாம் திருப்தியடையவேண்டும்; இதனினும் அதிமாகச் சரித்திர நூல் ஒன்றுங்கூறத் துணியமாட்டாது. இக்காரணங்களால் சேரன் பாரதயுத்தத்திற் சோறளித்தது உண்மை நிகழ்ச்சியெனக் கொள்ளத்தக்கதன்று. முடிநாகராயர் தம் காலத்து நிகழ்ந்த சரித்திர நிகழ்ச்சிபோன்று இங்ஙனம் கூறுவான் ஏன்? என்ற கேள்வி எழலாம். வீரத்தாலும் கொடை முதலிய பிறதகுதிகளாலும் பெயர் சிறந்து விளங்கிய தேசீய வீரர்களோடு தொடர்புடையராக அரசர்களைக் கூறுதல் உலகமுழுதும் வழங்கிப ஒரு மரபாகும்.† ஐரோப்பிய அரசர்கள் துரோஜன் யுத்தத்தில் போர்புரிந்தவராகக் கருதும் வீரர்களோடு தொடர்புடையராகத் தம்மைக் கூறிக்கொண்டனர். இதுபோன்றதொரு மரபினை மனத்துட்கொண்டே முடிநாகராயர் தமது அரசனைப் பாடினாரென்று நாம் கொள்ளுதல் வேண்டும். இது கேவலம் ஒருமரபே யன்றி வேறல்ல என்பது வேறோர் சோழ - அரசனும் பாரதவீரர்களுக்குச் சோறளித்தனன் என்று வருங் கலிங்கத்துப் பரணிச்செய்யுளால் அறியலாகும். அது பின் வருமாறு :

> **தூங்கு மூன்றெயில் எறிந்தஅவ னுந்திரள்மணிச்**
> **சுடர் விமானமது வான்மிசை யுயர்த்த அவனும்**
> **தாங்கு பாரத முடிப்பளவு நின்று தருமன்**
> **தன்கடற்படை தனக்குணவு தந்த அவனும்**
> **(கோபாலையர் பதிப்பு, தாழிசை 181)**

இச் செய்யுளில் 'தனக்குணவுதந்த' என்பதற்கு 'தனக்குதவிசெய்த' என்ற பாடபேதமும் உண்டு. சோழனொருவன் உணவுதந்த செய்தி சிலப்பதிகாரம் கட்டுரைகாதையில் 'பெருஞ்சோறு பயந்த திருந்துவேற்றடக்கை' (55) என்ற அடியினால் விளங்கும். சோறு பயந்தவன் சோழனுவான் என்று அரும்பதவுரை கூறுவதாக இக்காப்பியத்தின் முதற்பதிப்பில் உள்ளது. உதியஞ் சேரலைக் குறித்து இங்ஙனமொரு வரலாறு வழங்குதற்குக் காரண மென்னென்று வினவலாம். பாடிச்சென்ற பரிசிலரைப் பலவகைப்பட்ட ஈகையால் பெரிதும் மகிழ்வித்தான் என்று ஓர் அகப்பாட்டுக் கூறுகிறது :

> **நாடுகண் அகற்றிய உதியஞ் சேரற்**
> **பாடிச் சென்ற பரிசிலர் போல**
> **உவ வினி வாழி (அகம் 65)**

† Indian kings were just as fond of tracing their ancestry back to those who fought in the Bharata Battle as European princes were anxious to prove their descent from the heroes of the Trojan war. Cf. Rapson, Cambridge History, I p. 307. I consider it as entirely contrary to historical criticism to draw chronological conclusions ..from this fiction (Winternitz, History of Indian literature, Vol. 1, p. 523, fn. 2.)

பிறிதோர் அகப்பாட்டு 'இவன் கொடையைக் கடமையாக மேற்கொண்டு தன்பாற் சென்றோர்க்கெல்லாம் யாதொரு தடையுமின்றி உணவளித்து வந்தமையால் இவனது அட்டில் எப்பொழுதும் ஒலிமிக்கிருந்தது' எனப்புகழ்கிறது. அடிகள் வருமாறு :

நல்லான் பரப்பிற் குழுமூ ராங்கண்
கொடைக் கட னேன்ற கோடா நெஞ்சின்
உதியன் அட்டில்போல ஒலியெழுந்து (அகம் 168)

'உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத்தோரே' எனக் கருதி, அதனினும் மேம்பட்ட கொடையில்லை யென்றுணர்ந்து அன்னதானஞ் செய்துவந்த இவ்வரசன் வரலாற்றில் பாரதப்படைகளுக்குப் பெருஞ் சோறளித்தவன் என்ற புகழும் சேர்தல் இயற்கைதானே. ஆகவே இப்பெருஞ்சோற்று வரலாறு ஒரு புகழ்ச்சி மரபென்றே நாம் துணிதல்வேண்டும். இதுபற்றித் தமிழிலக்கியத்தின் தொன்மையைத் திட்டமாய் அளத்தல் கூடாதாம். ஆனல் நம் முன்னோர்கள் அத்தொன்மையை மிகவும் பாராட்டி வந்தார்களென்பது புலனாகும்.

இத்தொன்மையை நம்மவர்கள் மிகுதியும் போற்றி வந்தன ரென்பது தொகை நூல்களில் காணும் பிறிதொரு சான்றினாலும் அறியலாகும். புறநானூற்றிலே பாண்டியன் பல்யாக சாலை முதுகுடுமிப் பெருவழுதியை வாழ்த்து மிடத்து

முந்நீர் விழவி னெடியோன்
நன்னீர்ப் பஃறுளி மணலினும் பலவே

என வருகின்றது. எனவே இவ்வழுதியின் காலத்து பஃறுளியாறு இருந்ததெனல் பெறப்படுகின்றது. இது பின்னல் கடல் கொள்ளப்பட்ட தென்பது

மலிகட லூர்ந்து தன் மண்கடல் வவ்வலின்
மெலிவின்றி மேற்சென்று மேவார்நா டிடம் படப்
புலியொடு வில் நீக்கிப் புகழ் பொறித்த கிளர் கெண்டை
வலியினான் வணக்கிய வாடாச் சீர்த் தென்னவன்

என்ற கலித்தொகை (104) யாலும்

அடியிற் றன்னள வரசர்க் குணர்த்திப்
பஃறுளியாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
குமரிக்காடுங் கொடுங்கடல் கொள்ள
வடதிசைக் கங்கையும் இமயமுங் கொண்டு
தென்றிசை யாண்ட தென்னவன் வாழி

என்ற சிலப்பதிகாரத்தாலும் (11, 17-21) அறியலாகும். ஆகவே இக் கடல்கோள் நிகழ்ந்த காலத்திற்கு முன்பு முதுகுடுமிப்பெருவழுதியும் அவனைப் பாடிய நெட்டிமையாரும் இருந்தனராதல் வேண்டும் என்பர்.

இதனைப் பொதுப்பட ஒப்புக் கொள்ளுதலில் தடையொன்று மில்லை. அருகிலுள்ள நிலத்தைக் கடல் கவர்ந்து விடுதல் ஒரு நாட்டின் சரித்திரத்தில் பலமுறை நிகழக்கூடியதே. மகாபலிபுரத்தில் ஒரு பகுதி கடல் கொள்ளப்பட்டது சரித்திரம் ஒப்பிய செய்தியே. இங்ஙனமே மைலாப்பூரில் ஒரு சிறு பகுதி கடல்வாய்ப்பட்டதும் பலரும் அறிந்ததே. இந்நிகழ்ச்சிகளைப் போன்று நேர்ந்த ஒரு கடல் கோளைக் கலித்தொகையும் சிலப்பதிகாரமும் கருதியிருக்கலாம். இங்ஙனம் அழிந்த நிலப்பகுதி சிற்றளவினதே யென்பது 'இந் நிலக்குறைக்குச் சோழ நாட்டெல்லையிலே முத்தூர்க் கூற்றமும் சேரமானாட்டுச் குண்டூர்க் கூற்றமும் என்னும் இவற்றை இழந்த நாட்டிற்காக ஆண்ட தென்னவன் வாழ்வானகை' என்று வரும் அடியார்க்கு நல்லார் உரைப்பகுதியால் உணரலாம். இவ்வளவில் நின்று, ஒரு பழங்கால நிகழ்ச்சியைக் குறிப்பதாகக் கொண்டு, தமிழிலக்கியம் மிகப் பழமை வாய்ந்தது என்று துணிதல் பொருத்தமே.

(தொடரும்)

# புத்தக உலகம்

**புராதன நாகரிகம்:** ஆசிரியர்: அ. ராமய்யர் வெளியிட்டோர்: ஸ்டார் பிரசுரம், பாலக்கரை, திருச்சி. விலை: ரூ. 1-4-0.

வட ஐரோப்பியர், கிரேக்கர், ரொமானியர், நைல்நதி, மத்திய தரைக் கடற்பிரதேச மக்கள், மங்கோலியர், யூதர், அராபியர், இந்தியர், சீனர் ஆகிய பல்வேறு புராதன மக்களின் நாகரிகங்களையும் தனித்தனிச் சிறு கட்டுரைகளில் ஆசிரியர் ஆராய்கிறார். சீனா, இந்தியா இந்த இரண்டும் சம்பந்தப்பட்ட மட்டில், இன்றளவு முள்ள நாகரிக வரலாற்றை, ஓரளவு சுருக்கமாய்க் குறிப்பிட்டிருக்கிறார். உலக நாகரிகங்களைப் பற்றி நாம் அறிந்து கொள்ள உதவும் அரிய நூல் இது.

**காந்தி-ஜின்னா பேச்சு:** ராஜாஜியின் முகவுரை கொண்டது. தமிழ்ப் படுத்தியவர் எம். எல். சபரிராஜன். விற்பனை உரிமையாளர்: சக்தி காரியாலயம், ராயப்பேட்டை, சென்னை. விலை அணா 8.

ராஜாஜி திட்டத்தின் மேல் காந்தி-ஜின்னா பேச்சு நடந்தது. பேச்சு முறிந்தாலும், இரு தரப்பு நிலைமையும் தெளிவுபட்டது. அந்தப் பேச்சு வார்த்தைகளின் கடிதப் போக்குவரத்துக்கள் அனைத்தையும் காந்தி, ஜின்னா, ராஜாஜி மூவரின் முக்கியமான அறிக்கைகளையும், சம்பந்தப்பட்ட இதர கடிதப் போக்குவரத்துகளையும், தெள்ளத் தெளிந்த தமிழில் மொழிபெயர்த்திருக்கிறார் சபரிராஜன். பாரபட்சமற்றுச் சீர்தூக்கி, தற்போதைய நிலைமையை ராஜாஜியின் முன்னுரை, விளக்குகிறது. பாகிஸ்தான் பிரதேசங்களைக் குறிக்கும் இந்தியா படமும், புள்ளி விவரங்களும் அடங்கியிருப்பது மிக்க உபயோகமாகும்.

**குமரி மலர்:** (விசேஷ இதழ்) பதிப்பாசிரியர்: ஏ. கே. செட்டியார், கதீட்ரல் போஸ்டு, சென்னை. விலை. ரூபாய் ஐந்து.

தமிழில் இதுவரையில் இல்லாத மிக்க உயர்ந்த முறையில் தயாரிக்கப்பட்ட ஒரு விசேஷ இதழ் இது. ராஜாஜி முதலிய பல பிரபல அறிஞர்கள் இதில் கட்டுரைகள் எழுதியிருக்கிறார்கள். நல்ல கதைகள், சொல் சித்திரங்களும் இருக்கின்றன. அபூர்வமான பல போட்டோப் படங்கள் 'ஆப்ஸெட்' முறையில் அச்சிடப்பட்டிருப்பது, தமிழில் இதுதான் முதல் தடவையாகும். கண்ணியமான அமைப்பு. கீழ்த்தரமான அம்சம் எதுவும் இல்லை. முற்றிலும் உயர்ந்த தரம். சிறந்த பிரசுரம்.

**கோதைத் தீவு:** ஆசிரியர்: வ. ரா. வெளியிட்டோர்: புத்தக நிலையம், தெப்பக்குளம், திருச்சி. விலை ரூ. 2.

இது ஒரு விசித்திரமான கற்பனை. கோதைத் தீவு என்பது, ஒரு கற்பனை ராஜ்யம். அங்கே பெண்களின் ஆட்சி நடக்கிறது. ஆண்களைப்போல் பெண்கள் அங்கே சகல நிர்வாக அதிகாரங்களையும் புரிகிறார்கள். அதிலே ஆண்களுக்கும் சம உரிமை உண்டு என்று தெளிவாக விவரிக்கப்படாவிட்டாலும், ஓரிடத்தில் அந்தக் குறிப்பு இருக்கிறது. பெண்கள் ராஜ்யம் எத்தகைய அபூர்வ உலகமாயிருக்கும் என்பதை, அருமையான நடையில், வ. ரா. சித்தரிக்கிறார். பெண்களை இழிவுபடுத்தும் பற்பல குறைகளையும், இந்தச் சித்திரம் இடித்துக் காட்டுவதோடு, பெண்ணுரிமையால் மனித வாழ்க்கை எவ்வாறு மலர்ந்து பரிமளிக்கும் என்பதையும் விளக்குகிறது. மிக்க ருசிகரமும் நூதனமுமான கற்பனை.

# கோகுல் சோப்

(மிருகக் கொழுப்பற்றது)

ஆடைகளை தூய வெண்மையாக்குவதில்
நிகரற்றது

பெரிய பார்களாகவும், சிறு கட்டிகளாகவும்
குறைந்த விலையில் கிடைக்கும்

தயாரிப்பவர்:

## டி. எஸ். ஆர். & கோ

கும்பகோணம்

ஸ்டாகிஸ்ட்:

## புஷ்பவனம் ஸ்டோர்ஸ்

திருவல்லிக்கேணி, மதராஸ்






**சகல விதமான
வலிகளையும்
10 நிமிஷங்களில்
நிறுத்த**

## வயது சென்ற காலத்திற்காக






# ரூ. 1000த்து

# ரூ. 1500.

பனிரெண்டு வருஷங்களில் போட்ட முதலில், 50 சதவிகித உயர்வு.
நேஷனல் சேவிங்ஸ் சர்ட்டிபிகேட்டுகளில் நீங்கள் பூரண பாதுகாப்
புடன ரூ 10 முதல் ரூ. 5,000 வரையில் போட்டுவைக்கலாம்.

## வருமானவரி கிடையாது.

# நேஷனல் சேவிங்ஸ் சர்ட்டிபிகேட்ஸ்

அவைகளை சர்க்காரால் நியமிக்கப் பட்ட அதிகாரம் பெற்ற ஏஜண்டுகளிடமோ, அல்லது சேவிங்ஸ் பீரோ அல்லது தபாலாபீஸ்களிலோ வாங்குங்கள்

AAA1234 TM

# சோம்பேறியாய் இருப்பதற்கு இது காலமல்ல

**வேறு அலுவல்கள் இல்லாத ஒவ்வொரு பெண்ணும் தற்சமயம் W. A. C. (I)-க்கு தேவையாய் இருக்கிறது.**

பெண்கள் ஆக்ஸிலியரிகோர் (இந்தியா) வில் வேலைசெய்ய பல ஆயிர பெண்கள் தேவையாய் இருக்கிறது. வேலை மிகவும் சுவாரச்யமுள்ளதாயும் இருக்கும்.

**வஸதியான ஹாஸ்டல்கள்:** பொது சேவையிலிருக்கும் W. A. C. (I) அங்கத்தினர்களாயுள்ள பொறுப்பு வாய்ந்த பெண்களின் மேற்பார்வையில் இருக்கும் வசதியுள்ள ஹாஸ்டல்களில் குடியிருக்கச் செய்கிறார்கள்.

**வெற்றி:** சமாதானம் திரும்ப ஏற்பட்டதும் விரோதிகளிடமிருந்து நிபந்தனையற்ற சரணடைதலை பெறுவதற்கு தங்களால் இயன்றதைச்செய்த இந்த இந்திய பெண்களுக்குத்தான் சமாதான பலன்களை அனுபவிக்க பெரும் பாத்தியதை உண்டு.

**பிற்காலத்து ஜீவனோபாயம்:** வியாபாரத்திலும் கைத்தொழிலிலும் இந்தியா அதிதீவிரமாக முன்னேறி வருகிறது. நிலமை சமாதானத்திற்கு வந்ததும் சிவில் உத்தியோகங்களுக்கு அநேக நன்குதேர்ச்சி பெற்ற ஆணும் பெண்ணும் தேவையாய் இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. W.A.C. (I)யில் பெரும் பயிற்சியும் இந்த கோரில் வேலை செய்யும் சமயம் பெரும் அனுபவமும் அனேக பெண்களுக்கு யுத்தமில்லாத காலத்தில் வெற்றிகரமான ஜீவனோபாயம்பெற தேவையான யோக்யதாம்சங்களையும் நிர்வாக அனுபவத்தையும் கொடுக்கிறது.

**விண்ணப்பித்துக்கொள்ள வேண்டிய முறை:** உத்தியோகத்தின் நிபந்தனைகள் இன்னும் மற்ற விவரங்களையும் W. A. C. (I) யின் மெம்பர்களான A.T.R.O'S/W.A.C. (I) களிடமிருந்து ஒருவித நிபந்தனை யின்றியும் பெறலாம். உங்களுக்கு வேண்டிய W.A.C. (I) யைப்பற்றிய சகல தகவல்களையும் கொடுப்பதற்கு இந்தப் பெண்கள் ஆவலாய் இருப்பார்கள்.

**A.T.R.O./W.A.C. 1 விலாசங்கள்:**

பம்பாய் A.F.I. பில்டிங், ஹாஸ்பிட்டல் லேன், டோபிடலாவ்.

கல்கத்தா C/O D.T.R.O. 28, தியேட்டர் ரோட், லக்னோ C/O T.R.O. ஈஸ்டர்ன் ஹஸரத்கஞ்ச். பாட்னு C/O D.T.R.O. எக்ஸிபிஷன் ரோட். ராவில்பிண்டி க்வைன் தாமஸ் ரோட். பெங்களூர் கண்டோன்மென்ட கப்பன் ரோட், லாகூர் 22, டேவிஸ் ரோட். பூனு ஸ்டான்டன் ரோட். மதருஸ் 3/18 மவுண்ட் ரோட.

## பெண்கள் ஆக்ஸிலியரி கோர் (இந்தியா) வில் சேருங்கள்.

AAA-1593-A.TM



இந்தியத் தேயிலையில்

**மிகச்சிறந்தது**

மிக நேர்த்தியான மணமும், நல்ல நிறமும், குறைந்த விலையும் உள்ள




லிப்டன்ஸ் வெள்ளை லேபில் தேயிலைகள் இதர தேயிலைகளை விட சிறந்தவை.

# லிப்டன்ஸ்

## வெள்ளை லேபில்

நேர்த்தியான இந்திய தேயிலை

LTK 84 W

லிப்டன் தேனீர் அருந்துகையில்

ஜாக்கிரதைக் குறைவாய்ப் பேசாதீர்கள்.

# உயர்தரமான நகைகள்



மணப் பெண்களுக்கு வேண்டிய அழகழகான கண்டசரம், தோடு, மோதிரம், காப்பு முதலியன நாங்கள் செய்து கொடுக்கிறோம்.

**பி. ஏ. ராஜு செட்டியார் & பிரதர்**

வைரம், தங்க நகை வியாபாரிகள்

கோயமுத்தூர்



# நயமான வேலைப்பாடுகள்

போன்: 218-A

தந்தி: "ராஜு"



வெறுப்பை

உற்சாகமாக மாற்றுக!

யுத்த சமயம் வாழ்க்கை மிகவும் கஷ்டமுள்ளதாக இருக்கிறது. உணவுப்பொருள்கள் கிராக்கியாக இருக்கின்றன. வேலைக்காரர்களை வைத்திருப்பது கஷ்டம். எரி துரும்பு, துணிமணி அதிக கிலவுள்ளதாயும் கிடைப்பது கஷ்டமாயும் இருக்கின்றன. ஓய்வென்றாலோ-அது எங்கு கிடைக்கிறது? இருந்தபோதிலும் நீங்கள் டீ அருந்தலாம். இன்னமும் டீ நிறையவும் மலிவாகவும் கிடைக்கிறது. புதிதாக தயாரித்த நல்ல ஒரு கோப்பை டீ மன அமைதியை கொடுத்து தளர்ந்த நரம்புகளுக்கும் பலம் உண்டாக்குகிறது. அது கிளர்த்து கிறதே தவிர கெடுதல் செய்வதில்லை. அது ஒருபொழுதும் நமக்கு கெடுதல் அளிக்காத நமது சொந்த இந்திய விளைவு.



இந்தியன் டீ

சோர்வடையும் சமயம் டீ அருந்துங்கள்

இந்தியன் டீ மார்க்கெட் எக்ஸ்பான்ஷன் போர்டாரால் வெளியிடப்பட்டது.

IF 232TM

Printed & Published by Vai. Govindan at the Shakti Press Ltd., (Shanti Press)
115-E, Mowbrays Road, Royapettah, Madras
Managing Editor: Vai. Govindan. Editor: T. J. Ranganathan

46

# சக்தி

மாத வெளியீடு



தாரண ஹூ
பங்குனி மீ

-/8

**கதை**

அறிவாளி
பகல் கனவு
சகுந்தலை துயரம்
திருடன் மகன்
அகதி

✲

**கட்டுரை**

இந்து மத -
முன்னேற்றம்
வேண்டாதது
இரட்டை மனது
தமிழிலக்கியத்தின் -
தொன்மை

✲

**வரலாறு**

காங்கிரஸ் ஆட்சி
கான் சகோதரர்கள்

✲

**பாட்டு**

தியாகம்

✲

**குறிப்பு**

வேவல் பறந்த -
மர்மம்
காலச் சுழல்
புத்தக உலகம்



# கடமை...

அதோ பாருங்கள், அந்தப் பறவைக்கு அதன் குஞ்சுகளிடம் உள்ள அக்கரையை! அதற்கு நிகரான ஒரு செய்கையை மனித சமூகத்தினிடம் கூட எதிர்பார்க்க முடியாது. இருந்த போதிலும் முடிந்தவரை நாம் அவ்வழியைப் பின்பற்ற முயலுவோம். உங்கள் குழந்தைகளைப் பசியினின்றும் தேவையின்றும் நிச்சயமாகக் காப்பாற்ற முடியும். ஒரு 'பிருத்வி' பாலிஸியினால் உங்கள் குடும்பத்திற்கு செய்யவேண்டிய கடமையை பூரணமாகச் செய்யலாம்.

## பிருத்வி

இன்ஷியூரன்ஸ் கம்பெனி லிட்.,

120, அரமனைக்காரன் தெரு, ஜி.டி. சென்னை

FAS/50


தமிழ்
வருஷப்பிறப்பன்று
வெளிவருகிறது
ப்ரகதி
ஸ்ரீ
வள்ளி
SCFL LTD PRODUCTION
G.H.RAO
டைரக்ஷன்: A.V. மெய்யப்பன் & A.T. கிருஷ்ணஸ்வாமி

# வேறு அலுவல்கள்

# இல்லாத

வீட்டு வேலை சமூக சேவை இல்லாத ஒவ்வொரு பெண்ணும் தற்சமயம்பெண்கள் ஆக்சிலியரி கோர் (இந்தியா)விற்கு தேவையாய் இருக்கிறது. 17 முதல் 50 வயதுக்குள்ளும் ஆங்கிலம் நன்கு எழுதப் படிக்கத் தெரிந்திருக்கும் பெண்கள்மட்டிலுமே விண்ணப்பித்துக் கொள்ளவேண்டும். நல்ல சம்பளம். வேலை சுவாரஸ்யமுள்ளது.

**வாசத்தின் தன்மை.** பொது சேவையிலிருக்கும் W. A. C. (I) ககள் தாங்களே W. A. C. (I) மெம்பர்களான பொறுப்பு வாய்ந்த பெண்களின் மேற்பார்வையில் இருக்கும் வசதியுள்ள ஹாஸ்டல்களில் குடியிருக்கச் செய்கிறார்கள்.

**சமாதானம்** சமாதானம் திரும்ப ஏற்பட்டதும் விரோதிகளிடமிருந்து நிபந்தனையற்ற சரணடைதலைப் பெறுவதற்குத் தங்களால் இயன்றதைச் செய்த இந்த இந்திய பெண்களுக்குத்தான் சமாதான பலன்களை அனுபவிக்க பெரும் பாத்தியதை உண்டு.

**யுத்தத்திற்கு பிற்காலம்.** வியாபாரத்திலும் கைத்தொழிலிலும் இந்தியா அதி தீவிரமாக முன்னேறி வருகிறது. நிலைமை சமாதானத்திற்கு வந்ததும் சிவில் உத்தியோகங்களுக்கு அநேக நன்குதேர்ச்சி பெற்ற ஆணும் பெண்ணும் தேவையாய் இருக்கும் என்பதில் சந்தேகமேயில்லை. W.A.C. (I) யில் பெரும் பயிற்சியும் இந்த கோரில் வேலை செய்யும் சமயம் பெரும் அனுபவமும் அனேக பெண்களுக்கு யுத்தமில்லாத காலத்தில் வெற்றிகரமான ஜீவனோபாயம்பெற தேவையான யோக்யதாம்சங்களையும் நிர்வாக அனுபவத்தையும் கொடுக்கிறது.

**விண்ணப்பித்துக்கொள்ள வேண்டிய முறை:** உத்தியோகத்தின் நிபந்தனைகள் இன்னும் மற்ற விவரங்களையும் W.A.C. (I) யின் மெம்பர்களான A.T.R.O'S/W.A.C. (I) களிடமிருந்து ஒருவித நிபந்தனையின்றியும் பெறலாம். உங்களுக்கு வேண்டிய W.A.C. (I) யைப்பற்றிய சகல தகவல்களையும் கொடுப்பதற்கு இந்தப் பெண்கள் ஆவலாய் இருப்பார்கள்.

**A.T.R.O'S/W.A.C. I விலாசங்கள்:**

**பம்பாய்** A.F.I. பில்டிங், ஹாஸ்பிட்டல் லேன், டேர்பிடலாவ். **கல்கத்தா** C/O D.T.R.O. 28, தியேட்டர் ரோட். **லக்னோ** C/O T.R.O. ஈஸ்டர்ன் ஹஸரத்கஞ்ச். **பாட்னா** C/O D.T.R.O. எக்ஸிபிஷன் ரோட். **ராவில்பிண்டி** க்வைன் தாமஸ் ரோட். **பெங்களூர்** கன்டோன்மென்ட் கப்பன் ரோட், **லாகூர்** 22, டேவிஸ் ரோட். **பூனா** ஸ்டான்டன் ரோட். **மதராஸ்** 3/18 மவுன்ட ரோட.

# பெண்கள் ஆக்சிலியரி கோர் (இந்தியா) வில் சேருங்கள்

AA 1594 TM




ஸ்ரீமதி, என்.ஸி.வஸந்தகோகிலத்தின்
சிறந்த இரண்டு பாட்டுகள்

நித்திரையில் வந்து ........ } N. 18249.
வருவானோ வனக்குயிலே

"எச்.எம்.வி."

HIS MASTERS VOICE

"ஹிஸ் மாஸ்டர்ஸ் வாய்ஸ்"

"எச். எம். வி." ஹைபிடெலிடி ஊசிகள்

தி கிராமபோன்
கம்பெனி லிமிடெட்
மதராஸ்



5 ஊசிகள் பாக்கெட் 1-க்கு விலை அணா 12

எல்லா "எச். எம். வி."
கிராமபோன் வியாபாரி
களிடமும் கிடைக்கும்

வெளிவந்து விட்டது! வெளிவந்து விட்டது!!

வெண்டல் வில்கியின்

# "ஒரே உலகம்"

மொழிபெயர்ப்பு: தி. ஜ. ர.

உயர்ந்த பதிப்பு ரூ. 5-0-0 சாதாரணப் பதிப்பு ரூ. 4-8-0

விற்பனை உரிமையாளர்:

தமிழ் நிலையம் - புதுக்கோட்டை

# கோதைத் தீவு

எழுதியவர்: வ. ரா.

விலை ரூ. 2-0-0

புத்தக நிலையம்

தெப்பக்குளம் :: திருச்சி




தமிழ் நாடு ஏஜெண்டுகள்:—

சீதாராம ஜெனரல் ஸ்டோர்ஸ் :: மேலக்கோபுர வீதி - மதுரை

தாரண
மலர் 11

# சக்தி

பங்குனி
இதழ் 6

அன்பும் அறிவும் அறமும் திருவும் அருளும் ஆற்றலும்
இன்ப வாழ்வும் விளங்கச் சக்தி எழுந்து பொலிகவே!

## வேவல் பறந்த மர்மம்

வைஸிராய் வேவல் திடீரென்று விமானத்திலே பறந்து லண்டன் சென்றிருக்கிறார். இதன் மர்மம் என்ன? இந்திய முட்டுக்கட்டை தீர வேண்டுமென்று, திடீரென்று அவருக்குக் கவலை—அல்லது கருணையோ?—வந்திருப்பதாகச் சொல்கிறார்கள். ஜெர்மனி தோற்றதும் ஜப்பானியப் போரை எப்படித் தீவிரமாய் நடத்துவது என்ற பிரச்னை பற்றியே, முக்கியமாய் அவர் இந்தியா மந்திரியுடனும் பிரிட்டிஷ் சர்க்காருடனும் பேசச் சென்றிருக்கிறார் என்பது ஒரு செய்தி. 'இடையிலே இந்திய அரசியல் பிரச்னைபற்றியும் கொஞ்சம் பேசத்தான் பேசுவோம்' என்றார் அமெரி. அதாவது கட்டுச்சோறு தின்பவன் சிறிது ஊறுகாயும் தொட்டுக் கொள்வது போலவாக்கும்!

புலாபாய் தேசாய் ஏதோ திட்டத்தை வேவலிடம் சமர்ப்பித்திருக்கிறாராம். அவர் அதை மிக்க அக்கறையாக லண்டனுக்குக் கொண்டோடியிருக்கிறாராம். இப்படி ஒரு வதந்தி. இது நிஜமோ, பொய்யோ; 'இதைப்பற்றி இப்போது நான் மௌனமாகவே இருக்க விரும்புகிறேன்' என்கிறார் மகாத்மா காந்தி. அவர் எதுவரை மௌனம் சாதிக்கிறாரோ அதுவரையில், தேசமக்களும் குருட்டுக் கனவுகள் காணாமல், நிர்மாண வேலைகளில் மனம் செலுத்துவதே நலமாகும். 'கிரிப்ஸ் திட்டம் இன்றுமிருக்கிறது' என்ற பல்லவியையே பாடுகிறார் அமெரி. கிரிப்ஸ் திட்டத்துக்குக்கூட அன்று முட்டுக்கட்டை போட்டவர் வேவல்தான் என்று ஒரு வதந்தி உண்டு. 'வேவல் விஜயத்தின் பலனாகப் பிரமாதமான பலன்கள் விளையுமென்று நான் சொல்ல மாட்டேன்' என்று வேறு சொல்கிறார் அமெரி. இவைகளையெல்லாம் நன்றாய் மனதில் பதிந்து கொண்டு யோசித்தால், வேவல் சுயராஜ்ய மூட்டையோடு திரும்பி வருவார் என்று நம்பத்தோன்றுது. அமெரியும் பல் பிரிட்டிஷ் மந்திரிசபையிலிருந்து ஒழிந்தாலன்றி, ஒரு சமரசம் ஏற்படுமென்று நமக்குத் தோன்றவில்லை. வேவல் விஜயம் அதைச் சாதிக்குமா?

அது எவ்வாறாயினும் சரி; சுயராஜ்யம் என்பது தானம் வாங்கும் பண்டமல்ல. அது தானமாய்க் கிடைத்தால்கூட, வாங்கிக்கொள்வதிலே மகிமையில்லை. என்று தினம் தோற்றுவிழுந்த புருஷோத்தம மன்னன், தன்னை வென்ற அலெக்ஜாந்தரிடம் தன் உடைவாளைக் கையேந்தி வாங்கிக்கொண்டானோ அன்றே இந்தியாவுக்கு நிரந்தர அவகேடு ஏற்பட்டுவிட்டது என்று ஒரு நண்பர் அடிக்கடி கூறுவார். ஏனெனில், அது புருஷோத்தமனுக்குப் பெருமையல்ல; அலெக்ஜாந்தருக்குத்தான் பெருமை. சுயராஜ்யம் வீரப் பரிசாக, தியாகப் பரிசாகக் கிடைக்க வேண்டும்; அப்படித்தான் அது கிடைக்கும். அதைத் தானம் வாங்கும் எண்ணத்தை எந்நாளும் நாம் விட்டொழிப்பதே நல்லது.

# காலச்சுழல்

**நாமக்கல் கவிஞர் நிதி:** கவிஞர் ராமலிங்கம் பிள்ளைக்குச் சமர்ப்பிக்க, (1) டி. எஸ். சொக்கலிங்கம், (2) வ. ரா, (3) வை. கோவிந்தன், (4) ரா. கிருஷ்ணமூர்த்தி, (5) நா. அண்ணாமலை, (6) எஸ். தேசிக விநாயகம் பிள்ளை, (7) டி. கே. சிதம்பரநாத முதலியார், (8) சக்ரவர்த்தி இராசகோபாலாச்சாரியார் ஆகியவர் அடங்கிய ஒரு கமிட்டியார் நிதி திரட்டி வருகிறார்கள். அவர்களுடைய வேண்டுகோள் வருமாறு: "ஸ்ரீ சுப்ரமணிய பாரதிக்கு அடுத்தபடி, சென்ற இருபத்தைந்து ஆண்டுகளாகத் தமிழ் மக்களின் ஆர்வங்களை அழகாகப் பாடித் தேச பக்தியை வளர்த்து வரும் கவிஞர் நாமக்கல் ராமலிங்கம் பிள்ளையவர்களுக்கு ஒரு நிதி வசூலித்து, வரப்போகும் பார்த்திப வருஷ ஆரம்பத்தில் அளிப்பதென்று முன்வந்திருக்கிறோம். அவர்கள் தேசத்துக்கும் தமிழுக்கும் செய்து வரும் தொண்டுக்கு அந்த நிதி ஓரளவு நம்முடைய நன்றியைக் காட்டும். கவிஞர் ராமலிங்கம் பிள்ளையவர்களுடைய பாடல்களைப் பாராட்டும் தமிழன்பர்கள் அனைவரும் இந்த நிதிக்கு நன்கொடைகள் தந்து உதவ வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம். 'சக்தி' நிர்வாக ஆசிரியர் வை. கோவிந்தன் மேற்படி நிதியின் பொக்கிஷதாரரா யிருக்க இசைந்திருக்கிறார். நன்கொடை அனுப்பும் நண்பர்கள் மேற்படி நிதிக்காக என்று குறிப்பிட்டு, ஸ்ரீ வை. கோவிந்தன், 'சக்தி' நிர்வாக ஆசிரியர், ராயப்பேட்டை, சென்னை என்ற விலாசத்துக்கு அனுப்பக் கோருகிறோம்." தமிழ் நாட்டுக் கவிஞர் செய்துள்ள அளவற்ற சேவையைப் பாராட்டுவதற்கறிகுறியாக, நண்பர்கள் ஏராளமாய் இந்த நிதிக்கு உதவுவார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

* * *

**பழைய நாடகமே:** இந்திய அசெம்பிளி, நிதி மசோதாவை இருமுறையும் நிராகரித்து விட்டது. வேறு சுதந்தர நாடாயிருந்தால், சர்க்கார் உடனே ராஜினாமாச் செய்து விட்டு ஓடுவார்கள். இங்கேயோ, நிதி மெம்பர் 'ஓ! இதெல்லாம் பழைய நாடகம் தானே! மசோதா நிறைவேறி யிருந்தால் தான் எனக்குச் சங்கடமா யிருக்கும்' என்று வேதாந்த அமைதியோடு களிக்கிறார். ஆனால், சட்டசபையை 'இப்படிக் கேலிக் கூத்தாகவா செய்வது? இது பொறுப்புள்ள காரியமா?' என்று கண்ணீர் விடுகிறார் ஐரோப்பியப் பிரதிநிதியான ரிச்சார்ட்ஸன். பொறுப்பு இந்தியருக்குக் கிடையாது; ஆனால் பொறுப்பு வேஷம் மாத்திரம் அவர்களுக்குப் போடப்படும் என்றால், அவர்கள் எப்படிச் சம்மதிக்க முடியும்? இந்தியரின் தன் மதிப்பைக் காப்பாற்றிக் கொள்ள வேறு வழி கிடையாது. அதை அவர்கள் கடைப் பிடித்தால், நீலிக்கண்ணீர் விட்டுப் பயன் என்ன?

* * *

**காலஞ் சென்ற லாயிட் ஜார்ஜ்:** 'உலகத்திலே மகா புத்திசாலியான ராஜீய வாதி மகாத்மா காந்திதான்' என்று சொன்னவர் பிரபல பிரிட்டிஷ் ராஜ தந்திரி லாயிட் ஜார்ஜ். அவர் சமீபத்தில் காலமாகி விட்டார். வயது 82. லாயிட் ஜார்ஜ் சென்ற யுத்தத்தின் கடைசிக் காலத்தில் பிரிட்டிஷ் பிரதம மந்திரியாகி, அதை வெற்றிகரமான முடிவுக்குக் கொணர்ந்தவர். "லாயிட் ஜார்ஜ் சிறந்த புத்திமான். அது மட்டும் அல்ல; மார்க்ஸ் வாதிகளின் வழிகளைக் கற்றவர்" என்று லெனின் ஒரு முறை அவரைப் புகழ்ந்து எழுதினார். லாயிட் ஜார்ஜ் ஏழை மக்களின் நல உரிமைகளில் சிரத்தை கொண்டவர். தம் நாட்டின் பெருமையையும் செல்வாக்கையும் பெருக்கியவர். மனித சமூக முன்னேற்றத்துக்கே, பெரிய அளவு சேவை புரிந்தவர். சரித்திரம் அவரை ஒரு நாளும் மறவாது.

# காங்கிரஸ் ஆட்சி



ரா. நாராயணன்

அபிப்பிராய பேதம்தான் வளர்ச்சிக்கு அடிப்படை. இதைப்பற்றி அபிப்பிராய பேதமே கிடையாது. இந்தியாவில் அபிப்பிராய பேதம் இல்லாத விஷயமே கிடையாது. இந்த விதிக்கு, பதவி ஏற்பு என்ற பிரச்னையும் விலக்கல்ல.

தற்போது அமுலில் இருக்கும் சீர்திருத்தம் வழங்கப்பட்டவுடன், இந்த அரசியலமைப்பை ஏற்றுக்கொள்ளுவதா இல்லையா என்பதுபற்றிப் பலத்த விவாதம் ஏற்பட்டது. இந்தச் சீர்திருத்தம் மகா மட்டமானது, மோசமானது, இதைத் தகர்த்தெறிய வேண்டும் என்ற கொள்கைதான், ஆதியில் காங்கிரஸின் ஆதரவைப் பெற்றது.

பதவி ஏற்று அதன்மூலம் சீர்திருத்தத்தின் மோசமான தன்மையை விளக்கலாம் என்ற கட்சியை, காலஞ்சென்ற திரு. சத்தியமூர்த்தி ஆரம்பித்து வைத்தார். இதற்காக அவர் மீது பல பிரபல காங்கிரஸ்காரர்கள் சீறிவிழ ஆரம்பித்தார்கள். ராஜாஜியும் திரு. சத்தியமூர்த்தியின் கட்சியை ஆதரிக்க முன்வந்தார். பதவி ஏற்பு எண்ணம் பலம் பெற்றது. கடைசியாக, நாட்டு நலன் சம்பந்தமான தினசரி நிர்வாகத்தில் தலையிடுவதில்லை என்று கவர்னர்கள் வாக்குறுதியளித்தால், பதவி ஏற்கலாம் என்று முடிவு செய்தது காங்கிரஸ்.

இந்த வாக்குறுதியளிக்க அச்சமயம் வைஸிராயாக இருந்த லின்லித்கோ பிரபு சம்மதிக்கவில்லை. இடைக்கால மந்திரிசபைகள் நிறுவப்பட்டன. இந்த மந்திரி சபைகள் நாட்டின் ஆதரவைப் பெறாததுமட்டுமல்ல; மக்களின் நிந்தனைக்கும் ஆளாயின. கடைசியில் பிரிட்டிஷ் அரசாங்கம் பணிந்தது; வாக்குறுதியும் அளித்தது. ஏழு மாகாணங்களில் காங்கிரஸ் பதவி ஏற்றது. சென்னை, பம்பாய், மத்திய மாகாணம், எல்லைப்புறம், பீஹார், ஒரிஸ்ஸா, ஐக்கிய மாகாணம் ஆகியவைகளில் காங்கிரஸ் மந்திரி சபைகள் அமைந்தன. பின்னால், அஸ்ஸாமிலும் சிலகாலம் காங்கிரஸ் மந்திரிசபை இருந்து பின்பு ராஜிநாமாச் செய்தது.

பதவி ஏற்பினால் ஓரளவு பொதுஜன நன்மை செய்யமுடியும் என்று ஏற்பட்டது. மதுவிலக்கு, விவசாயக்கடன் நிவாரணம் போன்ற நன்மைகள் உண்டாயின. பிரிட்டிஷ் அதிகாரவர்க்கம் போற்றும் முறையில் நிர்வாகம் ஒழுங்காக நடந்தது. சென்னை கவர்னராக இருந்த லார்டு எர்ஸ்கின், சென்னை நிர்வாகத்தை மிகவும் புகழ்ந்தது யாவருக்கும் ஞாபகமிருக்கும்.

காங்கிரஸ் மந்திரிகள் லட்சியப் பாதையிலிருந்து புரளாமலிருப்பதற்கான முறையில், காங்கிரஸ் பார்லிமெண்டரி போர்டார் சிரத்தையுடன் காங்கிரஸ் மந்திரிகளின் ஆட்சியைக் கவனித்து வந்தார்கள். மத்திய மாகாணத்தில் டாக்டர் கரே, கவர்னர்களுடன் சேர்ந்து கொண்டு சுயநல முறையில் அதிகார துஷ்பிரயோகம் செய்ய முயற்சித்ததை, ஸர்தார் படேல், பார்லிமெண்டரி போர்டாரின் சார்பாகத் தடுத்து, கரே கோஷ்டியைப் பதவியிலிருந்து விரட்டி, திரு. சுக்லா தலைமையில் புது மந்திரிசபை அமையச் செய்தார். இந்தச் சம்பவத்தைப் பற்றி அமெரிக்கப் பத்திரிகையான

மீண்டும் மாகாணங்களில் காங்கிரஸ் பதவி ஏற்பதா, வேண்டாமா என்ற பிரச்னை இப்போது தீவிரமாக விவாதிக்கப்படுகிறது. நல்ல அரசியல் பிரக்ஞையும் நீண்டகாலத் தேசிய வாதியுமான 'ஹிந்துஸ்தான்' ஆசிரியர் தமது திட்டமான கருத்தை இதில் தெரிவிக்கிறார்.

'டைம்' எழுதுகையில், காங்கிரஸ் தலைமைக் காரியாலயத்தின் கண்டிப்பையும் செல்வாக்கையும் வெகுவாகப் புகழ்ந்தது.

யுத்தம் ஆரம்பித்தவுடன், இந்திய ஜனங்களுக்குப் பொறுப்புள்ள மாகாண மந்திரி சபைகளைக் கலந்து கொள்ளாமல், மத்திய சர்க்கார் தாமாகவே இந்தியாவை யுத்தத்தில் இழுத்து விட்டதற்காக, மாகாணக் காங்கிரஸ் மந்திரி சபைகள் அனைத்தும் ராஜிநாமாச் செய்தன. இந்தக் காரியம் அவ்வளவு உசிதமான தல்ல என்று, பின்னால் நாட்டில் ஏற்பட்ட நிலையிலிருந்து அறிஞர்கள் கருதுகிறார்கள். அது எவ்வாறாயினும், காங்கிரஸ்காரர்கள் பதவி மோகம் பிடித்தவர்கள் அல்ல, கட்டுப்பாட்டுக்கு அடங்கியவர்கள் என்பதை இந்த ராஜிநாமா நிரூபித்துவிட்டது.

ஐந்து வருஷ அஞ்ஞாத வாசத்துக்குப் பிறகு எல்லைப்புறத்தில் மீண்டும் காங்கிரஸ் மந்திரி சபை அமைக்கப் பட்டிருக்கிறது. பொதுஜன அபிமானமில்லாத ஆட்சியினால் ஜனங்கள் இந்த ஐந்து வருஷ காலமாகச் சொல்லொணுத் துயரம் அனுபவித்து வருகிறார்கள். இந்த நிலையில் காங்கிரஸ் பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும் என்று கருதிய டாக்டர் கான்சாஹேப் பதவி ஏற்றார்.

இனி, பிற காங்கிரஸ் மாகாணங்களிலும் ஏன் பொறுப்பு ஏற்கலாகாது என்ற பிரச்னை எழுகிறது. பொதுவாக, காங்கிரஸ்காரர்கள் மாறுதலைத்தான் விரும்புகிறார்கள். அதற்கு இரண்டு காரணங்கள் கூறலாம். தற்போதுள்ள ஆட்சி ஒழிந்து மக்கள் ஆட்சி ஏற்பட்டால், பஞ்சம், பட்டினி முதலிய தொல்லைகளை ஒழிக்கலாம் என்பது முதல் காரணம். ஒடுக்கப் பட்டிருக்கும் பொதுவாழ்வு மலரும்படியாகப் பொதுஜன சேவையை மீண்டும் தொடங்கலாம் என்பது இரண்டாவது காரணம்.

இந்த மாறுதலைச் சிலர் ஆட்சேபிக்கிறார்கள். அதற்குக் காரணம் அவர்களுக்குத் தாங்கள் வைதிகக் காங்கிரஸ்காரர்கள் என்ற ஞாபகம் இருப்பது தான். பதவி ஏற்பது தப்பெண்ணம் உண்டாவதற்கு இடமளிக்கும் என்று அவர்கள் அஞ்சுகிறார்கள். நாட்டில் அரசியல் பற்றுதல் அதிகமாய் இருப்பவர்கள் அரசியல் துறையிலும், வைதிக மனப்பான்மை பெருகியிருப்பவர்கள் நிர்மாணத் துறையிலும் சேவை செய்துகொண் டிருக்கலாம் என்ற சம்பிரதாயத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டியதுதான் அவசியமாகும். நிர்மாண வேலைப் பக்தர்கள் அரசியல் துறையில் நுழைந்து நிலைமையைக் குழப்பலாகாது. அரசியல் மனப்பான்மை யுள்ளவர்கள் நிர்மாண வேலைக்கு உதவி புரியவேண்டும். இந்தப் பாகுபாடு செய்துகொள்வது தேச முன்னேற்றத்துக்கு அவசியமாகும்.

மகாத்மாவின் கருத்து என்னவாயிருக்குமோ என்று அஞ்சி, சிலர் தங்களுடைய உண்மைக் கருத்தைப் பகிரங்கமாக வெளியிடத் தயங்குகிறார்கள். எல்லைப்புற மாறுதலை மகாத்மா ஆட்சேபிக்கவில்லை யென்று நிச்சயமாய்க் கருதலாம். அஸ்ஸாமில் கூட்டு மந்திரிசபைக்குக் காங்கிரஸ் மறைமுக ஆதரவளித் திருப்பதை மகாத்மா ஆசீர்வதித் திருக்கிறார். மாகாணக்

### கைமேல் பலன்

"என் பையன் தண்ணீரில் முழுகிப் போகப் பார்த்தானுமே, உண்மையா?"

"ஆமாம்."

"நீங்கள் தான் அவனைக் காப்பாற்றினீர்களாமே, உண்மையா?"

"ஆமாம்."

"அப்படியானால், சரி. அவன் குல்லாய் எங்கே? குல்லாய் மாத்திரம் என்னிடம் வந்து சேரவில்லை, உம்மை நான் சும்மா விட மாட்டேன்."

காங்கிரஸ்காரர்கள் தங்களுக்கு உசிதம் என்று தோன்றும் முறையில் சேவை புரிவதை மகாத்மா விரும்புகிறார் என்பது இந்தச் சம்பவங்களிலிருந்து தெளிவாகிறது. ஆகையால், அவர் அபிப்பிராயத்தை ஒவ்வொருவரும் தனித்தனி கேட்டு நிர்ப்பந்தப் படுத்துவது தவறாகும்.

தலைவர்கள் வெளிவந்த பிறகு இதைப்பற்றி யோசித்துக் கொள்ளலாம் என்று கூறுவதும் நியாயமல்ல. ஆகஸ்ட் தீர்மானத்தின் இறுதிப் பாகத்தில், தலைவர்கள் இல்லாத நிலைமையில் ஒவ்வொரு காங்கிரஸ்காரரும் தாம் தாமே தலைவர் என நினைத்துக் கொண்டு பணி புரியவேண்டும் என்று கூறப்பட்டிருக்கிறது. காரியக் கமிட்டி மீண்டும் கூடும்வரையில் அங்கங்கே வெளியிலுள்ள காங்கிரஸ்காரர்கள், தாங்களே பொறுப்பேற்றுக்கொண்டு காரியங்கள் புரிய வேண்டும்.

மேலும், காங்கிரஸ்காரர்களை விடுதலை செய்வது மாகாண சர்க்கார்களின் பொறுப்பு என்று ஹோம் மெம்பர் ஸர் மூடி ஒப்புக்கொண்டு விட்டார். காங்கிரஸ்காரர்கள் பொறுப் பேற்க விரும்பினால், கவர்னர்கள் தடை செய்யமாட்டார்கள் என்றும் கூறப்படுகிறது.

இந்த நிலைமையில் பதவி ஏற்பது காங்கிரஸ்காரர்களின் கடமையாகும். பதவி வகித்து அதனால் ஏற்படும் நற்பலனைக் காந்திஜிக்குக் காணிக்கையாகச் சமர்ப்பிக்கவேண்டும். வீண் விவாதத்தில் காலங்கழிப்பது அறிவுடைமை யல்ல.

## முன்னோரும் பின்னோரும்

சோனி என்ற ஞானி, ஒரு முறை சாலையிலே போய்க் கொண்டிருந்தார். வழியிலே ஒரு தோட்டத்தில் ஒரு பழமரச் செடியை நட்டுக் கொண்டிருந்த ஒரு கிழவனைக் கண்டார்.

"இந்த மரம் பழம் பழுக்க இன்னும் எவ்வளவு வருஷமாகும்?" என்று கிழவனை ஞானி கேட்டார்.

"எழுபது வருஷம் ஆகும்" என்றான் கிழவன்.

"நீ இன்னும் அவ்வளவு காலம் இருக்க முடியும் என்று நம்புகிறாயா?" என்று ஞானி வினவினார்.

கிழவன் மண் வெட்டியைக் கீழே போட்டுவிட்டு, நிமிர்ந்தான்: "நான் இந்த உலகத்தில் வந்து பிறக்கும் போது, இது வனாந்தரமாயில்லை. என் முன்னோர்கள் எத்தனையோ மரங்களை நட்டுப் பயிர் செய்திருந்தார்கள். அவைகளின் பழங்களை நான் அனுபவிக்கிறேன். அதேபோல, என் பின்னோருக்காக, நானும் சில மரங்களை நடுகிறேன்" என்று கம்பீரமாய்ப் பதில் அளித்தான்.

## அன்புக் கொலை

பிரபலஸ்தர்களைக் காண வரும் ஜனக்கூட்டம் சில சமயம் கட்டுக் கடங்காமல் வந்து கூடி, அமளி செய்து, எல்லோருக்கும் தொல்லை தருவதை நாம் கண்டிருக்கிறோம்.

புராதன காலத்தில் கிரேக்கத் தலைநகரான ஏதென்ஸில் ட்ரேக்கோ என்று பெயருடைய சட்டசபை அங்கத்தினர் ஒருவர் இருந்தார். அவர் ஈஜினா என்ற கொட்டகையில் வந்தபோது, ஜனங்கள் அன்பு மிகுதியால் ஆரவாரம் செய்து, தங்கள் குல்லாய்களையும் சட்டைகளையும் கழற்றி, போர் போல் அவர் மீது வீசி யெறிந்தார்கள். ட்ரேக்கோ மூச்சுமுட்டி அந்த இடத்திலேயே பரலோகப் பிராப்தி யடைந்து விட்டாராம்.

# திருடன் மகன்

அமீர்

**பே**யாண்டி என்றால், அழுத பிள்ளை வாய் மூடும்; அழாத பிள்ளை அழத் தொடங்கிவிடும். அவ்வளவு பிரசித்தமான திருடன். பேயாண்டி, ஊருக்கு மேற்கே யுள்ள பிரம்மாண்ட மான நீலக் காட்டில், எங்கேயோ ஒரு குகையில் வசித்தான். காட்டின் இரு புறமும் இரண்டு சாலைகள் உண்டு. இரண்டும் அவன் ராஜ்யம்.

சாலைகளில், எந்த நேரத்திலே யார் தலையிலே அவன் கைவைப்பா னென்று யாரும் சொல்லமுடியாது. பெரிய பெரிய ஜமீன்தார்கள், வர்த்த கர்கள், சீமான்கள் எல்லாம் அவ னிடம் சிக்கி, கையில் கொண்டுபோன சகல பொருளையும் இழந்திருக்கிறார் கள். ஏகதேசம் யாராவது பணமோ, மதிப்பரிய வேறு பொருளோ எவ் வளவுதான் ரகசியமாய் அந்தச் சாலை களிலே கொண்டு போனாலும், கழு குக்கு மூக்கில் வியர்க்கும் என்பார் களே அந்த மாதிரி எப்படியோ அவ னுக்குத் தெரிந்துவிடும். எங்கிருந்தோ திடீரென்று தோன்றுவான். துப்பாக் கியை நீட்டுவான். "பணத்தைக் கொடு; அல்லது உயிரை விடு" என்று வெகு கண்டிப்பாய் உத்திரவிடுவான். பிரமுகர்கள் மிகவும் புத்திசாலித்தன மாகவே நடந்து கொள்வார்கள்; அதாவது, பணத்தை அவனிடம் கொடுத்துவிட்டு, உயிரைப் பத்திர மாய் வீட்டுக்குக் கொண்டுபோய்ச் சேர்த்து விடுவார்கள்.

**பே**யாண்டி வசித்த அந்த இடத்தைச் சுற்றிலும் வெகு தூரம் வரையில் வேறு வழிப்பறிக்கொள்ளைக்காரனே கிடையாது. அந்தப் பிரதேசத்தில் அவன் ஏக சக்ராதிபதி. (கொஞ்ச தூரத்தில் மரகதக் காட்டில் மற்றொரு திருடன் இருக்கத்தான் இருந்தான். ஆனால், பேயாண்டியோடு ஒப்பிடும் போது, அவன் ஒரு கொசுவுக்குச் சமானம் ஆவான்.) பேயாண்டியின் தொழில், மிகவும் செழிப்பாகவே நடைபெற்றது. எந்த ஜமீன்தாரை யும் வியாபாரியையும் விடப் பெருஞ் செல்வத்தை, அதி சீக்கிரத்திலே பேயாண்டி சம்பாதித்து விட்டான்.

பேயாண்டிக்கு முனியாண்டி என்று ஒரு செல்வ மகன் உண்டு. மகனைப்பற்றிப் பேயாண்டிக்கு ஒரு யோசனை தோன்றியது. "எது எக் கேடு கெட்டாலும் சரிதான். முனி யாண்டியை, நான் நன்றாய்ப் படிக்க வைக்கவேண்டும். அவனுக்கு ராமா யணம், பாரத மெல்லாம் வாசிக்கத் தெரியவேண்டும். தமிழும் சமஸ்கிருத மும் தெரியவேண்டும். தாட் பூட் என் றெல்லாம் இங்கிலீஷ் பேசத் தெரிய வேண்டும். ராகம் பாடித் தாளம் போட்டுக் கீதம் படிக்கத் தெரிய வேண்டும். நாகரிகமாய் உண்ணவும் உடுக்கவும் கைக்குட்டையால் முகம் துடைக்கவும் தெரியவேண்டும். நானோ ஒரு வழிப்பறிக் கொள்ளைக்காரன். என் மகன் ஒரு கனவானாயிருக்க வேண்டும். என்னிடம் ஏராளமான பணம் இருக்கிறது. அத்தனை பணத் தையும் செலவழித்தாவது, அவனை மகா உன்னதமாய்ப் படிக்கவைத்தே தீருவேன்" என்று அவன் முடிவு செய்தான்.

பேயாண்டி ஒரு முடிவுசெய்தால், அப்புறம் ஆண்டவன் வந்தால்கூட அவனைத் தடுக்க முடியாது. அவன் ஏராளமான பணத்தை எடுத்து ஒரு பையிலே கட்டிக்கொண்டான். முனி யாண்டியைக் கையிலே பிடித்துக் கொண்டான். தன் மகனுக் கேற்ற உயர்ந்த கல்லூரியைத் தேடிப் புறப் பட்டுவிட்டான்.

**தன் மகனும் ஏன் திருடனாக வேண்டும்? அவனைக் கனவானாக்கிவிட்டப் படிக்கவைக்கிறான் பேயாண்டி. படிப்பு வீண் போகுமா? பலன் தருகிறது- அருமையான பலன்! இந்தக் கேலிக் கதை, காரெல் சாப்பெக் என்ற பிரபல ஆசிரியர் எழுதிய ஒன்றின் தழுவல்.**

**ப**ல மைல் தூரத்துக்கப்பால் தகரபுரி என்ற பட்டினத்தில் '**ரட்சண்ய நிகேதனம்**' என்று ஓர் ஆசிரமம் உண்டு. அதை ஸ்தாபித்து நடத்தி வருபவர் ஓர் ஐரோப்பியக் கிறிஸ்துவப் பாதிரியார். அவர் இந்தியாவுக்கு வந்ததும், நிஜார், தொப்பி யெல்லாம் தரிப்பதில்லை. இந்தியரைப் போலவே அரை வேட்டி உடுத்தி, முண்டாசு கட்டி யிருப்பார். யானையாலேயே யானையைப் பிடிப்பதுபோல், இந்திய நடையுடை பாவனைகளைக்கொண்டே இந்தியரைப் பிடிக்கவேண்டும் என்ற கொள்கை அவருடையது. முன் காலத்து இந்திய முனிவர்கள் ஆசிரமம்தான் நடத்தி வந்தார்கள் என்று அவர் கேள்விப்பட்டிருக்கிறார். முனிவர்களே இந்து சமயத்தின் மூலகர்த்தாக்கள் என்பதும் அவர் காதிலே விழுந்ததுண்டு. சாமியார்கள் என்றால் இந்தியர்கள் அடிபணிந்து விழுவார்கள் என்றும் பல பேர் அவரிடம் சொல்லி யிருக்கிறார்கள். ஆகையால், அவரும் ஆசிரமம் ஏற்படுத்தினார். முனிவர்கள் காட்டிலே ஆசிரமம் அமைத்தார்கள். பாதிரியார் நகரத்திலே அமைத்தார். கிழக்கை மேற்காக மாற்றவேண்டு மல்லவா, அதற்காக. வசிஷ்டருடன் போட்டி போட்ட விசுவாமித்திரர் திரிசங்கு சொர்க்கம் படைக்க வில்லையா? கீழ்நாட்டுக் காட்டு நாகரிகத்தை மேல்நாட்டு நகர நாகரிகம் ஆக்குவ தென்றால், நவீன ஆசிரமத்தை நகரத்திலே அமைக்காமல் வேறே என்ன செய்வது? பாதிரியாரின் ஆசிரமத்திலே, கம்பன், வால்மீகி, பைபிள் எல்லாம் போதித்தார்கள். ஒரு நவீன நாகரிக கனவானுக்கு வேண்டிய சகலமும் சொல்லிக் கொடுத்தார்கள். முனியாண்டியைப் பேயாண்டி இந்த ஆசிரமத்துக்குக் கொண்டுவந்தான். வெள்ளியும் பொன்னும் வைரமும் நிறைந்த தன் முடிப்பைப் பாதிரியார் முன்னே அவிழ்த்துக் கொட்டினன். அருமை மகனைப் பாதிரியாரிடம் ஒப்படைத்தான். ஊருக்குத் திரும்பிவிட்டான்.

வருஷங்கள் கழிந்தன. முனியாண்டி பலவும் கற்றுவிட்டான். பாதிரியார் வேட்டி உடுத்தினாலும், ஆசிரமப் பையன்களெல்லாம் ஹாட்டும் பூட்ஸும் நிஜாரும்தான் அணிவது வழக்கம். முனியாண்டியும் அந்தப் பிரகாரமே செய்தான். அவன் ஏறக்குறைய நாகரிக கனவான் ஆகிவிட்டான்.

ஒரு நாள் ஓர் ஆள் வந்தான். பேயாண்டியிட மிருந்து முனியாண்டிக்கு அழைப்பு வந்துவிட்டது.

"சாமி, முனியாண்டியின் தகப்பனார் பேயாண்டி கிழவனாகிவிட்டார்; நோயும் பாயுமா யிருக்கிறார். தன் தொழிலை இனிக் கவனிக்க அவரால் இயலாது. மகனை அழைத்துவரச் சொன்னார். அனுப்பியருள வேண்டும்" என்றான் ஆள்.

"மகனே, போய் வா. வாழ்க்கையிலே எவரிடமும் கண்ணியமாய் நடந்துகொள். நீ படித்த படிப்பையெல்லாம் ஊரிலே பரப்பு. கடவுள் அருள்புரிவார்" என்றார் பாதிரியார்.

"அப்படியே செய்கிறேன், சாமி" என்று சொல்லி விடைபெற்றான் முனியாண்டி. காட்டிலே தந்தையை மகன் வந்து கண்டான். தலைவணங்கிச் சலாம் வைத்தான்.

**ப**டுத்த படுக்கையா யிருக்கும் தந்தையின் கட்டிலருகே முழந்தாள் படியிட்டு, "அப்பா! என் அருமை அப்பா! ஆண்டவன் உங்களை இன்னும் பல காலம் காப்பாற்றி வைப்பாராக! ஊரார் களிக்கவும் குலம் தழைக்கவும் பன்னெடுநாள் சேவை புரிவீர்களாக!" என்று, கண்ணீர் ததும்ப, அவன் பிரார்த்தித்தான்.

"அட முட்டாள்! இந்த அழுகையெல்லாம் வேண்டாம். நான் இன்று நேரே நரகத்துக்குப் பிரயாணமாகிவிட்டேன். உனக்குப் பெரிய சொத்துச் சேர்த்துவைக்க எண்ணினேன். முன்னே யிருந்த பணமெல்லாம் உன் படிப்பிலே போய்விட்டது. பின்னே நமது தொழில் அவ்வளவாகச் சுகப்படவில்லை. ஆனாலும், மேயப் போகிற மாட்டுக்குக் கொம்பிலே புல்லைக் கட்டி விடுவதில்லையே? கறையான் தன் வாய் ஈரம் கொண்டே மண் சேர்ப்பது போல, நம் தொழிலை நீயே கவனித்துப் பிழைத்துக் கொள்."

"அப்பா, உங்களுக்கு என்ன நோய்?"

"பாரிசமடா, பாரிசம். நான் பிழைக்கப் போவதில்லை; பிழைக்க ஆசையுமில்லை. படுக்கையை விட்டு என்னால் எழுந்திருக்கவே முடிய வில்லை. சனியன் பிடித்த வியாபாரி களோ ரொம்பத் தந்திரம் கற்றுவிட் டார்கள். இப்போதெல்லாம் இந்தப் பாதையிலே வருவதில்லை. எங்கேயோ சுற்றிவளைத்த பாதையிலே போகிறார் கள். நமது தொழிலை எப்படி நான் நடத்த முடியும்?"

"அப்பா, கவலைப்படாதீர்கள். உங்கள் தொழிலை நான் ஏற்றுச் செவ்வையாய் நடத்தி உங்கள் பெயர் விளங்கச் செய்வேன்."

"செய்வாயா?"

"ஆம். மனப்பூர்வமாய், கண்ணிய மாய், சகல ஜீவராசிகளிடமும் அன் போடு, தொழில் செய்வேன். இது சத்யம்."

"அன்பா! அதென்னடா அன்பு! அன்பை வைத்துக் கொண்டு என்ன மண்ணாங்கட்டியாவது? நமது தொழி லுக்கு அது கட்டி வராதே!"

"அது என்ன தொழில், அப்பா?"

"வழிப்பறிக் கொள்ளை" என்றான் பேயாண்டி. அதற்கு மேல் பேச அவனால் முடியவில்லை. அப்படியே கண்ணை மூடி விட்டான். அவன் ஆவி, கடைசி யாத்திரை கிளம்பி விட்டது.

முனியாண்டியின் பாடு மிகவும் தர்ம சங்கடம் ஆகிவிட்டது. தகப்ப னிடம் செய்து கொடுத்த சத்தியத்துக் குக் கட்டுப்பட்டு, வழிப்பறித் தொழிலைக் கடைப் பிடிக்கத் தீர்மா னித்தான். ஆயினும், கண்ணியத்தை விடுவதேயில்லை யென்று சங்கல்பம் செய்து கொண்டான்.

வேலைக்கார நொண்டி வந்து, "தம்பி, உலை வைக்க ஒன்றுமில்லை; கையிலே ஒரு தம்படி காசுமில்லை. ஏதாவது சம்பாதித்து வந்தால் தான் இன்று வயிற்றைக் கழுவலாம்" என்றான்.

முனியாண்டி தொழிலிலே ஈடுபட ஆயத்தமானான். தகப்பனின் துப் பாக்கிகளிலே ஒன்றைத் தோளிலே மாட்டிக் கொண்டு, தூரத்துச சாலைக் குப் போனான்.

அங்கே குதிரை மீது ஒரு வியாபாரி வந்து கொண்டிருந்தான். முனி யாண்டி மிக்க மரியாதையாக அவ னுக்கு முன்னே போய் நின்று சலாம் வைத்து, "கனவானே, தயவு செய்து தங்களிடம் உள்ள பண முடிப்பையோ பிற பொருளையோ என்னிடம் கொடுத்து விடும்படியாகக் கேட்டுக் கொள்ளுகிறேன். நான் ஒரு வழிப் பறிக் கொள்ளைக்காரன்" என்று தெரிவித்துக் கொண்டான்.

வியாபாரியும் மிக மரியாதையாகவே குதிரையை விட்டு இறங்கிச் சலாம் வைத்து, "வழிப்பறிக் கொள்ளைக் காரனா?" என்று ஆச்சரியத்தோடு கேட்டார்.

"ஆம். சோர சக்ரவர்த்தி பேயாண்டியின் மகன் முனியாண்டி."

"அப்படியா! நானும் ஒரு வழிப் பறிக் கொள்ளைக்காரன் தான். உங் கள் அப்பாவுக்கும் எனக்கும் வெகு சிநேக மாயிற்றே. அவரும் நானும் ஓர் ஒப்பந்தம் கூடச் செய்து கொண் டிருக்கிறோமே. அவர் உனக்குச் சொன்னதில்லையா? இந்தச் சாலை எனக்கு; அந்தப் பக்கமுள்ள சாலை அவருக்கு. என் சாலையில் அவரோ அவர் ஆட்களோ சந்ததியோ, அவர் சாலையில் நானோ என் ஆட்களோ சந்ததியோ ஆக்ரமிப்பதில்லை என்று எங்களுக்குள் ஒப்பந்தம். அதை நீ மீறுகிறாயே. நியாயமா?"

மரியாதை மிக்க முனியாண்டி, "அவ்விதமானால், சரி. நான் போய் வருகிறேன். மன்னியுங்கள்" என்று திரும்பினான்.

"நில். இதற்கு எங்கள் ஒப்பந்தத் தில் ஒரு தண்டனை உண்டு. ஒப்பந் தத்தை மீறுவோரின் ஆயுதம், அணி களை யெல்லாம் மற்றவர் பறி முதல் செய்து கொள்ள வேண்டும் என்பது ஒப்பந்த ஷரத்து."

முனியாண்டி சத்தியசந்தன் அல்லவா? தன் துப்பாக்கியையும், வார்க்கச்சைமுதலியவைகளையும் வியாபாரியிடம் சமர்ப்பித்து விட்டு, வெறுங் கையோடு வீடு திரும்பினன்.

இந்த முட்டாள் தனத்தைக் கண்டு வேலைக்கார நொண்டிக்கு எரிச்சல் எரிச்சலாய் வந்தது. "இந்தா தம்பி, நாளைக்கு இந்தப் பாதையிலே எந்தப் பயல் வந்தாலும் சரி, ஒரே குத்தாய்க் குத்திப் பணத்தைப் பறித்துக் கொண்டு வா?" என்று சொல்லிக் கொடுத்தான்.

அடுத்த நாள், சாலையிலே ஒரு ஜமீன்தாரின் குதிரைவண்டி வந்தது. ஈட்டியோடு எதிரே போய் நின்றுகொண்டு சலாம் வைத்தான் முனியாண்டி. அன்று அவன் உறுதியாய்த்தான் இருந்தான்; என்ருலும், மரியாதையை மறக்கவில்லை. முதல் நாள் சொன்ன படியே, ஜமீன்தாரிடமும் சொன்னன்.

ஜமீன்தாரும் சலாம் வைத்துவிட்டு, வண்டிக்குள்ளே திரும்பி, "தங்கச்சி, இதோ ஒரு கனவான் வந்திருக்கிருர், பார்; மரியாதையான திருடர்" என்ருர்.

உடனே, வண்டியின் பின்புறத்தில், பூதகிபோல் ஒரு முதிய பெண்மணி கீழே குதித்திறங்கினுள். "அடே பாவி! திருட்டுப்பயலே! போக்கிறியே! சோரனே! அயோக்கியனே! நாஸ்திகனே! அஞ்ஞானியே! கிராதகனே! கொலைகாரனே! உதவாக்கரையே! சோம்பேறியே!" என்று தட தட என்று திட்டிக்கொண்டே போனுள்.

முனியாண்டிக்கு ஒரே கலவரமாகி விட்டது. 'பெண்களிடம் மிக்க மரியாதையாக நடந்துகொள்ள வேண்டும்' என்று பாதிரி ஆசிரமத்திலே கற்ற சன்மார்க்க போதனை அவனுக்கு ஞாபகம் வந்தது.

"தாயே, என்னை மன்னியுங்கள். வண்டியிலே பெண்பிள்ளை இருந்தது எனக்குத் தெரியாது" என்று விநயமாய்ச் சொன்னன்.

"ஆமாம். இதோதான் இருக்கிறேனே! அட ஒட்டகமே! எருமை மாடே! கழுதையே! குதிரையே! குரங்கே! நாயே! பேயே! பூனையே! எலியே! மூஞ்சோறே!..."

முனியாண்டியால் இதற்குமேல் கேட்கச் சகிக்கவில்லை. அவன் பின் வாங்கி ஓடினன். என்ருலும், "குட்டிச் சுவரே! மூதேவியே! புழுதியே! புளியங்காயே!" என்ற பல வசவுகள் காற்றிலே மிதந்து வந்து அவன் காதிலே ஒலித்தன.

மூன்று நாளாயிற்று. இன்னும் அடுப்பு மூட்டவில்லை. இனி இங்கே உத்தியோகம் பார்த்துப் பயனில்லை என்று, நொண்டியும் கிளம்பிப் போய்விட்டான்.

மேற்கொண்டு நாலைந்து நாளின் கதையும் இப்படியே போயிற்று.

ஒரு நாள் ஒரு ராஜகுமாரி ஒரு ரதத்திலே வந்தாள். வழிப்பறி செய்யப் போன முனியாண்டி அதை மறந்து அவளிடம் காதல் கொண்டு விட்டான். அவள் தனது ஞாபகார்த்தமாக வாசனை யூட்டிய ஒரு பட்டுச் சவுக்கத்தை இவனிடம் கொடுத்துவிட்டுப் பிரியா விடை பெற்றுக் கொண்டு போய் விட்டாள். மற்ளுரு நாள் ஒரு பசுவைக் கொலைக்களத்துக்கு இழுத்துச்சென்ற ஒரு கசாப்புக் கடைக்காரன், தன்னையே நம்பி ஒன்பது அநாதைகள் வாழ்வதாகச் சொல்லி, இவனிடம் பத்துப்பணம் நன்கொடையும் வாங்கிச் சென்று விட்டான்.

முனியாண்டிக்கு ஒரு மார்க்கமும் புரியவில்லை. தான் கல்விபயின்ற 'ரட்சண்ய நிகேதனத்தின்' ஆசிரமப் பாதிரியாரிடமே போய்ச் சேர்ந்தான்.

"சாமி, நான் நாகரிக மெல்லாம் படித்துவிட்டேன். ஆனல், பிழைக்க வழி தெரியவில்லையே! என்ன செய்வேன்? தவிர, என் தகப்பனரின் தொழிலை விடாதுபுரிவதாக, அவருக்கு நான் செய்துகொடுத்த சத்தியம்தான் என்ருவது?" என்று கேட்டான்.

"மகனே, வழிபறிக்கொள்ளை உனக்குத் தகாத தொழிலாகும். ஒரு காரணம், அது மகாபாவமாகும்; இன்னெரு காரணம், அது உனக்குத் தெரி

யவு மில்லை. உன் சத்தியத்துக்கும் பங்க மில்லாமல், உனக்குச் சாத்திய மாயு மிருக்கும் ஒரு வழியை நான் சொல்லிக் கொடுக்கிறேன். நீ ஒரு சுங்கச்சாவடித் தண்டல்காரன் ஆகி விடு'' என்றார் பாதிரியார். சர்க்கா ருக்குச் சிபார்சு செய்து, மங்களபுரம் பட்டணத்தில், சுங்கச்சாவடி உத்தி யோகமும் அவனுக்கு அவர் வாங்கித் தந்தார்.

முனியாண்டி அதில் அமர்ந்து, வண்டி ஒன்றுக்கு அணா இரண்டு, மாடொன்றுக்கு அணா அரை, குதி ரைக்கு ஓர் அணா என்று அட்ட வணைப்படி ஒழுங்காய் வசூல் செய்து காலம் கழிக்கலானான்.

அநேக வருஷங்கள் ஆயின. 'ரட் சண்ய நிகேதன'த்தின் பாதிரியா ருக்கு, தம்மிடம் குருகுல வாசம் செய்த பையன் முனியாண்டி இப் போது எப்படியிருக்கிறான் என்று அறிய விருப்பம் உண்டாயிற்று. அவர் தமது வண்டியைப் பூட்டிக் கொண்டு ஜாம் ஜாம் என்று சலங்கை குலுங்க மங்களபுரம் பட்டணத்துக்குப் போனார். சுங்கச் சாவடியில் குறுக்கே ஒரு கழி போட்டிருந்தது. சலங்கைச் சத்தம் கேட்டவுடனே தாடியும் மீசை யுமாய் ஓர் ஆள் தோன்றி அந்தக் கழியை அகற்றத் தயாராய் நின்று கொண்டு, "எடு ஐயா, காசை; எடு" என்று சலிப்போடு கத்தினான்.

பாதிரியார் தலையை நீட்டினார். ஆள் கொஞ்சம் கிழடுதட்டி யிருந்தாலும் அவன் தான் - இவருடைய மாஜி சிஷ் யன் முனியாண்டிதான்.

"மகனே, என்னிடம் சில்லறை யில்லையே!"

"இந்தா, அந்தக் கதையெல்லாம் எனக்குத் தெரியாது. இரண்டணாக் காசை விட்டெறிந்தால், வழியைத் திறப்பேன். இல்லாவிட்டால், நீ எக் கேடு கெட்டாலும், எனக்குக் கவலை யில்லை. உன் இரண்டணாக் காசுக் காக, நான் எத்தனை நாழி மெனக் கெடுவது?"

"ஏ முனியாண்டி, என்னை உனக் குத் தெரியவில்லையா? நான் உனது குருகுலச் சாமியார் அல்லவா? எங்கே அப்பா போயிற்று உன் மரி யாதையெல்லாம்?"

முனியாண்டி உற்றுப்பார்த்தான். பிறகு, ஏதோ முணுமுணுத்துவிட்டு, "சரிதான், சாமி. இதில் ஒன்றும் அதிசயமில்லை. சுங்கச் சாவடிக்காரன், கிஸ்தி வசூல்காரன், டிக்கட் விற்ப வன், தண்டல்காரன், அமீனா இவர்க ளெல்லாம் எங்கேயாவது மரியாதை யாய் இருப்பதுண்டா? நீங்கள் கண்ட துண்டா?"

"உண்மைதான். கண்டதில்லை."

"சரி. காசை வீசிவிட்டு நீங்கள் எப்படி வேண்டுமானாலும் நாசமாய்ப் போங்கள்" என்றான் முனியாண்டி.

சாமியார் இதற்குமேல் மரியாதை கெட விரும்பவில்லை. பையில் இருந்த தம்படிகள், காலணாக்களை யெல்லாம் துழவியெடுத்து, இரண்டணாச்சேர்த்து, அவனிடம் கொடுத்துவிட்டு நகர்ந்தார்.

முனியாண்டி இப்போது உயிரோடு இருக்கிறானோ, இல்லையோ தெரியாது. ஆனால், அவனுடைய திருக்குலத் தாரை, நீங்கள் நாடெங்கும் காண லாம். மரியாதை என்ற சரக்கை அவர்களிடம் நீங்கள் துளிக்கூடப் பார்க்க முடியாது. அகாரணமாய் அவர்கள் உங்களை அவமதிப்பார் கள். ஏனெனில், அது அவர்களின் பரம்பரைக் குணம்.

✲

## வாதத்துக்குப் பதில்

தாம் சொல்லும் விஷயங்களை மறுத்துத் தம்மை வம்புக்கிழுக்கும் கடிதங்களுக் கெல்லாம், முடிவான பதில் எப்படி எழுதுவது என்பதை, மென்கென் என்ற ஓர் அறிஞர் கண்டு பிடித்து வைத்திருந்தாராம். அது முடிவானது; மரியாதையானது; எதிரியின் கடிதத்தைப் படிக்காமலே எழுதி விடக்கூடியது. அந்தப் பதில் இது தான்: "அன்பார்ந்த ஐயா (அல்லது அம்மா)! தாங்கள் சொல்வதே சரியா யிருக்கவும் கூடும்."


லைப்பாய்
பழக்கத்தையும் அவன்
அறிந்திருக்கிறான்
அவன் ஸ்கூலுக்குப் போகிறான். அங்கிருந்து என்ன கொண்டு வருவான்? புதிய அறிவு, புதிய முறைகள் — சில தொத்து வியாதிக் கிருமிகளுங்கூட! அவனுக்குக் கற்றுக் கொடுத்த எல்லாப் பாதுகாப்புகளுடனும் தாயார் தன் மகனை அனுப்புகிறாள். ஆரோக்கியமுள்ள சிறுவனையும் பீடிக்கக் கூடிய அழுக்கு அபாயத்திலிருந்து காப்பாற்ற லைப்பாய் சோப்பைத் தினசரி உபயோ இப்பதே அவற்றுள் முக்கியமானது.
லைப்பாய் ஒரு நல்ல சோப்பைக் காட்டிலும் சிறந்தது.
அது ஒரு நல்ல பழக்கம்
LIFEBUOY
SOAP
L. 78-50 TM.
LEVER BROTHERS (INDIA) LIMITED

# பாண்டியன் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி

## லிமிடெட்

(இந்தியாவில் ஸ்தாபிதம் 1933)

தலைமை ஆபீஸ்-மதுரை.

கிளை ஆபீஸ்கள் :

பம்பாய் : லாயிட்ஸ் பாங்க் பில்டிங், ஹார்ன்பி ரோடு.
அகமதாபாத் : 1761, காந்தி ரோடு.
கல்கத்தா : 26, டல்ஹௌஸி ஸ்குயர்.
ராவல்பிண்டி : லாயிட்ஸ் பாங்க் காம்பவுண்ட், எட்வர்ட்ஸ் ரோடு.

தீ விபத்து சம்பந்தமான சகலவித இன்ஷ்யூரன்ஸ் திட்டங்கள்.

**மொத்த ஆஸ்திகள் ரூ. 42,00,000-க்கு மேல்.**

பிரதம ஏஜண்டுகள் :

ஏ. & எப். ஹார்வி—மதுரை, தூத்துக்குடி, அம்பாசமுத்திரம்.
K. M. S. லெக்ஷ்மணய்யர் & சன்ஸ்—மதுரை.
அழகப்பா கார்ப்பரேஷன்—கன்னனூர்.
ராஜபாளையம் கமர்ஷியல் பாங்கு லிமிடெட்—ராஜபாளையம்.
N. M. R. கிருஷ்ணமூர்த்தி—மதுரை.
V. V. C. R. முருகேச முதலியார்—ஈரோடு.

use

# KESHA-MITRA

HAIR-OIL
(VEGETABLE)

A LITTL' S ORIENTAL BALM PRODUCT



அடர்த்தியான, கருகருத்த
நீண்ட கேசத்திற்கு

# கேசமித்திரா

## ஹேர் ஆயில்

வழுக்கை, பொடுகு, முதலியவற்றை
அறவே போக்குகிறது.

எல்லா மருந்து வியாபாரிகளிடமும் ஷாப்புகளிலும் கிடைக்கும்

லிட்டில்ஸ் ஓரியண்டல் பாம்
அண்ட் பார்மசூடிகல்ஸ் லிமிடெட்
11-12, முதல் லைன் பீச் : : சென்னை

# சகுந்தலை துயரம்



**மஞ்சேரி எஸ். ஈச்வரன்**

மேக்-அப் நிபுணர், நடிகைக்குச் சிங்காரம் செய்த சிரமம் தீர, ஒரு கோப்பை தேநீர் குடிக்க விரும்பி வெளியே கிளம்பினார்.

சொர்ணகுமாரி, ஒரு பிரம்மாண்ட மான நிலைக்கண்ணாடியின் முன்னே உட்கார்ந்து, தன் அழகை உற்று உற்றுப்பார்த்துக்கொண்டிருக்கிறாள். அவள் ஜனங்களின் செல்வக் குழந்தை போன்ற புதிய நட்சத்திர மாவாள். பிங்களா ஸ்டுடியோ கொஞ் சம் ஆட்டமெடுத்துப் போனதால், அதை நிமிர்த்துவதற்கு இவளைத்தான் நம்பி யிருக்கிறார்கள். மேஜை மீது ப்பற்பல அலங்கார சாமான்களும் சிதறிக் கிடக்கின்றன. அவைகளை யெல்லாம் பிரதிபலித்துக் கொண் டிருக்கிறது நிலைக்கண்ணாடி.

சகுந்தலை படத்தில், கதாநாயகி யாக நடித்துக் கொண்டிருக்கிறாள் சொர்ணகுமாரி. இந்த வருஷத் திலேயே, பிங்களா ஸ்டுடியோவின் தலை சிறந்த அபூர்வப் படமாக இருக்கப் போகிறதாம் அது. கர்ணாம்ருத சங் கீதம், மறக்க முடியாத காட்சி (இவை ஸ்டுடியோவின் விளம்பரச் சொற்கள்) இந்த அம்சங்களோடு கூடி, தென் னிந்தியாவில்—ஏன், அகில இந்தியா விலுமே தான்—சினிமா உலகத் தில் சரித்திரப் பிரசித்தி பெறப் போகிற படமாம் இந்தச் சகுந்தலா. சில சினிமா நிபுணர்கள் சொல்லும் அபிப்பிராயம் இது.

சொர்ணகுமாரி, அறையிலே தனி மையாய் இருக்கிறாள். காமிராவின் அழைப்பு வருவதற்கு முன், சற்று நேரம் ஏகாந்தமாய் இருக்க அவள் விரும்பினாள். தன் சொந்த வேலைக் காரியைக் கூட அவள் வெளியே அனுப்பி விட்டாள். இரவு நேரம். வெளியே இருளும் குளிரும் சூழ்ந் திருந்தன. உள்ளே வாடை வீசாத படி—மனிதர்கள் நுழையாதபடியும் தான்—கதவைச் சாத்தி உட்புறம் தாழிட்டுக் கொண்டாள். உயரமான ஒரு நாற்காலி மீது அமர்ந்தபடி குனிந்து நிலக்கண்ணாடியைப் பார்த்த வண்ணம், அவளது சிவந்த உதட்டில் ஒட்டிக் கொண்டிருந்த ஒரு தூசித் துணுக்கைச் சுண்டு விரலால் தெறித் துத் தள்ளினாள். கண்களை அகல விழித்தாள். மையால் எழுதிய நேர்த்தியான புருவத்தை ஏறிட்டு உயர்த்தினாள். அலையலையாய்ச் சுருண்டிருந்த தலைமயிரைத் தடவிக் கொடுத்துக் கொண்டாள். வசீகர மான ஒரு புன்முறுவல் செய்தாள்—செய்ததாக அவள் எண்ணம். மற்று மொரு முறை அவள் புன்முறுவல் செய்தாள். அவளறியாமல் ஜாக் கிரதையாக அவளை ஒருவர் அப்போது பார்த்திருந்தால், வாயை அகலமாய்த் திறக்க அவளுக்குத் தைரியமில்லை என்பதைக் கண்டிருக்கலாம். கார ணம் அவள் பல் வரிசை தான். அதிகப்படியான் சில சிங்கப் பற்கள் அவளுக்கு முளைத்திருந்தன. அவை களைப் பிடுங்கி யெறிய, எந்தப் பல் வைத்தியனாலும் முடியவில்லை. அவை அவ்வளவு உறுதியாய் இருந்தன.

சொர்ணகுமாரியின் வாலிப முறுக் குப் போய் விட்டது. என்றாலும், ஹாலிவுட் கீர்த்தி பெற்ற மாக்ஸ் பாக்டரின் அலங்கார வாசனைத் திரவி யங்களை உபயோகித்து, மேக்—அப் நிபுணர் எத்தனையோ கஷ்டப்பட்டு, மறைந்து போன அவள் வாலி பத்தைத் திருப்பிக் கொண்டு வரத் தம்மால் முடிந்த மட்டில் பாடுபட்

நம் தமிழ் சினிமாப் படங்கள் எடுக்கிறார் களே ஸ்டுடியோக்களில்; அவைகளில் ஒன்றில், வேஷங்கட்டி சகுந்தலையை, தேவ லோகத்து நிஜ சகுந்தலை வந்து சந்தித்து விடுகிறாள். அப்போது நடக்கும் சம்பா ஷணை, சில விநோதங்களை யெல்லாம் அம்பலப்படுத்துகிறது.

டிருக்கிறார். வயது இருபத்தைந்துக்குக் குறைவில்லை. இரட்டை நாடி உடம்பு. பெரிய நடிகை யாதலால், வர்ணம், ரூஷ், லோஷன், ஸால்வ் முதலிய சிங்கார வஸ்துக்கள் மீது அவள் பெரும் படையெடுப்பு நடத்தியிருந்தாள். மயிரை முறுக்கிவிடும் கருவி, அவள் கூந்தலில் சுழிகள் எழுப்பி யிருந்தது. வர்ணப் பசை அவள் உதட்டைச் செக்கச் செவேல் என ஜொலிக்கச் செய்தது. வாசனைப் பொடிகளும் கிரீமும் ரூஷூம் பொய்யான வாலிப எழிலை அவள் முகத்துக்கு ஊட்டி யிருந்தன. கோரமாய்ப் பட்டையாயிருந்த அவள் புருவங்களைக் கூடச் சிரைத்து விட்டு, நேர்த்தியாய் வில் புருவம் எழுதி விட்டார்கள். ஆனால், அவள் மீசையை என்ன செய்வது! அதுவே அவளுடைய துர்ப்பாக்கியமாகும். அது அரும்பு மீசை தான்; மங்கலாகவே யிருந்தது. என்றாலும், மீசை என்றால், மீசை தானே! அவள் சில சமயம் பெண்மை உணர்ச்சி பொங்கிக் குழைந்து விடுவாள். என்றாலும், இந்தச் சனியன், அந்தப் பெண்மையைக் குலைத்து விடும். அவள் மனங்கலங்கிக் குழம்பி விடுவாள்.

சொர்ணகுமாரி ஓர் உயர்ந்த நாற்காலியில் உட்கார்ந்து, தன்னிலே தான் ஆழ்ந்திருந்தாள். அவள் தலைக்கு மேலே படம் விரித்ததுபோல் நீட்டிக் கொண்டிருந்த மின்ஸார விளக்கு, தன் ஒளியை அந்த நிலைக் கண்ணாடியில் ஒரு முனைப்பட்டுப் பலமாய் வீசியது. அறையின் மீதிப் பகுதி யெல்லாம் நிழலிலே மறைந்திருந்தது. பனித்துளி போல் மென்மையான சேலை யணிந்து ஜிலுஜிலுத்த அவள் உடம்பு, களைத்துச் சோர்ந்தது போல் தோன்றியது. அவள் மார்பு, ரவிக்கையின் இறுக்கம் தாளாது கெஞ்சுவது போல் வாடி யிருந்தது. ஆனால், இந்த இயற்கைக் குறைகளும் தளர்ச்சியுமெல்லாம் அவளுக்கு ஞாபகமேயில்லை. செயற்கைச் சிங்காரிப்பினால் பெற்ற வாலிபச் செருக்கு ஒன்றையே பிரக்ஞையில் கொண்டவளாக, தன் அழகு முழுவதையும் மேக்—அப் நிபுணர் வெளிப்படச் செய்யவில்லையே என்று அதிருப்தி கொண்டவள் போல் அவள் காணப்பட்டாள். தன் முகத்தில் ஒளியும் நிழலும் கூடி வரையும் அழகுக் கோலத்தை மேம்படுத்தத் தனக்குத் தோன்றிய இரண்டொரு யோசனைகளை, அவருக்குத் தெரிவிப்பதற்காக மனத்திலே முடிபோட்டுக் கொண்டாள்.

இன்றிரவு அவள் தன் முழுத் திறமையையும் காட்ட வேண்டும். வன குமாரியான சகுந்தலையின் எளிமையையும் இயற்கை வசீகரத்தையு மெல்லாம் சம்பூர்ணமாகத் தன் நடிப்பிலே அவள் காட்டி விட வேண்டும். கண்ணுவர் ஆசிரமத்தின் நந்தவனத்திலே அன்றையக் காட்சி நடக்க வேண்டும். அந்த நந்தவனத்தில் சகுந்தலையும் அவள் தோழிகளான அநசூயா, பிரியம்வதா இருவருமாகச் செடி கொடிகளுக்குத் தண்ணீர் ஊற்றுகிறார்கள். இடையிலே, காட்டுக்கு வேட்டையாட வந்த துஷ்யந்தன் பிரவேசிக்கிறான். ஒத்திகைகளில் மிக நன்றாகவே சொர்ணகுமாரி நடித்து விட்டாள்; டைரக்டருக்குப் பரிபூர்ண திருப்தி அளித்து விட்டாள். தன் ஆடையாபரணங்கள் பிரகாசமாய் இருக்கின்றனவா என்று கவனித்துக் கொள்ளு முன்பாக, தன் சம்பாஷணைகள் சரியான சுருதியிலும் உணர்ச்சியிலும் உச்சரிப்பிலும் அமைந்திருக்கும்படி அவள் பார்த்துக் கொள்ள வேண்டும். விரல்பட்டுப் பட்டு அழுக்குப் படிந்து, ஏடுகள் அடையாளமாய் மடித்திருந்த ஒரு நோட்டுப் புஸ்தகம் மேஜைமீது கிடந்தது. அவளுடைய சம்பாஷணைகள் அடங்கி யிருந்தது அதிலே தான். காமிராவின் அழைப்பு வரு முன்னே, கடைசி முறையாக, தன் வரிகளை ஒரு தடவை அவள் படிக்க எண்ணினாள்.

அவள் கையை நீட்டி அந்த நோட்டுப் புஸ்தகத்தை எடுத்துப் பிரிக்கப் போனாளோ இல்லையோ; உடனே மேலே படம் விரித்திருந்த மின்சார விளக்கு அணைந்து போயிற்று. தலைக்கு மேலே வளைந்து நெளிந்த

சிமெண்டுக் கூரை வெடித்துப் பிளந்தது போல் ஒரு சத்தம் கேட்டது. அவள் ஆச்சர்யமும் பீதியும் மாறி மாறி அடையும் படியாக, மச்சி லிருந்து ஜோதித் திரளான மேகம் ஒன்று கீழே பாய்ந்து வந்து தரையில் குதித்தது. அதைக் கண்டு அறை யின் நிழல்களெல்லாம் சிதறியோடின. அந்த ஜோதி மேகம், வர்ணனைக் கெட்டாத ஓர் அதிசுந்தர கன்னிகை யாக மாறித்திரண்டு உருவெடுத்தது. அது திடீரென்று அதிவிரைவாய்த் தோன்றியதால், தன் மூளை குழம்பிய உருவெளியோ இது என்று ஒரு கணம் சொர்ணகுமாரி எண்ணினாள். பூத, பிரேத, பிசாசங்களைப் பற்றி அவள் கேள்விப்பட்டிருக்கிறாள். ஆனால், இதுவரையிலும் அவைகளை அவள் கண்டதில்லை. அவளுக்கு அமானுஷ்ய சங்கதிகளைப் பற்றி அப்படி ஒன்றும் விசேஷமான மோகம் கிடையாது; அவைகளை நம்பவோ மறுக்கவோ இஷ்டமும் கிடையாது; அவைகளிடம் வியப்போ பயமோ இரண்டும் கிடையாது. இந் நிலையில், அபூர்வமாய்ப் பிரத்யட்ச மான அந்தச் சுந்தர கன்னிகை, ஒரு புன்சிரிப்புப் பூத்தாள். அதனால் சொர்ணகுமாரிக்கு ஒரு நிம்மதி ஏற் பட்டது. அது மாத்திர மல்ல; கேவ லம் சதையும் குருதியுமான மண் ணுடம்புகளின் தோழமையால் சதா ஏற்பட்ட மனச் சலிப்புக்கு, இந்தக் காட்சி ஒரு மாற்றாக இருந்தது கண்டு அவளுக்கு ஒரு சந்தோஷமும் உண்டாயிற்று. அந்த அந்நிய கன் னிகையின் மேனி மகா துல்லியமாய், இவளுக்குப் புரியாத தோர் அதி சயப் பொருளால் உருவாகி யிருந் தது. அவள் குரலும் கூட வேறாகவே இருந்தது. அது மனிதக் குரலினின் றும் மாறுபட்டதாய், கானம்ருதமா யிருந்தது.

இதற்கு மேல் வீணே காலங்கடத் தாமல், "நீ யார்?" என்று கேட் டாள் சொர்ணகுமாரி.

"நான் சகுந்தலை. மேனகை என்ற அப்ஸரஸின் மகள். என் தகப்பனார் விசுவாமித்திரர். சுவீகாரத் தகப்ப னார் கண்ணுவ் மகா முனிவர். உன்னைப் பார்த்துப் பேசவேண்டு மென்று எனக்கு மிகவும் ஆவல்."

"சகுந்தலையா!" என்று கூவி னாள் சொர்ணகுமாரி. தன் கண்ணை யும் காதையும் அவளால் நம்பமுடிய வில்லை. மேலும் தொடர்ந்து "என்னை எதற்காகப் பார்க்க விரும்பினாய்?" என்று கேட்டாள்.

"ஏனென்றால், நீ என் பெயரைக் கெடுத்துக் கொண்டிருக்கிறாய்; எனது அழியாப் புகழுக்குக் களங்கம் பூசி வருகிறாய். அதனால் தான்" என்று மதுரக் குரலில் பதில் வந்தது.

"உன் பெயரை நான் கெடுக் கிறேனா? அதெப்படி? இம்மாதிரி பழி சொல்வது உன் போன்ற ஓர் அழகான கன்னிகைக்கு அழ கல்லவே!"

"உன்னை யார் என்று உனக்கே தெரிய வில்லை. உன் குறைகள் உனக்கே புரிய வில்லை."

"நிஜந்தான். நீ என்னவோ பிர மாத விஷயங்கள் பேசுகிறாய். என் உண்மையான பெயர் கண்ணம்மாள். நான் அலமேலு மங்கையின் மகள். என் தகப்பனார் சங்கரநாராயணையர். நான் யாருக்கும் சுவீகாரம் போக வில்லை. எனக்கு என்னவோ குறை கள் இருப்பதாய்ச் சொல்லுகிறாயே, அப்படியெல்லாம் ஒன்றுமில்லை. என் பெயரைச் சொர்ணகுமாரி என்று மாற்றிக் கொண்டிருக்கிறேனே, இதைத் தான் ஒருவேளை என் குறை யென்று சொல்லுகிறாயோ? அது நான் செய்ததல்ல; பிங்களா ஸ்டுடியோவின் புரொப்ரைட்டர் செய்த வேலை. அது என் சினிமாப் பெயர்."

"உன் பெயரை நீ இஷ்டப்பட்ட படியோ, பிறர் இஷ்டப்பட்டபடியோ எப்படி வேண்டுமானாலும் மாற்றிக் கொள்ளலாம். அது உன்பாடு. ஆனால், சகுந்தலை வேஷம் போட்டு, என்னை — கவி காளிதாஸனின் சகுந்தலையை — நீ சந்திக்கு இழுக்கிறாயே; அதுதான் அநியாயம்."

"கவி காளிதாஸனின் சகுந்தலையா? யாரோ அப்படி ஒருத்தியைப் பற்றிச் சொல்லக் கேட்டிருக்கிறேன்.

ஆனால், நான் சகுந்தலையாக நடிக்கும் கதையை எழுதியவர் காளிதாஸன் அல்ல; சுப்பண்ணா. என் சம்பாஷணையை எழுதியவர் பாப்பண்ணா. பாட்டுக்கள் கட்டியவர் சாஹித்ய சரபம் சோம சர்மா. அற்புதமான பாட்டுக்கள். ஒன்று வேண்டுமானால் உனக்குப் பாடிக் காட்டட்டுமா?''

"ஐயையோ! வேண்டாம்!''

"ஏன் பயப்படுகிறாய்? பிங்களா ஸ்டுடியோவுடன் ஐயாயிரம் ரூபாய்க்கு நான் கண்டிராக்டு பேசிக்கொண்டிருக்கிறேன். மூன்று மாதகாலத்துக்குள் படம் முடிந்தாக வேண்டும். இல்லையானால், இதே விகிதாசாரப்படி மேலும் சம்பளம் வாங்குவேன்.''

"சரிதான். ஆனால், நான் கவி காளிதாஸனின் சகுந்தலை, தாயே! ஒரே ஒரு சகுந்தலைதான் இருக்கமுடியும். சுப்பண்ணா! பாப்பண்ணா! என்ன கோரமான பெயர்கள்! நீயும் கோரமாய்த்தான் இருக்கிறாய். நான் உன் மாதிரி ஒருபோதும் இருந்ததில்லை.''

"அதெப்படி இருந்திருக்க முடியும்? உன் காலத்துக்கப்புறம் உலகம் எத்தனையோவிதத்தில் அபிவிருத்தி அடைந்திருக்கிறது.''

"அபிவிருத்தியா! சுத்தச் சாக்கடையில் அல்லவா நீங்கள் வாழ்கிறீர்கள். உன் அறையைப் பார்! உன் உடையையே தான் பார்! என்ன ஆபாசம்! என்ன விகாரம்! நீ உடுத்தியிருக்கிறாயே, இந்த மாதிரி ஆடையை நான் ஒரு போதும் உடுத்தியதில்லை. உனக்கு நாணமே யில்லையே!''

சொர்ண குமாரியின் முகம் கோபத்தால் நெருப்புத் தணல்போல் ஜொலித்தது. கண்ணாடிபோல் பளபளத்த தன் சேலையையும், தனது மனோகரமான வாயில் ரவிக்கையையும் இப்படி அவதூறு சொன்னது அவளுக்குச் சகிக்கவில்லை.

"நாணமில்லையா!'' என்று, உண்மையாகவே வியப்புடன், அவள் கத்தினாள்: "சினிமா எப்படியிருந்தால் பண வசூல் நடக்கும் என்பது ஒன்றும் உனக்குத் தெரியாது! அது கிடக்கிறது. நீ எம்மாதிரி ஆடை அணிந்திருந்தாய்?''

"என் சுவீகாரத் தகப்பனாரான கண்ணுவரின் ஆசிரமத்தில் இருந்த காலத்தில், மரவுரிகளையே நான் உடுத்தியிருந்தேன்.''

"மரவுரிகளையா! வேடிக்கைதான்! காட்டுமிராண்டிகள் அல்லவா மரவுரி உடுத்துவார்கள்! உன்காலத்துக்கு அப்புறம் பஞ்சிலும், பட்டிலும், கம்பளியிலும், வெல்வட்டிலும் அபூர்வமான எத்தனையோ ஆடைகளை நாங்கள் கண்டுபிடித் திருக்கிறோம்.''

"ஆனால், புனிதமான ஓர் ஆசிரமத்தில் நாம் இதையெல்லாம் உடுத்தக் கூடாது. அப்படி உடுத்துவது ஆபாசமாகும்; பாவமாகும். ஆயிரம் வருஷங்களுக்கு முன்பு இந்தப் பூலோகத்துக்கு நான் வந்தபோது, எங்கும் ஒரே அழகா யிருந்தது. எங்கள் வாழ்வையெல்லாம் கண்டு, எங்கள் பேச்சையெல்லாம் கேட்டு, அவைகளை அப்படியே மறக்க முடியாத சொற்களில் எழுதிவைத்திருக்கிறான் காளிதாஸன். அது மனிதர்கள் தேவர்களைப்போல் எண்ணி, தேவர்களைப்போல் பேசிய காலம். இப்போதோ...''

"ஆம். இப்போதோ...''

"மனிதர்கள் சுயமாய்ச் சிந்திக்கும் திறமையை இழந்து விட்டார்கள். தெய்விக அருளான சிருஷ்டிசக்தியை இழந்துவிட்டார்கள். படாடோபமும் அகம்பாவமுமே நிறைந் திருக்கிறார்கள். அளவற்ற அகம்பாவத்தால், முன்னைய மகான்கள் சொல்லியிருப்பதையெல்லாம் கூடத் தாறுமாறாய்த் திரித்துவிடுகிறார்கள்.''

சொர்ண குமாரி என்னும் கண்ணம்மாள், பிரமை பிடித்ததுபோல் மயங்கி உட்கார்ந்திருந்தாள். அந்தத் தெய்வப் பெண்ணின் குரலில் ததும்பிய உணர்ச்சியும் ஆதுரமும் அவளைச் சொக்கி மயக்கிவிட்டன. கன்னங்களிலே கைகளை வைத்தவளாய், புதியதோர் அறிவுப் பிரகாசம் உதயமானது கண்ணிலே தோன்ற, அந்தத் தெய்வப்பெண்ணையே அவள் கூர்ந்து கவனித்துக்கொண் டிருந்தாள்.

" அடாடா! இதென்ன?" என்று கேட்டு, சொர்ண குமாரியின் முக வாயைச் சுட்டிக்காட்டினள் தேவ கன்னிகை.

சொர்ண குமாரி சரேல் என்று கண்ணடியில் தன் முகத்தைப் பார்த்துக்கொண்டாள். தன் கடைவாயிலிருந்து ஒழுகிய பசை, முகவாயில் பாதியைச் சிவப்பாக்கி யிருந்ததை அவள் கண்டாள். உதட்டுக்குப் பூசும் வர்ணப்பசை இப்படிவழிந்துவிட்டது. ஞாபகமறதியாய்த் தெர்மாஸ் பிளாஸ்கில் இருந்து ஒரு கப் காப்பியை எடுத்துக் குடித்தது அப்போது தான் சொர்ண குமாரிக்குச் சட்டென்று ஞாபகம் வந்தது. அவளுக்கு அவமானமாய்ப் போயிற்று.

" அது மேக்-அப் " என்று சுருக்கமாகச் சொல்லிவிட்டு, "உதட்டைச் சிவப்பாக்கப் பூசும் ஒருவகைப் பசை அது. உண்மையைச் சொன்னல், என் ரூபம் பூராவுமே மேக்-அப்தான். தெரிந்ததா?" என்று மேலும் விளக்கினள். ஒரு துணித்துண்டை எடுத்து, தன் கன்னத்தைத் துடைத்துக்கொண்டாள். அவள் சர்மம் ஒரே கறுப்பாய்க் காட்சியளித்தது.

"என்ன கோரம்!" என்று கத்தினள் தேவகன்னிகை: "நான் ஒரு போதும் இந்த அசிங்கச் சாயங்களையெல்லாம் என்மேல் பூசிக்கொள்வதில்லை. நான் காளிதாஸனின் சகுந்தலை. அம்மா, தாயே! நீ இந்தப் பூலோகத்தில் என் கதையை நடிப்பதானல், காளிதாஸனின் சகுந்தலையாய் ஆகிவிடவேண்டும். என் பெயரைக் கெடுக்காதே. கவிஞனை அவமதிக்காதே."

திடீரென்று அந்தத் தெய்வ ரூபம், மீண்டும் பழைய ஜோதி மேகமாய் மாறி, கூரை வழியாய் வந்தபடியே திரும்பிப் போய்விட்டது.

"கொஞ்சம் நில்" என்று தீனக் குரலில் கத்தினள் சொர்ணகுமாரி.

பதில் இல்லை. வளைந்து நெளிந்த சிமெண்ட் கூரையில் பிளந்தபிளவு கிரீச் என்று ஒட்டிக்கொண்டது போல் ஓர் ஒலி அவள் காதில் விழுந்தது. பட்டெடுத்ததுபோன்ற மின்சார விளக்கு மீண்டும் நிலைக் கண்ணடிமீது பளீர் என்று ஒளி வீசியது. கதவை யாரோ பட பட என்று தட்டும் சத்தம்கேட்டு, என்னவோ உறங்கிவிழித்தவள்போல் வாரிச் சுருட்டிக் கொண்டு அவள் எழுந்தாள்.

கதவைத் திறந்தாள். புரொட்யூஸர், டைரக்டர், காமிரா-மான், மேக்-அப் கலைஞர், வேலைக்காரி முதலிய பலர் வெளியே நின்றுகொண் டிருந்தார்கள்.

டைரெக்டர் சரேல் என்று உள்ளே நுழைந்தார். அவரைத் தொடர்ந்து புரொட்யூஸரும் புகுந்தார்.

"எத்தனை நாழி நாங்கள் கதவைத் தட்டுவது? உன் காதில் விழவில்

---

### ஜனதிபதி தந்திரம்

அமெரிக்க சுதந்தர ஸ்தாபகரும் முதல் ஜனதிபதியுமான ஜார்ஜ் வாஷிங்டன், அமெரிக்கச் சட்ட சபையான காங்கிரஸ் கூட்டமொன்றுக்குப் போனர்.

"புரட்சியோ முடிந்து விட்டது. இனி எதற்கு நமக்குப் பெரிய சேனை வேண்டும்? நமது சேனையில் 3,000 பேர் இருந்தால் போதும்" என்று ஓர் அங்கத்தினர் ஒரு தீர்மானம் கொணர்ந்தார்.

இதன்மீது வாஷிங்டன் எழுந்து சொன்னதாவது: "கனவான்களே, நமது சேனையில் 3,000 பேர் இருந்தால் போதும் என்பது அருமையான யோசனை. இதில் எனக்கு ஆட்சேபமில்லை. ஆனல், இதில் ஒரு ஷரத்தும் சேர்த்துக் கொள்வது அவசியமாகும். அதாவது, எந்த நாடும், 2,000 போர் வீரருக்கு மேல் வைத்துக் கொண்டு நம் மீது படையெடுக்கக் கூடாது என்றும் நாம் சட்டம் செய்து வைத்துக் கொண்டுவிட வேண்டும்."

அசல் தீர்மானம் காற்றிலே பறந்து விட்டது.

---

லேயா?" என்று டைரக்டர் கேட்டார். நடிகையின் வேஷமும் உடையுமெல்லாம் ஒரே அலங்கோலமாயிருந்தது கண்டு அவர் திடுக்கிட்டார்.

"நான் காளிதாஸனின் சகுந்தலை ஆகவேண்டும்!" என்று, ஓர் அபூர்வ பரவசத்துடன் சொர்ணகுமாரி கூவினாள்.

புரொட்யூஸர் திக்பிரமையடைந்தவராய், அவளை வெறிக்க வெறிக்கப் பார்த்தார்.

"இப்போதே நீ காளிதாஸனின் சகுந்தலையாய்த்தான் இருக்கிறாய்" என்றார் டைரக்டர். பிறகு, அவர் புரொட்யூஸரைநோக்கித் திரும்பினார். நட்சத்திரங்களெல்லாம் இப்படித்தான் க்ஷணச்சித்தம் க்ஷணப்பித்தமாயிருப்பார்கள் என்பதை உள்ளங்கை நெல்லிக்கனிபோல் அறிந்த நிபுணர் அவர்; ஆகையால், அந்த ஞானம் தளும்பிய குரலில், "இன்று ராத்திரி ஷூட்டிங் கிடையாது. பாவம்! உணர்ச்சி மிகுதியால், அவள் ரொம்ப களைத்துப்போயிருக்கிறாள். தான் நடிக்கப்போகும் சகுந்தலை வேஷத்திலே அவள் ஊறிப்போயிருக்கிறாள். அவளுக்குக் கொஞ்சம் ஓய்வுகொடுக்க வேண்டும். இரண்டு மூன்றுநாள் ஓய்வெடுத்துக் கொண்டாளானால், எல்லாம் சரியாய்ப் போய்விடும்" என்றார்.

புரொட்யூஸர் சந்தேகக் கண்ணோடு, டைரக்டரைப் பார்த்தார். இது என்ன புதிய சூழ்ச்சிக்கோ என்று அவருக்குக் கிலி. பின்பு அவர் 'நட்சத்திர'த்தை நோக்கினார். எந்தத் தடையமும் அவருக்குப் புலப்படவில்லை. அன்று ராத்திரி ஷூட்டிங்கை நிறுத்தினால், எத்தனை ரூபா, அணா, பைசா நஷ்டமாகும் என்பதை, வாய் திறவாமல் தமக்குள் தாமே ஊமைக் கணக்குப் போடத் தொடங்கிவிட்டார்.

## யார் குற்றம்?

எங்கேயோ அரிசி மில் ஓட்டிக் கொண்டிருந்த ஒருவனுக்கு வேலை போய் விட்டது. ஆனால், இந்த யுத்த காலத்தில் வேலைக்கா பஞ்சம்? ஒரு ரயில்வே எஞ்சின் ஷெட்டில் அவன் புகுந்தான். தனக்கு யந்திரப் பயிற்சி உண்டென்றும் வேலை வேண்டும் என்றும் அங்கிருந்த ஓர் அதிகாரியிடம் சொன்னான்.

"அப்படியானால், அதோ அந்த எஞ்சினை ஷெட்டுக்குள் கொண்டு வா, பார்க்கலாம்" என்றார் அதிகாரி.

அபேட்சகனும் தைரியமாகவே எஞ்சினுக்குள் ஏறினான். அதில் இருந்த கருவிகளையெல்லாம் பார்த்தபோது, அவனுக்கு ஒன்றும் புரியவில்லை. மனதுக்குத் தோன்றிய ஏதோ ஒரு பிடியைப் பிடித்துத் திருகினான். எஞ்சின் எழுபது மைல் வேகத்தில் ஷெட்டுக்குள் பாய்ந்தது. ஆசாமி பயந்து போனான். நிறுத்த வேண்டுமே! இன்னொரு பிடியைத் திருகினான். எஞ்சின் அதே எழுபது மைல் வேகத்தில் பின்னே பாய்ந்து, ஷெட்டை விட்டு வெளியே வந்தது. அவன் மறுபடியும் எதை எதையோ திருக, எஞ்சின் முன்னும் பின்னுமாய் ஓடிக்கொண்டிருந்ததேயொழிய, நிற்கிற வழியாய்க் காணோம்.

அதிகாரி "அடே! என்ன, விளையாட்டா விளையாடுகிறாய்? எஞ்சினை ஷெட்டுக்குள்ளே கொண்டுவா என்றல்லவா உன்னிடம் சொன்னேன்?" என்று கோபித்தார்.

அபேட்சகனும் ஆத்திரமாகவே "ஆமாம்; நான் எத்தனை தரம்தான் அதை உள்ளே கொண்டு வருவது? நீங்கள் அல்லவா ஒவ்வொரு தடவையும் விட்டு விடுகிறீர்கள்! வந்த வுடனே கதவைச் சாத்தித் தாழ்ப்பாள் போடுகிறீர்களா! அதை விட்டு என்னை மிரட்டுகிறீர்களே!" என்றான்.

# தியாகம்

பெ. தூரன்

'மாரி பொழிய வில்லை — தோட்ட
மாபெருங் கேணியிலும்
நீரினைக் காணே னந்தோ — என்றன்
நெஞ்சங் குமுறு கின்றேன்.

'நீதி தவறினனோ — அன்றி
நேர்மை குலைந்தனனோ?
ஏது பிழை யறியேன் — மக்கள்
இடரில் அழுந்தினரே.'

என்றெண்ணி மன்னவனும் — துயர்
ஏறி உறங்கிடுங் கால்
கண்ட கொடுங் கனவை — அவன்
காதலிக்கே யுரைப் பான்:

'நாகினி தேவிக்குனை — பலி
நல்கிடின் நீர் பெருகி
வேகமாய் ஊறிடுமாம் — இது
விண்ணவர் தம் முடிவாம்.'

அம்மொழி கேட்டவுடன் — முகம்
அன்றலர் தாமரையாய்ச்
செம்மொழி கூறுகின்றாள் — அன்பின்
செய்தவ மன்ன மங்கை:

'குடிதுயர் தான் களைதல் — உயர்
கொற்றவன் தன் கடனும்.
கடிமணம் செய்தவர்க் காய் — வாழ்தல்
கன்னியர் தங் கடனும்.

'ஆதலின் என் பதியே — என்னை
அர்ப்பணம் செய்திடுவீர்.
காதற் கணவனுக்கும் — மக்கள்
கண்ணீர் துடைப்பதற்கும்

'சாகக் கொடுத்து வைத்தேன் — இதிற்
சாலச் சிறந்த தில்லை.
தேக மெடுத்த பயன் — இன்று
தெய்வங் கொடுத்த' தென்றாள்.

மன்னன் மனங் குழம்பக் — கூடும்
மக்கள் உளந் துடிக்க
மின்னெனக் கேணியுளே — நங்கை
வேகமாய்த் தானடந் தாள்.

'என்றனுயிர்ப் பைங்கிளியே — கமலா!
எவ்வளவில் தண்ணீர் வந்ததுரையாய்.'
'என்றனுயிர் ஆன இன்ப நாதா!
என்றன் முழங் கால் அளவில் வந்த திங்கே தண்ணீர்.'

'என்றனுயிர்ப் பைங்கிளியே — கமலா!
எவ்வளவில் தண்ணீர் வந்ததுரையாய்.'
'என்றனுயிர் ஆன இன்ப நாதா!
இடுப்பளவில் தண்ணீரிப்போ வந்திருக்கு திங்கே.'

'என்றனுயிர்ப் பைங்கிளியே — கமலா!
எவ்வளவில் தண்ணீர் வந்ததுரையாய்.'
'என்றனுயிர் ஆன இன்ப நாதா!
என் கழுத்தை எட்டி வந் திருக்கு திங்கே தண்ணீர்.'

'என்றனுயிர்ப் பைங்கிளியே — கமலா!
எவ்வளவில் தண்ணீர் வந்ததுரையாய்.'
ஒன்றும் பதில் வந்த தில்லே; ஆங்கே!
உவகை யுடன் அழுகையுமாய் உழந்து நின்றார் மக்கள்.

(அஸ்ஸாமியக் கதையைத் தழுவி எழுதியது)

*



மங்கையர்களின்

முக விலாசத்திற்கே

அற்பணம்

செய்யப்பட்டது




# ஜாப்கோ ஸ்னோ

எங்கள் இதர தயாரிப்புகள்:

பவுன்டிங். பிரில்லியன்டைன். லைம்கிளிஸ் ஹேர் குரோயர். வாஸலீன கலந்த காஸ்டர் ஆயில். கோகோநட் ஆயில் முதலியன

**ஜயபாரதம் கம்பெனி**

மல்லேஸ்வரம். பெங்களூர்




சந்தேகமன்னியில் நீ துணிச்சலாய் இருக்கிறாய். அப்படி இல்லாவிட்டால் தான் நீ ஒரு அதிசயமான சிறுவனாய் இருப்பாய். ஆனால் வீரமுள்ள இந்திய சிறுவன் என்ன செய்யக்கூடும் என்று நீ கேட்கலாம். விடை மிக எளிது. அவன் ஐ. ஏ. எப்பில் சேருகிறான். இந்த மேன்மையான சேவையில் அவனுடைய பால்ய தைரியத்தை சாண்பிக்க வேண்டிய சந்தர்ப்பங்கள் உண்டு. மேலும் நடத்தையின் நற்குணத்துக்கு அஸ்திவாரம் போட்டு வருவான். பிற்கால வெற்றிக்கு, தலைமைவகிப்பதின் அதிகாரங்கள், சிகை, முதல் எத்தனம் எல்லாம் முக்கியமான தேவைகள். யுத்த பிற்கால இந்தியாவிற்கு உங்களை ஐ. ஏ. எப். தயார் செய்யட்டும்.

## உங்களுடைய பிற்கால வாழ்க்கையைப் பற்றி நினைப்பதற்கு இதுவே சமயம்!

* இந்திய ஆகாயப் படையில் அடையும் பயிற்சியும் அனுபவமும் அனேகருக்கு லாபகரமான சிவில் வாழ்க்கை நடத்த தேவையான யோக்யதாம்சங்களை கொடுக்கிறது என்பதற்கு சந்தேகமேயில்லை.
* யுத்தம் நடக்கும் வரை தங்கள் ஆதிக்கத்திலுள்ள அநேக வேலைகளை காலியாக வைத்திருப்பதாக சர்க்கார் வாக்களித்திருக்கின்றனர். இந்த வேலைகள் பிற்பாடு யுத்தசேவை செய்தவர்களைக் கொண்டு பூர்த்தி செய்யப்படும்.
* யுத்த சேவையிலிருந்தவர்களில் தேர்ந்தெடுத்தவர்களுக்கு குறிப்பிட்ட வியாபாரம் அல்லது தொழிலில் சர்க்கார் சிலவில் பிரத்யேக பயிற்சி அளிப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள் தயாராகி வருகிறது.
* தற்சமயம் பல்கலைக்கழகத்திலிருக்கும் மாணவர்களுக்கு யுத்த சேவையால் யுத்தத்திற்குப் பிறகு மதிப்பு உள்ள சலுகைகளை அடைவார்கள். அதன் மூலம் அவர்கள் மேற்கொண்டும் படிக்கலாம். சரியான விவரங்களை பல்கலைக்கழக அதிகாரிகளிடமிருந்து பெறலாம்.

இந்த கூப்பனை கத்தரித்து அதை உங்களுக்கு சமீபத்திலுள்ள G. D. (பைலட்டுகள்) ரெக்ரூட்டிங் ஆபீசருக்கு அனுப்புங்கள். அவர் உங்களுக்கு விண்ணப்ப பாரமும் இந்திய ஆகாயப் படையில் பைலட் சேவைக்கான விவரங்களையும் நிபந்தனைகளையும் அனுப்புவார்.

பெயர் ____________________

விலாசம் ____________________

### ஐ. ஏ. எப்க்குத் தேவையானது

நல்ல திடசரீரமும், நல்ல பார்வை, காது கேட்குதல், 17½ முதல் 28 வயதுக்குள் இருக்கும் மனிதர்கள் அவர்கள் சுறுசுறுப்புள்ள யுத்த சேவையில் பறப்பதினால் ஏற்படும் பிரயாசத்தை தாங்கக் கூடியவர்களாய் இருக்கவேண்டும். நல்ல பொது அறிவுள்ள படிப்பும் ஆங்கிலம் நன்றாய் பேசவும் எழுதவும் தெரிந்திருக்க வேண்டும்.

உங்களது கூப்பனை
சமீபத்திலுள்ள G. D. R. Oக்கு அனுப்புங்கள்

**I. A. F. G. D. (பைலட்) ரெக்ரூடிங் ஆபீஸர்**
**புதுப்பேட்டை லையன்ஸ், மவுண்ட் ரோட்,**
**மதராஸ், அல்லது கப்பன் ரோட், பெங்களூர்**

AAA—1531—TM



# வேண்டாதது

மு. அருணாசலம்

மூன்று வருஷங்களுக்கு முன் நடந்த சிறு சம்பவம்; இன்று நினைத்தாலும் ரசமாயிருக்கிறது. ஒரு நாள் காலையில் நான் ஏதோ காரியமாகக் கொஞ்ச நேரம் வெளியே போய்விட்டுத் திரும்பி வந்துகொண் டிருந்தேன். முதல் நாளிரவு நல்லமழை பெய்திருந்தது. மாம்பலத்தின் நிலைமையை வர்ணிக்கவேண்டாமே! எங்கள் தெருவோரமாக இரு பக்கத்திலும் இரண்டு பெரிய வாய்க்கால்கள், காட்டாறு போல அடித்துமோதிக்கொண்டு ஓடிக் கொண் டிருந்தன. தெருக் கோடியில் சைக்கிள்மீது நான்வந்தபோது, வலது புறத்து வாய்க்காலில் ஏழெட்டுக் கப்பல்கள்—காகிதக் கப்பல்கள்தான்-சுகமாக மிதந்து கொண்டு வந்தன. ஒவ்வொன்றிலும் பலவகைச் சரக்கு—கூழாங்கல், செங்கல்தூள், கப்பிமண் முதலியன – ஏற்றப்பட் டிருந்தது. இரண் டொன்று ஒரு பக்கமாக ஒதுங்கி, கவிழ்ந்து கிடந்தது. வேறு சில, தண்ணீரின் வேகத்தில் சுழன்று அமிழ்ந்திவிட்டன. மிச்ச முள்ளவை தான் தெருக்கோடி வரையில் போய்ச் சேர்ந்தன. யாரோ பையன் அழகாகக் கப்பல் செய்து தண்ணீரில் விட்டு விளையாடுகிருன் என்றெண்ணி, கப்பல்கள் சென்ற காட்சியைப் பார்த்து அனுபவித்துக் கொண்டே வந்தேன். கப்பல் செய்த காகிதம் ஏதோ நோட்டிலிருந்து கிழித்தது போலத் தெரிந்தது.

வீடுவந்து சேர்ந்தேன். தெரு ஓரத்தில், என்னுடைய மகன்-ஐந்து வயதுள்ள சிறு பயல்—அ, ஆ கூட எழுத்துக்கூட்ட அறியாத சிறுபயல்—நின்றுகொண்டு கப்பல் விட்டுக்கொண்டிருந்தான்.

"என்னடா இந்த ஈரத்திலே வேலை?" என்று அதட்டினேன்.

"இல்லையப்பா, கப்பல்விடுகிறேன்."

"ஏதடா உனக்குக் காகிதம்?"

"ராத்திரி எனக்கு ஒரு நோட்டுக் கொடுக்கிறே னென்று சொன்னீர்களே, அந்த நோட்டு."

முதல் நாளிரவுதான் ஒரு நோட்டில், ஒரு பத்திரிகையின் விசேஷ மலருக்குக் கட்டுரை எழுதிக்கொண்டிருந்தேன். அந்தச் சமயம், இவன் வந்து காகிதமும், பென்சிலும் வேண்டுமென்று பிடிவாதம் செய்தான். ஒரு பென்சிலை மட்டும் கொடுத்துவிட்டு, "நேரமாயிற்று. படுத்துத் தூங்கு, பொழுது விடிந்ததும் எழுதலாம். இந்த நோட்டு உனக்குத்தான்" என்று சொல்லி, நான் எழுதிக்கொண்டிருந்த நோட்டை அவனிடம் காட்டினேன். அவனும் போய்ப் படுத்துத் தூங்கி விட்டான்.

எனவே, இப்போது அவன் சொன்னதைக்கேட்டு எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. வேகமாக உள்ளே போய், மேஜைமேல் பார்த்தேன். நான் இரவு முழுதும் கண்விழித்து அருமையாக எழுதிய கட்டுரையைக் காணேம். நோட்டில் எழுதாமலிருந்த ஏடுகள் அப்படியே இருந்தன; எழுதிய பத்து ஏடுகளை மட்டும் காணவில்லை!

வேகமாகத் தெருவிலே வந்தேன். "நீங்கள் காட்டினீர்களே அந்த நோட்டில், நல்ல காகிதத்தை அப்படியே வைத்துவிட்டேன். எழுதியிருந்ததை மட்டும் கிழித்துக் கப்பல் செய்தேன். தெருக்கோடி வரையில் கப்பல் போகிறது. வந்து பாருங்கள், அப்பா!" என்று சொல்லி, என்னைக் கூப்பிட்டுக்கொண்டே பையன் வந்தான்.

---

செங்கல்லை அடுக்கிச் சுவரை எழுப்பலாம். மூளிச் செங்கல்கூடச் சில இடங்களில் உபயோகப்படும். ஆனல், புத்தகங்களில் உள்ள சகல விஷயங்களையும் அடுக்கி மூளையை எழுப்பமுடியாது. எழுப்பினல் அந்தச் சுமை தாங்காமல் மூளை உட்கார்ந்துவிடும். சில அறிஞர்கள் இந்த விஷயங்களில் கையாளும் தந்திரம் மிக்க ரசமானதாகும்.

நான்தான் என்ன செய்யமுடியும்? கப்பல்கள் பாதிக்குமேல் வெள்ளத்தில் அழுந்திவிட்டன. பாதி போன இடம் தெரியவில்லை. தெரிந்தாலும் எழுதின மை தண்ணீரில் அழிந்து விட்டது.

"ஏண்டா நோட்டை எடுத்தாய்?" என்று கேட்டுப் பையனை அடிப்பதா? அடித்தால் கட்டுரை திரும்பி வருமா? 'இந்த நோட்டு உனக்கு' என்று நான்தானே சொன்னேன்? காகிதக் கப்பல்கள் மிதந்து சென்ற காட்சியை நான் வியந்து அனுபவித்தது மற்றொரு புறம். இந்த அனுபவத்தை எனக்கு அளித்த பையனை நான் எப்படித் தண்டிப்பது? ஆகவே, கட்டுரை கேட்ட பத்திரிகாசிரியருக்கு நஷ்டம், பத்திரிகை படிக்கும் வாசகர் உலகத்துக்கும் நஷ்டம் என்று எண்ணிக் கொண்டு பேசாமலிருந்து விட்டேன்.

என்னுடைய நண்பர், காலஞ் சென்ற செல்லையா, 'காகிதக் கப்பல்' என்ற பெயரில் தம் கதைகளை வெளியிட எண்ணியிருந்தார். ஆனால், இதே பெயரில் நம்மவரொருவர் ஆங்கிலப் புத்தகமொன்று வெளியிட்டிருந்தபடியால் இந்தப் பெயர் வேண்டாமென்று பிறகு விட்டுவிட்டார்.

காகிதக் கப்பலில் ஈடுபட்டவர்களுக்குக் கணக்கில்லை. குழந்தையாயிருக்கும்போதுதான் ஈடுபடுகிறார்கள் என்பதில்லை; பெரியவர்களுக்கும் இந்த ஈடுபாடு அதிகந்தான்.

ஷெல்லி என்பவர் ஒரு சிறந்த ஆங்கிலப் புலவர்; 'இயற்கைக் கவிஞர்' என்றெல்லாம் அவரைப் பலவாறாக ரசிகர்கள் புகழ்கிறார்கள். எப்போதும் அவர் படித்தபடியிருப்பாராம். வெளியே போனால் அவர் சட்டைப் பையில் எதாவது புத்தகம் நிச்சயம் இருக்குமாம். குளம், குட்டை, நீர்நிலை எதையேனும் கண்டால், அவருக்கு உற்சாகம் பிறந்துவிடுமாம்! உடனே, சட்டைப் பையிலுள்ள புத்தகத்தை எடுத்து, அதிலுள்ள வெற்றுத் தாள்களையெல்லாம் கிழித்துக் கப்பல் பண்ணி நீரில் மிதக்கவிட்டு வேடிக்கை பார்ப்பாராம்!

இது வெறும் வேடிக்கை. இதே போல, பொருளோடு கூடிய வேடிக்கையும் உண்டு.

டி. கே. சி. யவர்கள் எங்கே போனாலும் கூடவே புத்தகப் பெட்டியொன்று போகும். அதில், அவர்கள் அடிக்கடி படிக்கிற தமிழ்ப்புத்தகங்கள் இருக்கும். கம்பராமாயணம், திருக்குறள், திருவாசகம் முதலியவற்றை அதனுள் காணலாம். முத்தொள்ளாயிரம், நந்திக் கலம்பகம், குற்றாலக் குறவஞ்சி முதலியவற்றையும் காணலாம். கருவை யந்தாதிகள் முதலிய சிறு நூல்களும் இருக்கும். ஆனால், வேறு சில புத்தகங்களையும் பார்த்தால், முழுவதும் இருக்காது; ஒரு பகுதிதான் இருக்கும்.

"பதினொராந் திருமுறை இருக்கிறதா?" என்று கேட்டால், எடுத்துக் கொடுப்பார்கள். பிரித்துப் பார்ப்போம். அதில், காரைக்காலம்மையார், சேரமான், நக்கீரர், பட்டினத்தார் ஆகியோர் பாடல்கள் மட்டுமே இருக்கும். கபிலர் அந்தாதி, பரணர் அந்தாதி, நம்பியாண்டார் நம்பி முதலியவற்றைத் தேடினால் அப்புத்தகத்தில் இவை இருக்க மாட்டா. இருநூறு பக்கமுள்ள இப்புத்தகம், அறுபது பக்கமாகச் சுருங்கி யிருக்கும்.

நாலாயிரப் பிரபந்தத்தை எடுத்துப் பார்த்தோமானால், அதில் முதலாழ்வார், பெரியாழ்வார், ஆண்டாள், குலசேகராழ்வார், பாணாழ்வார், தொண்டரடிப்பொடி முதலியோர் பாடல்களை மட்டுமே காண்போம். மற்றைய பெரும் பகுதி காணப்படமாட்டாது. தனிச் செய்யுட் சிந்தாமணி என்ற பெரும் தொகுதியை எடுத்துப் பார்த்தால், அதில் முதல் நூறு பக்க மிருக்குமேயொழிய, பின்னுள்ள அறுநூறு பக்க மிருக்காது. வடகரைப் பிரபந்தம் என்ற புத்தகத்தைப் பார்த்தால், அதில் நொண்டி, காதல் என்ற இரண்டு பிரபந்தங்கள் மட்டுமேயிருக்கும்; மற்ற அனேகம் பிரபந்தங்கள் இருக்கமாட்டா.

"மற்றப் பகுதிகள் எங்கே?" என்று கேட்டோமானால், "அவை எதற்கு?

ஒவ்வொரு நூலிலும், படிக்கவேண்டிய, கவிச்சுவை நிறைந்த பகுதிகளை மட்டுமே நான் வைத்திருக்கிறேன். இவைகளையே நான் உடன் கொண்டு செல்வது வழக்கம். இவைகளை மட்டுமே படிப்பேன். நல்ல பாடல்களையே படித்தால் போதும். மற்றவற்றைப் படிப்பானேன்? அவலைத் தின்றால் போதாதா? அதைத் தவிட்டுடன் கலந்து ஊதிப் புடைத்துத் தின்பானேன்? தவிட்டைப் புடைத்து எறிவது போல, வேண்டாதது பெட்டிக்குப் பாரமாயிருக்க வேண்டாமென்று கிழித்தெறிந்து விட்டேன்" என்பார்கள்.

கிழித்த பகுதிகளையெல்லாம் கப்பல் பண்ணுவதற்குப் பேரப்பிள்ளைகளிடம் கொடுத்தார்களா என்பது எனக்குத் தெரியாது.

புத்தகத்தில் வேண்டியது வேண்டாதது என உண்டா என்று சிலர் கேட்பார்கள். நல்ல கவிதைப் பண்பு பொருந்தியது மட்டுந்தான் வேண்டியது; மற்றது, அதாவது கவிதைப் பண்பு இல்லாதது, வேண்டாதது. முந்தியதை மட்டுமே படிக்கவேண்டும் பிந்தியதைப் படிக்க வேண்டாம் என்பது மட்டுமல்ல, படிக்கக் கூடாது- இதுவே டி. கே. சி. கொள்கை.

'இந்தக் கொள்கை இருக்கட்டும்: ஒப்புக்கொள்வோம். ஆனால் புத்தகத்தில் அச்சிட்டுள்ள பாட்டுக்கள் இருந்துவிட்டுப் போகட்டுமே! புத்தகத்தைப் பணம் கொடுத்து வாங்கியதில் ஒன்றும் குறைவில்லை. படிக்காததைக் கிழித் தெறிவானேன்?' என்று சிலர் கேட்கக் கூடும்.

வேண்டாதது என்றால், அதைக் கூடவே கொண்டு போவானேன்? அதிகமான புத்தகங்களைச் சுமக்கும் போது, வேண்டாததும் சேர்ந்து பெரும் சுமையாகி விடுமல்லவா?

இந்த விஷயத்தில் மேலை நாட்டுப் பெரும் புலவர்கள் சிலர் டி. கே. சி.க்குத் துணை வருகிறார்கள். வால்டேர் என்பவர் உலகப் பிரசித்தி பெற்ற பிரெஞ்சுப் புலவர், அரசியல் ஞானி. பிட்ஸ்ஜெரால்ட் என்பவர் ஒரு நல்ல ஆங்கிலப் புலவர்; பாரசீகப் புலவர் ஓமார் கய்யாம் பாடல்களை முதன் முதல் ஆங்கில மொழியில் மொழிபெயர்த்தவர். இவ்விருவருக்கும், நூல்கள் விஷயமாகத் திட்டமான அபிப்பிராயம் இருந்ததாம். நல்லது எது அல்லாதது எது என்பது பற்றி இவர்களுக்குச் சந்தேகம் இருந்ததில்லை. எனவே, இவர்கள் உயர்தரமான புத்தகங்களை மட்டுமே தங்கள் புத்தகசாலையில் சேர்த்து வைத்தார்கள். ஒரு புத்தகத்தில் நல்ல பகுதிகளும் இருந்து, மட்டமான பகுதிகளும் இருக்கும் பட்சத்தில், மட்டமான பகுதியைக் கிழித்தெறிந்து விடுவார்களாம். தங்களுக்கு மிகவும் பிடித்த பாடல்கள் எவையோ அவைகளும், மிகவும் பிடித்த நூல்கள் எவையோ அவைகளுமே இவர்களுடைய புத்தகங்களிலும் புத்தகசாலைகளிலும் எஞ்சி நின்றன.

இதே ரகத்தைச் சேர்ந்த மற்றோர் அறிஞர், தமக்குப் பிடிக்காத பகுதிகளை யெல்லாம் கிழித்தெறிந்தது காரணமாக, அவருடைய புத்தகசாலையில், முழுப் புத்தகமாக ஒரே ஒரு புத்தகந்தான் மிஞ்சி நின்றதாம்.

'கல்வி என்னும் பல் கடற் பிழைத்தும்' என்றார் மாணிக்கவாசகர். அந்தப் பல்கடலிற் பிழைப்பது அரிது தான். இந்த அருமையை எண்ணித் தான், அவரே மற்றோரிடத்தில், கற்றதுபோதும் என்ற கருத்தோடு, 'கற்பனவும் இனி அமையும்' என்று கூறி முறையிடுகிறார். மாணிக்கவாசகப் பெருமானே இப்படி முறையிடும் போது, கல்வியின் அகலத்தைக் குறைத்து அளவுபடுத்திக் கொள்வது நல்லது என்று தோன்றுகிறதல்லவா? எனவே, மனம் விரும்பி ஈடுபட்டதொன்றை மட்டும் படித்தால் போதும் என்று டி. கே. சி. யும் வால்டேரும் பிட்ஸ்ஜெரால்டும் எண்ணியது எவ்வளவு பொருத்தமுடையது!

✱

# கான் சகோதரர்கள்

ஸரஸி

மீண்டும் முதன்முதலாக, எல்லைப்புற மாகாணத்தில் காங்கிரஸ் மந்திரி சபை ஏற்பட்டுள்ளது. டாக்டர் கான் சாஹேப் பிரதமமந்திரியாயிருக்கிறார். அவருடைய சகோதரரான அப்துல் கபார்க்கான் – 'எல்லைப்புற காந்தி' என்று கீர்த்திபெற்ற உத்தமன் – விடுதலை அடைந்துள்ளார். இதெல்லாம் மகாத்மா காந்தியின் ஆசி பெற்றே நடந்திருக்கின்றனவாம். எனவே, களிக்கத் தக்க செய்திகளாகும்.

கான் சகோதரர்கள் உத்தம தேச பக்தர்கள். காங்கிரஸின் தலைசிறந்த தலைவர்கள். காந்திஜி கிழித்த கோட்டைத் தாண்டாது நடக்கும் தேசிய வீரர்கள். அவர்கள் எத்தனையோ தியாகம் செய்தார்கள். எத்தனை முறையோ சிறைசென்றார்கள். வீண் பழிக்கெல்லாம் ஆளானார்கள். அஞ்சா நெஞ்சம் படைத்த சிங்கங்களாகவே இன்றுவரை வாழ்ந்து வருகிறார்கள். 'உண்மையான இரு தேவ ஊழியர்கள்' என்று அவர்களை வர்ணிக்கிறார் மகாதேவ தேசாய் தமது புத்தகத்திலே.

மூத்தவராகிய டாக்டர் கான் சாகேப், 1883-ஆம் ஆண்டிலும், இளையவராகிய அப்துல் கபார்க்கான் 1890-ஆம் ஆண்டிலும் பிறந்தார்கள். கான் சாகேப், மேனாடு சென்று உயர்தரக் கல்வி பெற்று, ஆங்கில மாதொருத்தியையும் மணந்துகொண்டார்.

இளையவரின் படிப்பு மெட்ரிகுலேஷனோடு நின்றது. சுயகுலப் பெண்ணையே மணந்துகொண்டார். மூத்தவர் நவீன நாகரிக வாழ்க்கையில் பரிசயமுள்ளவர். இளையவர் துறவு மனப்பான்மை கொண்டவர்; முற்றிலும் காந்தீயத்திலே மனம் ஊன்றியவர்.

இந்த இருவர் தலைமையிலும், 'குதாயீ கித்மத்கார்' என்ற அபூர்வமான தொண்டர் படையொன்று எல்லைப்புறத்தில் நிர்மாணமாயிற்று. 'குதாயீ கித்மத்கார்' என்றால், 'ஆண்டவன் ஊழியர்கள்' என்று அர்த்தமாகும். இந்தத் தொண்டர்கள், எல்லைப்புற மக்களுக்கு அருஞ் சேவை புரிந்தார்கள்.

இருவரும் சர்வ மத சமரச நோக்கம் கொண்டவர்கள். இந்து-முஸ்லீம் ஒற்றுமையிலே, அளவற்ற பற்றுக்கொண்டவர்கள். இவர்களுடைய சர்வ மத சமரசத்துக்கு இரண்டு பிரத்யட்ச உதாரணங்கள் கூறலாம். கான் சாகேப் ஆங்கில மாதையல்லவா மணந்துகொண்டார்? அவள் எந்த மதத்தை வேண்டுமானாலும் சுதந்தரமாய் அனுஷ்டிக்கலாம் என்ற வாக்குறுதியளித்தே, அப்படி அவர் மணந்து கொண்டார். இளையவர், திருக் குர்ரானைப் போலவே, பகவத் கீதையையும் பெரு மதிப்போடு படித்துவருபவர்.

சட்டசபைக்கு நிற்பது, பதவி ஏற்பது முதலிய வேலைகளெல்லாம் மூத்தவரைச் சேர்ந்தது. அவையெல்லாம் இளையவருக்குப் பிடிக்காது. அவர் மகாத்மா காந்தியின் நேர் சிஷ்யர். நிர்மாண வேலை ஒன்றிலேதான் அவருடைய முழு மனதும் ஈடுபட்டிருக்கிறது. கான் சகோதரர்கள் தேசத்தின் இரண்டு கண்மணிகள். அவர்கள் இன்று காட்டியிருக்கும் வழியை, தேசமெங்கும் கடைப்பிடிக்கப்பட இடம் ஏற்படுமா? அவர்கள் தொடங்கியிருக்கும் உத்தம காரியம் நிர்விக்கினமாய்த் தேசமெங்கும் பரவி, புது வாழ்வைக் கோலுமா? அவை அவ்விதப் பலன் தரும் என்றே நாம் நம்புவோம். ஏனெனில், அவர்கள் இருவரும் 'தேவ ஊழியர்கள்.'

இந்த இதழின் அட்டையை அலங்கரிப்பவர் 'எல்லைப்புற காந்தி' என்று கீர்த்திபெற்ற அப்துல் கபார்க்கான். அவரும் அவருடைய அண்ணன் டாக்டர் கான் சாகேப்பும் அபூர்வமான இரு தேச சேவகர்கள். அவர்களைப் பற்றியது இந்தச் சுருக்கமான கட்டுரை.




எல்லைப்புறத்தில் காங்கிரஸ் மந்திரி சபை அமைப்பு, தேசாய் வேவல் சமரச முயற்சி வதந்தி ஆகியவை பற்றி, ''இச்சமயம் நான் மௌனமாய் இருக்கவே விரும்புகிறேன்'' என்கிருர் மகாத்மா காந்தி. ஆயினும், எல்லைப் புறத்தில் கான் சாகேப் மந்திரி சபை அமைக்கு முன், மகாத்மாவுக்குத் தகவல் அனுப்பி அவர் அபிப்பிராயத்தைக் கலந்து கொண்ட பின்பே, அந்த மந்திரி சபையை அவர் அமைத்தார் என்று சொல்லப்படுகிறது.

மீண்டுப்



கான் சாகேப்



சுக்லா



ராஜாஜி

சில வருஷங்களுக்கு முன்னே காங்கிரஸ் பிரதம மந்திரிகளாயிருந்தவர்கள்: சென்னை-ராஜாஜி. எல்லைப்புறம் - கான் சாகேப். பம்பாய் - கேர். பீகார் — கிருஷ்ண ஸின்ஹா. ஒரிஸ்ஸா - விசுவநாத தாஸ். ஐக்கியமாகாணம் — பந்த். மத்தியமாகாணம் - சுக்லா. அஸ்ஸாம் — பார்டலாய். இப்போது மறுபடியும் எல்லைப்புறத்தித்தில் கான் சாகேப் பிரதம மந்திரி ஆகிவிட்டார். மற்றவர்களும் பதவிக்கு வருவார்களா?



விசுவனாததாஸ்



கேர்



பந்த்



கிருஷ்ண ஸின்ஹா



பிரிட்டிஷ் சர்க்காரும் பிறரும் ஹிட்லருடன் உறவாடிக் கொண்டிருந்த காலத்திலிருந்தே அதி தீவிரமாய் நாஜி எதேச்சாதிகார தத்துவத்தைக் கண்டித்து வந்த பண்டித ஜவஹரும் அவர் தோழர்களும் இன்னமும் சிறையில் வாடுகிறார்கள். ஜவஹர் இன்று வெளிவந்தால், காங்கிரஸ் மந்திரி சபையை ஆதரிப்பாரோ, மாட்டாரோ; அது எப்படியாயினும், நாஜி முறையையும் ஜப்பானிய ஆக்ரமிப்பையும் மட்டில் இன்னும் கடுமையாகவே எதிர்ப்பார் என்பது நிச்சயமாகும். அவர் ஜனநாயகவாதி.

# அறிவாளி

ஏ. அவர்ச் செங்கோ

ஒரு மாணவன், பல்விதப் பயிர்வகைகளும் சேகரிக்க விரும்பினான். ஒரு புலத்துக்குள் புகுந்தான். உற்சாகமாய்ச் சிட்டியடித்த வண்ணம் ஏதோ பூக்களைக் கொய்து கொண்டிருந்தான். அப்போது, புலத்தின் மறுபுற மிருந்து, குடியானவர்களின் கூட்ட மொன்று தோன்றியது.

"கிராமத்தார்களே, வணக்கம்" என்று, தலை குனிந்து பணிந்தான் மாணவன். அவன் மிக்க மரியாதைக் காரன்.

"அட பீரங்கி பெற்ற மகனே! நீ நாசமாய்ப் போக!" இங்கே நீ என்ன செய்கிறாய்?" என்று கிராம வாசிகள் கேட்டார்கள்.

"ஒன்று மில்லை" என்று சொல்லி விட்டு, சிறிது புல்லைப் பிடுங்கினான் மாணவன்.

"நீ இங்கே என்ன செய்கிறாய்?" என்று மீண்டும் கேட்டார்கள் கிராம வாசிகள்.

"இது தெரிய வில்லையா? கொஞ்சம் தாவர ஆராய்ச்சி செய்து கொண் டிருக்கிறேன்" என்றான் மாணவன்.

இச்சமயம், கிராமத்து முதிய கிழவன், முன்னே வந்தான். அவன் தலை, பனி போல் நரைத்து, மரம் போல் முற்றி யிருந்தது.

"பூவா பறிக்கிறாய் பூ!" என்று அடித் தொண்டையோடு அவன் கத்தினான்: "அவன் நம்மை யெல்லாம் முட்டாள் ஆக்கப் பார்க்கிறான்! அவன் காலராப் பூச்சியை ஊரிலே கொண்டு வந்து போட்டுக் கொண்டிருக்கிறான். தம்பிமார்களே, இவனைப் பிடியுங்கள்! விடாதீர்கள்!" என்று மேலும் கூவினான் நரைத் தலைக் கிழவன்.

மாணவன் பயந்து கூச்சலிட்டான்.

"அதுதான் சரி! கத்தடா கத்து, பேய்ப் பயலே! உன்னை விடுவிக்க, இனிச் சாமியே வந்தாலும் ஆகாது. இவனைச் சோதனை போடு, அம்மான்! இவன் கிட்ட ஏதாவது பொடி இருக்கும்."

சோதனை நடந்தது. மாணவனிடம் பொடியும் அகப்பட்டது. ஆனால், அது வெறும் பற்பொடி.

"ஆ! பார்த்தீர்களா, காலராப் பொடியை! தம்பிமார்களே, இவனை என்ன செய்யலாம்? ஆற்றிலே கொண்டு போய் அமுக்கிப் போடலாமா? அல்லது, கொஞ்சம் புத்தி புகட்டி அனுப்பி விடலாமா?"

மாணவனுக்குக் கிலி பிடித்தது. இந்த இரண்டு யோசனைகளுமே அவ்வளவாக அவனுக்கு ரசிக்கவில்லை.

"பெரியோர்களே! இது வெறும் பற்பொடி. ஒரு தீங்கும் செய்யாது. உங்களுக்கு இஷ்டமானால், இதை நீங்கள் தின்னக் கூடத் தின்னலாம்" என்றான் அவன்.

"சுத்தப் பொய்!"

"உண்மையே சொல்லுகிறேன். நானே வேண்டுமானாலும், இதைத் தின்று காட்டுகிறேன். இது ஒன்றும் செய்யாது."

"பலே பேஷ்! இவன் எப்படியும் சாகவேண்டியவன். எப்படிச் செத்தால் நமக்கென்ன? இவனே தின்னட்டும் இந்தப் பொடியை" என்றான் நரைத்தலைக் கிழவன்.

மனோபாவத்தை மாற்றாமல், மக்களிடம் அறிவைத் திணித்துவிடலாம் என்று நினைப்பது, நீரிலே எழுதி நிலை பெறச் செய்யலாம் என்று எண்ணுவதையே ஒக்கும். தற்காலத்துப் பிரபல ருஷ்யக் கதாசிரியர் எழுதியுள்ள இந்தக் கதையை, நம் ராஜீய சகோதரர்கள் - முக்கியமாய்க் கம்யூனிஸ்ட் தோழர்கள் - படிக்கவேண்டும்.

சுற்றிலும் குடியானவர்கள் அவனை வளைத்து நின்று கொண்டார்கள். மாணவன் கீழே உட்கார்ந்து கொண்டான். தன்னால் முடிந்த மட்டில் அதிவேகமாகப் பல்பொடியைப் பர பர என்று தின்ன ஆரம்பித்தான்.

"அத்தனையும் தீர்த்து விட்டேன், பார்த்தீர்களா!" என்று சொல்லி, காலிப் பொட்டணத்தைக் காட்டினான்.

"சரி. பொட்டணக் காகிதத்தை ஏன் விட்டு விட்டாய்? அதையும் தின்னு!" என்றான் பனி போல் நரைத்து, மரம் போல் முதிர்ந்த தலையன்.

மாணவன் காகிதத்தையும் விழுங்கினான். மறுபடியும் சோதனை நடந்தது. ஒரு டூத்-பிரஷ், ஒரு கோந்து பாட்டில் ஆகியவை அகப்பட்டன.

"தின்னு!" என்றான் நரைத் தலையன்.

மாணவன் என்னவோ சாக்குப் போக்குகள் சொல்லிப் பார்த்தான். ஆயினும், தாடியும் மீசையுமாய் விளங்கிய சகல முகங்களும் மகா உக்ரமா யிருந்தன. இதைப் பார்த்ததும், மெல்ல நோட் புஸ்தகத்தைக் கடிக்க ஆரம்பித்து, அதிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக, டூத்-பிரஷ், கோந்து ஆகியவைகளையும் நொறுக்கி விழுங்கி, ஜய குதூகலத்தோடு சொல்லலானான்:

"பார்த்தீர்களா, பெரியோர்களே! இவையெல்லாம் ஒரு தீங்கும் செய்ய மாட்டா. நான் சொன்னது உண்மை என்று கண்டீர்களா?"

"உண்மைதான்" என்றான் கருணையுள்ள ஒரு குடியானவன்: "இவனை விட்டுவிடுவது தான் நியாயம்" என்றும் அவன் சொன்னான்.

மாணவன் பெருமூச்சு விட்டான். "நீங்கள் ரொம்ப விசித்திரமான ஆசாமிகள்!" என்றான். ஏதோ கொஞ்சம் அவர்களைத் திட்டவும் திட்டினான். இதோடு அவன் நின்றிருக்கலாம். ஆனால், அது எப்படி அவனால் முடியும்? அவன் ஓர் அறிவாளி அல்லவா?

"நீங்கள் ரொம்ப விசித்திரமான ஆசாமிகள்!" என்று மறுபடியும் கூவினான். பின்னும் தொடர்ந்து கூறலானான்: "காலரா பரவுவது பொடிகளால் அல்ல. இது உங்களுக்குத் தெரியவில்லையே! சிற்றுயிர்கள் என்று சொல்லப்படும் மிகச் சிறிய பூச்சிகளால் தான் அவை பரவுகின்றன. ஒரே ஒரு சொட்டுத் தண்ணீரில், பல்லாயிரம் பூச்சிகள் இருக்கும். அவை அவ்வளவு சிறியவை."

இத்துடனும் அவன் நிறுத்தவில்லை. இன்னும் பல உண்மைகளை அவர்களுக்கு அவன் பிரசங்கிக்கலானான்: "மின்னல் உண்டாவது மின்சார சக்தியால் – நீராவியே மேகமாய் அமைகிறது – மேகங்களை இங்குமங்கும் காற்றுத்தான் அலைக்கிறது" என்றெல்லாம் சொன்னான். அவன் இத்தனை சொன்னதையும், போனால் போகிறதென்று அந்தக் குடியானவர்கள் மன்னித்து விட்டார்கள். மேலும் அவன் சொன்னான்: "சந்திரன் சுயமாகப் பிரகாசிக்கவில்லை. சூரிய ஒளியைத் தான் பிரதிபலிக்கிறது." இப்படி அவன் சொன்னதும், கூட்டத்திலே சிறிது முணு முணுப்பு உண்டாயிற்று. கடைசியாக அவன் "பூமி உருண்டையானது. அது சூரியனைச் சுற்றுகிறது" என்று கூறினான். இப்படி அவன் கூறினானோ இல்லையோ, குடியானவர்கள் அத்தனை பேரும் அவன்மீது பாய்ந்து விழுந்தார்கள். பளீர், பளீர் என்று அறையத் தொடங்கினார்கள். அறைந்து, சக்கையாக்கி, ஆற்றிலே தள்ளி அமுக்கி விட்டார்கள்.

✲

**திருடனைப்போலே:** 'கண்டுபிடிக்கப்பட்டதும் திருடன் ஓடிப் போய்விடுகிறான். அதுபோலவே, மாயையின் சுபாவம் இன்னதென்று நீ ஆய்ந்து கண்டுபிடித்துவிட்டால் அது உன்னிடமிருந்து ஓடிப்போய்விடும்.'

—ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர்

# அகதி

**பி. வி. சுப்பிரமணியன்**

[மாதா கோவிலின் மணி வெகு தூரத்திலிருந்து நின்று நின்று கேட்கிறது. அதிகாலையில் பனி மூடிய புல்தரைத் தடத்தில், ஆடி அசைந்து கொண்டு கோவேறு கழுதைகள் கட்டிய வண்டியொன்று வருகிறது. பர்மிய எல்லையை அடுத்த நாட்டுப்புறம். அந்த வண்டியின் சத்தமும், வண்டியோட்டியின் கத்தலும் சேர்ந்து கிராமாந்தரத்தின் அமைதியை அதிகரித்துக் காட்டுகின்றன. நாலாபுறங்களிலும் மரக்கிளைகளிலிருந்து பட்சிகளின் கீதம் ஒலிக்கிறது. வண்டியானது ஒரு சிறு வீட்டின் வாசலை அடைந்ததும், அதிலிருந்து ஒருவர் இறங்குகிறார். 'டக் டக்' என்று கதவைத் தட்டும் சத்தம் கேட்கிறது.]

**ஊஸா:** கூமா, கூமா ...

**வேலைக்காரன்:** யார் அது? எஜமான் உள்ளே தூங்குகிறார், ஸார்.

**ஊஸா:** என்ன? இன்னுமா தூங்குகிறார்? எழுந்திருப்பதற்கு ரொம்ப நேரம் ஆகுமோ?

**வேலைக்காரன்:** இவ்வளவு சீக்கிரம் இங்கே யாரும் எழுந்திருக்கிறதில்லை. உஸ்! த்சொ சொ! பனியில் நிற்கிறீர்களே. தயவுசெய்து உள்ளே வாருங்கள்.

**ஊஸா:** ஆ! பனி வேறு லட்சணம். நேற்று ராத்திரி எல்லாம் பனியில் பிரயாணம் செய்துவிட்டு வருகிறவனுக்கு இந்தப் பனி ஒன்றும் பண்ணுது. ஏதாவது செய்கிறதாக இருந்தாலும்கூட, நல்லது செய்யுமே ஒழிய, கெடுதல் செய்யாது என்பது நிச்சயம்.

**வேலைக்காரன்:** ராத்திரி எல்லாம் பிரயாணமா? எங்கிருந்து வருகிறீர்கள்? (பணிவுடன்) எஜமானை எழுப்பட்டுமென்று உத்திரவா? (பின்னால் சத்தம் கேட்டுத் திரும்பிப் பார்க்கிறான்.) அதோ அவரே வந்து விட்டார்.

**கூமா:** ஊஸாவா? வா. வா, வா. சௌக்யமாக வந்து சேர்ந்தாயா, அப்பா!

**ஊஸா:** ஆமாம், கூமா. அழையாத வீட்டுக்குத் தவறாத விருந்தாளியாக வந்திருக்கிறேன்.

**கூமா:** அழையாத விருந்தாளியா? ஒரு நாளுமில்லை. இன்றைக்குத் தேசமிருக்கும் நிலையில், உன்னைப் போன்ற சிநேகிதன் மட்டுமில்லை; வேறு யார் வந்தாலும், என் வீட்டுக் கதவு அவர்களுக்குத் திறந்திருக்கிறது. அதிருக்கட்டும். உன் மனைவி எங்கே? குழந்தைகளை எங்கே விட்டு விட்டு வந்திருக்கிறாய்?

**ஊஸா:** கூமா, மனைவியையும் குழந்தைகளையும் பற்றியா கேட்கிறாய்? என்னைப் பற்றியே கேள். நான் எப்படித் தப்பினேன் என்பதைக் குறித்துக் கேள். அதுவே எனக்குத் தெரியாது. ஆண்டவனுடைய அருளிருந்தால் அவர்களுடைய முகத்தை மறுபடியும் பார்க்கலாம் என்று தோன்றுகிறது.

**கூமா:** அப் - பா! என்ன கஷ்டம்! ஊஸா, குண்டுகள் விழுந்த செய்திகளைக் கேட்கிற போதும், அவ்வப்போது வரும் பத்திரிகைகளைப் படிக்கிற போதும் என்

---

யுத்தத்தைப் பற்றிய செய்திகளை நாம் ஏதோ பொழுது போக்காகப் படிக்கிறோம். ஆனால், யுத்த ஸ்தலங்களில் நேரிலே அடிபட்ட மனிதர்களின் அனுபவங்களைக் கேட்கும் போதுதான், அதன் கோரம் நமக்குப் புரியும். அத்தகைய ஓர் அனுபவம் இது.

மனம் எப்படியிருந்திருக்குமென்பது உனக்குத் தெரியாது. அவரவர்கள், தாங்களே முடிந்த வரையில் உதவி தேடிக் கொள்ளவேண்டுமென்று அரசாங்கம் கூறிய தல்லவா? அதற்குப் பிறகு எவ்வளவு பேர் அகதிகளாக அங்கங்கே வந்திருக்கிருர்கள் தெரியுமா?

**ஊஸா:** தெரியும். என்னுடைய வீட்டையே என்னல் திரும்பிப் பார்க்க முடியவில்லை; சகிக்க வில்லை. நான் வருகிற போது இருட்டில், சூரிய வெளிச்சத்தைப் போன்ற விளக்குகளைப் போட்டுக் கொண்டு; இடிந்த வீடுகளையும் அழிந்த கட்டிடங்களையும் தோண்டிக் கொண்டிருந்தார்கள். எங்கும் ஒரே பாழ் மயமாக இருந்தது. தீ அணைக்கும் யந்திரங்கள் பறந்து சென்று கொண்டிருந்தன. அங்கங்கே வண்டிகளை நிறுத்தி, அதிலிருந்து எல்லாருக்கும் டீ கொடுத்துக்கொண்டிருந்தார்கள். ரயில்வே ஸ்டேஷன்களிலெல்லாம் ஜனங்கள் படுத்துக் கொண்டிருந்தார்கள்; அந்தக் காட்சிகளையெல்லாம் நினைத்தால் உடல் நடுங்குகிறது.

**கூமா:** அப்படியானல் மனைவி குழந்தைகளை நீ பார்க்கவே முடியவில்லை என்ரு சொல்லுகிருய்? வெடி குண்டு வீச்சுக்குப் பிறகு நீ அவர்களைத் தேடவேயில்லையா?

**ஊஸா:** தேடினேன். கண்டு பிடிக்க முடியவில்லை. தூங்கும் குழந்தைகளை உடலோடு சேர்த்துக் கொண்டு பிரார்த்தனை செய்யும் தாய்மார்களிடையிலும், ஏக்கம் ததும்பி நிற்கும் ஏழை முகங்கள் நடுவிலும், நான் அவர்களைத் துருவிப் பார்த்துவிட்டேன். எதற்கும் அதிர்ஷ்டம் வேண்டாமா? யுத்தத்தினல் என்ன பலன் ஏற்பட்டது, என்ன ஏற்படப் போகிறது என்பது எனக்குத் தெரியாது. ஆனல், எனக்கு நேரிட்ட சம்பவத்தை வைத்துக் கொண்டு பார்க்கும் போது, யுத்தம் எனக்குச் செய்த மிகப் பெரிய கைங்கரியம் இது தான். கூமா, ஒரு விதத்தில் நீ மற்றவர்களுக்குச் சொன்னது எனக்கே பொருத்தமாக இருக்கிறது. நிஜமாகவே நான் ஓர் அகதி

✲

## வாழ்க்கைப் போர் ஆயுதம்

கார்ல் மார்க்ஸுக்கு முக்கியமான சகல ஐரோப்பிய பாஷைகளும் தெரியும். ஜெர்மன், பிரெஞ்சு, இங்கிலீஷ் மூன்று பாஷைகளிலும் எழுதவும் தெரியும். ஐம்பது வயது ஆன பிறகுதான், அவர் ருஷ்ய பாஷை கற்கத் தொடங்கினர். ஆனல், ஆறே மாதத்தில் அந்த பாஷையில் நல்ல ஞானம் பெற்று, அதில் உள்ள அருமையான சில கதைகள், கவிதைகளையெல்லாம் ரசித்துப் படிக்கவும் தொடங்கிவிட்டார். "வாழ்க்கைப் போராட்டத்தில் உதவும் ஓர் ஆயுதம் அந்நிய பாஷா ஞானம்" என்று மார்க்ஸ் அடிக்கடி சொல்வார்.

## விசித்திர விடுகதை

சுதந்தரத்தைக் காப்பாற்ற ஆங்கிலேயர் போரிடுகிருர்கள்; அதே சமயம் சுதந்தரத்தை அடையப் போரிடும் இந்தியரோடும் அவர்கள் போரிடுகிருர்கள். இந்தியரோ, ஆங்கிலேயர் சுதந்தரத்தைக் காப்பாற்றப் புரியும் போரிலே அவர்களுக்கு உதவிசெய்ய இயலுமாறு தாங்கள் சுதந்தரத்தை அடைவதற்காகப் போரிடுகிருர்கள். இந்த அவந்தரையிலே தாங்கள் கைசோர்ந்து சாகவேண்டியதுதான் என்பது, இந்தியாவிலுள்ள ஆங்கிலேயர்களுக்கு ஒருபோதும் தோன்ருததுதான் விந்தை.

—லின்யூ டாங்

# பாதுகாப்புக்கு

## Godrej
## கோத்ரெஜ்

கோத்ரெஜ் பாதுகாப்புப் பொருட்களை வாங்கி, உங்கள் விலையுயர்ந்த சாதனங்களை பத்திரமாக வைத்திருங்கள். இதர தயாரிப்புகளில் கிடைக்காத **விசேஷ பாதுகாப்பம்சங்களை**, கோத்ரெஜ் இணைப்பற்ற பேழைகள், பணப் பெட்டிகள், கஜானாப் பெட்டிகள், காபினட்டுகள், அலமாரிகள், பூட்டுகள் முதலியவை உங்களுக்கு அளிக்கின்றன. நம் தேசத்தின் ஐசுவரியத்தின் பெரும் பாகத்திற்கு காவலனாக இருக்கும் பெருமை கோத்ரெஜுக்கு உண்டு. விரிந்த நம் நாடெங்கும் சர்க்கார்களும், பாங்கிகளும், வர்த்தக ஸ்தாபனங்களும், பொது மக்களும் தங்கள் செல்வங்களைப் பாதுகாப்பதற்கு கோத்ரெஜையே நம்பியிருக்கின்றனர்.



16 மூலை வளைவு
இணைப்பற்ற
பேழை



6 பேடன்ட்
காற்றுக் கட்வாத
அலமாரி



பேடன்ட்
பால் - ஸ்லைட்
பைலிங் காபினட்



ஷெல்விங் ராக்
தட்டுகளும், சிறிய
அறைகளும் கூடியது

**கோத்ரெஜ் அண்ட் பாய்ஸ் மான்யுபாக்சரிங் கோ., லிமிடெட்**

பம்பாய் ✲ கல்கத்தா ✲ சென்னை ✲ டெல்லி ✲ கான்பூர்
ஹைதராபாத் (டெக்கான்) ✲ நாடு முழுதும் ஏஜன்ஸிகள்

**இந்தியாவின் இயந்திர சகாப்தத்தின் ஆரம்பகர்த்தாக்கள்**

---

உங்கள் சரும ஆரோக்கியத்தையும் அழகையும் பாதுகாக்க, தாவர எண்ணைகளால் செய்யப்பட்ட கோத்ரெஜ் ஸ்நான சோப்புகளையே உபயோகியுங்கள்.

Godrej

## இவ்வருஷத்தின் மகோன்னத படம்!

**இராமாயணத்தின் முக்கிய அங்கம்**
**இப்பொழுது நடைபெறுகிறது**

பெங்களூர்
மூவிலண்ட்

மைசூர்
மோதிலால்

✲

விரைவில் எதிர்பாருங்கள்

சென்னை — பிரபாத்
மதுரை — சென்ட்ரல்
கோயமுத்தூர் — ராஜா

ஸ்டுடியோ :
ஜெமினி



✲

# பாதுகா

நாரஸ்
....ரிலீஸ்....

For Andhra & Ceded : Chamria Talkie Distributors.

## இந்துமத முன்னேற்றம்

வ. அ. தியாகராஜன்

மதத்துக்கும் அரசியல் நீதிக்கும் ஒரு வித்தியாசம் உண்டு. மதம் எப்போதும் இருப்பதைக் கவனிக்கிறது; அரசியல் நீதி தற்காலத்துக்கு வேண்டியதைக் கவனிக்கிறது. அரசியல் நீதியில் மித்திரபேதம், சுகிர்லாபம் முதலிய பஞ்ச தந்திரங்களும் கையாளப்பட்டுவருகின்றன. இவைகளைத் தப்பு என்று சொல்வதற்கு யாருக்கும் இன்னும் தைரியம் வரவில்லை. இவைகள் ஜயிக்குமானால், பொதுமக்கள் இவைகளைப் பார்த்தாலும் பார்க்காதது போல் இருந்துவிடுகிறார்கள். சரித்திரம் என்றால் என்ன? பழைய காலத்து அனுபவத்திலிருந்து தற்காலத்துக்கு எது வேண்டுமோ அதை மாத்திரம் திரட்டிச் சொல்வதே. சரித்திரம் ஒரு விதமான பிரசாரக் கருவி. இந்த வித்தியாசத்தைத் தெரிந்துகொள்ளாமல் மதமும் அரசியல் நீதியையே அனுசரிக்குமானால், அது மறு உலகை இந்த உலகுக்காக அடைமானம் வைத்துவிடுகிறது. தங்கத்தில் வெள்ளியும், வெள்ளியில் தாமிரமும் கலந்துகொண்டே வந்தால் எப்படிச் சுத்தமானது அசுத்தமாகிறதோ அதுபோலவே, மதமும் அரசியல் நீதியால் தன்னுடைய பரிசுத்தம் குறைந்துகொண்டே வருகிறது. அரசியல் நீதியை, மத நீதியினால் உரைத்துப் பார்க்க வேண்டுமேயொழிய, மத நீதியை அரசியல் நீதிக்கு இறக்கக்கூடாது. மதத்தை அரசியல் நீதியாகவும், அரசியல் நீதியை மதமாகவும் மாற்றுவது ஒரு பிழையாகும்.

இந்தியாவில் இப்போது மூன்று மதங்கள் உலவுகின்றன. அவைகள் ஒன்றை ஒன்று எதிர்த்து நிற்கின்றன என்றே சொல்லலாம். மனிதர்களுக்குக் கடவுள் பக்தி அதிகமாக ஏற்பட்டுவிட்டபடியாலேயே இப்படிச் சண்டை போடுகிறார்கள் என்பதில்லை. கடவுளின் பெயரையும் மதத்தையும் சொல்லிக்கொண்டு, தங்கள் பொருளையும் உரிமைகளையும் அதிகாரத்தையும் விருத்தி செய்துகொள்ளவே, மதவாதம் செய்யும் அரசியல் வாதிகள் முயலுகிறார்கள். ஐரோப்பாவில் ரோமன் கத்தோலிக்கருக்கும் ப்ராடெஸ்டெண்டுகளுக்கும் எப்போதும் துவேஷம் இருந்து வந்தது. இதனால் வியாபாரம் சரியாய் நடக்கவில்லை. ஒருவனை மதவிஷயத்துக்காக வருத்துவதால், அவனுடன் வியாபாரம் செய்ய முடியாது என்று தெரிந்தது. இதை உணர்ந்தவுடன், ஜனங்கள் மதத்துக்காகப் பிறரை வருத்துவதை விட்டுவிட்டார்கள். இந்தியாவிலும் மக்கள் இதை உணர்வார்களானால், மதத்துக்கும் க்ஷேமம்; மனிதர்களுக்கும் க்ஷேமம்.

ஒரு மதம் தனது முன்னேற்றத்தைத் தேடவேண்டுமானால், அது தனக்கு எதிர்நிற்கும் மதங்களில் உள்ள நல்ல குணங்களைத் தானும் கிரகித்துக் கொள்ளவேண்டும். இரண்டு மதங்கள் ஒன்றையொன்று எதிர்த்து நின்றால், அவை பௌர்ணமியன்று சூரியனும் சந்திரனும் ஒன்றுக் கொன்று எதிர் நிற்பதுபோலவே இருக்கின்றன. இந்த இரட்டை வெளிச்சத்தின் பயன் என்ன? உலகத்துக்கு இரவிலும் பகலிலும் வெளிச்சம் கிடைக்கிறது. அதுபோலவே, மதங்கள் ஒன்றையொன்று எதிர்த்து நிற்பதில் தீமை இல்லை. அதனால் உண்மையின் பல முகங்கள் காணப்படுகின்றன. ஆனால், மதத்தை மதம் அல்லாத விஷயங்களில் உபயோகிப்பதுதான் தீமை.

சந்தன மரத்தைத் தனியாய் நட்டால், அது சரியாய் வளர்வதில்லை; பூச்சி பிடித்துப் போகிறது. அதற்கருகில் ஒரு வேப்பமரமோ அல்லது

---

*அரசியல் நீதியிலே, மத நீதியைக் கலக்கலாமா? கூடாதா? இந்து மதத்தை வளர்க்க என்ன வழி? இந்தக் கேள்விகளை அலசி ஆராய்கிறார் கட்டுரையாளர்.*

புதர்களோ இருக்குமானால், அது நன்றாய் வளர்கிறது. சந்தனமரம், மற்ற மரங்களின் வேர்கள் கிரகிக்கும் ஆகாரத்தை, தான் இழுத்துக் கொண்டுவிடுகிறது. இதுதான் மத வளர்ச்சியின் தந்திரம். எந்த மதம் பிற மதங்களின் நற்குணங்களை யறிந்து அவற்றைத் தன் வசமாக்கிக் கொள்கிறதோ, அந்த மதம்தான் கடைசியில் ஜயிக்கிறது. இதை விட்டு விட்டுப் பிற மதங்களிலுள்ள தவறுகளையே ஒரு மதம் கவனிக்குமானால், தன்னிடம் இதைவிடப் பலமடங்கு தவறுகள் வளர அது இடங்கொடுத்து விடுகிறது.

சரித்திர அனுபவத்தைச் சற்றுக் கவனிப்போம். சங்கராச்சாரியாரின் காலத்தில் பௌத்த மதம் பிரபலமாயிருந்தது. சங்கராச்சாரியார் அதில் இருந்த நல்ல குணங்களையெல்லாம் இழுத்துக் கொண்டு விட்டபடியால், இந்து மதம் விருத்தியடைந்தது. பௌத்தர்கள், கடவுளைப்பற்றியும் ஆத்மாவைப் பற்றியும் 'உண்டு என்றும் சொல்ல முடியாது; இல்லை என்றும் சொல்ல முடியாது' என்று வாதித்தார்கள். ஆனால், தர்மம் மாத்திரம் உண்டு என்று ஒப்புக்கொண்டார்கள்.

'ஒன்றும் இல்லை என்று சொல்வதற்காவது ஒருவன் வேண்டு மல்லவா? அப்போது, அவன் தன்னைத் தானே இல்லை என்று சொல்லிக் கொள்வதாகுமே! இது அபத்தமாகும் அல்லவா?' என்று சங்கராச்சாரியார் எடுத்துக் காட்டினார். ஆத்மா என்பது உண்டு என்று அவர் விளக்கினார். பிறகு, கடவுள் ஆத்மாவை விட்டு வேறு அல்ல என்றும் காட்டினார். எங்கும் நிறைந்த கடவுள் ஆத்மாவை விட்டுத் தனிப்பட்டவரானால், அவர் எங்கும் நிறைந்த கடவுள் ஆக மாட்டார் என்றும் விளக்கினார். சங்கராச்சாரியாருடைய போதனைகளைச் சரியாய் அறியாமல் அவரைப் பின்பற்றியவர்கள், கடவுளின் குணத்தை யறியாமல் அவித்தையின் குணத்தைப் பரிசீலனைசெய்ய ஆரம்பித்தார்கள். இவர்களின் சொற் குழப்பங்களிலிருந்து, ராமானுஜாச் சாரியார் இந்து மதத்தைப் பக்தி மார்க்கத்தால் முன்னேற்றினர்.

இது போலவே, சரித்திர அனுபவத்தை நாம் ஒரு கருவியாகக் கொண்டு காலத்துக்கு ஏற்றவாறு உண்மையைத் தேடவேண்டும். இஸ்லாத்திலும் கிருஸ்துவத்திலும் உள்ள நற்குணங்களை முதலில் கவனிப்போம். உண்மை என்பது இல்லாமல் ஒரு மதம் பரவாது; நீடித்தும் இராது. ஆதலால், அவற்றில் உள்ள உண்மையைத் தேடுவோம். எவன் ஒருவன் பிற மதங்கள் பொய் என்று நினைக்கிறானோ அவன் தனது சொர்க்க வாசலைத் தானே மூடிக்கொண்டு விடுகிறான். **பி. பி. வாடியா** என்பவர் சொன்னது போல், ஆத்மாவுக்கு மதமென்பது கிடையாது. ஒருவன் ஒரு ஜன்மத்தில் இந்துவாய் இருக்கலாம்; மறு ஜன்மத்தில் முஸல்மானாகவாவது கிருஸ்துவனாகவாவது பிறக்கலாம்; ஒருவன் ஒரே ஜன்மத்தில் இந்த மூன்று மதங்களுக்கும் மாறலாம். ஆனால், முரட்டுத்தனமாய்த் தன் மதம் தான் உண்மை என்று ஒருவன் நினைத்தால், அவனுடைய மதங்கள் மாறிய போதிலும் அவனது முரட்டுத்தனம் போகாது. எனவே, உண்மை எங்கே என்று தேட வேண்டுமே யொழிய, அதன் வேறுபாடுகளைப் பொருள் படுத்தக் கூடாது.

முகம்மது நபி தமது வாளால் ஒரு ராஜ்யத்தைச் சம்பாதித்ததும், கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டதும் எல்லோருக்கும் தெரிந்த விஷயம். இந்த இரண்டு மதங்களிலிருந்தும் இரண்டு தத்துவங்கள் வெளியாகின்றன. இஸ்லாம், போர் வீரர்களின் மதம்; க்ஷத்திரிய தர்மத்தைப் போதிக்கிறது; தன்னம்பிக்கையை ஊட்டுகிறது; தன்னுரிமைகளைப் பாதுகாக்கும் வழியைக் காட்டுகிறது. கிறிஸ்துவ மதம், கஷ்டத்தை எப்படிப் பொறுத்துக் கொள்வது என்று காட்டுகிறது; எல்லாரும் எப்படிப் போர் வீரர்களாய் இருக்கமுடியும் என்பதையும், போர் வீரர் அல்லாதவர்கள் பொறுமையால் தீமையை வெல்லவேண்டும் என்றும் போதிக்

கிறது. அதனால், இஸ்லாம், உடல் வலிமையும் உள்ள வலிமையும் உள்ளவர்களுக்குச் சரிப்பட்டது. கிறிஸ்துவ மதம், பல நூறு வருஷங்களாய்க் கஷ்டப்படும் ஏழை ஜனங்களுக்குச் சுலபமாய்ப் போதிக்கப்பட்டது. பொதுவாக இவ்விரண்டு மத தத்துவங்களும் கீதையில் போதிக்கப் பட்டிருக்கின்றன என்று சொல்லலாம். இஸ்லாமிலிருந்து ஒரு மகா புருஷனை நாம் எப்படி வழிபட வேண்டும் என்று கற்றுக்கொள்ள வேண்டும்; கடவுளின் சக்தியில்லாமல் ஒன்றும் ஆவதில்லை என்பதையும் உணர வேண்டும். கிருஸ்துவ மதத்திலிருந்து நமது மதத்துக் குள்ளேயே போதனையற்றவர்களின் முன்னேற்றத்தைத் தேடும் முறையைக் கற்றுக்கொள்ள வேண்டும்; கிருஷ்ணன் வேறு, கிருஸ்து வேறு என்று நாம் நினைக்கக்கூடாது. 'ராமன்' என்பதும் 'ரஹீம்' என்பதும் ஒன்றே என்று **கபீர்** சொன்னதும் நம் மனத்தில் பதியவேண்டும்.

**பி**ற மதங்களிலுள்ள நற்குணங்களை அறிந்து கற்பனையில் சொல்லும் அன்னப் பறவை போல் அவற்றை நாம் நம் வசமாக்கிக் கொள்வோமானால், நம் மதம் தானாகவே முன்னேறி வளரும். இஸ்லாமும் கிருஸ்துவ மதமும் கடவுள் ஒருவரே என்று கூறுகின்றன. இந்த உண்மை ரிக் வேதத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது.

கடவுள் ஒற்றுமையைத் தேடுவோமானால், மத விஷயங்களிலுள்ள வேற்றுமைகள் தாமே போய்விடும். பிற மதங்களிலுள்ள உண்மையைத் தேட விரும்பும் நாம் நமது மதத்துக் குள்ளேயே சச்சரவுகளை வளர்ப்போமானால், எப்படி வெளியே ஒற்றுமையைத் தேடமுடியும்? அரசாங்க நீதியில், ஒரு ராஜ்யம் தன் பக்கத்திலுள்ள ராஜ்யத்துடன் துவேஷமும் அதற்கு அப்பாலுள்ள ராஜ்யத்துடன் நட்பையும் தேடுகிறது. இதற்குக் காரணம் என்ன? ஒரு ராஜ்யம் மற்றொரு ராஜ்யத்தை நம்பாததனால் தான். அதன் பயன் என்ன? எப்போதும் யுத்தம் கிளம்பிக் கொண்டேயிருக்கிறது. மத விஷயத்திலும் நமக்குள் உள்ள சில்லறைப் பிரிவுகளை அதிகமாக்கிக் கொள்வோமானால், நாம் பிற மதங்களோடு பெறவேண்டிய ஒற்றுமையைக் கவனிப்பதால் என்ன பயன்? விஷ்ணு ஒரு கவி. உலகம் அந்தக் கவியின் கவிதை. இதைப் பலர் பலவிதமாக அறிகிறார்கள். இதில் தவறு என்ன? வைராக்கியத்தை அடைய வேண்டுமென்று ஹிந்து மதத்தின் எல்லாப் பிரிவுகளுமே போதிக்கின்றன. ஒருவன் அதை அடைந்திருக்கிறானா என்று தனக்குத் தானே தெரிந்து கொள்ளலாம். இதை விட்டு விட்டுப் பிறருடன் சண்டைபோடுவது, பணத்தைச் சூதாட்டத்தில் வீண் செலவு செய்வது போல் தான் ஆகும். நமது மதத்தில் பல பிரிவுகள் இருந்த போதிலும், அவைகளெல்லாம் ஒரே தத்துவத்தைக் காட்டும் பலவிதமான வாசற்படிகள் என்று நாம் உணர வேண்டும். 'தனக்குள்ளே பிளவு பட்ட குடும்பம் நிலைக்காது?' என்று ஏசுநாதர் சொன்னது நமது மனதில் நிலைக்க வேண்டும்.

**ந**மக்குள் உள்ள ஒற்றுமையை வளர்க்க வேண்டும். பிற மதங்

### புல் தின்னும் மனிதர்

புல்லைத் தின்று ஜீவிக்கும் ஓர் ஆங்கிலேயர் இருக்கிறார். அவருக்கு ஜேம்ஸ் ஆர்.பி. பிரான்ஸன் என்று பெயர். வயது எழுபது. பிறப்பிலே குடியானவர். புல்லை மனிதன் ஏன் தின்னக்கூடாது என்ற ஆராய்ச்சியில் இறங்கினார். 1936-ஆம் ௵ பயிர்த் தொழிலை விட்டார். லண்டனுக்கு வந்தார். பிரசங்கங்கள் புரிந்தார். 1939-ஆம் ௵ 'சகலருக்கும் புல்' என்றொரு புத்தகம் எழுதி வெளியிட்டார். புல்லையும் வேகாத இலை, காய்களையும் எப்படித் தின்பது என்பதை அதில் அவர் விளக்குகிறார். சாப்பாட்டுக் கவலையே யில்லாமல், சைக்கிளிலே எங்கே வேண்டுமானாலும் போகிறார். போகிற இடமெல்லாம் புல்லை மேய்ந்து விடுகிறார்! வெகு ஆரோக்கியமாயும் இருக்கிறாராம்.

களுடன் ஒற்றுமைபெறத் தேடவேண்டும். மதம் ஒரு விளக்கைப் போன்றது. அதை நாம் மூடிவைக்கக் கூடாது. பழைய காலத்து நாகரிக அரசாங்கங்கள் வெளியிலுள்ள அநாகரிகமான ஜனங்களால் அழிக்கப்பட்டன. 'அநாகரிகர்களை வளர்ப்பவர் பிறர் அல்ல: நாமே தான்' என்று ஒரு பழமொழி கூறுகிறது. நாம் நம் மத்தியில் உள்ளவர்களுக்கு நம் மத தத்துவங்களைப் போதிக்காமல் இருந்தால், அவர்கள் வெளி மதங்களுக்கு இழுக்கப்படுகிறார்கள். நாம் யாரை அசட்டை செய்கிறோமோ அவர்கள் நம்முடைய விரோதிகள் ஆகிறார்கள். அப்படி ஆவதற்கு முன், அவர்களை நாம் நண்பர்களாக்கிக் கொள்வது நல்லதல்லவா? தனி மரம் தோப்பாகாது. எண்ணிக்கையிலும் ஒரு சக்தி இருக்கிறது. ஆகையால், எண்ணிக்கைப் பலத்தையும் வளர்க்கத் தான் வேண்டும். இந்து மதத்துக்குப் புத்துயிர் வராத வரையில், இந்தியாவும் முன்னுக்கு வராது. இந்தியா முன்னுக்கு வராத வரையில், இந்து மதத்துக்கும் விமோசன மில்லை. இந்த இரண்டையும் முன்னுக்குக் கொண்டு வருவது நமது கடமை.

*

## விசித்திரக் கட்டுரை

மேல்நாட்டில் ஒரு பத்து வயதுச் சிறுவன், பள்ளிக்கூடத்தில் எழுதிய ஒரு கட்டுரை வருமாறு:

நான் இப்போது எழுதப் போகிற வியாசம் ஒரு பட்சியைப் பற்றி; அதாவது, ஆந்தையைப் பற்றி. ஆந்தைக்குப் பகலிலே கண் துளிக்கூடத் தெரியாது. ராத்திரியில் அதுவும் வௌவால் மாதிரிதான் குருடாயிருக்கும். எனக்கு ஆந்தையைப் பற்றி அதிகமாய்த் தெரியாது. ஆகையால், மிருகங்களைப் பற்றி, எழுத முடிவு செய்து விட்டேன்.

பசுவைப் பற்றி எழுதப் போகிறேன். பசு குட்டி போட்டுப் பால் கொடுக்கும் இனத்தைச் சேர்ந்தது. அதற்கு ஆறு பக்கங்கள் உண்டு: வலம், இடம், மேல், கீழ் என்ற பக்கங்கள். பின்புறத்தில் அதற்கு ஒரு வால் உண்டு. அதில் ஒரு பிரஷ் தொங்குகிறது. பசு இந்த வாலால் ஈக்களை ஓட்டி, அவை பாலில் விழாமல் தடுக்கிறது. பசுவுக்குத் தலை உண்டு. எதற்காக என்றால், கொம்பு முளைப்பதற்காக. கொம்பு முட்டுவதற்காக. வாய் 'அம்மா' என்று கத்துவதற்காக. பசுவுக்குக் கீழே பால் தொங்குகிறது. அது கறப்பதற்கு வசதியாக அமைக்கப்பட்டிருக்கிறது.

ஜனங்கள் பாலைக் கறந்தால், பால் வருகிறது. முடிவே யில்லாமல் எப்படியோ பால் வந்து கொண்டே யிருக்கிறது. எப்படித் தான் பசு இப்படிப் பால் கொடுக்கிறதோ! அது எனக்கு இன்னும் புரியவில்லை. பசுவுக்கு வாசனை நன்றாகத் தெரியும். வெகு தூரத்துக் கப்பால் உள்ள வாசனையை அது அறிந்து விடுகிறது. இதனால் தான் கிராமத்திலே சுத்தமான காற்று இருக்கிறது.

ஆண் பசுவுக்குக் காளை என்று பெயர். அது குட்டிபோட்டுப் பால் கொடுக்கும் இனம் அல்ல. ஆனால், அது தின்னும் தீனியையெல்லாம் இரு முறை தின்னும். ஆகையால், அதற்கு இரண்டு மடங்கு ஆகாரம் எப்போதும் கிடைக்கிறது. அதற்குப் பசி வந்தால், 'அம்மா' என்று கத்தும். அது சும்மா இருந்தால், அதன் உள்ளே ஏராளமாய்ப் புல் நிறைந்திருக்கிறது என்று அர்த்தம்.

## வளர்ச்சியின் ஆரம்பம்

என்று தினம் முதல் முதலாக நீ உன்னையே கேலி செய்துகொண்டு சிரிக்கத் தொடங்குகிறாயோ, அன்று தான் நீ வளர்ச்சி அடைய ஆரம்பிக்கிறாய்.

— எதெல் பாரிமூர்.

# பகல்  கனவு

லா. ச. ராமாமிருதம்

**நா**லு பேர் மாதிரி எனக்கு வாக்கு சாமர்த்தியம் போதவில்லை; ஒன்றுமில்லாததைச் சில பேர் எவ்வளவு ரசமாய், காது, கண், மூக்கு வைத்து 'ஜோடனை' பண்ணி, நேரில் நடப்பதுபோலவே சொல்லிக் காண்பித்து விடுகிறார்கள்! கேட்பவருக்கு மெய்சிலிர்த்து விடுகிறது.

எனக்கோ அதுதான் சூன்யமாயிருக்கிறது. மண்டையிலும் மனதிலுமிருக்கும் வேகத்தில், கால் பங்குகூட வாய்வார்த்தையில் வரமாட்டேனென்கிறது. ஆனால், எனக்கு நேர்ந்த அனுபவம் மாத்திரம் சின்னதா, அற்பமா? எனக்கென்னவோ அப்படித் தோன்றவில்லை. என் மனத்தில் வேதனை இன்னமும் தணியவில்லை.

ஒன்றுமில்லை. பஸ்ஸில் போய்க்கொண்டிருந்தேன்.

ஆபீஸுக்குப் போய்க்கொண்டிருந்தேன்.

எங்கே போனாலென்ன, வந்தாலென்ன; அதில் ஏதாவது அர்த்தமிருக்கிறதா?

நான் என்னவோ சாதாரண மனிதன்தான். காலையிலெழுந்தால் காப்பி—அப்புறம் மார்க்கெட்-ரேஷன் அரிசி-அவசர அவசரமாய்ச் சாப்பாடு—அதற்குமேல் அவசர அவசரமாய் ஆபீஸ்—திரும்பி வந்தால் கடற்கரைக்குப் போய்க் காற்று வாங்குதல்-வீட்டுக்கு வந்தால் நேரமாய் வந்தேனென்று வசவு வாங்குதல் — சாப்பிடுதல்-தூங்குதல்—திரும்பித்திரும்பி இதேதான். இதைத் தப்ப வழியில்லை. இந்த தினச்சுழலில் ஏதேனும் மாறுதல் ஏற்பட்டால், எனக்குத் திருப்திதான். ஆனால், எப்படி ஏற்படும்? மனைவிக்கு மடியை விட்டு இப்போதுதான் ஒரு குழந்தை இறங்கிற்று, வாசலில் போய் மண்ணைத் தின்றுகொண்டு விளையாட, இராத் தூக்கத்தை அழுது கெடுக்க, இடுப்பில் ஒரு குழந்தை. மனக்கவலை ஓயாதிருக்கும்படி, வயிற்றில் ஒரு வித்தோ என்று மூன்று மாதங்களாய்ச் சந்தேகம். இத்தனை பாரங்களைக் கழுத்திலே கட்டிக்கொண்டு, மேலே இறக்கையும் கட்டிக் கொண்டு பறப்பதென்றால், எப்படி முடியும்?

ஆகையால், இப்போது என்ன சொல்ல வந்தேன்? பஸ்ஸில் போய்க்கொண்டிருந்தேன்.

**இ**ந்தக் காலத்தில் பஸ்ஸில் போவதென்றால் தான், என்ன என்று தெரியுமே! ஒவ்வொரு வண்டியும் ஒரு மகாமக உற்சவம் – சினிமாக் கொட்டகையில் புதுப் படத்தின் முதல் வாரக் கூட்டம். உள்ளே புகுவதே பிரயாசை – புகுந்து தோல் வாரைப் பிடித்துத் தொங்க இடம் கிடைப்பதே துர்லபம். உட்காரவே இடம் கிடைத்து விட்டால்...... அடேயப்பா!

நான் உட்கார்ந்து கொண்டிருந்தேன்.

"லொடக்—லொடக்—லொடக்—"

பஸ் ஓர் இடத்தில் நின்றது. வெளியிலிருந்து ஒரு கும்பல் அலைபோல் உள்ளே மோதியது. என் பக்கத்தில் ஒருத்தி வந்து உட்கார்ந்து நெறித்தாள்—நெறிந்தாள்.

நிறம் கறுப்பென்றே சொல்லலாம். சிறிசு. பதினெட்டு, இருபது வயதிருக்கும். காதில் 'பளீர், பளீர்' என்று சுடர் விடும் இரு வெள்ளைக்

**கண்ணுக்குக் கண்ணெதிரே சதையும் குருதியுமாய் நிற்கிறானே ஒரு மனிதன், அவனை-அவனது அந்தரங்க ஆத்மாவை - நாம் காணமுடிகிறதா? ஒருநாளுமில்லை. காண முடிந்தால், அவன் தொட்டுத் தாலிகட்டிய மனைவி, அவன் பகல் கனவை அறிந்திருப்பாள். அப்போது என்ன விபரீதம் நேர்ந்திருக்குமோ! யார் கண்டார்?**

கல் 'டோலக்'குகள். கழுத்தில் சன்னமாய் ஒரு தங்கச் சங்கிலி. நெருக்கமாய் நெய்யாத பச்சைப்புடவையில் சிவப்புக்கரை. குறு குறு என்று முகத்தில் களை.

முறைத்துப் பார்க்கும் எண்ணத்துடனேயே, ஓர் ஆளை உன்னிப்பாய்ப் பார்க்க வேண்டிய அவசியமில்லை. கழுதை கூடத் தான் கோயில் சுவரை முறைத்துப் பார்த்துக் கொண்டு நிற்கிறது. அதனால் அது சிற்பங்களைச் சிந்திக்கிறது என்று அர்த்தமா? மனத்தில் எத்தனையோ குருட்டு யோசனைகள், கோட்டைகள், ஆகாசப் பந்தல்கள். அவள் எவளாயிருந்தால் எனக்கென்ன? ஜாதியில் வணிகச்சியோ, கிருஸ்தவச்சியோ, பிராம்மணத்தியோ?

ஆனால், அவள் என் மடியில் செத்தாள்.

எனக்கே தூக்கிவாரிப் போடுகிறது. திடீரென்று அவள் முகம் வெளிறிட்டது. கண்கள் பெரிதும் விரிந்து மலர்ந்து, விழிகள் சுழன்றன. தலையாடியது. துவண்டு அப்படியே குப்புற என் மடியில் சாய்ந்து விட்டாள்.

நான் 'ஓ' என்று கத்தி விட்டேன். அவளை என் மடியில் நிமிர்த்திப் புரட்டினேன். கைநாடியைப் பிடித்துப் பார்த்தேன்.

ஊஹூம், ஒன்றும் காணோம்...! விழிகள் செருகின.

மாரடைப்பு. இதற்கு வேளையுண்டா, காரணமுண்டா? வண்டியில் நேரிட்ட குழப்பத்தைக் கேட்கவும் வேண்டுமா? வண்டி நின்றுவிட்டது.

வண்டியில் எங்கேயோ ஒரு மூலையிலிருந்து அவள் புருஷன் கூட்டத்தைத் தள்ளிக்கொண்டு பாய்ந்து வந்தான். வண்டியில்தான் மகஸ்நானக் கூட்டமா யிருக்கிறதே! யாரரரோ எங்கெங்கோ—அகப்பட்ட இடத்தில் உட்காரவோ, நிற்கவோ, வாரைப் பிடித்துக்கொண்டு தொங்கவோ, தொற்றிக் கொள்ளவோ வேண்டியதுதானே!

அவனும் சின்னப் பையன்தான். இருபத்தைந்து வயது இருக்கலாம்—சிவப்பாய், மூக்கும் முழியும், அரும்பு மீசையுமா யிருந்தான். நல்ல ஜோடி தான்.

மார்பில் கைவைத்துப் பார்த்தான்.

என்ன பிரயோஜனம்?. பட்சி எப்போதோ பறந்துவிட்டது. என் மடியில் சடலம்.

"ஜட்கா!—ஜட்கா!!"

"டாக்ஸி!—டாக்ஸி!!—டாக்ஸி!!!—"

அவசரத்துக்கு ரிக்ஷாதான் அகப்பட்டது ஆபீஸுக்கு அரை மணி 'லேட்'. முதலாளிக்குச் சற்று மனஸ்தாபம்.

வேலை இடுப்பை ஒடித்தது. மனம் வேலையில் ஓடவில்லை; ஒரு நிலையில் நிற்கவில்லை. எல்லா வற்றையும் மூட்டைகட்டி வைத்துவிட்டு, ஏதோ ஒரு சாக்குச் சொல்லிவிட்டு, மூன்று மணிக்கே படியை விட்டு இறங்கிவிட்டேன்.

சட்டைப் பைகளில் கையைத் திணித்துக் கொண்டு, அப்படியே கடற்கரைப் பக்கமாய்ப் போனேன்.

மணலும் நீலக்கடலும் தகதகத்தன. வெயில் முதுகுத்தோலை உரித்தது.

குளு குளு என்று பசுமை ததும்பும் சரீரம். இன்னமும் குடும்பத்தில் அடிபட்டு வாடி வதங்கவில்லை. புதுக் குடித்தனத்தின் சுக வேதனையில் துடிக்கும் சரீரம்—என் மடியில் அவள் மடிந்தாள்.

இந்த மனத்தின் நிலையை ஒவ்வொரு தடவை என்னென்று சொல்வது? காரணமற்ற கிலேசம்; அதில் ஓர் இன்பம் கடுகடுக்கும் கடுப்பில் தனித்தொழுகும் ஒரு தித்திப்பு!

கரையோரமாய் நடந்துகொண்டே போனேன். அலைகள் வந்து காலைக் கழுவின.

அம்மாதிரி என் மனத்தின் கனத்தைக் கழுவுமாஅவை? கரையோரமாய் நடந்துகொண்டு, நடந்ததையெல்லாம் மறுபடியும் மன அரங்கில் ஒரு முறை நடித்துக் கொண்டேன்—

அவள் கன்னத்தைத் தொட்டேனா? ஆம், தொட்டேன், சூடு இருக்கிறதோ என்று பார்க்க. சூடு அதற்குள் தணிந்துவிடுமா என்ன, மாரடைப்பில்

செத்தவளுக்கு! சந்தனம்போல் வழுவழுத்த கன்னங்கள் கூட மாறவில்லையே! முன் மயிர் மாத்திரம் கொஞ்சம், இரண்டு புரிகள், கலைந்திருந்தது. கோணல்வகிடோ, நேர் வகிடோ? இல்லை, அதுதான் சரியாக ஞாபக மில்லை. இருந்தால்....

இருந்தால்??... இருந்தால் என்ன? தெரிந்து என்ன ஆகவேண்டும்? எவளா யிருந்தா லென்ன? எங்கே யிருந்தோ வந்து, வேளை நெருங்கியதும் என்னிடம் சாகவேண்டு மென்றே வண்டியில் ஏறி, நேரே என் மடியில் விழுந்து செத்தாள். ஏதோ முன் ஜன்மத்தின் பிணைப்பு. கொண்டவன் மடியில் சாகிறதுதானே...?

விதி! ஆம், இதுதான் விதி!

அவ்வளவுதான். என் மனதில் அவளையும் என்னையும் வைத்து நான் புனைந்த கதை வாய்வார்த்தைக்கும் வராது, ஏட்டிலும் ஏறாது. அது ஓர் எழுதாத காவியமாய் மாறியது. சகுந்தலை - துஷ்யந்தன், நளன் - தமயந்தி, சாவித்திரி-சத்யவான், பிருத்விராஜ் - சம்யுக்தை இவர்களைப்போல் மற்றவருடன் நாங்களும் சேர்ந்துவிட்டோம்.

இந்தக் காவியத்தில், நான் மணம் செய்துகொண்டு குடித்தனம் நடத்தும் மனைவிக்கு இடமில்லை. மாடியைவிட்டிறங்கி வாசலுக்குப் போய் மண்ணைத் தின்றுகொண்டு, வயிற்றில் கட்டியைப் பெருக்கிக்கொண் டிருக்கும் குழந்தைக்கு இடமில்லை.

இடுப்பில் சவாரி செய்துகொண்டு இரவென்றும் பகலென்று மில்லாமல் எப்போதும் அழுத கண்ணும் ஒழுகிய மூக்குமா யிருக்கும் குழந்தைக்கு இடமில்லை. வயிற்றி லிருந்து கொண்டு, மருந்தென்றும் மாயமென்றும், வலியென்றும் வியாதியென்றும், செலவும் கவலையுமாய் மனிதனின் உயிரையே குடித்துக்கொண் டிருக்கும் வித்துக்கும் இட மில்லை. நாங்கள் இருவர்தான் - நானும் என் மடியில் செத்தவளும். நாங்கள் இருவரும் கூடிய அந்தக் கற்பனை வாழ்க்கையில், பசும்புல் தரைகளும், நீரோடைகளும், நிலவும் நிம்மதியும், நித்திய சுகமும்தான் இருந்தன. நாங்கள் இருவரும் கந்தர்வர் ஆகிக் ககனத்தில்,நீந்திக்கொண் டிருந்தோம் ...ஆனால், ஆனால் இந்தச் சாவு! என் உடல் நடுங்கியது. என்ன கனவு! என்ன வேதனை! விஷத்திலே தோய்ந்த அமிழ்தம்போல் இருந்தது என் மன நிலை.

மணி ஆகிவிட்டது.

வீட்டுக்குத் திரும்பினேன்.

மண்ணைத் தின்னும் குழந்தையின் முகத் தழுக்கை என் மனைவி துடைத்துக் கொண்டிருந்தாள்.

என்னைக் கண்டதும் இடுப்பி லிருக்கும் குழந்தையை என் கையில் கொடுத்துவிட்டு இலை போடப் போனாள். அசதியில் 'ஊம்...ஊம்...' என்று முனகினாள்.

வயிற்றிலிருக்கும் வித்துப் படுத்தும் வேதனை.

இரண்டு கவளங்களை, வில் உருண்டையாய் விழுங்கினேன்.

"உடம்பு சுகமில்லையா? சாப்பிடவே யில்லையே!"

"ஆமாம் - இன்று என் மடியில் ஒருத்தி செத்தாள்..." என்று வெடுக்கென்று பதில் சொல்லிவிட்டு, கையை யலம்பிக் கொண்டு, மாடி வெளிப் புறத்தில் சாய்வு நாற்காலியில் போய்ச் சாய்ந்தேன்.

தெருவில், டிராம் வண்டிகள் கண கண என்று மணியடித்துக் கொண்டு சக்கரங்கள் தண்டவாளத்தைக் 'கிறீ...ஈ...ஈ...ச்' என்று காதைத் துளைக்கத் தேய்த்துக் கொண்டு சென்றன. பஸ்ஸும் மோட்டாரும் ஊதிக் கொண்டு பறந்தன. ஜனப் புழக்கத்தின் தீராத இரைச்சல் கீழே. இடுப்புக் குழந்தையைத் தொட்டிலில் போட்டு என் மனைவி தூங்கப்பண்ணிக் கொண்டிருந்தாள். இடையிடையே மூக்கைச் சிந்திப்போட்டாள். என்னதான் சாதுவானாலும், என் மடியில் இன்னொருத்தி செத்தது அவளுக்குப் பொறுக்கவில்லை.

"ஆரிரா ரோ... ஆரா ரோ...!"

ஆம். அவள் யாரோ......நான் யாரோ—ஆனால், இவள் மாத்திரம்... இவள் யார்?

இந்த உழற்சியில் நான், அவளை மறந்து விடுவேன். இதில் எதுதான் நிற்கும்? எந்த மகா சக்தியும் சகதிக்கு வரவேண்டியது தான். இப்போது, பச்சை மரத்தில் பாய்ந்த கோடரிபோல் அவள் என் மார்பைப் பிளந்து கொண்டிருந்தாலும், நாளடைவில் காலப் பாசி மேலே மூடமூட, அவள் உள்ளாறி விடுவாள்.

வேதனையே அதுதான்...!

திடீரென்று அவளைக் கடைசியாய் நான் கண்ட காட்சி என் கண் முன் வந்து நின்றது. ரிக்ஷாவில் அவள் கூட்டை அவன் ஏற்றிக் கொண்டு செல்கையில், அந்த உடல் துவண்டு உயிரற்ற கைகளும் தலையும் லொடலொட என்று தொங்கலாடிக் கொண்டிருந்தன.

தலைமயிரில் ஒரு கொத்து மருக்கொழுந்து.

என் மனது 'பகீர்' என்றது.

"அம்மாடி... !"

"என்ன! என்ன!!" என்று அலறிப் புடைத்துக் கொண்டு என் மனைவி ஓடி வந்தாள்.

"என்னடி பண்ணுவோம்! இன்னும் எத்தனை நாள் இப்படியோ!" என்று விக்கினேன்.

மண்டையைத் தொட்டாள்.

"ஐயையோ நெருப்பாய்க் காய்கிறதே! – சொல்லவே இல்லையே – நேரமும் ஆயிடுத்து; வீட்டிலும் ஒருத்தரு மில்லையே! படுத்துக் கொள்ளுங்கள். விடியற்காலந்தான் வைத்தியனைக் கூப்பிடணும். படுத்துக் கொள்ளுங்கள். இதோ வந்து விட்டேன்..."

அவள் என்னைப் படுக்க வைத்து விட்டு, பாலடையையும் ஒரு துணிக் கிழிசலையும் எடுத்துக் கொண்டு, இருளைத் தேடிச் சென்றாள்.

✲

## ரயில் வேதனை

ரயில் வண்டிகளில் பிரயாணம் செய்வது இக்காலத்தில் எத்தனையோ வேதனையா யிருக்கிறது. இந்த அழகிலே அது ஆமை கதியில் சில சமயம் ஊரும் போது சகிக்கவே முடிய வில்லை.

ஒரு ரயில்வே ஸ்டேஷனில், குறிப்பிட்ட ஒரு ரயில் வண்டி, ஒரு நாள் கூடக் கால அட்டவணைப்படி சரியான நேரத்தில் வந்ததில்லை. தினமும் அரை மணி தாமதம், ஒரு மணி தாமதம், நாலு மணி தாமதம் என்ற பேச்சுத்தான். ஆனால், ஒரே ஒரு நாள் மட்டிலும் குறித்த நேரத்தில் அந்த வண்டி வந்துவிட்டது. இதைக் கண்டதும், அங்கிருந்த பிரயாணிகளுக்கெல்லாம் சந்தோஷம் தாங்கமுடியவில்லை. அதை ஓட்டிவந்த எஞ்சின் டிரைவருக்குப் பரிசளிப்பதற்காக, அங்கேயே ஒரு பண முடிப்புக்குப் பணம் வசூலித்தார்கள். நூறு ரூபாய் சேர்ந்தது. அதை அவரிடம் கொண்டு போய் உபசாரத்தோடு கொடுக்கப் போனார்கள். டிரைவர் மிகவும் நாணயமான மனிதர். அவர் கொஞ்சம் தயங்கித் தயங்கிச் சொன்னார்: "எனக்குப் பணம் தேவைதான். என்றாலும், இதை நான் எப்படி வாங்கிக் கொள்வேன்? என் வண்டி நேற்றே வந்திருக்க வேண்டிய தாயிற்றே!"

## சிக்கிக்கொண்டார்.

ஒரு கதாசிரியர் தமது நண்பருடன் பேசிக் கொண்டிருந்தார்.

**கதாசிரியர்:** நான் கதை எழுத ஆரம்பித்துப் பதினைந்து வருஷம் ஆயிற்று. இப்போது தான், அந்தத் தொழிலுக்கு நான் தகுதியில்லை என்று கண்டு பிடித்தேன்.

**நண்பர்:** அப்படியா! எனவே, கதை யெழுதும் தொழிலை விட்டு விட்டீரோ?

**கதாசிரியர்:** இல்லை. அதெப்படி முடியும்? நான் அதில் பெரிதும் பிரபலம் அடைந்து விட்டேனே!



# பரம்பரையாக அழகைக் காப்பாற்றுதல்

சிறு பெண்களுக்கு புத்தி சொல்ல தாயார்களைக் காட்டிலும் சிறந்தவர் இல்லை. சுத்த ஜலமும், பியர்ஸ் சோப்பும் கொண்டு, ஒழுங்கான முறையால் சருமத்தின் அழகைக் காப்பாற்றிக் கொள்வதே இந்தத்தாய் தன் மகளுக்குக் கற்பிக்கும் புத்திமதிகளில் ஒன்று. தன் தாயிடமிருந்து கற்ற இந்த முறையைத்தான் இவள் தன் சிறுவயதிலிருந்தே அநுசரிக்கிறாள். அதனால்தான் இவளுடைய சருமமும் இன்றுவரை மாசில்லாமல் காணப்படுகிறது. மகளும் தன் சருமத்தை ஜாக்கிரதையாக அதே மாதிரிக் காப்பாற்றிக்கொண்டு வருகிறாள். ஆகையினால், இவள் சருமமும் தாயினுடையதைப் போல யாதொரு பழுதுமின்றி விளங்கும்.

நாற்பது ஆண்டுகளாக, இந்திய அழகிகளின் பிரிய சோப் பியர்ஸ்தான். அதன் மணமும், பட்டுபோன்ற மிருதுவான நுரையும் மற்ற சோப்புகளை விட உயர்ந்த ஸ்தானத்தில் அதை வைக்கின்றன.



# பியர்ஸ் சோப்

அழகின் அடிமை

TG. 39-50 TM A. & F. PEARS, ISLEWORTH, ENGLAND




# வடமேற்கு இந்தியாவில் - - - - - - தேநீர் அருந்தும் நேரம்

சிந்துவின் மேற்கே, வாழ்க்கை அங்குள்ள பாறைகளைப் போல அவ்வளவு கடினம். பகலில் செய்யும் வேலையிலோ அல்லது இரவில் நடத்தும் காவலிலோ அபாயம் உண்டு என்பது அங்குள்ள பதான்களுக்கும் பலுசிகளுக்கும் நன்கு தெரியும்.

முக்கியமாக, பிரயாணஞ் செய்யும் பொழுதெல்லாம் நெருப்பு மூட்டிக் கொண்டு வெட்ட வெளியில் காவல் இருக்கவேண்டிய அவசியம் இவர்களுக்கு ஏற்படுவது உண்டு. கண் விழித்துக் காவலைச் சரியாகச் செய்யும் பொருட்டு உஷ்ணமான தேநீரைச் சர்க்கரை பாலுடன் மொத்தமாகக் கலந்து பித்தளை லோட்டாக்களில் சப்பிச் சப்பிச் சாப்பிடுவது அங்குள்ளவர்களுக்கு வழக்கம். தேநீர், இரவில் அடிக்கும் ஈரக் காற்றிலிருந்து பாதுகாத்துத் தனியாக இருந்து காவல்காக்கும் ஒருவனுக்கு உத்சாகத்தையும் ஊட்டுகிறது.

இந்த நாட்டிலும் எங்கே பார்த்தாலும், மற்றப் பிரதேசங்களிலிருப்பது போலவே, புத்தப் புதிய ப்ரூக் பாண்ட் தேயிலை புகழுடன் நடமாடுகிறது.

# ப்ரூக் பாண்ட்

"இரு இலையும் ஒரு மொட்டும்"

# இரட்டை மனம்

**தி. ஜ. ர.**

சமீபத்திலே, நான்கு கனவுகள் கண்டேன். மூன்று ஒரு நாள்; நாலாவது மறு நாள். முதல் நாள் கண்ட மூன்று கனவுகளும் அபூர்வமானவை; மறுநாள் கண்டது விசித்திரமானது. முதல் மூன்று கனவுகளையும், அடுத்த நாள் காலையிலே அப்படியே எழுத எண்ணினேன். சோம்பேறித்தனத்தால், பின்னால் பார்த்துக்கொள்ளலாம் என்று ஒத்திப் போட்டேன். இரண்டு அடியோடு மறந்து போயிற்று; ஒன்று, ஏதோ துளித் துளி ஞாபகம் இருக்கிறது. அன்று காலை அது எவ்வளவு தெளிவாய் நினைவிருந்தது!

தமிழ்நாட்டில் முன்னே மிகப் பிரபலமாயிருந்த ஓராசிரியர், குழந்தைகளுக்கென்று ஓர் அற்புதமான கதை எழுதியிருக்கிறார். அந்தக் கதையை, நான் ஒரு பத்திரிகையிலே படிக்கிறேன். இதுதான் முதல் மூன்றில் மிஞ்சிய அந்தக் கனவு. (உண்மையிலே அவர் அன்றும் கதை எழுதியதில்லை; இன்றும் எழுதமாட்டார்.) நான் கனவில் படித்த கதையின் ஒவ்வொரு சொல்லும், ஏறக்குறைய மறு நாள் காலையிலே எனக்குப் பச்சைப் பசுமையாய் நினைவிருந்தது.

“ஆற்றங்கரை மேலே, அழகான சோலை. சோலையிலே போனேன்; சொகுசாக நின்றேன். அண்ணாந்து பார்த்தேன்; ஆண்டவனைக் கண்டேன். ஆகாயத்தில் பறந்தேன்; அதிசயமாய்ப் பாய்ந்தேன். மேலே மேலே போனேன்; ஆண்டவனைக் கண்டேன். ஆற்றங்கரை மேலே; அழகான சோலை.” இப்படியே வெகுதூரம் சென்றது அந்தக் கதை. “மேலே மேலே போ. மேலே மேலே போ” என்று ஒரு பல்லவி அதிலே திரும்பித் திரும்பி வந்தது. கதையின் பொருள் எனக்குத் துளிகூடப் புரியவில்லை. ஆனால், என் உள்ளத்திலே பொங்கிய ஒரு குதூகலம் கரைகடந்திருந்தது.

மறு நாள் இரவு. திடீரென்று, அபாயச் சங்கு ஒலிக்கிறது. நிஜமான விமானப் படையெடுப்பு வந்திருக்கிறது. கூடத்திலே உட்கார்ந்திருந்தவர்களிடம் செல்கிறேன். அவர்கள் நடுங்கிச் சாகிறார்கள். எனக்குச் சிரிப்பு வருகிறது. “இதற்கு இப்படிப் பயமா? ஆறிலும் சாவு; நூறிலும் சாவு” என்று தைரியம் சொல்லுகிறேன். இதுவரையில் கனவு. இதோடு விழித்துக் கொள்ளுகிறேன். கனவிலே மகா தீரனாயிருந்த நான், இதோ விழிப்பிலே கதி கலங்குகிறேன். உற்று உற்றுக் காதுகொடுத்து அபாயச் சங்கொலி வருகிறதா என்று கேட்கிறேன். ஒலியொன்றுமில்லை. என்றாலும், வெகு நேரம் வரையில் என் சந்தேகம் தீரவில்லை. உறக்கமும் வரவில்லை. இது என்ன விநோதம்!

கனவிலே தீரமாயிருந்த மனது, விழிப்பிலே ஏன் இவ்வளவு கோழையாயிற்று? மனோ தத்துவ சாஸ்திரிகளிடம் அர்த்தம் கேட்டால், அவர்கள் என்ன விபரீதமான அர்த்தம் சொல்லுவார்களோ? நான் அறியேன். ஒன்று மட்டில் நிச்சயம். ஒவ்வொரு மனிதனுக்கும் மனது ஒன்றல்ல; இரண்டு: உள் மனது ஒன்று; வெளி மனது ஒன்று.

உள் மனம் ஓர் ஆழங் காணாத சமுத்திரமாகும். வெளி மனது ஒரு சிறு தூசி. நீரிலே பிரம்மாண்டமான ஒரு மரக் கட்டை மிதப்பதாக வைத்துக்கொள்ளுங்கள். ஒரு பகுதிதான் நீருக்கு மேலே தெரிகிறது. மறு பகுதி நீரிலே மூழ்கி மறைந்திருக்கிறது. இதே மாதிரி

*மனிதனுடைய மனது அதிசய வித்தைகளைப் புரியக்கூடியது. அதன் வழிகள் ஆச்சர்யமானவை. கனவும், கற்பனையும் மனதைப்பற்றி நமக்குச் சுட்டிக் காட்டும் சில உண்மைகளை இங்கே காணலாம்.*

தான், நமது மனதின் பெரும் பகுதி, பிரக்ஞைக்கு வராமல் உள்ளே மறைந்திருக்கிறதாம்; மிகச் சிறிய தொரு பகுதிதான் பிரக்ஞைக்கு வருகிறதாம். இது மனோ தத்துவ சாஸ்திரிகள் சொல்லும் உண்மை யாகும். அவை ஒரே மனதின் இரண்டு பகுதிகள் என்று, அவர் கள் சொல்வதனின்றும் ஏற்படு கிறது. விவகாரத்துக்காக, உள் மனது என்றும் வெளி மனது என் றும் இரண்டாக நாம் அவைகளை வைத்துக் கொள்ளலாம்.

பிரக்ஞையி லுள்ள வெளி மனதை மாத்திரம் கொண்டு, ஒரு மனிதனின் உண்மையான சொரூ பத்தை நாம் காணமுடியாது. வெளி மனது அநேக சமயம் உள் மனதின் இயற்கையான தன் மையை மறைக்கும் போர்வை யாகவே யிருக்கிறது. அதனால் பல விசித்திர விபரீதங்கள் நேர்கின் றன. பேடியை வீரனாகக் காட்டுவ தும் வெளி மனதுதான்; தயாளு வைக் கருமியாகக் காட்டுவதும் அதுவேதான். நல்லதைக் கெட்ட தாகவும் கெட்டதை நல்லதாகவும் இரு விதமும் வேஷம் போட்டுக் காட்டுகிற மந்திரவாதி வெளி மனது. தாங்காத ரகசியங்களைத் தாங்கி நிற்கும் உள் மனதின் வேதனை அளவிட முடியாததாகும். தன் வேதனையை ஆற்றும் மருந்தை அது தேடுகிறது. கனவு, கற்பனை, கலை, இலக்கியம் ஆகியவைகளிலே, அது இஷ்டபூர்த்தி பெறுகிறது. இந்த ஒன்றும் பலிக்காவிட்டால், தன்மயக்க போதையிலே அது மூழ்குகிறது. அதற்குத்தான் பைத் தியம் என்று பெயர்.

உள் மனதிலே நமது வாழ்க்கை யின் பழங்கதைக ளெல்லாம் புதைந்து கிடக்கின்றன; அவற் றின் பலன்களெல்லாம், ஆசா பாசங்க ளெல்லாம், சிந்தனைக ளெல்லாம்அமிழ்ந்துகிடக்கின்றன. இத்தனையும், நமது வெளி மனது அறியாமலே ஒளித்துக் கிடக்கின் றன. ஆனால், நெருக்கடியோ, உணர்ச்சியைக் கலக்கும் சம் பவமோ, மதிமயக்கமோ ஏற்படும் நேரங்களிலே, அணையை உடைத் துக் கரைபுரண்ட வெள்ளம் போல, அந்த உள் மனப் புதையல் கள் நம்மை மீறி வெளிப்படத் தொடங்கி விடுகின்றன. ஆகை யால், உலகத்தார் நம்மை அறிய வில்லை யென்பது மாத்திர மல்ல; நம்மை நாமேகூட அறிந்துகொண் டதாகச் சொல்ல முடியாது.

இதெல்லாம் வேடிக்கையாகத் தோன்றும். ஆயினும், 'நாம் ஒவ் வொருவரும் நம் பழைய வாழ்க் கைச் சம்பவங்களையும், கனவுகளை யும், கற்பனைகளையும் ஆழ்ந்து துருவிப் பார்த்தோமானால், இந்த உண்மை நமக்குப் புலனாகும்.

நம் ஆசாபாசங்கள், காமக் குரோதங்களை யெல்லாம் பூர்த்தி செய்யவோ ஆற்றவோ வழி தெரி யாமல், அவைகளை உள் மன திலே புதைத்துப் பல சமயங்களில் அடக்கிவிடுகிறோம். உள் மனது நோய்பட்டு வேதனை யுறுவது இதனால்தான்.

ஒரு ஸ்திரீக்குத் திடீரென்று ஓர் அபூர்வமான வியாதி வந்தது. அவளுக்குச் சதாகாலமும் தண் ணீர் விடாய் இருந்தது. நா வறண் டது. ஆனால், தண்ணீரை அவளால் குடிக்க முடிவதேயில்லை. டம்ளர் நிறையத் தண்ணீரை நிரப்பி வாய ருகேகொண்டுபோவாள். உடனே, அவள் உடம்பெல்லாம் குலுங்கும். "ஐயே!" என்று அருவருப்போடு, அதைக் கீழே கொட்டிவிடுவாள். இந்த வியாதிக்கு மருந்து சொல்ல எந்த வைத்தியனாலும் முடிய வில்லை. வியாதி உடல் நோயாயிருந் தால் அல்லவா மருந்து சொல்ல முடியும்? அது மன நோய் ஆகும். கடைசியில் ஒரு மனோதத்துவசாஸ் திரிதான் அதன் மூலகாரணத்தைக் கண்டு பிடித்தார்.

இந்த ஸ்திரீ சின்னஞ்சிறு குழந் தையா யிருந்தபோது, தன் செவி லித் தாயின் அறைக்குச் சென்றாள். அங்கே ஒரு டம்ளரில் தண்ணீர் இருந்தது. அதைச் செவிலித்

தாயின் நாய் கொஞ்சம் நக்கிக் குடித்தது. பின்பு, மிஞ்சிய அதே தண்ணீரைச் செவிலித் தாயும் குடித்து விட்டாள். சிறுமிக்கு அடங்கா அருவருப்பும் கோபமும் வந்தது. ஆனால், அதை வெளிக்குக் காட்டாமல், அடக்கிக்கொண்டு விட்டாள். செவிலித் தாயை அன்று கோபித்து ஆத்திரம் தீர இரண்டு திட்டுத் திட்டியிருந்தாளானால், அன்றோடு போயிருக்கும் இந்த விஷயம். அப்படிச் செய்யாமல் உள் மனதில் புதைத்து அடக்கிய அந்த அருவருப்பு, அநேகம் வருஷங்களுக்குப் பிறகு இவள் அறியாமலே, படம் எடுத்த சர்ப்பம்போல் வெளிப்பட்டு வேதனை செய்தது.

நமது வெளி மனதை மட்டில் செப்பனிட்டுச் சீர்திருத்தி நாம் திருப்தியடைய முடியாது. நமது உள் மனதையே தூய்மைப் படுத்திச் சீர் செய்ய வேண்டும். ஒழுக்க வலிமையாலும் அறிவுத் தெளிவினாலும் தான் அந்தக் காரியத்தை நாம் செய்யமுடியும்.

உள் மனதும் வெளி மனதும் மலையும் மடுவுமாய்ப் பிரிந்திருக்கும் வரையில், நெருக்கடியான நேரங்களில் நாம் தோற்றோடிப் போவோம். 'பேச்சுப் பேச் சென்னும்; பெரும் பூனை வந்தக்கால், கீச்சுக் கீச் சென்னும் கிளி' என்ற மாதிரி தான் நமது நடவடிக்கையும் இருக்கும். நம் உள் மனதையும் வெளி மனதையும், எத்தனைக் கெத்தனை தர்மமென்ற சுருதியின் பலத்தால் ஒன்றையொன்று நெருக்கி இசைக்கிறோமோ அத்தனைக்கத்தனை நாம் உயர்வடைவோம். உள்மனதும் வெளிமனதும் ஒன்றேயாகிவிடும்போது, மனிதன் தேவனாகி விடுவான். அதுவே அமரத்துவம்; அத்வைத நிலை.

## கருணை யாருக்கு ?

மாரிஸ் என்ற ஒரு தளபதி, ஓர் உத்தியோகஸ்தனுக்கு மரண தண்டனை விதித்து, அவனைக் கொல்லச் செய்து விட்டார். கொலையுண்ட உத்தியோகஸ்தனின் மகன் ஆத்திரம் கொண்டு, பழிக்குப் பழி வாங்க எண்ணி, தளபதிக்கு விரோதமாய்ச் சதி செய்தான். அகப்பட்டுக் கொண்டான். அவனுக்கும் மரண தண்டனை விதித்தார் தளபதி.

தண்டனையை நிறைவேற்று முன், அந்த வாலிபனின் தாய் தளபதியிடம் சென்றாள்: "கருணை கூர்ந்து, என் மகனை மன்னிக்க வேண்டும்" என்று தளபதியைக் கெஞ்சினாள்.

"தாயே, உன் புருஷனுக்கு மரண தண்டனை விதித்தேன். அவருக்குக் கருணை காட்டவேண்டு மென்று, நீ வந்து கேட்கவில்லை. இப்போது மகனுக்குப் பரிந்துகொண்டு வந்திருக்கிறாயே! ஏன் இந்த வித்தியாசம்?" என்று தளபதி கேட்டார்.

"என் புருஷனுக்கு யாரும் கருணை காட்டத் தேவை யில்லை. அதனால் தான் நான் வரவில்லை. ஏனெனில், அவர் நிரபராதி. நிரபராதிக்கு நீதிதான் வேண்டும். குற்றவாளிக்குத் தான் கருணை வேண்டும். என் மகன் குற்றவாளி. அதனால் தான் வந்தேன்" என்றாள் அந்தப் பெண்மணி.

இந்தப் பெருமையான பதிலைக் கண்டு, தளபதி மனமுருகி விட்டார். வாலிபனுக்கு மன்னிப்பும் அளித்தார்.

# தமிழ் இலக்கியத்தின் தொன்மை

ராவ்ஸாஹிப் எஸ். வையாபுரிப்பிள்ளை

(சென்ற மாதத் தொடர்ச்சி)

இவ்வாறன்றி, கடல் கோளின் காலத்தை நிர்ணயிக்கப் பல ஆராய்ச்சியாளர்கள் முயன்றுள்ளார்கள்.

'தலைச் சங்க வரலாற்றை நோக்கினால் கடல்கோளில் பல நாடுகள் அழிந்தன வென்று தெரிகின்றது. இப் பேரழிவுக்குப் பொருத்தமாவது லெமூரியாக் கண்டம் எனவொன்று அழிந்ததாகப் பூ-தத்துவ ஆசிரியர்கள் கூறுவதேயாகும். ஆதலால் இக்கண்டம் கடற்கீழ் ஒழிவதன் முன்பே தமிழிலக்கியம் தோன்றியதாதல் வேண்டும். லெமூரியாக் கண்டம் என்பதன் ஒரு பகுதியே தமிழகமாகும்' என்று கூறுவர் நவீன ஆராய்ச்சியாளர் சிலர்.

இதனைக் கூர்ந்து ஆராயவேண்டியதில்லை. பூ-தத்துவ நூலார் அனுமானிக்கும் கடல் கோளுக்கும் தமிழ் நாட்டின் ஒரு சிறு பகுதி கடலால் அழிவெய்தியதற்கும் யாதோர் இயைபும் இல்லை. அந்நூலார் குறிக்கும் காலம் நூற்றாண்டுகளால் அளக்கப்பெறாத பேரூழியாம். அதனைப் பூ-தத்துவகாலம் (geological period) என்று கூறுவர். லெமூரியாக் கண்டம் அழிவுற்றதாகக் கூறும் காலத்தில் மனிதன் நிலவுலகில் தோன்றி யிருந்தானா என்பது கூடச் சந்தேகமே. இந்நவீன ஆராய்ச்சியாளர் கூறுவது நமது கவனத்திற்குச் சிறிதும் உரியதன்று என ஒதுக்கற்பாலதே யாகும்.

இதனைத் தவிர, தமிழகத்தோடு தொடர்பிருக்கக் கூடிய கடல் கோள்கள் தெரியவேண்டுமாயின், இலங்கைச் சரித்திரத்தை நாம் நோக்குதல் வேண்டும். நமது நாட்டினின்றும் இலங்கை பிரிந்து போவதற்குக் காரணமாயிருந்தது ஒரு கடல் கோள். தூத்துக்குடி முதல் மன்னார்வரை, இராவணனது பெருங்கோட்டையும், 25 அரண்மனைகளும், 4 லட்சம் தெருக்களுமுடையதாய் ஒரு நிலப்பரப்பு இருந்ததாம். அவனது கொடுமையைப் பொறுக்க மாட்டாமல், கடல் கொந்தளித்து இந்நிலப்பரப்பைத் துவாபர யுகத்தில் அழித்து விட்டதாம் (ராஜாவளி Upham பக். 191). இது சுமார் கி. மு. 2387ல் நிகழ்ந்திருக்கலாமென்பர் டென்னென்ட். இலங்கை கடலுக்கு அப்பாலுள்ளதாக வால்மீகியார் இராம சரிதம் நடத்துவதால், இராவணன் கொடுமையால் கடல்கோள் நிகழ்ந்து, இலங்கை தீவாகப் பிரிந்து போயிற்றெனல் பொருந்தாது. ஆதலால் ராஜாவளி கூறும் இக்கடல்கோள் ஒரு கதை யென்று ஒதுக்கற் பாலதாம். எனவே நமது கவனத்திற்கு இதுவும் உரியதன்று. இனி, பாண்டுவாஸா காலத்தில் ஒரு கடல்கோள் நிகழ்ந்ததாகக் கூறுவர். இவன் காலம் கி. மு. 444 முதல் 414 வரை யென்பர் கெய்கர். இதனை உண்மை நிகழ்ச்சியென்று கொள்ளினும், இது குறித்து ஒரு செய்தியும் நமக்குத் தெரிய மாட்டாது. தமிழ் நாடு இதனாற் பாதிக்கப்பட்டது என்பதற்கு ஆதாரமில்லை.

வேறொரு கடல்கோள் தேவாநாம் பிய திஸ்ஸாவின் காலத்தில் கி. மு. 306ல் நிகழ்ந்ததெனவும், இதனால் கொழும்பு நகரை அடுத்திருந்த கரைப் பிரதேசம் கடலில் அமிழ்ந்ததெனவும் கூறுவர் (ராஜாவளி பக். 180, 190). ஆனால் தமிழ் நாட்டுப் பகுதி யாதொன்றும் அழிந்ததாக ஒரு குறிப்பும் காணப்படவில்லை. இக்கடல்கோள்கள் அனைத்தும் உண்மை நிகழ்ச்சிகளென்று எண்ணுதற்குச் சான்று இல்லை யென்று *டென்னென்ட் என்ற ஆசிரியர் கூறியுள்ளார்.

* Evidence is wanting to corroborate the assertion of such an occurrence at least within the historic period. (Tennent : Ceylon, Vol 1. p_6—7)

முன் கூறிய கலித்தொகை (104) தவிர, மற்றைத் தொகை நூல்களில் ஒன்றிலேனும் கடல்கோட் செய்தி கூறப்படவில்லை. இறையனர் அகப்பொருளுரையிலும், சிலப்பதிகார வுரையிலும் காணும் கடல்கோள் வரலாறு மிகப் பிற்பட்டது; 10-ம் நூற்ருண்டிலும், 14-ம் நூற்ருண்டிலும் இவை முறையே தோன்றியன. அன்றியும், ஒன்ருெடொன்று முரண்படுவன. இறையனர் அகப்பொருளுரை இடைச் சங்கத்திறுதியில் கடல்கோள் நிகழ்ந்ததாகக் கூறுகிறது; இதனைத் தழுவி யெழுதியதாகக் கூறும் அடியார்க்கு நல்லாருரை தலைச்சங்கத்திறுதியில் நிகழ்ந்ததாகக் கூறுகிறது. முந்தியவுரையில், அழிவுற்ற நிலங்களைப் பற்றியும் நாடுகளைப் பற்றியும் யாதும் கூறப்படவில்லை; பிந்திய வுரையில், அழிவுற்ற நாடுகளின் கணக்கும் பெயர்கள் முதலிய விவரமும் விரிவாகக் கூறப்பட்டிருக்கின்றன. சிலப்பதிகாரத்திற் காணப்படும் வரலாறு (XI, 18-22) முதலிடைச் சங்கங்களோடு இக்கடல்கோள் யாதோரியைபும் உடையதாகக் கூறவில்லை; ஒரு பௌராணிக வரலாறு போலவே இது தோன்றுகிறது. ஆகவே இக்கடல்கோளை ஆதாரமாகக் கொண்டு சரித்திரம் அமைத்தல் மண் குதிரையை நம்பி ஆற்றில் இறங்குவது போலாம்.

சிலப்பதிகாரக் காப்பியம் கடல்கோளைப் பற்றிக் கூறும் பகுதியை முன்னரே காட்டினேன். ஆனல் இக்காப்பியமும் பிற்பட்ட காலத்ததே யாகும். இது கூறியபடி, பஃறுளியாற்றைக் கடல்கொண்டதாகக் கொள்ளல் இயலாது. அடியார்க்குநல்லார் உரைக்கு முற்பட்ட அரும்பத வுரைகாரர் 'பஃறுளியாறு குமரிப்பக்கத்ததோர் யாறு' என்று எழுதினர். இப் பெயர்கொண்ட ஆறு இன்றும் உள்ளதே. எனவே இளங்கோவடிகள் கூறியது யாதானும் ஒரு கதைபற்றியிருத்தல் வேண்டுமெனத் தோன்றுகிறது.

'வடிவே லெறிந்த வான்பகை பொருது' கடல் கொந்தளித்தெழுந்ததாகச் சிலப்பதிகாரம் கூறுகிறது. இங்கே தென்னவன் வேலெறிந்தது பரசுராமன் தனது அம்பினைக் கடல்மீது செலுத்திய கதையை நினைவிற்குக் கொண்டு வருகிறது. இத்தென்னவனைப் போலவே, சரித்திர வீரனுகிய இக்காலத்தில் வழங்கும் சேரன் செங்குட்டுவனும் கடலிலே வேலையெறிந்து அதனைப் பிறகே ஓட்டிக் 'கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவன்' எனப் பெயர் பெற்ருன். இதனைப் பரணர் பதிற்றுப்பத்தில் (46)

'கோடுநரல் பௌவங் கலங்க வேலிட்டு
உடைதிரைப் பரப்பிற் படுகடலோட்டிய
வெல்புகழ்க் குட்டுவற் கண்டோர்
செல்குவ மென்னுர் பாடுபு பெயர்ந்தே'

என்று கூறுவதனல் அறியலாகும். இச்செய்தி பரசுராமன் கதையைப் பெரிதும் ஒத்திருக்கிறது. ஆகவே மேற்குறித்த வரலாறுகளனைத்தும் இப் பரசுராமன் சரிதத்தினை அடிப்படையாகக் கொண்டு தோன்றின என ஊகித்தல் தகும். பரசுராமன் வேள்வியியற்றிய செய்தி அகநானூற்றில் (220) உள்ளது.

இதுகாறும் உண்மைச் சரித்திர நிகழ்ச்சிகள் என்பதற்குச் சான்றுகளின்றி, கதைகளென்று கொள்ளத் தக்கன சிலவற்றை நோக்கினேம். இனி, சரித்திர நிகழ்ச்சி யென்று தோன்றுமாறு அமைந்துள்ள ஒரு செய்தியை நோக்குவோம். அசோக சக்ரவர்த்தியை அறியாதாரில்லை. இவர் மௌரிய வம்சத்தைச் சார்ந்தவர். இம்மௌரியர்கள் தெற்கு நோக்கிப் படையெடுத்து வந்து பொதியில்மலையை அடைந்தனரென அகநானூறு (251) தெரிவிப்பதாக டாக்டர் கிருஷ்ணஸ்வாமி ஐயங்காரவர்கள்* கூறுகிருர்கள். இம் மௌரியர் ஆட்சிக்காலம் கி. மு. 322-ல் தொடங்குகிறது. எனவே இப்படையெடுப்பைப்

* Beginnings of S. I. History p. 90.

பற்றிக் கூறுஞ் செய்யுட்கள் சுமார் கி. மு. 300-ல் தோன்றியிருக்கவேண்டும். ஆதலால் இங்குக் குறித்தகாலம்வரை தமிழிலக்கியத்தின் தொன்மை செல்லுகின்றது எனச் சிலர் வாதிப்பர்.

முதலாவது கவனிக்க வேண்டியது ஒன்றுளது. டாக்டர் ஐயங்காரவர்கள் அகநானூற்றுச் செய்யுளை மோரியர்கள்* தெற்கே தமிழ்நாட்டிற்குள் படையெடுத்துவந்தார்கள் என்பதற்கு மாத்திரந்தான் சான்றாகக் கொண்டார்கள். சரித்திர ஆசிரியர்கள் தெக்ஷிணத்தில் மைசூர் எல்லைவரை† மௌரியரது ஆணை நிகழ்ந்து வந்ததென்பதை ஒப்புக்கொண்டுள்ளார்களேயன்றி, அதற்குத் தெற்கே அது பரவியிருந்ததாகக் கருதவில்லை. இக்கொள்கையை மறுப்பது தான் ஐயங்காரவர்களது நோக்கம். அகநானூற்றுச் செய்யுள் சம காலத்துச் செய்தியை§ யுணர்த்துவதாக அவர்கள் கொள்ளவில்லை. ஆனால், 'தொன் மூதாலத்தரும்பணைப்பொதியில்'(அகம் 251) என்ற அடிக்குப் 'பழைய ஆலமரத் தடியின்கணுள்ள பொதுவிடம்' என்பதே$ பொருள். பொதியில் மலையென்பதன்று. எனவே ஐயங்காரவர்களது கொள்கைக்குச் சான்று யாதுமில்லை.

இவர்களுக்கு முற்பட்டு எழுதிய ஸ்ரீ ராவ்ஸாஹெப் மு. இராகவையங் காரவர்களும் மௌரியர் பற்றிய செய்தியைக் குறிப்பிடுகிறார்கள்; ஆனால் பொதியில் மலையைக் குறித்து யாதும் கூறவில்லை. இவர்கள் 'மோரிய வரசர் திக்கு விசயஞ் செய்துகொண்டு தென்றிசை நோக்கிவந்தபோது, இப்பழையன் (மோகூர்) அவர்க்குப் பணியாமையால், அவர்க்கும் இவனுக்கும் பெரும்போர் நிகழ்ந்ததென்று தெரிகிறது' (சேரன் செங்குட்டுவன், 1937, பக். 31) என்று மட்டும் எழுதிச் சென்றார்கள். இங்ஙனம் எழுதுதற்கு,

> ***துனை காலன்ன புனைதேர்க் கோசர்***
> ***தொன்மூ தாலத் தரும்பணைப் பொதியில்***
> ***இன்னிசை முரசங் கடிப்பிகுத் திரங்கத்***
> ***தெம்முனை சிதைத்த ஞான்றை மோகூர்***
> ***பணியா மையிற் பகைதலை வந்த***
> ***மாகெழு தானை வம்ப மோரியர்***
> ***புனைதேர் நேமி யுருளிய குறைத்த***
> ***இலங்கு வெள்ளருவிய அறைவா யும்பர்*** **(அகம் 251)**

என்ற அடிகள் காரணமாயுள்ளன. மாமூலர் இயற்றிய இப்பாடலைத் தவிர, மோரியர்களை வேறு மூன்று செய்யுட்களும் குறிப்பிடுகின்றன. புறநானூற்றில் கள்ளில் – ஆத்திரையனார் செய்த செய்யுள் ஒன்று (175), அகநானூற்றுச் செய்யுள் இரண்டு (69, 281). இவை முறையே பரங்கொற்றனாராலும் மாமூலனாராலும் இயற்றப்பட்டன. இவற்றை ஆதாரமாகக்கொண்டே மோரியர் வரலாற்றை நாம் துணிதல் வேண்டும். புறநானூற்றுச் செய்யுளொன்றற்கே பழையவுரையுள்ளது; ஏனையவற்றிற்குப் பழையவுரையில்லை. ஆகவே பழையவுரை கூறுவதனை நாம் முதற்கண் நோக்குதல் வேண்டும். அங்கே 'மோரியராவார் சக்கரவாளச் சக்கரவர்த்திகள்; விச்சாதரரும் நாகரும் என்ப' என்ற விளக்கமுள்ளது. அங்குக் கூறப்பட்டுள்ள மோரியர் செய்தியும் மேற் காட்டியதனோடு (அகம் 25:) ஒத்துள்ளமை

> ***விண்பொரு நெடுங்குடைக் கொடித்தேர் மோரியர்***
> ***திண்கதிர்த் திகிரி திரிதரக் குறைத்த***
> ***உலக விடைகழி யறைவாய் நிலைஇய***
> ***மலர்வாய் மண்டிலத் தன்ன நாளும்***
> ***பலர்புர வெதிர்ந்த அறத்துறை நின்னே.*** **(புறம் 175]**

என்ற அடிகளால் அறியலாம். எனவே ஒரு பௌராணிக வரலாறு இங்கே குறிக்கப்பட்டுள்ளமை தெளிவாம். பரங்கொற்றனார் செய்யுளிலும் (அகம் 69)

* Beginnings of S. I. History p. 90. † V. A. Smith, Oxford History of India. p. 76.
§ Begin. of S. I. History p. 100. $ Com. *குறுந்தொகை, 15*

இப்பௌராணிக வரலாறு பொருந்துவதேயாம். மாமூலனர் ஒருவரே இவ்வரலாற்றைச் சரித்திர நிகழ்ச்சியென்று தோன்றுமாறு செய்யுட்கள் இயற்றினர். இவரது இரண்டு செய்யுட்களுள் ஒன்றில் (அகம் 281). 'வடுகர் முன்னுறச் சென்றனர்' என்று இயைத்து 'வடுகர்...மொழிபெயர் தேஎயம் இறந்தனர்' (அகம் 295) என்ற பொருளே படக் கொள்வதில் தடையாதுமில்லை. இங்ஙனம் கொள்வதாயின், இச்செய்யுளும் பௌராணிக வரலாற்றை யுட்கொண்டதாகவே முடியும். மேற்குறித்த புறநானூற்றுச் செய்யுளில் (175) 'மோரியர்' என்பதற்குப் பதிலாக 'ஓரியர்' என்பது அதன் முதற்பதிப்பில் கொடுக்கப்பட்டுள்ளது. பிற்பதிப்புக்களில் இது பாடபேதமாகக் காட்டப்பட்டுள்ளது. இச்சொல்லுக்கு 'நிலமுழுதும் ஆண்ட வேந்தரது' என உரையிற் பொருள் கூறப்படுகிறது. இப் பொருளை நோக்குமிடத்தும், 'அகலிடம்' என்று பொருள்படும் 'உர்வீ' எனும் வட சொல்லோடு இச்சொல் தத்திதத்தொடர்பு உடையதாகலாம் என்பதனைக் கருதுமிடத்தும், இதுவே உண்மைப்பாட மாதல் வேண்டுமெனத் தோன்றுகிறது. 'ஓரியர்' என்ற இப்பாடம் ஒரு பௌராணிக வரலாறே கருதப் பட்டதாகும் என்பதை நன்கு வலியுறுத்துகிறது.

இங்ஙனமாயின், முன்னே தரப்பட்ட அகச்செய்யுள் (251) சரித்திர பூர்வமாய் நாம் அறிந்துள்ள மௌரியரைக் குறிப்பதாகுமா? குறிக்கமாட்டாது என்று துணிவதே மேற்கூறியவற்றோடு பொருந்துவதாம். குறிக்குமென்று கொள்ளின், சில இடர்ப்பாடுகள் உள்ளன. முதலாவது, மோகூர் பாண்டிய நாட்டிலுள்ளது. மௌரியர் படையெடுப்பு இப்பாண்டிநாடுவரை எட்டியது என்பதற்குச் சான்றில்லை யென்பது மேலே கூறப்பட்டது. இரண்டாவது, மோகூர் மன்னனது அவையில் கோசர்கள் தோன்றி விளங்கினர்களென்பது

> **பழையன் மோகூ ரவையகம் விளங்க**
> **நான்மொழிக் கோசர் தோன்றி யன்ன** *(508—9)*

என்ற மதுரைக்காஞ்சி யடிகளாலும், மாறன் என்று புகழ்சிறந்த இவனுக்குக் கீழடங்கிய வீரர்களே கோசர் என்பது

> **பெரும்பெயர் மாறன் தலைவ னுகக்**
> **கடந்தடு வாய்வாள் இளம்பல் கோசர்** *(772—3)*

என்ற அடிகளாலும் புலனுகின்றன. ஆகவே மௌரியர் சார்பாகக் கோசர்கள் மோகூர் மன்னனோடு போர்புரிந்து அவனைப் பணிவிக்க முயன்றார்கள் என்பது பொருந்தாதாம். மூன்றாவது, இப்பொருளில் மோரியர் வரவு தமிழ்நாட்டின் எல்லையகத்து நிகழ்ந்ததெனல் வேண்டும். ஆனல் தலைமகன் தலைவியைப் பிரிந்து தமிழ்நாட்டெல்லையைக் கடந்து வெகு தூரத்துக்கப்பாற் சென்று விட்டனன் என்று கூறுதலே மாமூலனரது கருத்தாகும் என்பது வெளிப் படை. இதனலும் பொருத்தமின்மை காணலாம்.

மோரியரைப்பற்றிய அளவில், இச்செய்யுளைச் சரித்திரச் சான்றாகக்
கொள்ளுதல் கூடாதென்பதற்கு வேறொரு சிறந்த காரணமும் உளது. செய்யு
ளின் பொருள் விளக்கமின்றி ஐயப்பாட்டிற் கிடமாயிருத்தலே அக்காரணம்.
'வம்பை மோரியர்' என்ற பாடபேதம் ஏடுகளிற் காணப்படுகிறது. வம்பை
என்பது ஒரு குறுநில மன்னனது இயற்பெயராகலாம். வம்பையின் அறை
(குன்றம்) எனவும் 'மோரியர் நேமியுருளிய குறைத்த அறை' எனவும் தனித்
தனி இயைத்துப் பொருள் கொள்ளலும் கூடும். 'மோகூர்ப் பணியாமையின்'
என்ற பாடமும் காணப்படுகிறது. இங்ஙனமாக விளக்கமில்லாததனைச் சான்றா
கக்கொண்டு சரித்திரம் அமைத்தல் உண்மையாதல் அரிதாம்.

முடிவாக, ஒரு பௌராணிகச் செய்தியை வேங்கடமலையோடு சார்த்தி
வழங்கிய பிற்கால வரலாற்றை யுட்கொண்டு மாமூலனர் பாடியுள்ளாரெனத்
தோன்றுகிறது. கள்ளில் – ஆத்திரையனர் செய்யுளிலும், பரங்கொற்றனர்
செய்யுளிலும் மலை குறைக்கப்பட்டது ஆஞ்ஞாசக்கரம் செல்லுதற் பொருட்

டென்று கருதற்கிடமுண்டு. பரதசக்கரவர்த்தியின் திக்கு விஜயத்தில் அவன் ' அஜிதஞ்ஜயம் எனும் திவ்ய ரதம் ஏறி, தவளச் சத்ரம் கவிப்ப...சக்ரரத்நம் முன் செல்ல, தண்ட ரத்நங் கைக்கொண்டு ஸேநாபதி மேடு பள்ளம் நிரவி... ஸமதலஞ் செய்து முன்செல்ல...விஜயார்த்தத்திற்குத் தெற்காக...நகரியுள் இருந்தனன்...ஸேநாபதி...வெள்ளியம் பெருமலையது ஜகதீதலத்தை யேறி தமிஸ்ரகுகா முகத்தையடைந்து வடதிசை நோக்கிநின்று தண்டரத்நத்தாலே குகாத்வார கவாடத்தைத் திறந்தான்' என்று ஜைனரது ஸ்ரீபுராணத்தில் (பக் 114-5; 117-8) காணப்படுகிறது இது புறநானூற்று உரைகாரர் கூறும் சரித்திரத்தையும் விளக்கி, சக்ரரத்நமாகிய ஆஞ்ஞா சக்ரமே கருதப்பட்டதென்பதையும் உணர்த்துகிறது. ஜடாவர்மன் சுந்தரபாண்டியன் மெய்க்கீர்த்தியில் (பெருந்தொகை. பக் 208) 'திகிரிவரைக்கப் புறத்துச் செழுந்திகிரி சென்றுலவ' என வருவதும் இக்கருத்தையே வலியுறுத்துகிறது. மாமூலனரது இரண்டு செய்யுட்களுள் ஒன்றிலே (அகம் 281) ஒண்கதிர்த்திகிரி யென்பது ஆஞ்ஞா சக்கரம் எனக்கொள்வதில் தடையாதுமில்லை. பிறிதொன்றில் (அகம் 25:) மட்டுமே 'தேர்ச்சக்கரம்' உருளுதற்கு மலைகுறைக்கப் பட்டதெனக் கதை வேறுபடுகின்றது. இதனால், காலகதியில் பௌராணிக வரலாறு வேறுபட்டு வழங்கி வந்ததென்பது தெளிவாகின்றது. பிற்பட்ட வரலாறே மாமூலனர் ஆண்டுள்ளதாகும்.

மேற்கூறியவற்றால், மாமூலனர் குறித்தது சந்திரகுப்தன் முதலிய மௌரியர்களைப் பற்றியன்றென்பதும் அவர்கள் பாண்டியநாட்டுக்குள் படையெடுத்து வந்தவர்களல்லரென்பதும் அறியக்கிடக்கின்றன. எனவே, இச்செய்திகளின் அடியாகத் தமிழிலக்கியத்தின் தொன்மையை நிறுவுதல் கூடாது.

இதுகாறும் தமிழ்நாட்டில் வழங்கிய வரலாறுகளை நோக்கினேம். இனி, வடநாட்டுச் சான்றுகளை நோக்குவோம். கி. மு. 150-ல் வாழ்ந்து பாணினீயத்திற்கு மகாபாஷ்யம் இயற்றிய பதஞ்சலிக்குத் தென்னாடு நன்ருகத் தெரிந்திருந்தது. இவர் தமது பாஷ்யத்தில் காஞ்சீபுரத்தையும் (IV. 2. 2-ம் ஆஹ்நிகம்), கேரளத்தையும் (IV. 1. 4-ம் ஆஹ்நிகம்) குறிப்பிடுகிருர். அசோக சக்ரவர்த்தியின் காலம் கி. மு. 273-232 ஆகும். இச்சக்ரவர்த்தியின் இரண்டாவது, பதின்மூன்ருவது சிலைத்திரு வாணைகளில் 'சோழ, பாண்டிய, கேரள புத்திரர்கள்' இவரது இராச்சியத்தின் எல்லைக்கப்பால் தனியரசு புரிந்துவந்தவர்கள் எனக் குறிப்பிடப்படுகின்றனர். பாணினிக்குத் தென்னாடு பற்றி யாதுந் தெரிந்திருந்ததாகப் புலப்படவில்லை. ஆனல் பாணினீயத்திற்கு வார்த்திகம் இயற்றிய காத்தியாயனர் சிலசில விவரங்கள் கூறுகிருர். தத்திதப் பெயர்களை விரித்துணர்த்து மிடத்துப் 'பாண்டு என்னும் மரபினரின் வழித்தோன்றல் அல்லது அம்மரபினரது நாட்டின் அரசன் என்ற பொருளில் 'பாண்டியன்' என்ற தத்திதத் திரிபுபெற்ற பெயர் வழங்கப்படல் வேண்டும் எனக் கூறினர் (வார்த்திகம்; பாணினி IV. 1. 168). பிறிதோரிடத்து (வார்த்திகம்: பாணினி IV. 1. 175.) சோழர் என்ற சொல் தத்திதத்திரிபு யாதுமின்றி சோழவமிசத்தினரையும் சோணட்டு அரசரையும் குறிக்கும் என்றனர். இவற்ருல் சோழ பாண்டியர் என்ற பெயர்கள் காத்தியாயனர் காலத்தில் வழக்கிலிருந்தன என்பது நன்கு புலப்படுகிறது. இவர் காலம் சுமார் கி. மு. 350 என்று கொள்ளலாம். இங்குக் கூறியவற்ருல், உத்தேசம் கி. மு. 350-ல் தொடங்கித் தமிழ்நாட்டு மூவேந்தர்களும் சரித்திரப் பிரசித்தராயிருந்தனர் என்பது விளங்கும். இதற்கு எவ்வளவு காலத்திற்குமுன் இம் மூவேந்தர் மரபுகளும் தோன்றின என்பது நம்மால் அறியக்கூடவில்லை. சுமார் ஆயிரம் ஆண்டுகட்குப் பிற்பட்டு, கி. பி. 14-ம் நூற்ருண்டின் தொடக்கத்தில் வாழ்ந்த பரிமேலழகர் 'தொன்று தொட்டு வருதல்: சேர சோழ பாண்டியர் என்ருற் போலப் படைப்புக் காலந் தொடங்கி மேம்பட்டு வருதல்' (குறள் 955 உரை) என்றெழுதினர். நம்மால் அறியக்கூடாத பழைமை யென்பது தான் இவ் வாக்கியத்தின் கருத்து.

தொல்காப்பியத்தின் பாயிரத்தில் 'ஐந்திர நிறைந்த தொல்காப்பியன்' என வருகிறது. பாணினீயத்தைக் கூறுது ஐந்திரத்தைக் கூறினமையாலும், இரண்டனுள் ஐந்திர வியாகரணம் முந்தியதாதலாலும், தொல்காப்பியம் பாணினீயத்திற்கு முன் தோன்றியது; எனவே பாணினீயத்தின் காலமாகிய கி. மு. 450-க்கு முற்பட்டது. தொல்காப்பியம் ஓர் இலக்கண நூலாதலின், இதற்கு முற்படவே, தமிழ் – இலக்கியங்கள் பல தோன்றிப் பெருகி யிருத்தல் வேண்டும். இங்ஙனம் பெருகுவதற்குச் சில நூற்றுண்டுகளேனும் சென்றிருத்தல் வேண்டும். ஆகவே, தமிழிலக்கியம் கி. மு. 7 அல்லது 8-ம் நூற்றுண்டிலாவது தொடங்கியிருத்தல் வேண்டும் என்று ஒரு சார் ஆராய்ச்சியாளர்கள் கூறுவர்.

இம் முடிவு தொல்காப்பியத்தின் காலத்தைப் பொறுத்தது. பின்னர் இக்காலத்தை ஆராய்ந்து துணிய எண்ணியுள்ளேன். பாணினீயத்தைக் கூறுதது தொல்காப்பியம் அதற்கு முற்பட்டதெனத் துணிதற்கு ஒரு காரணமாக மாட்டாது என்பதனைமட்டும் இங்கே தெளிவுறுத்த விரும்புகிறேன். முதலில், இவ்வாறு கூறுதல் தருக்க நெறியோடு பொருந்துவதன்று. தற்காலத்து ஓர் ஆசிரியன் நன்னூலைப் பின்பற்றி ஓர் இலக்கண நூல் இயற்றுகிருனென்று வைத்துக்கொள்வோம். அவனுக்கு அளித்த சிறப்புப் பாயிரத்தில்

'நன்னூ லுணர்ந்த மன் பே ராசான்'

என வருகிறதென்றும் கருதிக்கொள்வோம். இப்பாயிரம் தொல்காப்பியத்தை யுணர்ந்தானைக் கூறுமையினலே, இவ் ஆசிரியன் தொல்காப்பியருக்கு முற்பட்டவனென்று துணிதல் சரியாகுமா! இது போன்றதேயாகும் மேலே குறித்த ஆராய்ச்சியாளர் கூற்று. இரண்டாவது, வேருேர் உண்மையும் கவனித்தற் குரியது. ஐந்திரவியாகரணம் முந்தியது என்பது சந்தேகம். முந்தியதாயிருப்பினும், பாணினீயம் தோன்றியவுடன் அந்நூல் அழிந்துவிடவில்லை. பின்னும் இருந்து, அதன் வழியிற் பல வியாகரணங்கள் தோன்றுதற்குக் காரணமாயிற்று. ஐந்திரம், பாணினீயம் என்ற இரண்டனுள், ஐந்திர முறையே பிறமொழியாளர்கள் எளிதிற் பின்பற்றக்கூடியது. பாணினீயமோவெனின், ஸமிக்ஞையும் ஸங்கேதமும் நிறைந்து பெரும்பாலும் பின்பற்ற இயலாதபடியுள்ளது. இதனலேயே தொல்காப்பியர் ஐந்திரத்தைப் பின்பற்றினரென்று கொள்வது நேரிது. எனவே, பாணினீயத்திற்கு முற்பட்டது தொல்காப்பிய மெனல் பொருந்தாது. இதுபற்றித் தமிழிலக்கியத்தின் தொன்மையை நிறுவ முயல்வதும் தகாது.

மேற் கூறியவற்றை நோக்கும்போது, கி. மு. 300 அளவில் தமிழ்-அரசுகள் மூன்றும் வடநாட்டுச் சக்ரவர்த்திகள் நட்புரிமை கொள்ளும்படி மேம்பாடுற்றிருந்தன வென்பது புலப்படும். இம்மேம்பாடு கல்வி முதலியவற்றின் சார்பினலே விளங்கியிருத்தல் வேண்டும். ஆகவே, கி. மு. 300-க்கு முன் தமிழிலக்கியங்கள் தோன்றி நன்கு மதிக்கத்தக்க ஒரு நிலையை யடைந்திருந்தது என்று நாம் ஊகிக்கலாம். இம்முடிவிற்கு வேறு சான்றுகளும் உள. அவற்றை அடுத்து விவரிப்போம்.

✲

ஈசுவர கிருபை

மழைத் தண்ணீர் மேட்டு நிலத்தில் தங்கி நிற்பதில்லை: பள்ளமான இடத்துக்கு ஓடிவந்து விடுகிறது. அதுபோலவே, ஈசுவர கிருபையானது தற்பெருமையும் கர்வமுமுள்ளவர்களுடைய உள்ளத்தில் தங்கி நிற்பதில்லை. பணிவுள்ளவர்களின் உள்ளத்தில்தான் தங்கி நிற்கும்.

—ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர்

# புத்தக உலகம்

**அரசியல்:** மூல ஆசிரியர்: பிளேட்டோ. தமிழாக்கியவர்: வெ. சாமிநாத சர்மா. வெளியிட்டோர்: சக்தி காரியாலயம், ராயப்பேட்டை, சென்னை. விலை: ரூ. 6-0-0.

கிரேக்கரிலே அணையா விளக்குகளான மூன்று அறிவுச் சுடர்கள் உண்டு. ஸாக்ரட்டீஸ், பிளேட்டோ, அரிஸ்டாட்டில் என்ற மூவருந்தான் அவர். அவர்களின் அபூர்வமொழிகள் இன்றும் உலகுக்கு வழிகாட்டிகளாயிருந்து வருகின்றன. பிளேட்டோ, அரிஸ்டாட்டிலின் குரு; ஸாக்ரட்டீஸின் சிஷ்யர். இன்றைய ஜனநாயக தத்துவத்தின் அஸ்திவாரக் கொள்கைகளெல்லாம் பிளேட்டோவின் அரசியலிலே காணப்படுகின்றன. அன்றியும், இதில் தோன்றியுள்ள பல சிக்கல்களின் பரிகாரங்களும் அதிலே விளங்குகின்றன. இன்று நாம் மீட்சியடைவதற்கு, உலகனைத்தும் இந்த நூலைப் பின்பற்றினால் வெற்றி கிடைப்பது நிச்சயம். இதனை மிக நேர்த்தியாய் சர்மாஜி மொழிபெயர்த்திருக்கிறார். மிக்க அருமையான முறையில் அச்சும் பைண்டும் அமைந்திருக்கின்றன.

**காவியமும் ஓவியமும்:** ஆசிரியர்: கி. வா. ஜகந்நாதன். வெளியிட்டோர்: கலைமகள் காரியாலயம், மயிலாப்பூர். விலை: ரூ. 2-8-0.

காதலையும் வீரத்தையும் பற்றிச் சங்க காலத்து நூல்களில் நாலே வரியில் பல அபூர்வ நாடகங்கள் அமைந்திருக்கின்றன. அவைகளின் இலக்கிய நயத்தை அனுபவிப்பதற்குப் பழந்தமிழ் அறிவும் கற்பனை சக்தியும் வேண்டும். இவை இரண்டிலும் ஆற்றல் பெற்ற ஆசிரியர், பல கவிகளின் சுவையை அரிய கட்டுரைகள் மூலம் நமக்கு விளக்குகிறார். கிழவியின் பிரயாணம், யானை விளையாட்டு, மானின் பாசாங்கு போன்ற, ஹாஸ்யமும் கம்பீரமும் சிங்காரமுமான பற்பல ரசனையுள்ள உவமானங்களை விரித்துரைக்கும்போது, நாம் ஆனந்தக் களிப்பெய்துகிறோம். தெளிந்த இனிய நடையில் அத்தனை கட்டுரைகளும் அமைந்திருக்கின்றன. கலைஞர் ராஜத்தின் கண்கவரும் ஓவியங்கள், புத்தகத்தை அலங்கரிக்கின்றன.

**ஜனாதிபதி ரூஸ்வெல்ட்:** ஆசிரியர்: கே. எஸ். ஜம்புநாதன். வெளியிட்டோர்: அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர். விலை. ரூ. 1—4—0.

அமெரிக்க சரித்திரத்திலேயே இதுவரையில்லாப் புதுமையாக நாலாம் முறையும் தொடர்ந்து ஜனாதிபதி பதவி வகிப்பவர் ரூஸ்வெல்ட். இன்று உலகத்தையே ஏறக்குறைய ஆட்டிவைக்கும் செல்வாக்குள்ள ஒரே மனிதர் அவர்தான் என்று கூடச் சொல்லலாம். அவருடைய வாழ்க்கையின் பற்பல அம்சங்களையும், பற்பல சம்பவங்களையும் தொகுத்துக் கூறும் வரலாறு இது. ஜனாதிபதி தம் நாட்டுக்கும் உலகத்துக்கும் செய்துள்ள சேவைகளை அழகான முறையில் இது விவரிக்கிறது.

**நல்லறச் செல்வி:** கையெழுத்து மலர். நடத்துவோர்: இளைஞர் நல்லற மன்றம், சென்னை.

கலையிலும், இலக்கியத்திலும் ஆர்வம் கொண்ட வாலிபர்கள் நாடெங்கும் பல கையெழுத்து மலர்களைத் தயாரித்து வருகிறார்கள். நமது பார்வைக்கு வந்துள்ள 'நல்லறச் செல்வி' அவைகளிலே அபூர்வமான ஒன்றாகும். கலைச்சுவையும், பொருட்சுவையும் நிறைந்திருக்கிறது. முக்கியமாக, வாலிபர் 'நந்தி'யின் ஓவியங்களும் வர்ண இசைப்பும் கண்ணுக்குக் குளுமையா யிருக்கின்றன.

கோடை காலத்திற்குத் தகுந்த குளிர்ந்த பானங்கள்

கும்பகோணம்

# டி.எஸ்.ஆர்.

கம்பெனியின்

குங்குமப்பூ

நன்னாரி, ரோஸ், ஆரஞ்சு

முதலிய சர்பத்துகள்

சென்னை ஏஜண்டுகள்:

புஷ்பவனம் ஸ்டோர்ஸ்

திருவல்லிக்கேணி

கோவை ஸ்டாக்கிஸ்ட்:

B. பால பட்டாபி

வைசியர் தெரு :: கோவை



அரசியல் ஞானி பிளேட்டோ எழுதிய

# அரசியல்

தமிழாக்கியவர் :

வெ. சாமிநாத சர்மா

பிளேட்டோ எழுதிய நூல்களுள் இதுவே மிகவும் சிறந்ததென்று உலகம் புகழுகிறது. இதில் அரசியலின் ஒவ்வொரு பிரிவும் வெகு தெளிவாக சம்பாஷணை மூலம் விளக்கப்பட்டிருக்கிறது. தேசத்துக்கும் மக்களுக்குமுள்ள தொடர்பு; எந்த மாதிரியான மக்களுக்கு எத்தகைய அரசியல் இருக்கவேண்டும்? நீதி வழங்குதல் என்றால் என்ன? என்பன போன்ற விஷயங்களை தெளிவாக விளக்கியிருக்கிறார்.

சுமார் 400 பக்கங்கள்

அழகிய கலிகோ பைண்டு

**விலை ரூ. ஆறு**

தபால் செலவு தனி

**சக்தி காரியாலயம்**

**சென்னை : : மதுரை**

---

**விற்பனை உரிமை :**

**நவயுகப் பிரசுராலயம்**

**காரைக்குடி**

அவன் ஊக்கங்
குறையாமல் இருக்
கச் செய்வது உங்
கள் வேலை!






ஒவ்வொரு ஸ்திரீயும் எந்தெந்த பதார்த்தங்கள் ஊக்கமளிக்கக் கூடியவை என்பதை அறிந்திருக்க வேண்டும். டாலடா "குக்-புக்" (ஆங்கிலத்தில் மட்டும் எழுதியுள்ளது) உணவுப் பொருள்களின் தராதரத்தைப் பற்றியும், 150 இந்திய ஆகாரத் திட்டங்களைப் பற்றியும் விவரித்திருக்கிறது. Dept. B160 P.O. Box No. 383, Bombay என்ற விலாசத்திற்கு 4 அணு ஸ்டாம்பு அனுப்புங்கள்.

தாய்மார்களே! உங்கள் குடும்பத்திற்கு ஒவ்வொரு தடவை சமையல் செய்யும்பொழுதும உங்களால் எவ்வளவு செய்யலாமெனபதை உணர்கிறீர்களா? உங்கள் சமையல திட்டங்களிலும், அவைகளைத் தயாரிக்கும் முறையிலுமே உங்கள் குழந்தைகள் ஆரோக்கியமான ஊக்கத்தைபபெறுவதோ. அல்லது ஒன்றுக்கும் உபயோகமில்லாமல் ஊக்கமற்றவர்களாக ஆவதோ இருக்கிறது. உணவுகள் ஊக்கமளிக்கும் தரத்தில் வேற்றுமையுள்ளவை. அதிக ஊக்கமளிபபவை சில வெறும் ருசியும், திருப்தியுமளிக்கக் கூடியவை சில அமித உணவு உண்டும். அநேகர் ஊக்கமற்றுக் காணபபடுவது இதனுல்தான் ஆனால் எல்லா உணவுகளையும் அதிக ஊக்கமுள்ளதாகச் செய்துவிடலாம். அவைகளை வைடமின் நிரம்பிய டால்டாவைக கொண்டு தயார் செய்வது இதற்கு உதவியாகயிருக்கும். டால்டா இயற்கையின் முக்கியமான "உணவு சத்துக்களை" அளிக்கிறது.




வைடமின் நிறைந்த **டால்டா** ஊக்கமளிக்கிறது.

THE HINDUSTAN VANASPATI MANUFACTURING CO., LTD.

HVM. 33-50-40 TM




லிப்டன் தேனீர் அருந்துகையில்
ஜாக்கிரதைக் குறைவாய்ப் பேசாதீர்கள்.




போன்: 218-A

தந்தி: ''ராஜு''



# ௨ முனைகளிலும் சேவை

யுத்த சமயம் யுத்தத்தில் ஈடுபடாதவர்களுக்கும் சரி யுத்தத்தில் ஈடுபட்டவர்களுக்கும் சரி வாழ்க்கை மிகவும் கஷ்டமானதே. விடுமுறைநாட்கள் குறைவு. வேலைகடினம். ஓய்வு நேரமோ அரிது. ஆகையால் அதை சரியானபடி உபயோகிப்பது மிக அவசியம். புஸ்தகம் அல்லது பத்திரிகை படித்துக்கொண்டு நன்கு தயாரித்த புத்துயிர் அளிக்கும் டீ அருந்துவதைவிட வேறு என்ன நல்லவழி இருக்கிறது.

டீ உங்களுக்குஉற்சாகமூட்டுகிறது. அன்றாட கவலைகளை மறக்கச்செய்கிறது. டீ ஒருவிதத்திலும் கெடுதலளிக்காமல் சுறுக்கைக்கொடுக்கிறது. டீ வெயில்காலங்களில் குளிர்ச்சியளித்தும் குளிர்காலத்தில் உஷ்ணத்தையும் தருகிறது. டீயை உங்கள் ஆபத நண்பன் போல் கருதி உங்கள் ஓய்வுநேரத்தை அவனுடன் அனுபவித்து சந்தோஷியுங்கள்.

இந்தியன்

# டீ

சோர்வடையும் சமயம் டீ அருந்துங்கள்

இந்தியன் டீ மார்க்கெட எக்ஸ்பான்ஷன் போர்டாரால் வெளியிடப்பட்டது.


Printed & Published by Vai. Govindan at the Shakti Press Ltd., (Shanti Press)
115-E, Mowbrays Road, Royapettah, Madras
Managing Editor: Vai. Govindan. Editor: T. J. Ranganathan